ஆறு மாத
இஸ்லாமிய
கல்வி

Table of Contents

அறிமுகம் - விபரங்கள் மற்றும் விதிமுறைகள்

بسم الله الرحمن الرحيم

கண்ணியமிக்க இஸ்லாமிய சகோதரர்கள் மற்றும் சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

வீட்டில் இருந்தே சிறந்த உலமாக்கள் மூலமாக இஸ்லாமிய கல்வியை பெறுவதற்கான வாய்ப்பை அல்லாஹ் உங்களுக்கு ஏற்படுத்தி தந்துள்ளான். இதனை பயன்படுத்தி கொள்வது உங்கள் மீதான கடமை.

6 மாத இஸ்லாமிய கல்வி வகுப்பு - விபரங்கள் மற்றும் விதிமுறைகள்

மொழி: தமிழ்

காலம்: ஜூன் 2020 முதல் நவம்பர் 2020 வரை

கட்டணம்: ரூ 500 (ஆகஸ்ட் மாதம் செலுத்த வேண்டும்; அனைவர் மீது கட்டாயமில்லை; விவரங்கள் பிறகு அறிவிக்கப்படும்)

பாடங்களின் விவரங்கள்:

1. அகீதா (இஸ்லாமிய கொள்கை)

ஈமானின் அடிப்படைகள் : (அல்லாஹ் மீது ஈமான், மலக்குமார்கள் மீது ஈமான், இறை வேதங்கள் மீது ஈமான், இறைத்தூதர்கள் மீது ஈமான், இறுதி நாள் மீது ஈமான் மற்றும் விதியின் மீது ஈமான்) & (சூனியம் தொடர்பான இஸ்லாமிய நிலைப்பாடு, அன்றும் இன்றும் வழி தவறிய கூட்டங்களில் சில)

2. ஃபிக்ஹு சட்டங்கள்

(தூய்மை சட்டங்கள், தொழுகை, ஜகாத், நோன்பு மற்றும் ஹஜ் சட்டங்கள்)

3. ஹதீஸ்

(ஹதீஸ் கலையின் அடிப்படைகள், இமாம் நவவியின் நாற்பது ஹதீஸ்களின் விளக்கம்)

4. ஸீரா (நபி [ஸல்] வாழ்க்கை வரலாறு)

5. ஆதாப் (இஸ்லாமிய ஒழுக்கங்கள் & நற்பண்புகள்)

பாடங்களின் கால அட்டவணை:

(மாணவர்கள் ஒரு பாடத்தை நன்றாக கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக மாதம் முழுவதும் ஒரு பாடம் மட்டுமே நடத்தப்படும்)

ஜூன்: அகீதா

ஜூலை: பிக்ஹு

ஆகஸ்ட்: 40 ஹதீஸ்கள்

செப்டம்பர் & அக்டோபர்: ஸீரா

நவம்பர்: ஆதாப்

நவம்பர்: இறுதி தேர்வு

ஒரு வாரத்தில் எத்தனை வகுப்புகள்?

ஒரு வாரத்தில் ஆறு அரை மணி நேர பாடங்கள் ஆடியோக்களாக அனுப்பப்படும். மாணவர்கள் தினமும் அதனை கேட்டு நோட்டுப்புத்தகத்தில் குறித்துக் கொள்ளவேண்டும்.

பாடங்களை எவ்வாறு படிப்பது?

தினம் அரை மணி நேரம் பாடங்களுக்கு ஒதுக்க வேண்டும். பாடங்களை கேட்டு பாட இறுதியில் தரப்பட்டுள்ள கேள்விகள் மற்றும் இதர வேலையை ஹோம்வர்க் நோட்டுப்புத்தகத்தில் எழத வேண்டும். ஒரு செயலை அது சிரியதாயினும் தொடர்ந்து செய்வதையே அல்லாஹ் நேசிக்கின்றான் என்று நபி (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (முஸ்னத் அஹ்மத்).

கேள்வி பதில் எழுத தனி நோட்டுப்புத்தகம் வைப்பது சிறந்தது.

கேள்வி பதில் நிகழ்ச்சி

ஒவ்வொரு நாளும் (அகீதா/ஃபிக்ஹ் மட்டும்) அல்லது ஒவ்வொரு வாரம் நடத்தப்படும் வகுப்பிலிருந்து கேள்விகள் கூகுள் லிங்க் மூலமாக கேள்விகள் அனுப்பப்படும்.அதில் பங்கேற்று

தொடர்ச்சியாக சரியாக பதிலளிக்கும் பத்து நபர்களுக்கு ஒவ்வொரு பாடத்தின் இறுதியில் பரிசுகள் வழங்கப்படும்.

பரிசு விவரம்

- முதல் பரிசு ₹500
- இரண்டாம் பரிசு ₹250
- மூன்றாம் பரிசு ₹200
- நான்கு ~ பத்து வரை பரிசு ₹100

தேர்ந்தெடுக்கும் முறை

ஒவ்வொரு பாடம் அல்லது மாத இறுதியில் அந்தந்த பாட கேள்வி பதில்களில் தொடர்ச்சியாக சரியாக பதிலளிக்கும் பத்து நபர்களுக்கு வழங்கப்படும் இன் ஷா அல்லாஹ்.

படிப்பு முடிந்த பின் சான்றிதழ் கிடைக்குமா?

இறுதித் தேர்வில் வெற்றி பெற்ற பின் வழங்கப்படும்.

நாம் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ கொள்கையை பின்பற்றும் மன்ஹஜை சார்ந்தவர்கள். தௌஹீதையும் சுன்னாவையும் பற்றிப்பிடிப்பவர்கள், ஃபிக்ஹை ஆதரிப்பவர்கள். நம்மிடம் தாங்கள் பயிலும்போது இதனை உணர்வீர்கள். பாடங்கள் அனைத்தும் மதீனா பல்கலைக் கழக வழிமுறைக்கேற்ப நடத்தப்படும்.

(குறிப்பு: இந்த பாடத்திட்டம் இஸ்லாமிய கல்லூரிகளுக்கு சென்று படிக்க முடியாதவர்களை கருத்தில்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. எல்லோரும் எளிதாக புரியும் வகையில் பாடங்கள் நடத்தப்படும். ஆகவே, இஸ்லாமை ஆழமாக பயில விரும்பும் சகோதரர்கள் மதரஸாக்கள் மற்றும் உலமாக்கள் மூலமாக நேரடியாக பயில்வதே சிறந்த வழி. அவர்கள் அரபி மொழியையும் கற்று கொள்ள வேண்டும்.)

பாடங்கள் ஆடியோக்களாக அனுப்பப்படும். இதனை கேட்டு குறிப்புகள எழதிக்கொள்வது மாணவர்கள் மீது கடமை. பாடம் சம்பந்தமான வீடியோக்கள் மற்றும் புத்தகங்கள் இருக்குமானால் குரூப்பில் அனுப்பி வைக்கப்படும்.

பாடக்குறிப்புகள் (notes) பாடம் முடியும் போது (pdf) ஆக கொடுக்கப்படும்.

தேவைப்படும்போது கேள்வி பதில் எழதிய பக்கங்களை படம்பிடித்து குரூப் அட்மின்களுக்கு அனுப்ப வேண்டும்.

இப்பாடதிட்டத்தில் சேர்ந்துள்ள அனைவரும் இடையில் விட்டு போகாமல், இறுதி வரை பொறுமையோடு பயிலும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கல்விப்பாதையில் செல்பவர்களுக்காக அல்லாஹ் சுவனப்பாதையை எளிதாக்குகின்றான் என்பதையும் அல்லாஹ் பொறுமையாளர்களோடு இருக்கின்றான் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

அல்லாஹ் சுப்ஹானஹுவதஆலா நம் அனைவரையும் மார்க்க கல்வியை கற்று அமல் செய்யும் நன்மக்களில் ஆக்கி அருள் புரிவானாக. ஆமீன்.

கல்வி கற்பவர்கள் பேணவேண்டிய பண்புகள்

இமாம் முஹம்மது பின் ஸாலிஹ் அல் உஸைமின் ரஹிமஹுல்லாஹ் அறிவுரை

பாகம் – 1

مراقبه النفس

1) தன்னுடைய ஆத்மாவை தானே கண்காணிப்பது

பிறரை கண்காணிப்பதை நிறுத்திவிட்டு நம்மை நாமே கண்காணித்துக்கொள்ளுதல் ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்விலும் அவசியமான ஒன்றாக இருக்கிறது

2) நம்மை பரிசோதிக்க வேண்டிய விஷயங்கள்:

நம்மிடம் خشية الله இறையச்சம் இருக்கிறதா என்று நாம் சோதித்து பார்க்க வேண்டும்.

நம்முடைய عمل அமல்களை சரியான முறையில் செய்து வருகிறோமா என்று பரிசோதிக்க வேண்டும்.

3) போதும் என்ற தன்மை (القناعة)

நபி (ஸல்) – செல்வம் என்பது போதும் என்ற தன்மையே கல்விக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கும் விஷயம் போதும் என்ற தன்மையில்லாமல் பிறருடன் நம்மை நாம் உலகவிஷயங்களில் ஒப்பிடுவதே.

4) நாம் அதிகமாக கல்விகற்றவரைப்போல காண்பித்துக்கொள்ளக்கூடாது. தெரியாத விஷயங்களை தெரியாது என்று கூறும் தைரியம் வேண்டும்.

உமர் (ரலி) – தன்னிடம் இல்லாததை உள்ளது போல காண்பிப்பவனுக்கு அல்லாஹ் போதுமானவன்(புரியவைப்பான்)

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் கேட்கப்படும் பெரும்பாலான கேள்விகளுக்கு “எனக்கு விடை தெரியாது” என்று பதிலளித்தவராவார். அவர் தம்முடைய மரணத்தருவாயில் “நான் அளித்த தீர்ப்புக்களில் எனது சொந்தக்கருத்தை மிகைப்படுத்தி எங்கேனும் கூறிவிட்டேனோ” என்று அஞ்சி கூறினார்கள்…

ازهد في الدنيا يحبك الله، وازهد فيما عند الناس يحبك الناس

சஹல் இப்னு சஹத் அஸ் ஸாஹிதீ (ரலி) – நபி (ஸல்) – உலக விஷயத்தில் பற்றின்றி இருங்கள் அல்லாஹ் உங்களை நேசிப்பான். மக்கள் மத்தியிலுள்ள பொருட்கள் மீது ஆசை கொள்ளாமலிருந்தால் மக்கள் உங்களை நேசிப்பார்கள்.(இப்னு மாஜா – ஹஸன்)

இப்னு ஒதைமீன் (ரஹ்) – உபகாரத்தை அடிப்படையில் தண்ணீர் தந்தாலும் அதை பெறக்கூடாது அதற்கு பதிலாக தயம்மும் செய்து கொள்ளலாம். பணம் கொடுத்து தண்ணீர் வாங்கி உளூ செய்வதே மேலானதாகும்

ஸூரத்துஜ்ஜுமர் (கூட்டங்கள்) 39:9

هَلْ يَسْتَوِى الَّذِيْنَ يَعْلَمُوْنَ وَالَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ‌ؕ

… அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? …

ஸூரத்துல் முஜாதலா (தர்க்கித்தல்) 58:11

يَرْفَعِ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ ۙ وَالَّذِيْنَ اُوْتُوا الْعِلْمَ دَرَجٰتٍ‌ؕ

…உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும்; கல்வி ஞானம் அளிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான் …

مَنْ يُرِدِ اللَّهُ بِهِ خَيْرًا يُفَقِّهْهُ فِي الدِّينِ

முஆவியா (ரலி) – நபி (ஸல்) – யாருக்கு அல்லாஹ் நன்மையை நாடுகிறானோ அவருக்கு மார்க்கத்தில் தெளிவைக்கொடுக்கிறான் (புஹாரி, முஸ்லிம்)

நாம் அதிகமதிகமாக கல்வியை தேடும்போதும், புத்தகங்களை வாசிக்கும்போதும், புத்தகம் வாசிப்பவர்களுடன் பழங்கும்போதும் தான்; நமக்கு முன் சென்ற அறிஞர் பெருமக்களின் மிகப்பெரும் பணிகளை நம்மால் விளங்கிக்கொள்ள முடியும்.

இமாம் ஷாஃபி (ரஹ்) நீங்கள் எந்த ஒரு மார்க்கக்கல்வியை கேட்டாலும் எழுதுங்கள் எழுத வசதி இல்லையேல் பக்கத்தில் உள்ள சுவற்றிலாவது எழுதுங்கள் என வலியுறுத்தினார்கள்.

முன் சென்ற அறிஞர்கள் எழுதும் அடிக்குறிப்புகள் கூட பிறருக்கு புரியும் விதத்தில் இருந்தது. அவர்களது அடிக்குறிப்புக்களால் முக்கிய குறிப்புக்கு எந்த பாதிப்பும் இல்லாதவாறு இரண்டையும் பிரித்து சீராக எழுதும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள்...

5) வீணான காரியங்களை விட்டும் தவிர்த்திருக்க வேண்டும்

ஸூரத்துல் முஃமினூன் (விசுவாசிகள்) 23:3

وَالَّذِيْنَ هُمْ عَنِ اللَّغْوِ مُعْرِضُوْنَۙ

இன்னும், அவர்கள் வீணான (பேச்சு, செயல் ஆகிய)வற்றை விட்டு விலகியிருப்பார்கள்.

அதனால் நேரம் அதிகமாக கிடைக்கும்.

6) மிருதுவான குணம்

إن الله رفيق يحب الرفق ويعطى على الرفق ما لا يعطي على العنف وما لا يعطي على ما سواه

ஆயிஷா (ரலி) – நபி (ஸல்) :

அல்லாஹ் மிருதுவானவன் அவன் மிருதுவானதை விரும்புகிறான்.

அல்லாஹ் மூஸா அலை அவர்களிடம் ஃபிரௌனிடம் சொல்லச்சொன்னது

ஸூரத்து தாஹா 20:44

فَقُوْلَا لَهٗ قَوْلًا لَّيِّنًا لَّعَلَّهٗ يَتَذَكَّرُ اَوْ يَخْشٰى

“நீங்கள் இருவரும் அவனிடம் (சாந்தமாக) மென்மையான சொல்லால் சொல்லுங்கள்; அதனால், அவன் நல்லுபதேசம் பெறலாம்; அல்லது அச்சம் கொள்ளலாம்.”

7) சமயோசித புத்தியோடு அமைதியாக சிந்தித்தல் (التامل)

العجلةمن الشيطان و التاني من الله

நபி (ஸல்): வேகமாக செயல்படுவது ஷைத்தானின் தன்மையும் நிதானமாக செயல்படுவது அல்லாஹ் விரும்பும் தன்மையும் ஆகும்.

وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلْيَقُلْ خَيْرًا أَوْ لِيَصْمُتْ

நபி (ஸல்): யார் அல்லாவையும் மறுமையையும் நம்புகிறாரோ அவர் நல்லதை பேசட்டும் இல்லையேல் மௌனமாக இருக்கட்டும் .

8) الثبات والتثبت எந்த ஒரு செய்தியும் ஆதரத்தன்மையை ஆராய வேண்டும்

احب الاعمال الى الله ادومها وان قل

நபி (ஸல்): அல்லாஹ்விற்கு மிகப்பிடித்தமான அமல் தொடர்ந்து செய்யும் அமல்களே.

Aqeedah 1 Introduction, importance and benefit of learning Aqeedah

அகீதா 1 - அகீதா கற்றுகொள்வதன் அவசியமும் பயனும்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் இம்ரான் உமரி மதனீ

கல்வி - நீண்ட பாதை

பொறுமை + முயற்சி தேவை

طَلَبُ الْعِلْمِ فَرِيضَةٌ عَلَى كُلِّ مُسْلِمٍ عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ

நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள் - கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும் - அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி) (இப்னு மாஜா 224)
இல்லையென்றால் நாம் நஷ்டவாளிகளாக ஆகிவிடுவோம்

103:1 وَالْعَصْرِۙ

103:2 اِنَّ الْاِنْسَانَ لَفِىْ خُسْرٍۙ

103:3 اِلَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَ عَمِلُوا الصّٰلِحٰتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ ۙ وَتَوَاصَوْا بِالصَّبْرِ

103:1. காலத்தின் மீது சத்தியமாக.
103:2. நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான்.
103:3. ஆயினும், எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்து, சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து, மேலும் பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறார்களோ அவர்களைத் தவிர (அவர்கள் நஷ்டத்திலில்லை).
விலங்குகள் ஒருபோதும் அல்லாஹ்விற்கு மாறு செய்வதில்லை. மனிதனும் ஜின்னும் மாறு செய்கிறார்கள்

உலக கல்வி	vs	மார்க்க கல்வி
இம்மை	-	மறுமை
More interested	-	Less interested

23:115 اَفَحَسِبْتُمْ اَنَّمَا خَلَقْنٰكُمْ عَبَثًا وَّاَنَّكُمْ اِلَيْنَا لَا تُرْجَعُوْنَ

23:116 فَتَعٰلَى اللّٰهُ الْمَلِكُ الْحَـقُّ‌ ۚ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ‌ ۚ رَبُّ الْعَرْشِ الْـكَرِيْمِ

23:115. “நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?” (என்றும் இறைவன் கேட்பான்.)
23:116. ஆகவே, உண்மையில் அரசனான அல்லாஹ், மிக உயர்ந்தவன்; அவனைத் தவிர நாயனில்லை. கண்ணியமிக்க அர்ஷின் இறைவன் அவனே!

عقيدة அகீதா என்றல் என்ன - நம்பிக்கை சார்ந்த விஷயங்கள் - கொள்கை சார்ந்த விஷயங்கள்

The arabic word Aqeedah is taken from the root letter's ع-ق-د which has the meaning of tying something and knotting. Also, one of this roots meaning is to settling or determining something in the heart or mind. It also carries the meaning of contract or agreement. Thus, with these meanings the term 'aqeedah' has been used to describe what a person belief's in terms of faith. As faith is something that a person hold onto and settles upon firmly. In Islam aqeedah is used to mean what one has to believe in that has been narrated from the prophet (SAW). This includes Tawheed and what has been related about the six pillars of eemaan.

عقيدة - Creed - Religious belief system - Usoolul eemaan - Usoolul aqeedathul islamiah Six articles of belief - The six articles of faith or belief (Arkan al-Iman) derived from the Quran and Sunnah

1. To believe in Allah,
2. To believe in His angels,
3. To believe in His books,
4. To believe in His prophets,
5. To believe in the Day of Judgment (life after death),
6. To believe in predestination (qadar), that the good and the evil are from Allah

آمنت بالله و ملائكته و كتبه و رسله و اليوم الاخر و القضاء و القدر خيره و شره . من الله تعالى . والبعث بعد الموت حق

2:285 اٰمَنَ الرَّسُوْلُ بِمَآ اُنْزِلَ اِلَيْهِ مِنْ رَّبِّه وَ الْمُؤْمِنُوْنَ‌ؕ كُلٌّ اٰمَنَ بِاللّٰهِ وَمَلٰٓٮِٕكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ ؕ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْ رُّسُلِهٖ ؕ وَقَالُوْا سَمِعْنَا وَاَطَعْنَا غُفْرَانَكَ رَبَّنَا وَاِلَيْكَ الْمَصِيْرُ

2:285. (இறை) தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பெற்றதை நம்புகிறார்; (அவ்வாறே) முஃமின்களும் (நம்புகின்றனர்; இவர்கள்) யாவரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்புகிறார்கள்: "நாம் இறை தூதர்களில் எவர் ஒருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டுவதில்லை; (என்றும்) இன்னும் நாங்கள் செவிமடுத்தோம்; (உன் கட்டளைகளுக்கு) நாங்கள் வழிப்பட்டோம்; எங்கள் இறைவனே! உன்னிடமே மன்னிப்புக் கோருகிறோம்; (நாங்கள்) மீளுவதும் உன்னிடமேதான்" என்று கூறுகிறார்கள்.

ஏன் அகீதாவை தெரிந்து கொள்ள வேண்டும்?

51:56 وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

51:56. இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை.

அல்லாஹ்வை வணங்க நாம் மார்க்கத்தை அகீதாவை தெரிந்து கொள்ளவேண்டும்.

16:97 مَنْ عَمِلَ صَالِحًا مِّنْ ذَكَرٍ اَوْ اُنْثٰى وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهٗ حَيٰوةً طَيِّبَةً‌ ۚ وَلَـنَجْزِيَـنَّهُمْ اَجْرَهُمْ بِاَحْسَنِ مَا كَانُوْا يَعْمَلُوْنَ

16:97. ஆணாயினும், பெண்ணாயினும் முஃமினாக இருந்து யார் (சன்மார்க்கத்திற்கு இணக்கமான) நற் செயல்களைச் செய்தாலும், நிச்சயமாக நாம் அவர்களை (இவ்வுலகில்) மணமிக்க தூய வாழ்க்கையில் வாழச் செய்வோம்; இன்னும் (மறுமையில்) அவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிலிருந்து மிகவும் அழகான கூலியை நிச்சயமாக நாம் கொடுப்போம்.

அகீதாவை கற்றுக் கொள்வது அனைத்து உலக தேவைகளைவிட (உணவைவிட உறைவிடத்தைவிட) முக்கியமானது.

முதல் கடமை - அல்லாஹ்வை அறிந்து கொள்வது

அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹ் - அல்லாஹுவைத் தவிர வேறு இறைவன் இல்லை; முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹுவின் திருத்தூதர் ஆவார்கள்.

Ibn Abbas reported: When the Messenger of Allah, peace and blessings be upon him, sent Mu'adh to Yemen, he said to him:

إِنَّكَ تَأْتِي قَوْمًا مِنْ أَهْلِ الْكِتَابِ فَادْعُهُمْ إِلَى شَهَادَةِ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَأَنِّي رَسُولُ اللَّهِ فَإِنْ هُمْ أَطَاعُوا لِذَلِكَ فَأَعْلِمْهُمْ أَنَّ اللَّهَ افْتَرَضَ عَلَيْهِمْ خَمْسَ صَلَوَاتٍ فِي كُلِّ يَوْمٍ وَلَيْلَةٍ فَإِنْ هُمْ أَطَاعُوا لِذَلِكَ فَأَعْلِمْهُمْ أَنَّ اللَّهَ افْتَرَضَ عَلَيْهِمْ صَدَقَةً تُؤْخَذُ مِنْ أَغْنِيَائِهِمْ فَتُرَدُّ فِي فُقَرَائِهِمْ فَإِنْ هُمْ أَطَاعُوا لِذَلِكَ فَإِيَّاكَ وَكَرَائِمَ أَمْوَالِهِمْ وَاتَّقِ دَعْوَةَ الْمَظْلُومِ فَإِنَّهُ لَيْسَ بَيْنَهَا وَبَيْنَ اللَّهِ حِجَابٌ

Verily, you are coming to a people among the people of the Book, so call them to testify there is no God but Allah and I am the Messenger of Allah. If they accept that, then teach them that Allah has obligated five prayers in each day and night. If they accept that, then teach them that Allah as obligated charity to be taken from the rich and given to the poor. If they accept that, beware not to take from the best of their wealth. Be on guard from the supplication of the oppressed, for there is no barrier between it and Allah.

Source: Sahih Muslim 19, Grade: Muttafaqun Alayhi

7:96 وَلَوْ اَنَّ اَهْلَ الْقُرٰٓى اٰمَنُوْا وَاتَّقَوْا لَـفَتَحْنَا عَلَيْهِمْ بَرَكٰتٍ مِّنَ السَّمَآءِ وَالْاَرْضِ وَلٰـكِنْ كَذَّبُوْا فَاَخَذْنٰهُمْ بِمَا كَانُوْا يَكْسِبُوْنَ

7:96. நிச்சயமாக அவ்வூர்வாசிகள் ஈமான் கொண்டு அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்திருந்தால், நாம் அவர்களுக்கு வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் - பரகத்துகளை - பாக்கியங்களைத் திறந்து விட்டிருப்போம்; ஆனால் அவர்கள் (நபிமார்களை நம்பாது) பொய்ப்பித்தனர், ஆகவே அவர்கள் செய்து கொண்டிருந்த (பாவத்)தின் காரணமாக நாம் அவர்களைப் பிடித்தோம்.

98:7 اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِۙ اُولٰٓٮِٕكَ هُمْ خَيْرُ الْبَرِيَّةِؕ

98:7. நிச்சயமாக, எவர்கள் ஈமான் கொண்டு, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ, அவர்கள் தாம் படைப்புகளில் மிக மேலானவர்கள்.

24:55 وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَ عَمِلُوا الصّٰلِحٰتِ لَـيَسْتَخْلِفَـنَّهُمْ فِى الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ وَلَـيُبَدِّلَــنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ يَعْبُدُوْنَنِىْ لَا يُشْرِكُوْنَ بِىْ شَيْــًٔـا ؕ وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰ لِكَ فَاُولٰٓٮِٕكَ هُمُ الْفٰسِقُوْنَ

24:55. உங்களில் எவர் ஈமான் கொண்டு (ஸாலிஹான) - நற்செயல்கள் புரிகிறார்களோ அவர்களை, அவர்களுக்கு முன்னிருந்தோரை(ப் பூமிக்கு) ஆட்சியாளர்களாக்கியது போல், பூமிக்கு நிச்சயமாக ஆட்சியாளர்களாக்கி வைப்பதாகவும், இன்னும் அவன் அவர்களுக்காக பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிச்சயமாக நிலைப்படுத்துவதாகவும், அவர்களுடைய அச்சத்தைத் திட்டமாக அமைதியைக் கொண்டு மாற்றி விடுவதாகவும், அல்லாஹ் வாக்களித்திருக்கிறான்; “அவர்கள் என்னோடு (எதையும், எவரையும்) இணைவைக்காது, அவர்கள் என்னையே வணங்குவார்கள்;” இதன் பின்னர் (உங்களில்) எவர் மாறு செய்(து நிராகரிக்)கிறாரோ அவர்கள் பாவிகள்தாம்.

அகீதா நமக்கு என்ன பயன் அளிக்கும் ?

14:24 اَلَمْ تَرَ كَيْفَ ضَرَبَ اللّٰهُ مَثَلًا كَلِمَةً طَيِّبَةً كَشَجَرَةٍ طَيِّبَةٍ اَصْلُهَا ثَابِتٌ وَّفَرْعُهَا فِى السَّمَآءِۙ

14:25 تُؤْتِىْۤ اُكُلَهَا كُلَّ حِيْنٍۢ بِاِذْنِ رَبِّهَا ؕ وَيَضْرِبُ اللّٰهُ الْاَمْثَالَ لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَذَكَّرُوْنَ

14:24. (நபியே!) நல்வாக்கியத்திற்கு அல்லாஹ் எவ்வாறு உதாரணம் கூறுகிறான் என்பதை நீர் கவனிக்கவில்லையா? அது மணம் மிக்க ஒரு நன்மரத்தைப் போன்றது; அதனுடைய வேர்கள் (பூமியில் ஆழமாகப்) பதிந்ததாகவும், அதன் கிளைகள் வானளாவியும் இருக்கும்.

14:25. அது தன்னுடைய இறைவனின் அனுமதியைக் கொண்டு ஒவ்வொரு காலத்திலும் தன்னுடைய கனியைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது; மக்கள் நல்லுணர்வு பெறும் பொருட்டு அல்லாஹ் (இத்தகைய) உதாரணங்களைக் கூறுகிறான். இது தான் சரியான அகீதாவை அறிந்து அமல் செய்கின்றவருக்கு உதாரணம்.

Aqeedah 2 'Laa ilaaha illallaah': meaning and virtues

அகீதா 2 - லா இலாஹ இல்லல்லாஹ்: பொருளும் சிறப்புகளும்

ஆசிரியர் : அஷ் ஷெய்க் இம்ரான் உமரி மதனீ

உஸுலுல் ஈமான் - ஷஹாதா - லா இலாஹா இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ்

ஷஹாதா என்பது சாட்சி சொல்வது - அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹ் - அல்லாஹுவைத் தவிர வேறு இறைவன் இல்லை; முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹுவின் திருத்தூதர் ஆவார்கள்.

ஷஹாதா - சாட்சி சொல்வதில் மூன்று விஷயங்கள் உள்ளன - இல்ம், இக்ரார் & இஃலான்

முதலாவதாக நாம் சாட்சி சொல்வதை பற்றி ஞானம் வேண்டும். அதைப் பற்றி தெரிந்து இருக்க வேண்டும்

இரண்டாவது அதை ஏற்றுக் கொள்ளவேண்டும்

மூன்றாவது அறிவித்தல். அதாவது சாட்சி கொண்டதை வெளிப்படையாக அறிவிக்கவேண்டும் - சொல்லலும் செயலாலும் பிறர் முன் முஸ்லீம் என்று வெளிப்படுத்துவது

لَا إِلَٰهَ إِلَّا ٱللَّٰهُ - என்பதன் சரியான பொருள் என்ன?

(Watch https://www.youtube.com/watch?v=v3ODaskZUxU)

லா மஃபூத ஹக்கின் இல்லல்லாஹ் - அல்லாஹ் சுப்ஹானல்லாஹுதஆலாவைத் தவிர உண்மையில் வணக்கத்துக்குரியவன் வேறு யாருமில்லை என்று மனதார சாட்சி சொல்கின்றோம்

அரபியில் அல் இலாஹு என்பது அல் மஃபூது பி ஹக்கின் அல் முஸ்தஹக்குல் லில் இபாதத்தி தூணை கைஹரிஹி - அதாவது உண்மையில் வணங்கப்படத் தகுதியானவன், அவனைத் தவிர வணக்கத்திற்கு தகுதி பெற்றவன் வேறு யாருமில்லை எனப் பொருள்.

சரியாகப் புரிந்தால்தான் அதனை வைத்து நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளமுடியும். தவறாக புரிதல் என்பது - லா கஹா லிக இல்லல்லாஹ், லா ரப்பு இல்லல்லாஹ், லா ஹாக்கிமுன் இல்லல்லாஹ் - இவை எல்லாம் தனித்தனியாக சரியான விஷயங்கள்தான் என்றாலும், لا اله الاالله லா இலாஹ இல்லல்லாஹ் பொருள் முழுமையாக அமைந்தது அல்ல. வணக்கத்துக்கு உரிய அனைத்து தகுதிகளும் அல்லாஹ்வுக்கே உரியன என்பதே அதன் சரியான பொருள். அல்லாஹ்வுக்கு மற்றுமே செய்யக்கூடிய இபாதத்துகளை சரியான புரிதல் இன்றி பிறருக்கு செய்துவிடுகிறோம். புரியாமையின் காரணத்தினால் தான் சிலர், மற்றவர்களுக்கு ஸஜ்தா, ருகூவு மற்றும் குர்பானி போன்றவற்றை செய்துவிடுவார்கள்.

திருக்குர்ஆன் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை இதுதான் கூறப்பட்டுள்ளது. அதாவது இபாதத்தின் அனைத்து அம்சங்களும் அல்லாஹ்வுக்கு மட்டும்தான். முதல் அத்தியாயம் பாத்திஹா முதல் இறுதி அத்தியாயம் நாஸ் வரை இதுதான் கூறப்பட்டுள்ளது. அல்ஹம்துலில்லாஹ் என ஆரம்பித்து ரப்பின் நாஸ், மலிகின் நாஸ், மற்றும் இலாஹின் நாஸ் எனக் கூறப்பட்டுள்ளது.

ஸூரத்துந் நாஸ் (மனிதர்கள்) (114:1-3)

114:1 قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِۙ
114:2 مَلِكِ النَّاسِۙ
114:3 اِلٰهِ النَّاسِۙ

114:1. (நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன்.

114:2. (அவனே) மனிதர்களின் அரசன்;

114:3. (அவனே) மனிதர்களின் நாயன்.

2:21 يٰۤاَيُّهَا النَّاسُ اعۡبُدُوۡا رَبَّكُمُ الَّذِىۡ خَلَقَكُمۡ وَالَّذِيۡنَ مِنۡ قَبۡلِكُمۡ لَعَلَّكُمۡ تَتَّقُوۡنَ ۙ

2:21. மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். (அதனால்) நீங்கள் தக்வா (இறையச்சமும்; தூய்மையும்) உடையோராகலாம்.

ஒவ்வொரு தொழுகையிலும் நாம் கூறுகிறோம்

1:5 اِيَّاكَ نَعۡبُدُ وَاِيَّاكَ نَسۡتَعِيۡنُؕ

1:5. (இறைவா!)உன்னையே நாங்கள் வணங்குகிறோம்; உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்.

அதாவது உன்னை வணங்குவதில் பிறரை சேர்த்துக்கொள்ளமாட்டோம்

4:36 وَاعۡبُدُوا اللّٰهَ وَلَا تُشۡرِكُوۡا بِهٖ شَيۡـــًٔا

4:36. மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள்; அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள்.

லா இலாஹா இல்லல்லாஹ்வின் சிறப்புகள்

3:18 شَهِدَ اللّٰهُ اَنَّهٗ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَۙ وَالۡمَلٰٓـئِكَةُ وَاُولُوا الۡعِلۡمِ قَآئِمًا ۢ بِالۡقِسۡطِؕ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ الۡعَزِيۡزُ الۡحَكِيۡمُؕ

3:18. அல்லாஹ் நீதியை நிலைநாட்டக்கூடியவனாக உள்ள நிலையில் அவனைத்தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்று சாட்சி கூறுகிறான். மேலும் மலக்குகளும் அறிவுடையோரும் (இவ்வாறே சாட்சி கூறுகின்றனர்.) அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை; அவன் மிகைத்தவன், ஞானமிக்கவன்.

இந்த வசனத்தில் அல்லாஹ்வே சாட்சி சொல்கின்றான். சாட்சி சொல்வதில் சிறந்தவன். தக்வா, இறையச்சமுள்ள வாக்கு. இஸ்லாத்திற்கும் ஷிர்கிற்கும் உள்ள வேறுபாடு. கலிமாத் தைய்யிபா, கலிமத்துல் இஸ்லாம், கலிமத்துத் தக்வா என பலப் பெயர்களைக் கொண்டது இந்த கலிமாவாகும்.

59:22 هُوَ اللّٰهُ الَّذِىۡ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ‌ ۚ عٰلِمُ الۡغَيۡبِ وَالشَّهَادَةِ‌ ۚ هُوَ الرَّحۡمٰنُ الرَّحِيۡمُ

59:22. அவனே அல்லாஹ்; வணக்கத்திற்குரியவன்; அவனைத் தவிர வேறு நாயன் இல்லை; மறைவானதையும், பகிரங்கமானதையும் அறிபவன்; அவனே அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையோன்.

59:23 هُوَ اللّٰهُ الَّذِىۡ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ‌ۚ اَلۡمَلِكُ الۡقُدُّوۡسُ السَّلٰمُ الۡمُؤۡمِنُ الۡمُهَيۡمِنُ الۡعَزِيۡزُ الۡجَـبَّارُ الۡمُتَكَبِّرُ‌ؕ سُبۡحٰنَ اللّٰهِ عَمَّا يُشۡرِكُوۡنَ

59:23. அவனே அல்லாஹ், வணக்கத்திற்குரிய நாயன் அவனைத் தவிர, வேறு யாரும் இல்லை; அவனே பேரரசன்; மிகப்பரிசுத்தமானவன்; சாந்தியளிப்பவன்; தஞ்சமளிப்பவன்; பாதுகாப்பவன்; (யாவரையும்) மிகைப்பவன்; அடக்கியாள்பவன்; பெருமைக்குரித்தானவன் - அவர்கள் இணைவைப்பவற்றையெல்லாம் விட்டு அல்லாஹ் மிகத் தூய்மையானவன்.

59:24 هُوَ اللّٰهُ الۡخَـالِـقُ الۡبَارِئُ الۡمُصَوِّرُ‌ لَـهُ الۡاَسۡمَآءُ الۡحُسۡنٰى‌ؕ يُسَبِّحُ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ‌ۚ وَهُوَ الۡعَزِيۡزُ الۡحَكِيۡمُ

59:24. அவன்தான் அல்லாஹ்; படைப்பவன்; ஒழுங்குபடுத்தி உண்டாக்குபவன்; உருவமளிப்பவன் - அவனுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன; வானங்களிலும்,

பூமியிலும் உள்ளவையாவும் அவனையே தஸ்பீஹு (செய்து துதி) செய்கின்றன - அவனே (யாவரையும்) மிகைத்தவன் ஞானம் மிக்கவன்.

ஆயத்துல் குர்ஸி சிறந்த மகத்தான ஆயத்து என ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

2:255 اَللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلْحَـىُّ الْقَيُّوْمُ ۚ لَا تَاْخُذُهٗ سِنَةٌ وَّلَا نَوْمٌ ‌ؕ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ‌ؕ مَنْ ذَا الَّذِىْ يَشْفَعُ عِنْدَهٗۤ اِلَّا بِاِذْنِهٖ‌ؕ يَعْلَمُ مَا بَيْنَ اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ‌ۚ وَلَا يُحِيْطُوْنَ بِشَىْءٍ مِّنْ عِلْمِهٖۤ اِلَّا بِمَا شَآءَ ۚ وَسِعَ كُرْسِيُّهُ السَّمٰوٰتِ وَالْاَرْضَ‌‌ۚ وَلَا يَـــُٔوْدُهٗ حِفْظُهُمَا ‌ۚ وَ هُوَ الْعَلِىُّ الْعَظِيْمُ

2:255. அல்லாஹ்-அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை; அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன்; என்றென்றும் நிலைத்திருப்பவன்; அவனை அரி துயிலோ, உறக்கமோ பீடிக்கா; வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன; அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (படைப்பினங்களுக்கு) முன்னருள்ளவற்றையும், அவற்றுக்குப் பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிவான்; அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும் அறிந்துகொள்ள முடியாது; அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும், பூமியிலும் பரந்து நிற்கின்றது; அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை - அவன் மிக உயர்ந்தவன்; மகிமை மிக்கவன்.

112:1 قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ 112:2 اَللّٰهُ الصَّمَدُ ۚ 112:3 لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۙ 112:4 وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ

112:1. (நபியே?!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே.

112:2. அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன்.

112:3. அவன் (எவரையும்) பெறவுமில்லை; (எவராலும்) பெறப்படவுமில்லை.

112:4. அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை.

51:56 وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

51:56. இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை.

21:25 وَمَاۤ اَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَّسُوْلٍ اِلَّا نُوْحِىْۤ اِلَيْهِ اَنَّهٗ لَاۤ اِلٰهَ اِلَّاۤ اَنَا فَاعْبُدُوْنِ

21:25. (நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும்: **"நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை; எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்"** என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை.

முதலாவது மறுமையில் கேட்கப்படுவது **لا اله الاالله** பற்றித்தான். நமது கடைசிப் பேச்சு **لا اله الاالله** என்றிருந்தால் இன்ஷா அல்லாஹ் சுவனம் அடையலாம்.

14:27 يُثَبِّتُ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا بِالْقَوْلِ الثَّابِتِ فِى الْحَيٰوةِ الدُّنْيَا وَفِى الْاٰخِرَةِ‌ ۚ وَيُضِلُّ اللّٰهُ الظّٰلِمِيْنَ ۙ وَيَفْعَلُ اللّٰهُ مَا يَشَآءُ

14:27. எவர்கள் ஈமான் கொள்கிறார்களோ அவர்களை இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும் உறுதியான சொல்லைக் கொண்டு அல்லாஹ் உறுதி படுத்துகின்றான் - இன்னும், அநியாயக் காரர்களை அல்லாஹ் வழி தவறச் செய்து விடுகிறான்; மேலும் அல்லாஹ், தான் எதை நாடுகின்றானோ அதைச் செய்கின்றான்.

Aqeedah 3 'Laa ilaaha illallaah': related ahadeeth

அகீதா 3 - லா இலாஹ இல்லல்லாஹ் தொடர்பான சில ஹதீஸ்கள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் இம்ரான் உமரி மதனீ

لَا إِلٰهَ إِلَّا اللهُ - இது தான் கலிமத்து தக்வா, கலிமத்து தய்யிபாஹ், கலிமத்து தவ்ஹீத், கலிமத்து இக்ஹ்லாஸ்.

அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் நாடி யார் லா இலாஹா இல்லல்லாஹ் என்ற இந்த கலிமாவை மொழிகின்றாரோ அவர் மீது நரகத்தை அல்லாஹ் ஹராமாக்கியுள்ளான். - புகாரி ஹதீஸ்

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள். யார் ஒருவர் அல்லாஹுவைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு இறைவன் இல்லை என்று கூறி அதில் அவர் உண்மையாளராக இருந்து இந்த சாட்சியை அவர் சொல்வாரானால் அவர் சொர்க்கத்தில் நுழைவார் - அஹ்மது

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் எந்த ஒரு அடியானும் லா இலாஹா இல்லல்லாஹ் என்று சொல்லி அதில் நிலைத்திருந்து அதிலே மரணிப்பாரானால் அவர் சொர்க்கத்தில் நுழைவார் - புகாரி

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் - திக்ரிலே மிகச் சிறந்தது லா இலாஹா இல்லல்லாஹ் - திர்மிதி

அரபா நாளில் கேட்கப்படும் துஆ தான் துஆக்களில் மிகச் சிறந்தது. நானும் எனக்கு முன்பிருந்த நபிமார்களும் சொன்ன விஷயங்களில் மிகச் சிறந்தது லா இலாஹா இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா கொல்ல ஷையின் கதீர் என்று ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்

ஒரு தடவை மூஸா (அலை) எனக்கு ஒரு சிறந்த திக்ரை கற்றுத் தரவும் என்று அல்லாஹ்விடத்தில் கேட்கின்றார்கள். அதற்கு அல்லாஹ் - மூஸாவே நீங்கள் லா இலாஹா இல்லல்லாஹ் என்று சொல்லுங்கள். அதற்கு மூஸா (அலை) இது உனது அனைத்து அடியார்களும் சொல்கின்றார்கள். அல்லாஹ் கூறுகின்றான் - ஏழு வானங்களும் அதில் உள்ளவர்களும் ஏழு பூமிகளும் அதில் உள்ளவர்களும் தராசின் ஒரு தட்டில் வைக்கப்பட்டு லா இலாஹா இல்லல்லாஹ் மற்றொரு தட்டில் வைக்கப்பட்டால், இந்த தட்டுதான் எடையில் அதிகமாக இருக்கும் - என்று ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

கியாமத்து நாளன்று ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய உம்மத்திலிருந்து ஒரு நபர் அழைக்கப்படுவார். அவருக்கு முன்பு 99 ஏடுகள் திறக்கப்பட்டு அவரிடத்தில் கேட்கப்படும் - இந்த பாவங்களெல்லாம் உமக்கு எதிராக எழுதப்பட்டுள்ளது. இதில் நீ எதையாவது மறுக்கின்றாயா என்று கேட்கப்படும் பொழுது அவர் சொல்வார் இல்லை என்னுடைய இறைவா. பிறகு அவரிடத்திலே கேட்கப்படும் உன்னிடத்தில் ஏதாவது நன்மை இருக்கின்றதா. அவர் பயந்து என்னிடத்தில் எந்த ஒரு நன்மையும் கிடையாது என்று சொல்லி விடுவார். அதற்கு அவரிடத்தில் சொல்லப்படும். இல்லை நம்மிடத்தில் உம் நன்மை ஒன்று இருக்கின்றது. இன்று எந்த ஒரு அநீதியும் உம்மீது இழைக்கப்படாது என்று சொல்லிவிட்டு ஒரு அட்டை வெளியாக்கப்படும். அதில் அவருடைய சொல் அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு அன்று அவர் கூறியது இருக்கும். அவர் சொல்வர் அல்லாஹ்வே இந்த 99 ஏடுகளுக்கு முன்பு இந்த ஒரு அட்டை என்ன செய்யும் . அப்பொழுது அல்லாஹ் சுபஹானஹு தஆலா சொல்லுவான் நீ அநீதி இழைக்கப்பட மாட்டாய் என்று சொல்லிவிட்டு அவருடைய பாவங்களெல்லாம் தராசின் ஒரு தட்டில் வைக்கப்பட்டு இந்த அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன

முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு அட்டை தராசின் மறு தட்டில் வைக்கப்படும். அப்பொழுது அவர் செய்த பாவங்கள் அனைத்தும் பறந்து விடும். இவர் சொன்ன ஷஹாதா எடையில் அதிகமாகி விடும் - திர்மிதி நஸயீ ஹாகிமி

44. தம் உள்ளத்தில் ஒரு வால் கோதுமையின் அளவு நன்மை இருக்கும் நிலையில் 'லாயிலாஹ இல்லல்லாஹ்' என்று கூறியவர் நரகிலிருந்து வெளியேறி விடுவார். மேலும், தம் இதயத்தில் ஒரு கோதுமையின் அளவு நன்மை இருக்கும் நிலையில் 'லாயிலாஹ இல்லல்லாஹ்' சொன்னவரும் நரகிலிருந்து வெளியேறி விடுவார். மேலும், தம் உள்ளத்தில் ஓர் அணு அளவு நன்மை இருக்கும் நிலையில் 'லாயிலாஹ இல்லல்லாஹ்' கூறியவரும் நரகிலிருந்து வெளியேறி விடுவார்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அனஸ்(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) 'நன்மை' என்று கூறினார்கள் என மேற்கண்ட நபி மொழியில் குறிப்பிட்டிருக்கும் இடங்களிலெல்லாம் ஈமான் எனும் நம்பிக்கை என்று குறிப்பிட்டதாக அனஸ்(ரலி) அறிவிக்கும் மற்றோர் அறிவிப்பில் காணப்படுகிறது. - Book : 2 - **ஸஹீஹுல் புகாரி**

325. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை (லா இலாஹ இல்லல்லாஹ்) என்று கூறிய எவரது உள்ளத்தில் வாற்கோதுமையளவு நன்மை இருக்குமோ அவர் (நரக) நெருப்பிலிருந்து வெளியேற்றப்படுவார். பிறகு "லா இலாஹ இல்லல்லாஹ்" எனக் கூறிய எவரது உள்ளத்தில் மணிக்கோதுமையளவு நன்மை இருக்குமோ அவர் (நரக) நெருப்பிலிருந்து வெளியேற்றப் படுவார். பிறகு "லா இலாஹ இல்லல்லாஹ்" எனக் கூறிய எவரது உள்ளத்தில் அணுவளவு அளவு நன்மை இருக்குமோ அவர் (நரக) நெருப்பிலிருந்து வெளியேற்றப்படுவார். இதை அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். - **ஸஹீஹ் முஸ்லிம்**

At-Tirmidhi (1999), Abu Dawood (4091) and Ibn Maajah (59) narrated from ‘Abdullah ibn Mas‘ood that the Prophet (blessings and peace of Allah be upon him) said: “No one will enter Paradise in whose heart is an atom’s weight of arrogance and no one will enter Hell in whose heart is an atom’s weight of faith.” A man said: What if I like my clothes to look nice and my shoes to look nice? He said: “Verily Allah loves beauty; rather arrogance means rejecting the truth and looking down on people.”

3293. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாரும் இல்லை. அவனுக்கே ஆட்சியதிகாரம் உரியது. அவனுக்கே புகழ் அனைத்தும் உரியது. அவன் எல்லாவற்றிற்கும் வலிமையுடையவன் - லாஇலாஹ இல்லல்லாஹ், வஹ்தஹு லாஷரீக்க லஹு, லஹுல், முல்க்கு வ லஹுல், ஹம்து, வ ஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர் என்று ஒரு நாளில் நூறு முறை சொல்கிறவருக்கு, அது பத்து அடிமைகளை விடுதலை செய்வதற்குச் சமமா(க நற்பலன் பெற்றுக் கொடுப்பதா)கும். மேலும், அவருக்கு நூறு நன்மைகள் எழுதப்படும். அவரின் கணக்கிலிருந்து (அவர் புரிந்த) நூறு தீமைகள் அழிக்கப்படும். மேலும், அவரின் அந்த நாளில் மாலை நேரம் வரும் வரை ஷைத்தானிடமிருந்து (பாதுகாக்கும்) அரணாக அது அவருக்கிருக்கும். மேலும், அவர் புரிந்த சிறந்த நற்செயலை எவரும் செய்ய முடியாது; ஒருவர் இதை விட அதிகமாக (முறை இதை ஓதினால் அல்லது மிக முக்கியமான) ஒரு நற்செயல் புரிந்தாலே தவிர. என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். Book :59 - **ஸஹீஹுல் புகாரி**

அல்லாஹ்வை நினைவுகூர்வதற்கான சிறந்த வழியைப் பின்வரும் நபிமொழி குறிப்பிடுகிறது: நானும் எனக்கு முந்திய இறைத்தூதர்களும் கூறிய பிரார்த்தனை வாக்கியத்தில் மிகச் சிறந்தது, லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு, லஹுல் முல்க், வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர் ஆகும். இதன் பொருள்: வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இல்லை. அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை.

அவனுக்கே ஆட்சி அனைத்தும். அவனுக்கே புகழனைத்தும். அவன் அனைத்து விஷயங்களின் மீதும் பேராற்றல் மிக்கவன். (ஜாமிவுத் திர்மிதீ)

அகீதா 4 - லா இலாஹ இல்லல்லாஹ் என்று சாட்சி சொல்வதற்கான நிபந்தனைகள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் இம்ரான் உமரி மதனீ

“லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற கலிமா தவ்ஹீதின் ஏழு நிபந்தனைகள்

ஒருவர் முஸ்லிமாக இருப்பதற்கு அவர் கலிமா தவ்ஹீதின் பொருளை அறிந்து அதற்குரிய ஏழு நிபந்தனைகளைக் கட்டாயம் செயல்படுத்த வேண்டும். அவை:

- **அல்இில்ம்**(العلم): ஷஹாதாவின் பொருளையும், அதனுடைய இரண்டு தூண்களான மறுத்தல், உறுதிப்படுத்தல் ஆகியவற்றையும் அறிவதாகும். இதற்கு முரணானது அறியாமை ஆகும்.
- **அல்யகீன்**(اليقين): உறுதிப்பாடு– கலிமாவின் பொருளைச் சந்தேகம் கொள்கிற, அதில் தடுமாற்றம் கொள்கிற நிலைக்கு முரணாக அதில் உறுதிப்பாட்டுடன் இருப்பது.
- **அல்கபூல்**(القبول): ஏற்றுக்கொள்வது. அதாவது, நிராகரிக்காமல் இருப்பது.
- **அல்இன்கியாத்**(الانقياد): ஷஹாதா விதிக்கும் கடமைகளுக்குக் கட்டுப்படுவது. அல்லாஹ்வின் திருப்தியை நாடி செயல்படுவது.
- **அஸ்ஸித்க்**(الصدق): உண்மைப்படுத்தி நம்பிக்கைகொள்தல். இது பொய்ப்படுத்தி நிராகரித்தல் அல்லது போலித்தனமாக ஏற்றுக்கொள்வதற்கு முரணானதாகும்.
- **அல்இக்லாஸ்**(الإخلاص): மனத்தூய்மை. இது அல்லாஹ்வுக்கு இணைவைப்பதற்கு முரணான அம்சமாகும்.
- **அல்மஹப்பத்**(المحبة): ஷஹாதாவை நேசிப்பது, அதன் பொருளை நேசிப்பது, அதில் மகிழ்ச்சியுடன் இருப்பதை இது குறிப்பிடும்.

1. அறிவு (அல்இில்ம்)

அல்லாஹ்வைப் பற்றிய அறிவு, வணக்கத்தின் வழிமுறை, இயல்பு, நோக்கம் ஆகியன பற்றிய அறிவு என்று இஸ்லாமைப் புரிந்து செயல்படுத்த அவசியமான அறிவை இது குறிப்பிடும். பயனுள்ள கல்வி என்பது பொய்யான தெய்வங்களை விட்டு விலகுவதும், அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்குவதுமாகும். அல்லாஹ் கூறுகிறான்:

47:19 فَاعْلَمْ اَنَّهٗ لَاۤ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاسْتَغْفِرْ لِذَنْۢبِكَ وَلِلْمُؤْمِنِيْنَ وَ الْمُؤْمِنٰتِ‌ؕ وَاللّٰهُ يَعْلَمُ مُتَقَلَّبَكُمْ وَمَثْوٰٮكُمْ

47:19. ஆகவே, நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர (வேறு) நாயன் இல்லை என்று நீர் அறிந்து கொள்வீராக; இன்னும் உம்முடைய பாவத்திற்காகவும், முஃமின்களான ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் (பாவ) மன்னிப்புத் தேடுவீராக - அன்றியும் உங்களுடைய நடமாட்டத்தலத்தையும் உங்கள் தங்குமிடங்களையும் அல்லாஹ் நன்கறிகிறான்.

43:86 وَلَا يَمْلِكُ الَّذِيْنَ يَدْعُوْنَ مِنْ دُوْنِهِ الشَّفَاعَةَ اِلَّا مَنْ شَهِدَ بِالْحَـقِّ وَهُمْ يَعْلَمُوْنَ

43:86. அன்றியும், அல்லாஹ்வையன்றி அவர்கள் எவர்களை (தெய்வங்களாக) அழைக்கிறார்களோ, அவர்கள் (அவனிடம் அவர்களுக்குப்) பரிந்து பேச அதிகாரமுள்ளவர்கள் அல்லர். ஆனால் எவர்கள் சத்தியத்தை அறிந்து (ஏற்றவர்காளாக அதற்குச்) சாட்சியம் கூறுகிறார்களோ அவர்கள் (இறை அனுமதி கொண்டு பரிந்து பேசுவர்).

நபியவர்கள் கூறினார்கள்: யார் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்று நன்கு அறிந்த நிலையில் மரணிக்கிறாரோ, அவர் சொர்க்கம் நுழைவார். (ஸஹீஹ் முஸ்லிம்)

2. உறுதிப்பாடு (அல்யகீன்) உறுதியான நம்பிக்கை

கலிமாவை மொழியும்போது அதன் அர்த்தத்தில் எவ்விதச் சந்தேகமும் இல்லாமல் இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

49:15 **اِنَّمَا الْمُؤْمِنُوْنَ الَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ ثُمَّ لَمْ يَرْتَابُوْا** وَجَاهَدُوْا بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ فِىْ سَبِيْلِ اللّٰهِ‌ؕ اُولٰٓـئِكَ هُمُ الصّٰدِقُوْنَ

49:15. நிச்சயமாக, (உண்மையான) முஃமின்கள் யார் என்றால், அவர்கள் அல்லாஹ்வின் மீதும், அவனுடைய தூதர் மீதும், ஈமான் கொண்டு, **பின்னர் (அது பற்றி அவர்கள் எத்தகைய) சந்தேகமும் கொள்ளாது,** தம் செல்வங்களைக் கொண்டும், தம் உயிர்களைக் கொண்டும் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்வார்கள் - இத்தகையவர்கள் தாம் உண்மையாளர்கள்.

நபியவர்கள் கூறினார்கள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லவே இல்லை, நான் அல்லாஹ்வின் தூதர்தான் என்று சாட்சி சொல்கிறேன். இந்த இரண்டு சாட்சிகளுடன் இவற்றில் எவ்விதச் சந்தேகமும் இல்லாமல் ஓர் அடியார் அல்லாஹ்வைச் சந்தித்தால், அவர் சொர்க்கம் நுழைவார். (அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி), ஸஹீஹ் முஸ்லிம் 44)

3. மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்தல் (அல்கபூல்) மனதார ஏற்றுக்கொள்வது

இஸ்லாமின் மகத்துவத்தை ஏற்றுக்கொண்டு, அது உண்மையான மார்க்கம்தான் என்று அங்கீகரிப்பது மட்டும் போதாது. அத்துடன், அதற்கு முன்பு பணிந்து அர்ப்பணமாக வேண்டும். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் ஒரு விசுவாசி கர்வம், தற்பெருமை போன்ற தீய பண்புகளை விட்டுப் பாதுகாக்கப்படுவார்.

37:35 اِنَّهُمْ كَانُوْۤا اِذَا قِيْلَ لَهُمْ لَاۤ اِلٰهَ اِلَّا اللّٰهُ ۙ يَسْتَكْبِرُوْنَۙ

37:35. “அல்லாஹ்வைத் தவிர நாயன் இல்லை” என்று அவர்களுக்குக் கூறப்பட்டால், மெய்யாகவே அவர்கள் பெருமையடித்தவர்களாக இருந்தனர் (நிச்சயமாக அவர்கள் கர்வம் கொண்டுவிடுகிறார்கள்.).

இக்கலிமா ஒரு முஸ்லிமை அவர் கண்மூடித்தனமாக ஒன்றைப் பின்பற்றுவதிலிருந்தும் பாதுகாக்கிறது. தமக்கு முன்பு இதே பாதையை, தூய இஸ்லாமியப் போதனைகளைப் பின்பற்றியவர்கள் எப்படிப் புரிந்து பின்பற்றினார்களோ, அவ்வாறே பின்பற்ற அவரை அழைக்கிறது. நபித்தோழர்களும் அவர்களை மறுமை நாள் வரை பின்பற்றும் நல்ல முன்னோர்களும் சென்ற இந்தப் பாதைதான் அஸ்ஸலஃப் அஸ்ஸாலிஹ் பாதை என்று அறியப்படுகிறது.

இஸ்லாமியப் போதனைகளை ஏற்றுக்கொள்வோருக்கும், அவற்றை நிராகரிப்போருக்கும் அருமையான உதாரணத்தை நபியவர்கள் கூறியுள்ளார்கள்: அல்லாஹ் என்னை நேர்வழி மற்றும் ஞானத்துடன் அனுப்பியதற்கு உவமையாவது, நிலத்தில் விழுந்த பெருமழை போன்றதாகும். அவற்றில் சில நிலங்கள் நீரை ஏற்றுக் கொண்டு ஏராளமான புற்களையும் பசுமையான செடி கொடிகளையும் முளைவித்தன. மற்ற சில நிலங்கள் தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளும் தரிசு நிலங்களாகும். அதனை இறைவன் மக்களுக்குப் பயன்படச் செய்தான். அதனை மக்கள் அருந்தினர்; (தமது கால் நடைகளுக்கும்) புகட்டினர்; விவசாயமும் செய்தனர். அந்தப் பெருமழை இன்னொரு வகை நிலத்திலும் விழுந்தது. அது (ஒன்றுக்கும்

உதவாத) வெறும் கட்டாந்தரை. அது தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளவும் இல்லை; புற்பூண்டுகளை முளைவிக்கவுமில்லை.

இதுதான் அல்லாஹ்வின் மார்க்கத்தில் விளக்கம் பெற்று நான் கொண்டு வந்த தூதினால் பயனடைந்து, கற்றுத் தெரிந்து பிறருக்கும் கற்றுக் கொடுத்தவருக்கும், நான் கொண்டு வந்த தூதை ஏறிட்டுப் பாராமலும் நான் கொண்டு வந்த அல்லாஹ்வின் நேர் வழியை ஏற்றுக்கொள்ளாமலும் வாழ்கிறவனுக்கும் உவமையாகும்.(ஸஹீஹுல் புகாரீ 79)

4. கட்டுப்படுதல் (அல்இன்கியாத்) - செயல்படுவது அல்லது கீழ்ப்படுவது

ஒருவர் அல்லாஹ்வுக்கும் அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் கட்டுப்பட்டு நடந்து, அவர்கள் தடுத்தவற்றை விட்டு விலகுவதின் மூலம் தம்முடைய ஷஹாதாவை முழுமைப்படுத்துகிறார்.

அல்லாஹ் கூறுகிறான்:

31:22 وَمَنْ يُّسْلِمْ وَجْهَهٗۤ اِلَى اللّٰهِ وَهُوَ مُحْسِنٌ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰىؕ وَاِلَى اللّٰهِ عَاقِبَةُ الْاُمُوْرِ

31:22. எவன் தன் முகத்தை முற்றிலும் அல்லாஹ்வின் பக்கமே திருப்பி, நன்மை செய்து கொண்டிருக்கிறானோ, அவன் நிச்சயமாக உறுதியான கயிற்றை பலமாக பற்றிப் பிடித்துக் கொண்டான். இன்னும் காரியங்களின் முடிவெல்லாம் அல்லாஹ்விடமேயுள்ளது.

இவ்வாறு ஒருவர் கட்டுப்படும்போது அவருக்குள் எவ்விதத் தடுமாற்றமும் உறுத்தலும் இருக்கக் கூடாது. முழுக்க முழுக்க அது முழுமையானதொரு கட்டுப்படுதலாக இருக்க வேண்டும். இதைப் பின்வரும் அல்லாஹ்வின் கூற்று தெளிவுபடுத்துகிறது:

33:36 وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَّلَا مُؤْمِنَةٍ اِذَا قَضَى اللّٰهُ وَرَسُوْلُهٗۤ اَمْرًا اَنْ يَّكُوْنَ لَهُمُ الْخِيَرَةُ مِنْ اَمْرِهِمْؕ وَمَنْ يَّعْصِ اللّٰهَ وَرَسُوْلَهٗ فَقَدْ ضَلَّ ضَلٰلًا مُّبِيْنًا

33:36. மேலும், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப்பற்றிக் கட்டளையிட்டு விட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு ஈமான் கொண்டுள்ள எந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ உரிமையில்லை; ஆகவே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்.

அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் தீர்ப்புகளை மனிதர்கள் மதிப்பிட்டுக் கருத்துச் சொல்லக் கூடாது. அவை தெய்விகத் தூதுச்செய்தியாகும். அதில் உள்ள அனைத்துமே மனிதர்களுக்கு நன்மையே. எனவே, மனிதன் அதற்குக் கட்டுப்படுவதால் அவனுக்குத்தான் நன்மை.

5. உண்மையாக இருத்தல் (அஸ்ஸித்க்)

இந்தக் கலிமாவை உண்மையான எண்ணத்துடன் கூறும்போதுதான் இதைக் கூறுவதில் பொருள் இருக்கிறது. அதன் மூலம் ஒருவர் தம்மைப் படைத்தவனான அல்லாஹ்வைப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ள முயல்கிறார். கலிமா அவரை இதற்குத் தூண்டுகிறது. நயவஞ்சகர்கள் இக்கலிமாவைக் கூறியபோதிலும், இதனை மறுக்கும் உள்ளங்களை மறைத்து வைத்திருக்கிறார்கள். இதை அல்லாஹ்,

48:11 سَيَقُوْلُ لَكَ الْمُخَلَّفُوْنَ مِنَ الْاَعْرَابِ شَغَلَـتْنَاۤ اَمْوَالُـنَا وَاَهْلُوْنَا فَاسْتَغْفِرْ لَـنَا ۚ **يَقُوْلُوْنَ بِاَلْسِنَتِهِمْ مَّا لَـيْسَ فِىْ قُلُوْبِهِمْ**ؕ قُلْ فَمَنْ يَّمْلِكُ لَـكُمْ مِّنَ اللّٰهِ شَيْــًٔـا اِنْ اَرَادَ بِكُمْ ضَرًّا اَوْ اَرَادَ بِكُمْ نَفْعًاؕ بَلْ كَانَ اللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا

48:11. (நபியே!) போருக்கு உம்முடன் சேர்ந்து வராமல்) பின்தங்கி விட்ட நாட்டுப் புறத்து அரபிகள்: "எங்களுடைய சொத்துகளும், எங்கள் குடும்பங்களும் (உங்களுடன் வராது) எங்களை அலுவல்கள் உள்ளவர்களாக்கி விட்டன; எனவே, நீங்கள் எங்களுக்காக மன்னிப்புக் கோருவீர்களாக!" எனக் கூறுவர். **அவர்கள் தங்கள் இதயங்களில் இல்லாததைத் தம் நாவுகளினால் கூறுகிறார்கள்;** "அல்லாஹ் உங்களுக்கு ஒரு கெடுதியை நாடினாலும் அல்லது அவன் உங்களுக்கு ஒரு நன்மையை நாடினாலும், அதில் எதையும் அவனுக்கெதிராக உங்களுக்கு(த் தடுக்கக் கூடிய) அதிகாரம் பெற்றவர் யார்! அப்படியல்ல! அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்குணர்ந்தவனாக இருக்கிறான்" எனக் கூறும்.

6570. அபூ ஹுரைரா (ரலி) அறிவித்தார். நான் 'இறைத்தூதர் அவர்களே! மறுமை நாளில் மக்களிலேயே தங்களின் பரிந்துரை மூலம் நற்பேறு பெறுகிறவர் யார்?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் 'அபூ ஹுரைராவே! என்னைப் பற்றிய செய்திகளின் மீது உமக்கிருக்கும் பேராவல் எனக்குத் தெரியும். எனவே, இச்செய்தியைப் பற்றியும் உமக்கு முன்னர் வேறு யாரும் நிச்சயமாகக் கேட்கமாட்டார்கள் என்று நான் எண்ணியிருந்தேன். மறுமை நாளில் மக்கள் அனைவரிலும் என் பரிந்துரை மூலம் நற்பேறு பெறுகிறவர் யாரெனில், உளப்பூர்வமாக தூய்மையான எண்ணத்துடன் 'லா இலாஹ இல்லல்லாஹ்' (வணக்கத்திற்குரியவர் அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் இல்லை) என்று சொன்னாரே அவர் தாம்' என்று கூறினார்கள். 144 Book: 81 - **ஸஹீஹுல் புகாரி**

இதயம் என்பது அரசனைப் போன்றதாகும். உடல் உறுப்புகள், போர் வீரர்களைப் போன்றவையாகும். நபியவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக உடம்பில் ஓர் சதைத்துண்டு உண்டு. அது சீராக இருந்தால், அனைத்தும் சீராக அமையும். அது கெட்டுவிட்டால், அனைத்தும் கெட்டுவிடும். அதுதான் இதயம். (ஸஹீஹ் முஸ்லிம்)

அல்லாஹ்வின் மீதான நேசம் இதயத்தில் நிறைந்துவிட்டால், அதில் வாய்மையும் உண்மையும் வெளிப்படும். ஆனால் மனஇச்சைகள் நுழைந்துவிட்டாலோ, அதில் வழிகேடுகளும் நயவஞ்சகங்களும் நிறையும். மனிதன் தன் இதயத்தில் இருப்பதைத்தான் வார்த்தைகளில் வெளிப்படுத்துவான். நல்ல இதயமானது பின்வரும் விஷயங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கும். அவை:

1. அல்லாஹ்வுக்கு இணைவைப்பது
2. அகந்தை, கர்வம்
3. பொறாமை
4. கஞ்சத்தனம்
5. உலக மோகம்
6. பதவி மோகம்
7. இச்சைகள்
8. பித்அத்கள்

இவை இல்லாத இதயம்தான் ஷஹாதாவைப் பரிபூரணமாக மொழிகின்றது. குர்ஆனில் இத்தகைய இதயத்தை அல்கல்புஸ்ஸலீம் (பாதுகாக்கப்பட்ட, தூய்மையான, பலமான இதயம்) என்று கூறப்படுகிறது. மறுமையின் விசாரணையின்போது இந்த இதயமும் கணக்கில் கொள்ளப்படும்:"அந்நாளில், செல்வமும் பிள்ளைகளும் எந்தப் பயனுமளிக்காது.ஆயினும், பரிசுத்த உள்ளத்துடன் (தன் இறைவனாகிய) அல்லாஹ்விடம் வருபவர்தாம் (பயனடைவார்)." (அல்குர்ஆன் **26: 88-89).**

6. மனத்தூய்மை (அல்இக்லாஸ்)

இஸ்லாமை ஏற்று அனைத்து வணக்கங்களையும் மிகத் தூய்மையாக அல்லாஹ் ஒருவனுக்காகவே செய்ய வேண்டும்.

39:11 قُلْ اِنِّىْۤ اُمِرْتُ اَنْ اَعْبُدَ اللّٰهَ مُخْلِصًا لَّهُ الدِّيْنَۙ

39:11. (நபியே!) நீங்கள் கூறுங்கள்: "முற்றிலும் நான் அல்லாஹ்வுக்கே வழிப்பட்டு, வணக்கத்தை அவனுக்கே கலப்பற்றதாக ஆக்கி அவன் ஒருவனையே வணங்குமாறு ஏவப்பட்டுள்ளேன்.

எனவே ஒருவர் கலிமாவை மொழிந்துவிட்டால் அவருடைய எண்ணம் மிகத் தூய்மையாக அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே நாடியிருக்க வேண்டும். வேறு யாருக்காகவும், எதற்காகவும் அது செயல்படக் கூடாது. மனத்தூய்மை என்பது ஷிர்க்கிற்கு எதிரானது. யார் இந்தக் கலிமாவை உலக இலாபத்திற்காகக் கூறுகிறாரோ, அவருடைய வணக்கங்கள் மனத்தூய்மையற்றதாக ஆகி, அவர் அல்லாஹ்வின் கட்டளைப்படி அவனை வணங்காதவராக ஆகிவிடுவார். அவனோ குர்ஆனில் பின்வருமாறு தன் நபிக்குக் கட்டளையிடுகிறான்:

39:14 قُلِ اللّٰهَ اَعْبُدُ مُخْلِصًا لَّهٗ دِيْنِىۙ

39:14. "அல்லாஹ் ஒருவனையே கலப்பற்ற மனதுடன் நான் வணங்குவேன், அவனுக்கே என்னுடைய வணக்கம் அனைத்தும் உரித்தானது என்று" (நபியே) நீங்கள் கூறுங்கள்.

6423. (தொடர்ந்து) முஹ்மூத் இப்னு ரபீஉ(ரலி) அறிவித்தார். இத்பான் இப்னு மாலிக் அல்அன்சாரி(ரலி) அவர்கள் (பின்வருமாறு) சொல்ல கேட்டேன். (ஒருநாள்) அதிகாலையில் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் என்னிடம் வந்திருந்தபோது 'அல்லாஹ்வின் திருப்தியை நாடி 'லா இலாஹ இல்லல்லாஹ்' (வணக்கத்திற்குரியவர் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை) என்று கூறியவாறு மறுமை நாளில் ஓர் அடியார் வந்தால் அவரின் மீது நரகத்தை அல்லாஹ் தடை செய்யாமல் இருப்பதில்லை' என்று கூறினார்கள்.16 Volume :7 Book :81- ஸஹீஹுல் புகாரி

7. நேசம் (அல்மஹப்பத்)

நேசம் என்றால்:

1) அல்லாஹ்வையும் அவனுடைய தூதர் முஹம்மது (ஸல்) அவர்களையும் உலகின் எதைக் காட்டிலும் நேசிக்க வேண்டும்.

2) அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நேசிப்பதை நேசிக்க வேண்டும்.

3) அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் வெறுக்கக்கூடிய அனைத்து விஷயங்களையும் வெறுக்க வேண்டும்.

இதுதான் இஸ்லாம் கூறும் உண்மையான நேசத்தின் பொருள். இந்த மூன்று விஷயங்கள்தாம் அல்வலா வல்பரா என்பதின் அடிப்படைகளாகும்.

2:165 وَمِنَ النَّاسِ مَنْ يَّتَّخِذُ مِنْ دُوْنِ اللّٰهِ اَنْدَادًا يُّحِبُّوْنَهُمْ كَحُبِّ اللّٰهِؕ **وَالَّذِيْنَ اٰمَنُوْۤا اَشَدُّ حُبًّا لِّلّٰهِ** ؕ وَلَوْ يَرَى الَّذِيْنَ ظَلَمُوْۤا اِذْ يَرَوْنَ الْعَذَابَۙ اَنَّ الْقُوَّةَ لِلّٰهِ جَمِيْعًا ۙ وَّاَنَّ اللّٰهَ شَدِيْدُ الْعَذَابِ

2:165. அல்லாஹ் அல்லாதவர்களை அவனுக்கு இணையாக வைத்துக் கொண்டு, அவர்களை அல்லாஹ்வை நேசிப்பதற்கொப்ப நேசிப்போரும் மனிதர்களில் இருக்கிறார்கள்; **ஆனால் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வை நேசிப்பதில் உறுதியான நிலையுள்ளவர்கள்;** இன்னும் (இணை வைக்கும்) அக்கிரமக்காரர்களுக்குப் பார்க்க முடியுமானால், (அல்லாஹ் தரவிருக்கும்) வேதனை எப்படியிருக்கும் என்பதைக் கண்டு கொள்வார்கள்; அனைத்து வல்லமையும் அல்லாஹ்வுக்கே சொந்தமானது; நிச்சயமாக தண்டனை கொடுப்பதில் அல்லாஹ் மிகவும் கடுமையானவன் (என்பதையும் கண்டு கொள்வார்கள்).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:எவரிடம் மூன்று தன்மைகள் அமைந்துவிட்டனவோ அவர் ஈமானின் சுவையை உணர்ந்தவராவார்.

1. அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒருவருக்கு மற்றெதையும்விட அதிக நேசத்திற்குரியோராவது.

2. ஒருவர் மற்றொருவரை அல்லாஹ்வுக்காகவே நேசிப்பது.

3. நெருப்பில் வீசப்படுவதை வெறுப்பது போன்று இறைமறுப்புக்கு மாறுவதை வெறுப்பது.

இதை அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.(ஸஹீஹுல் புகாரீ 16)

அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் முஹம்மது (ஸல்) மீதும் கொண்டுள்ள நேசமானது அவர்களது கட்டளைகளைப் பின்பற்றுகிற நிலையில் அமைய வேண்டும். இதன் காரணமாக மார்க்கத்தின் பெயரால் புதுமைகளை ஏற்படுத்துவோரையும், அவர்களின் புதுமைகளையும் (பித்அத்) நிராகரிக்க வேண்டும். சூஃபிகள், தரீகாவாதிகள் போன்றவர்களின் பாதைகளைப் பின்பற்றாமல் இஸ்லாமிய வழிமுறைகளை மட்டும் பின்பற்ற வேண்டும். இந்த வழிதவறிய மக்களுக்கும் இஸ்லாமுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இவர்களின் வழிமுறைகள் அனைத்தும் பிற மதங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. இவர்கள் தங்களின் ஷெய்குமார்களையும் தலைவர்களையும் தெய்விக நிலைக்கு உயர்த்திவிடுகிறார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: மேலும், அல்லாஹ் அல்லாதவற்றை அவனுக்கு இணையானவையாக எடுத்துக்கொண்டு, அல்லாஹ்வை நேசிப்பதுபோல அவற்றை நேசிப்பவர்களும் மனிதர்களில் பலர் இருக்கின்றார்கள். எனினும், அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட வர்களோ அல்லாஹ்வை நேசிப்பதில் (இவர் களைவிட) மிகக் கடுமையான உறுதிமிக்கவர்கள். (அல்குர்ஆன் 2.165)

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி)கூறியதாவது:நபி (ஸல்) அவர்கள் (ஒரு கருத்தை) ஒரு வாக்கியத்தில் சொல்ல, நான் (அதே கருத்தை) வேறொரு வாக்கியத்தில் சொன்னேன். நபி (ஸல்) அவர்கள், "யார் அல்லாஹ் அல்லாததை அவனுக்கு இணை என வாதித்தபடி இறந்துவிடுகிறாரோ அவர் நரகம் புகுவார்" என்று கூறினார்கள். "(அப்படியானால்) யார் அல்லாஹ் அல்லாததை அவனுக்கு இணை கற்பிக்காதவராக இறந்துவிடுகிறாரோ அவர் சொர்க்கம் புகுவார்" என்று நான் சொன்னேன்.(ஸஹீஹுல் புகாரீ 4497)

அல்லாஹ்வின் மீதான நேசமும் அவன் வழங்கிய இஸ்லாமியத் தூதுச்செய்தியும் அல்லாஹ்வைக் குறித்த, அவனது பெயர்கள், பண்புகள் குறித்த அறிவைத் தருகின்றன. ஒருவர் எந்தளவு அல்லாஹ்வை அறிந்துகொள்கிறாரோ, அந்தளவு அவருடைய நேசம் அதிகரிக்கும். இது அவருக்குள் அல்லாஹ்வைச் சந்திக்கும் ஆர்வத்தை அதிகப்படுத்தி, அவர் அதை எதிர்பார்ப்பவராக ஆகிவிடுவார். அவர் அவனை மறுமையில் கண்டு, அவனது வார்த்தைகளைச் செவியுற ஆசைப்படுவார். இதுதான் அவரது இலட்சியமாக இருக்கும் நிலையில் உலகத்துடன் அவருக்குள்ள எல்லா உறவுகளும் போகப்போக பலவீனம் அடையும். ஆன்மிக ஈடுபாடு உயர்ந்து காணப்படும். தனது படைப்பாளனைக் காண்கிற ஆசையே அவருக்குள் இருக்கும். அல்லாஹ்வுக்குத் தன்னை அர்ப்பணிக்கின்ற ஒன்றைத் தவிர வேறு எதிலும் அவரது பயணம் இருக்காது. அவர் எதிலும் ஏமாறமாட்டார். தம்மால் முடிந்த வரை, சிறந்த முறையில் அல்லாஹ்வின் கட்டளைகளைச் செயல்படுத்துவதில் அவர் முயற்சி செய்வார். இதுவே அவருக்கு இவ்வுலக, மறுவுலக மகிழ்ச்சிக்குக் காரணமாக அமையும்.

Aqeedah 5 Muhammadurrasoolullah : meaning and obligations

அகீதா 5 - முஹம்மதுர்ரஸுலுல்லாஹ்: பொருளும் கடமைகளும்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் இம்ரான் உமரி மதனீ

எவ்வாறு லா இலாஹ இல்லல்லாஹ் என்று சொல்வதற்கு நிபந்தனைகள் உள்ளனவோ முஹம்மது ரசூலுல்லாஹ் என்று சொல்வதற்கும் சில நிபந்தனைகள் மற்றும் கடமைகள் உள்ளன. முஹம்மது ரசூலுல்லாஹ் என்பதன் பொருளையும் கடமைகளையும் அறிந்து கொள்வது ஒரு முக்கியமான நிபந்தனை. முஹம்மது (ஸல்) அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் ஆவார்கள் என்பது இதனுடைய பொருள். இதனை சாட்சி சொல்வதன் மூலம் நம் மீது பல விஷயங்கள் கடமை ஆகின்றன. மிக முக்கியமாக முஹம்மது (ஸல்) அவர்கள் ஒட்டுமொத்த மனிதர்களுக்கு தூதராக அனுப்பப்பட்டுள்ளார்கள். அவரை பின்பற்றுவது மனிதர்கள் மீது கடமையாகும். இதுவே வெற்றிக்கான வழி என்று தெரிந்து கொண்டு ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களை வாழ்நாள் முழுவதும் சிறிய பெரிய காரியங்களில் பின்பற்றுவது.

7:158 قُلْ يٰۤاَيُّهَا النَّاسُ اِنِّىْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعَاْ ۨالَّذِىْ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ‌ۚ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ يُحْىٖ وَيُمِيْتُ‌ فَاٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهِ النَّبِىِّ الْاُمِّىِّ الَّذِىْ يُؤْمِنُ بِاللّٰهِ وَكَلِمٰتِهٖ **وَاتَّبِعُوْهُ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ**

7:158. (நபியே!) நீர் கூறுவீராக: "மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன்; வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்கே உரியது, அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறுயாருமில்லை - அவனே உயிர்ப்பிக்கின்றான்; அவனே மரணம் அடையும்படியும் செய்கின்றான் - ஆகவே, அல்லாஹ்வின் மீதும், எழுதப்படிக்கத்தெரியா நபியாகிய அவன் தூதரின் மீதும் ஈமான் கொள்ளுங்கள், அவரும் அல்லாஹ்வின் மீதும் அவன் வசனங்களின் மீதும் ஈமான் கொள்கிறார் **- அவரையே பின்பற்றுங்கள்; நீங்கள் நேர்வழி பெறுவீர்கள்."**

அடுத்த கடமை - ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எதை தெரிவிக்கிறார்களோ அனைத்து விஷயங்களையும் அதை உண்மைப்படுத்துவது. ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த விஷயங்களையெல்லாம் நமக்கு கட்டளையிட்டிருக்கிறார்களோ அவைகளையெல்லாம் கீழ்ப்படிவது, பின்பற்றுவது. அதைப்போன்று எதிலிருந்து நம்மை விலக சொல்லியிருக்கின்றார்களோ அதிலிருந்து விலகி இருப்பது, அதனை தவிர்த்துக்கொள்வது நம் மீது கடமையாகும்.

59:7 مَاۤ اَفَآءَ اللّٰهُ عَلٰى رَسُوْلِهٖ مِنْ اَهْلِ الْقُرٰى فَلِلّٰهِ وَلِلرَّسُوْلِ وَلِذِى الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنِ وَابْنِ السَّبِيْلِۙ كَىْ لَا يَكُوْنَ دُوْلَةًۢ بَيْنَ الْاَغْنِيَآءِ مِنْكُمْ‌ؕ **وَمَاۤ اٰتٰٮكُمُ الرَّسُوْلُ فَخُذُوْهُ‌ وَ مَا نَهٰٮكُمْ عَنْهُ فَانْتَهُوْا‌** ۚ وَاتَّقُوا اللّٰهَ‌ؕ اِنَّ اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ‌ۘ

59:7. அவ்வூராரிடமிருந்தவற்றில் அல்லாஹ் தன் தூதருக்கு (மீட்டுக்) கொடுத்தவை, அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கருக்குமாகும்; மேலும், உங்களிலுள்ள செல்வந்தர்களுக்குள்ளேயே (செல்வம்) சுற்றிக் கொண்டிருக்காமல் இருப்பதற்காக (இவ்வாறு பங்கிட்டுக் கொடுக்கக் கட்டளையிடப் பட்டுள்ளது); **மேலும், (நம்) தூதர் உங்களுக்கு எதைக் கொடுக்கின்றாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள்; இன்னும், எதை விட்டும் உங்களை விலக்குகின்றாரோ அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்;** மேலும், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் வேதனை செய்வதில் மிகக் கடினமானவன்.

முஹம்மது ரசூலுல்லாஹ் என்று சாட்சி சொன்னதற்கு பிறகு நம் மீது கடமையாவது அல்லாஹ்வை எவ்வாறு ரசூலுல்லாஹ் (ஸல்) இபாதத் செய்யுமாறு கற்றுத்தந்துள்ளார்களோ அவ்வாறே இபாதத் செய்வது. மனிதன் எவ்வாறு வேண்டுமானாலும் இபாதத்

செய்துகொள்ளலாம் என்ற சுதந்திரத்தை அல்லாஹ் நமக்கு தரவில்லை. மாறாக அல்லாஹ் தூதர்களை அனுப்பி மனிதர்கள் தூதர்களைத்தான் பின்பற்றவேண்டும் என்று அவர்கள் மீது கடமை ஆக்கியுள்ளான். ரசூலுல்லாஹ் (ஸல்) எவ்வாறு அல்லாஹ்வை இபாதத் செய்யுமாறு கற்றுத்தந்துள்ளார்களோ அவ்வாறு இபாதத் செய்தால்தான் அந்த இபாதத் ஏற்றுக்கொள்ளப்படும். அது தொழுகையாக இருந்தாலும் சரி நோன்பாக இருந்தாலும் சரி திக்ராக இருந்தாலும் சரி சிறிய பெரிய காரியங்கள் அனைத்தும் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வழிமுறைக்கு ஏற்ப அமைந்தால் மட்டுமே அது இபாதத்தாக ஆகும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

முஹம்மது ரசூலுல்லாஹ் என்று சாட்சி சொன்னதற்கு பிறகு நம் மீது கடமையாவது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு துணையாக இருப்பது. உதவி புரிவது. ரசூலுல்லாஹ்வின் கட்டளைகளைக்கு கணியம் தருவது.

48:9 لِّتُؤْمِنُوْا بِاللّٰهِ وَ رَسُوْلِهٖ وَتُعَزِّرُوْهُ وَتُوَقِّرُوْهُ ؕ وَتُسَبِّحُوْهُ بُكْرَةً وَّاَصِيْلًا

48:9. (ஆகவே, முஃமின்களே!) நீங்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதும் ஈமான் கொண்டு, அவருக்கு (சன்மார்க்கத்தில்) உதவி, அவரைச் சங்கை செய்து, காலையிலும் மாலையிலும் அவனை(அல்லாஹ்வை)த் துதி செய்து வருவதற்காக(வே தூதரை அனுப்பினோம்).

நபித் தோழர்கள் அவர்கள் உயிருடன் இருக்கும்போது அவர்களுக்கு எல்லா விதத்திலும் உதவினார்கள். இப்போது நாம் அவர்களைப் பின்பற்றுவது, அவர்களின் செய்திகளை மக்களுக்கு கொண்டு செல்வது, அவர்களின் ஸுன்னாஹ்வை பாதுகாப்பது, தவறான செய்திகளை அறிந்து தவிர்ப்பது ஆகியன நம் மீது கடமையாகும். ஸஹீஹான ஹதீதுகளை அறிந்து நாம் செயல்படவேண்டும். ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களை பற்றிய தவறான செய்திகளைப் பரப்புவது பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதுபோல அவர்களைத் தவறான அளவு உயர்த்தக் கூடாது. கிறித்துவர்கள் மர்யம் (அலை) அவர்களின் குமாரர் ஈஸா (அலை) அவர்களை உயர்த்தியது போல தங்களை உயர்த்தக்கூடாது எனவும், தங்களை அடியார் மற்றும் திருத்தூதர் என்றுமே கூறப்படவேண்டும் என்ற பொருளில் ரசூலுல்லாஹ் (ஸல்) கூறியதாக புகாரியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3445. இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்தார் 'நபி(ஸல்) அவர்கள், 'கிறிஸ்தவர்கள் மர்யமின் மகன் ஈசாவை (அளவுக்கு மீறிப் புகழ்ந்து கடவுள் நிலைக்கு) உயர்த்திவிட்டதைப் போல் நீங்கள் என்னை உயர்த்தி விடாதீர்கள். ஏனெனில், நான் அல்லாஹ்வின் அடியான் தான். (அப்படி ஏதாவது என்னைப் பற்றிச் சொல்வதாயிருந்தால்) 'அல்லாஹ்வின் அடியார்' என்றும் 'இறைத்தூதர் என்றும் சொல்லுங்கள்' என்று கூறினார்கள்' என மிம்பரின் (உரை மேடை) மீதிருந்தபடி உமர்(ரலி) சொல்ல கேட்டிருக்கிறேன். Volume: 4 Book: 60 - ஸஹீஹுல் புகாரி

இறைத்தூதர் (ஸல்) அவர்களை நேசிப்பதும் இறை நம்பிக்கையின் ஓர் அம்சமாகும்.
14. 'என்னுடைய உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது ஆணையாக, உங்களில் ஒருவருக்கு அவரின் தந்தையையும் அவரின் மக்களையும் விட நான் மிக்க அன்பானவராகும் வரை அவர் ஈமான் எனும் இறைநம்பிக்கை உள்ளவராக மாட்டார்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அபூ ஹுரைரா (ரலி) அறிவித்தார். Book: 2 - **ஸஹீஹுல் புகாரி**

" لاَ يُؤْمِنُ أَحَدُكُمْ حَتَّى أَكُونَ أَحَبَّ إِلَيْهِ مِنْ وَالِدِهِ وَوَلَدِهِ وَالنَّاسِ أَجْمَعِينَ ".

15. 'உங்களில் ஒருவருக்கு அவரின் தந்தை, அவரின் குழந்தைகள், ஏனைய மக்கள் அனைவரையும் விட நான் மிக அன்பானவராகும் வரை அவர் (உண்மையான) இறைநம்பிக்கையாளராக மாட்டார்' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அனஸ் (ரலி) அறிவித்தார். Book: 2 - ஸஹீஹுல் புகாரி

நாயகம் (ஸல்) அவர்கள் மீது நேசம் என்பது வெறும் நேசமாக இருக்கக்கூடாது. வெறும் முழக்கமோ, ஆர்பாட்டமோ அல்லாமல் அவர்களின் ஸுன்னாஹ்வை நமது நடைமுறையில் கொண்டு வருவதுதான் உண்மையான நேசம்.

3:31 قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِىْ يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَـكُمْ ذُنُوْبَكُمْ‌ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ

3:31. (நபியே!) *நீர் கூறும்:* "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின் பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான்; உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான்; மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான்.

வெறும் வார்த்தையான நேசம் உண்மையான நேசமாக இருக்கமுடியாது. எனவே நாம் சாட்சி சொல்லியிருப்பதால், அவர்களை மிக நேசித்து, அவர்களின் ஸுன்னாஹ்வை பின்பற்றவேண்டும். அதற்கு அல்லாஹ் நமக்கு அருள்பாலிப்பானாக! நமது பாவங்களை மன்னிப்பானாக.

Aqeedah 6 Ibadath: definition and types

அகீதா 6 - இபாதத்: பொருள் மற்றும் வகைகள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் இம்ரான் உமரி மதனீ

இபாதத் என்றால் என்ன? அதனுடைய வகைகள் எவை?. என்னென்ன செயல்கள் இபாதத்தில் அடங்கும்?

51:56 وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

51:56. இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை.

நம்முடைய இபாதத் அல்லாஹ்விற்கு தேவையில்லை. நாம்தான் அல்லாஹ்வை இபாதத் செய்ய தேவை உடையவர்களாக இருக்கிறோம். அல்லாஹ்விற்கு நம்மிடம் இருந்து எந்த ஒரு தேவையும் இல்லை.

51:57 مَاۤ اُرِيْدُ مِنْهُمْ مِّنْ رِّزْقٍ وَّمَاۤ اُرِيْدُ اَنْ يُّطْعِمُوْنِ

51:57. அவர்களிடமிருந்து எந்த பொருளையும் நான் விரும்பவில்லை. எனக்கு அவர்கள் உணவு அளிக்க வேண்டுமென்றும் நான் விரும்பவில்லை.

அவனுடன் எதனையும் இணையாக்காமல் வைப்பதற்கும் அல்லாஹ்தான் நமக்கு தேவைப்படுகிறான். அல்லாஹ்வின் திருப்தி நமக்குத் தேவை. அதே சமயத்தில் அல்லாஹ்வுக்கு நமது இபாதத் தேவையில்லை. நாம் உண்ணும் உணவு, சுவாசிக்கும் காற்று ஆகிய எல்லாவற்றையும் விட அல்லாஹ்வை இபாதத் செய்வதுதான் முக்கியம். இம்மை, மறுமையில் வெற்றி பெற அது தேவை என்பதனை நாம் மறந்து விடக்கூடாது. ஈமான் இருந்தால்தான் இம்மையில் நாம் அமைதியான வாழ்வும், மறுமையில் வெற்றியும் சுவனமும் கிடைக்கும். யார் நரகத்திலிருந்து காப்பாற்றப்பட்டு சுவனத்தில் நுழையச் செய்யப்பட்டார்களோ அவர்கள்தாம் வெற்றி பெற்றவர்கள் என திருக்குர்ஆனில் அல்லாஹ் திட்டவட்டமாக அறிவித்துவிட்டான். எனவே நாம் இபாதத் செய்தால்தான், அவன் நம்மைப் பொருந்திக்கொண்டு, நம்மை சுவனத்தில் நுழைய வைப்பான். அப்படிப்பட்ட பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு அளிப்பானாக!

இபாதத் என்றால் வணக்கம் என தமிழில் பொருள்படும். ஆங்கிலத்தில் worship என ஒரே சொல்லில் கூறிவிடுகிறோம். ஆனால் அரபியில் அவ்வாறு ஒரு பதிலை மற்றும் கூறமுடியாது.மாறாக இபாதத் என்றால் அல்லாஹ் நேசிக்கக்கூடிய வெளிப்படையான மற்றும் மறைமுகமான அனைத்து சொற்களும், செயல்களும் ஆகும். தொழுகை, ஜகாத், பெற்றோர்களுக்கு உபகாரம் செய்தல், அல்லாஹ்வை அஞ்சுவது, அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசிப்பது, காஃபிர்களிடம் போரிடுவது, ஜிஹாத் செய்வது போன்ற பலவற்றைச் சொல்லிக்கொண்டே போகலாம். இவ்வாறு இபாதத் ஒரு விஷயத்தை மட்டும் குறிக்காது.

வணக்கம் என்றால் உள்ளரங்கமான அல்லது வெளிப்படையான சொற்கள் செயல்கள் ரீதியில் அல்லாஹ் விரும்பக்கூடிய சகல விஷயங்களும் மேலும் அவைகளுக்கு முரண்பாடான அல்லது எதிரானவைகளில் இருந்து நீங்கியிருத்தலும் வணக்கமாகும்.

அது போல் இபாதத் என்பது தொழுகை, நோன்பு போன்றவை மட்டும் இபாதத் ஆகாது. அல்லாஹ் அவற்றை இபாதத் என்று கூறியுள்ளான் என்ற நோக்குடன் நாம் அவற்றை செய்யவேண்டும். இவ்வாறான எண்ணத்துடன் நாம் செய்யும் அனைத்தும் இபாதத்தாகிவிடும். அதுபோல ரசூலுல்லாஹ் (ஸல்) கற்றுக் கொடுத்த விதமாக செய்வதும் இபாதத் ஆகும். நாம் கவனத்தோடு அல்லாஹ்வின் மார்க்கத்தைச் செய்கிறோம் என்று செய்யும் சிறு சிறு காரியங்களும் இபாதத்தாக மாறிவிடுகிறது. உதாரணமாக வெயிலில் காரணமாக குளிப்பதாக

இருந்தால், அவரது உடல் சுத்தமாகும். அவர் குளிர்விக்கப்படுவார். ஆனால் அதற்கான கூலியை அவர் பெறமாட்டார். ஆனால் அதே நேரத்தில் தாம் தூய்மைக்கும், இறைவனைப் போற்றவும் குளிக்கப் போவதாக நிய்யத்து செய்து குளித்தால், அது இபாதத்தாக மாறிவிடும்.

எனவே காரியங்களை மார்க்கத்தோடு இணைத்து செய்தால் அனைத்தும் இபாதத்தாக ஆகிவிடும். அதே நேரத்தில் காரியங்களை கவனக் குறையாக, அலட்சியமாக செய்தால் இபாதத் ஆகாது. உதாரணமாக தொழுகையில் அலட்சியம் காட்டினால், அதன் நன்மை குறைவாகத்தான் இருக்கும். அதே போன்றுதான் நோன்பு. எந்த காரியமும் உள்ளச்சத்துடன் செய்யவிட்டால், அதன் நன்மை முழுமையாக அமையாது. ஆனால் எந்த ஒரு செயலும் மார்க்கத்தோடு இணைத்துச் செய்தால், சிறு சிறு காரியங்களும் இபாதத்தாக எழுதப்படும்.

அல்லாஹ் நமது செயல்களை இபாதத்தாக ஏற்றுக் கொள்வானாக!

Aqeedah 7 Two Conditions of acceptance of good deeds with Allah (SWT)

அகீதா 7 - அல்லாஹ்விடம் நற்காரியங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான இரு நிபந்தனைகள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் இம்ரான் உமரி மதனீ

இபாதத் என்றால் என்ன? அல்லாஹ்விற்கு விருப்பமான அல்லாஹ்விற்கு திருப்தி அளிக்கக்கூடிய, வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான நாம் செய்யும் அனைத்து செயல்களும் இபாதத் ஆகும். அல்லாஹ்வை சார்ந்திருப்பது - தவக்குல் - அதுவும் இபாதா. அல்லாஹ்வை அஞ்சுவதும் இபாதா. அல்லாஹ்விடத்தில் உதவி தேடுவது. அல்லாஹ்வை உதவிக்காக அழைப்பது. அல்லாஹ்விற்காக நேர்ச்சை செய்வது, அல்லாஹ்வை நேசிப்பது. இவையெல்லாம் இபாதத்துடைய வகைகள். தொழுகை ஜகாத் பெற்றோர்களுக்குக் உதவி புரிதல், ஏழை எளியோரோடு நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் இவையும் இபாதத்தின் அம்சமாகும்.எல்லாவற்றையும் அல்லாஹ்வுக்காக நாம் செய்யவேண்டும். இதைத்தான் தௌஹீத் என்றும் இக்ஹ்லாஸ் என்றும் நாம் சொல்கின்றோம்.

6:162 قُلْ اِنَّ صَلَاتِىْ وَنُسُكِىْ وَ مَحْيَاىَ وَمَمَاتِىْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَۙ‏

6:162. நீர் கூறும்: “மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும்.

கவனமாகச் செயல்பட்டால் நம் வாழ்க்கையின் அனைத்தையும் இபாதத்தாக மாற்றிவிடலாம். சாப்பிடுவது, சம்பாதிப்பது, மனைவியுடன் உறவாடுவது, வீட்டு வேலைகளை நிறைவேற்றுவது, பிள்ளைகளைப் பேணிக்காப்பது போன்ற சாதாரண காரியங்களும் சரியான நிய்யத்துடன் ஸுன்னத் முறைப்படி செய்தால் இபாதத் ஆகிவிடும்.

சில செயல்களை செய்யும்போது கவனக்குறைவாக செய்தால், உதாரணமாக தொழும்போது கவனக்குறைவாக தொழுதால் அதனுடைய கூலியில் குறைவு ஏற்பட வாய்ப்புள்ளது.

அல்லாஹ்விடத்தில் எப்பொழுது நம் அமல்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன? அதற்கான நிபந்தனைகள் என்ன? நல்ல அமல்கள் அனைத்துமே அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே நாடி செய்யப்படவேண்டும். மார்க்கம் சொல்லும் அனைத்து காரியங்களும் அல்லாஹ்வின் திருப்திக்காகவே மட்டும் செய்யவேண்டும். அதுதான் மனத்தூய்மை. இரண்டாவது... நாம் நினைத்தபடி அமல் செய்யாமல் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு செய்தார்களோ அல்லது செய்யவேண்டும் என்று கட்டளை இட்டிருக்கின்றார்களோ அவ்வாறே செய்யவேண்டும். ஸுன்னாஹ்வை முன்வைத்து நாம் அதனை நிறைவேற்றவேண்டும். ரசூல் (ஸல்) அவர்களைப் பின்பற்றி நாம் அமல்களை செய்யவேண்டும். இவ்வாறு செய்தால்தான் அவை அல்லாஹ்வினால் ஏற்றுக்கொள்ளப்படும். இந்த இரண்டு நிபந்தனைகள் இருந்தால்தான் அவை இபாதத் ஆகும்.

18:110 قُلْ اِنَّمَاۤ اَنَا بَشَرٌ مِّثْلُكُمْ يُوْحٰٓى اِلَىَّ اَنَّمَاۤ اِلٰهُكُمْ اِلٰـهٌ وَّاحِدٌ ۚ فَمَنْ كَانَ يَرْجُوْالِقَآءَ رَبِّهٖ فَلْيَـعْمَلْ عَمَلًا صَالِحًـاوَّلَايُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهٖۤ اَحَدًا

18:110. (நபியே!) நீர் சொல்வீராக: “நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது; **எவன் தன்னுடைய இறைவனைச் சந்திக்கலாமென ஆதரவு வைக்கின்றானோ அவன் (ஸாலிஹான) நல்ல செயல்களைச் செய்து, தன் இறைவனை வணங்குவதில் வேறெவரையும் இணையாக்காதும் இருப்பானாக.”**

இக்ஹ்லாஸ் மற்றும் இத்திபா

அல்லாஹ்விற்கு இணைவைக்காமல் இபாதத் செய்வது (இக்ஹ்லாஸ்) மற்றும் நாயகம் (ஸல்) அவர்கள் வழிமுறையைப் பின்பற்றி இபாதத் செய்வது (இத்திபா)

67:2 اَلَّذِىْ خَلَقَ الْمَوْتَ وَالْحَيٰوةَ لِيَبْلُوَكُمْ **اَيُّكُمْ اَحْسَنُ عَمَلًا** ؕ وَهُوَ الْعَزِيْزُ الْغَفُوْرُۙ

67:2. உங்களில் **எவர் செயல்களால் மிகவும் அழகானவர்** என்பதைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்; மேலும், அவன் (யாவரையும்) மிகைத்தவன்; மிக மன்னிப்பவன்.

2:112 بَلٰى مَنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ فَلَهٗۤ اَجْرُهٗ عِنْدَ رَبِّهٖ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

2:112. அப்படியல்ல! எவனொருவன் தன்னை அல்லாஹ்வுக்கே (முழுமையாக) அர்ப்பணம் செய்து, இன்னும் நற்கருமங்களைச் செய்கிறானோ, அவனுடைய நற்கூலி அவனுடைய இறைவனிடம் உண்டு. இத்தகையோருக்கு அச்சமில்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

ஒரு வணக்கம் அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்பட இரண்டு நிபந்தனைகள் உண்டு : 1 - இக்லாஸ் (உளத்தூய்மை) 02 – இத்திபா (நபி கற்றுத்தந்த பிரகாரம் அவரை பின்பற்றுதல்) இந்த இரண்டு விதி முறைகளையும் ஒவ்வொரு இபாதத்திலும் கடை பிடித்தால் தான் நமது வணக்கங்கள் அல்லாஹ்விடத்தில் ஒப்புக்கொள்ளப்படும்.

Aqeedah 8 Negation and affirmation in 'la ilaaha illallaah'

அகீதா 8 - லா இலாஹ இல்லல்லாஹ்விலுள்ள நிராகரித்தல் மற்றும் உறுதிப்படுத்துதல் - விளக்கம்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் இம்ரான் உமரி மதனீ

அல்லாஹுதஆலா குர்ஆனில் பல இடங்களில் அவனை மட்டுமே வணங்கும்படி கூறியுள்ளான். ஸூரத்துல் கஹ்ஃபு (குகை) இறுதி வசனம் (110) மற்றும் ஸூரத்துந் நஹ்ல் (தேனி) வசனம் 36 என்று பல இடங்களில் கூறியுள்ளான்.

லாஇலாஹ இல்லல்லாஹ்வில் ஒரு பாதி அல்லாஹ்வை வணங்குவது (இல்லல்லாஹ்) மற்றொரு பாதி அல்லாஹ் அல்லாதவற்றை, மற்ற பொய்த்தெய்வங்களை எல்லாம் வணங்கத் தகுதியற்றவை என்று நிராகரிப்பது (லா இலாஹ). எனவே முதலில் அல்லாஹ் அல்லாதவற்றை நிராகரித்து, பின்னர் அல்லாஹ் மட்டுமே வணங்குவதற்கு தகுதியானவன் என்று உறுதி கொள்வது.

இதற்கான ஆதாரங்கள் குர்ஆனிலும் ஹதீஸிலும் உள்ளன. அவை

2:255 اللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ

3:18 شَهِدَ اللّٰهُ اَنَّهٗ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَۙ

4:87 اللّٰهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ‌ؕ

9:31 لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ‌ ؕ...

11:14 وَاَنْ لَّاۤ اِلٰهَ اِلَّا هُوَ‌ۚ...

இந்த வசனிங்களிலெல்லாம் இந்த அழுத்தம் உள்ளது. வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை - அல்லாஹ்வைத்தவிர

ஸூரத்துல் பகரா (பசு மாடு) 256 ஆவது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

2:256 لَاۤ اِكْرَاهَ فِى الدِّيْنِ‌ۙ قَدْ تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَىِّ‌ۚ **فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْۢ بِاللّٰهِ** فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى لَا انْفِصَامَ لَهَا ‌ؕ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ

2:256. (இஸ்லாமிய) மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை; வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் (பிரிந்து) தெளிவாகிவிட்டது; ஆகையால், **எவர் வழி கெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ** அவர் அறுந்து விடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார் - அல்லாஹ்(யாவற்றையும்) செவியுறுவோனாகவும் நன்கறிவோனாகவும் இருக்கின்றான்.

இந்த வசனத்தில் முதலில் தாகூத்தை (வழி கெடுப்பவற்றை, அல்லாஹ் அல்லாத மற்ற வழிபடக்கூடிய பொய்த்தெய்வங்களை) நிராகரித்துவிட்டு பிறகு அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கையை யார் கொள்கிறார்களோ இவர்கள்தான் அறுந்து விடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார்கள்.

மேலும் ஸூரத்துந் நஹ்ல் (தேனி) லில் அல்லாஹ் கூறியுள்ளான்.

16:36 وَلَـقَدْ بَعَثْنَا فِىْ كُلِّ اُمَّةٍ رَّسُوْلًا اَنِ **اعْبُدُوا اللّٰهَ وَاجْتَنِبُوا الطَّاغُوْتَ‌ۚ** فَمِنْهُمْ مَّنْ هَدَى اللّٰهُ وَمِنْهُمْ مَّنْ حَقَّتْ عَلَيْهِ الضَّلٰلَةُ‌ ؕ فَسِيْرُوْا فِى الْاَرْضِ فَانْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُكَذِّبِيْنَ

16:36. மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், **“அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்; ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்”** என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத்தோம்; எனவே அ(ந்த சமூகத்த)வர்களில் அல்லாஹ் நேர்வழி காட்டியோரும் இருக்கிறார்கள்; வழிகேடே விதிக்கப்பெற்றோரும் அவர்களில் இருக்கிறார்கள்; ஆகவே நீங்கள் பூமியில் சுற்றுப்பயணம் செய்து, பொய்யர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதைக் கவனியுங்கள்.

அதாவது எல்லா நபிமார்களும் “அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்; ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்” என்று ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும் போதித்தார்கள்.

ரசூலுல்லாஹ் ﷺ இதனை தெளிவாக்கத்தான் ஒவ்வொரு நாளும் ஃபஜ்ர் தொழுகையில் முதல் ரகஆதில் ஸூரத்துல் காஃபிரூன் (காஃபிர்கள்) மற்றும் இரண்டாவது ரகஆதில் ஸூரத்துல் இஃக்லாஸ் (ஏகத்துவம்) சூராக்களை வழமையாக ஓதி வந்தார்கள்

109:1 قُلْ يٰۤاَيُّهَا الْكٰفِرُوْنَۙ **109:2** لَاۤ اَعْبُدُ مَا تَعْبُدُوْنَۙ **109:3** وَلَاۤ اَنْـتُمْ عٰبِدُوْنَ مَاۤ اَعْبُدُ‌ۚ **109:4** وَلَاۤ
اَنَا عَابِدٌ مَّا عَبَدْتُّمْۙ **109:5** وَلَاۤ اَنْـتُمْ عٰبِدُوْنَ مَاۤ اَعْبُدُؕ **109:6** لَـكُمْ دِيْنُكُمْ وَلِىَ دِيْنِ

109:1. (நபியே!) நீர் சொல்வீராக: காஃபிர்களே! **109:2.** நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்கமாட்டேன். **109:3.** இன்னும், நான் வணங்குகிறவனை நீங்கள் வணங்குகிறவர்களல்லர். **109:4.** அன்றியும், நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்குபவனல்லன். **109:5.** மேலும், நான் வணங்குபவனை நீங்கள் வணங்குபவர்கள் அல்லர். **109:6.** உங்களுக்கு உங்களுடைய மார்க்கம்; எனக்கு என்னுடைய மார்க்கம்.”

112:1 قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ‌ۚ **112:2** اَللّٰهُ الصَّمَدُ‌ۚ **112:3** لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۙ **112:4** وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ

112:1. (நபியே?!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே. **112:2.** அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன். **112:3.** அவன் (எவரையும்) பெறவுமில்லை; (எவராலும்) பெறப்படவுமில்லை. **112:4.** அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை.

أُمِرْتُ أَنْ أُقَاتِلَ النَّاسَ حَتَّى يَقُولُوا
لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ فَمَنْ قَالَ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ
فَقَدْ عَصَمَ مِنِّي مَالَهُ وَنَفْسَهُ إِلاَّ بِحَقِّهِ
وَحِسَابُهُ عَلَى اللَّهِ "

யாரெல்லாம் லா இலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லி அதில் உறுதியாக இருக்கிறார்களோ அவரது செல்வமும் உயிரும் பாதுகாப்பு பெறும். மேலும் அவரது விசாரணை அல்லாஹ்வின் மீது உள்ளது. - ஹதீஸ்

இவ்வாறு எல்லாவற்றையும் நிராகரித்து எவர் அல்லாஹ்வை மட்டும் ஈமான் கொள்கிறார்களோ அதுதான் உண்மையான தவ்ஹீத். அல்லாஹ் அப்படிப்பட்ட ஈமானை நமக்கு தவ்ஃபீக் செய்வானாக.

Aqeedah 9 Shirk: An unforgivable sin

அகீதா 9 - இணைவைத்தல்: மன்னிக்கப்படாத பாவம்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் இம்ரான் உமரி மதனீ

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா அவனை மட்டுமே வணங்குவதற்காக நம் அனைவரையும் படைத்துள்ளான். வேறு எந்த நோக்கத்திற்காகவும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம்மை படைக்கவில்லை. அதைவிட்டு அல்லாஹ்வை விட்டு பிறரை இபாதத் செய்வது அல்லாஹ்விடத்தில் மன்னிக்கமுடியாத ஒரு பாவம். தவ்ஹீத் என்பது அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கு மட்டும் இபாதத் செய்வது. அவனல்லாமல் மற்றவற்றுக்கு இபாதத்தின் சில அம்சங்களையோ அல்லது ஏதேனும் ஒன்றை செய்வது என்பது ஷிர்க் ஆகும். வணக்க வழிபாடுகளை அல்லாஹ் ஒருவனுக்கு செய்வதுதான் நீதி, நியாயத்தின் உச்சகட்டம். அதே நேரத்தில் இபாதத்தின் சில அம்சங்களையோ அல்லது ஒரு சில செயல்களையோ பிறருக்கு செய்வது அநீதியின் உச்சகட்டம் ஷிர்க் ஆகும். இது அமல்களில் கொடியது.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தனது திருமறையில் அதனை அழுத்தமாக கூறுகிறான்.

அல்ஃபாத்திஹா (தோற்றுவாய்)

1:5 اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُؕ

1:5. (இறைவா!)உன்னையே நாங்கள் வணங்குகிறோம்; உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:21 يٰۤاَيُّهَا النَّاسُ اعْبُدُوْا رَبَّکُمُ الَّذِىْ خَلَقَكُمْ وَالَّذِيْنَ مِنْ قَبْلِکُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَۙ
2:22 الَّذِىْ جَعَلَ لَـكُمُ الْاَرْضَ فِرَاشًا وَّالسَّمَآءَ بِنَآءً وَّاَنْزَلَ مِنَ السَّمَآءِ مَآءً فَاَخْرَجَ بِهٖ مِنَ الثَّمَرٰتِ رِزْقًا لَّـكُمْ‌ۚ فَلَا تَجْعَلُوْا لِلّٰهِ اَنْدَادًا وَّاَنْـتُمْ تَعْلَمُوْنَ

2:21. **மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள்.** (அதனால்) நீங்கள் தக்வா (இறையச்சமும்; தூய்மையும்) உடையோராகலாம்.

2:22. அ(ந்த இறை)வனே உங்களுக்காக பூமியை விரிப்பாகவும், வானத்தை விதானமாகவும் அமைத்து, வானத்திலிருந்தும் மழை பொழியச்செய்து; அதனின்று உங்கள் உணவிற்காகக் கனி வர்க்கங்களை வெளிவரச் செய்கிறான்; (இந்த உண்மைகளையெல்லாம்) **நீங்கள் அறிந்து கொண்டே இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள்.**

அல் இஷ்ராக்கு பில்லாஹ். ஷிர்க் (அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு இணை வைப்பது, இணை வைத்தால்), தவ்ஹீதுக்கு எதிரானது. ஷிர்க் என்பது இபாதத்து கைரில்லாஹு மஅஹு, அல்லாஹ்வை இபாதத்து செய்வதோடு பிறரையும் இணைத்து இபாதத்து செய்வது, சேர்த்துக்கொள்வது, இணையாக்குவது. இபாதத்தின் சில அம்சங்களையோ அல்லது ஒரு சில செயல்களையோ பிறருக்கு செய்து விடுவது. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுடைய ருபூபிய்யாஹ், உளுஹிய்யாஹ் மற்றும் அஸ்மா வஸிஃபாத், அல்லாஹ்வுடைய ரப் என்ற தன்மையிலோ அல்லது வணக்க வழிபாடுகளிலோ அல்லது அவனது பெயர்கள் தன்மைகளிலோ பிறரை சேர்த்துக்கொள்வது, இணையாக்குவது மிகப் பெரிய பாவம். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இதனை ஒருபோதும் மன்னிக்கவேமாட்டான்.

ஸூரத்துஜ்ஜுமர் (கூட்டங்கள்)

39:65 وَلَقَدْ اُوْحِىَ اِلَيْكَ وَاِلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكَ‌ۚ لَٮِٕنْ اَشْرَكْتَ لَيَحْبَطَنَّ عَمَلُكَ وَلَتَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ

39:65. அன்றியும், உமக்கும், உமக்கு முன் இருந்தவர்களுக்கும், வஹீ மூலம் நிச்சயமாக அறிவிக்கப்பட்டது என்னவென்றால், “நீவிர் (இறைவனுக்கு) இணை வைத்தால், உம் நன்மைகள் (யாவும்) அழிந்து, நஷ்டமடைபவர்களாகி விடுவீர்கள்” (என்பதுவேயாகும்).

இந்த வசனத்தில் நாம் கவனிக்கவேண்டியது. ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அழைப்பாளர்களாக இருக்கும் நிலையில் அவர்கள் ஒருபோதும் இணைவைக்கவே மாட்டார்கள். ஆனால் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம்மை எச்சரிக்கை செய்வதற்காக நாம் இந்த தவறை செய்துவிடக்கூடாது என்பதற்காக எவ்வாறு சொல்கின்றான் என்றால் நபி அவர்களே இந்த தவறை செய்தலும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா மன்னிக்கமாட்டான். அவ்வாறாயின் நாம் எந்த அளவு இந்த பாவத்தை அஞ்சவேண்டும். நன்மைகளை நாசமாக்கக்கூடிய மிகப் பெரிய பாவம் அல்லாஹ்வோடு பிறரை இணையாக்குவது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம் அனைவரையும் இந்த பெரும் பாவத்திலிருந்து நம்மை காப்பாற்றுவானாக!

எவ்வாறோ அல்லாஹ் தவ்ஹீதை தெளிவாக்கியிருக்கின்றானோ அதேபோல ஷிர்க்கிலிருந்தும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா முழுமையாக நம்மை எச்சரித்துள்ளான்.

ஸூரத்துன்னிஸாவு (பெண்கள்)

4:48 اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰ لِكَ لِمَنْ يَّشَآءُ‌ ۚ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدِ افْتَـرٰۤى اِثْمًا عَظِيْمًا

4:48. நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான்; இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான்; யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள்.

4:116 اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰ لِكَ لِمَنْ يَّشَآءُ‌ ؕ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ ضَلَّ ضَلٰلًاۢ بَعِيْدًا

4:116. நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கவே மாட்டான்; இது அல்லாத (பாவத்)தைத் தான் நாடியவருக்கு மன்னிப்பான்; எவன் ஒருவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றானோ, அவன் நிச்சயமாக வெகு தூரமான வழிகேட்டில் ஆகிவிட்டான்.

ஸூரத்துல் மாயிதா (ஆகாரம்) (உணவு மரவை)

5:72 لَقَدْ كَفَرَ الَّذِيْنَ قَالُوْۤا اِنَّ اللّٰهَ هُوَ الْمَسِيْحُ ابْنُ مَرْيَمَ‌ ؕ وَقَالَ الْمَسِيْحُ يٰبَنِىْۤ اِسْرَآءِيْلَ اعْبُدُوا اللّٰهَ رَبِّىْ وَرَبَّكُمْ‌ ؕ **اِنَّهٗ مَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ حَرَّمَ اللّٰهُ عَلَيْهِ الْجَـنَّةَ وَمَاْوٰىهُ النَّارُ‌ ؕ وَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ اَنْصَارٍ**

5:72. “நிச்சயமாக மர்யமுடைய மகனாகிய மஸீஹ் (ஈஸா) தான் அல்லாஹ்” என்று கூறுகிறவர்கள் உண்மையிலேயே நிராகரிப்பவர்கள் ஆகிவிட்டார்கள்; ஆனால் மஸீஹ் கூறினார்: “இஸ்ராயீலின் சந்ததியினரே! என்னுடைய இறைவனும், உங்களுடைய இறைவனுமாகிய அல்லாஹ்வை வணங்குங்கள்” என்று. **எனவே எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹராமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், அக்கிரமக்காரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை.**

ஸூரத்துல் ஹஜ்ஜில் 32 ஆவது வசனத்தில் ஒரு உதாரணத்தின் மூலம், இணைவைப்பார்களுக்கு யாரும் உதவி செய்யமுடியாது, அவர்கள் நாசமடைவார்கள் என்று கூறுகின்றான்.

22:31 حُنَفَآءَ لِلّٰهِ غَيْرَ مُشْرِكِيْنَ بِهٖ‌ ؕ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَكَاَنَّمَا خَرَّ مِنَ السَّمَآءِ فَتَخْطَفُهُ الطَّيْرُ اَوْ تَهْوِىْ بِهِ الرِّيْحُ فِىْ مَكَانٍ سَحِيْقٍ

22:31. அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைக்காது அவனுக்கு முற்றிலும் வழிப்படவர்களாக இருங்கள்; இன்னும் **எவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கிறானோ, அவன் வானத்திலிருந்து விழுந்து பறவைகள் அவனை வாரி எடுத்துச் சென்றது போலும் அல்லது பெருங் காற்றடித்து, அவனை வெகு தொலைவிலுள்ள ஓரிடத்திற்கு அடித்துக் கொண்டு சென்றது போலும் ஆகிவிடுவான்.**

இதைப்போல் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் பல ஹதீஸ்களில் மிகப்பெரிய பாவம் மிகக் கொடியது அல்லாஹ்விற்கு இணைவைப்பது என்று கூறியுள்ளார்கள். ஒரு ஹதீஸிலே ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் - பாவங்களிலே பெரும்பாவம் எது என்பதை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா அன்று சொல்லிவிட்டு ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களே சொல்கின்றார்கள் "அல் இஷ்ராக்கு பில்லாஹ்" அல்லாஹ்வோடு இணையாக்குவது இபாதத்து விஷயத்தில் பிறரை இணையாக்குவது. இது தான் பாவங்களில் மிகப்பெரியது.

பாடம் : 37 இறைவனுக்கு இணைவைப்பதுதான் பாவங்களிலேயே மிகவும் மோசமானது. அதற்கடுத்த பெரும் பாவம் எது என்பது பற்றிய விளக்கம்.

141. அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறியதாவது: நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், "அல்லாஹ்விடம் பாவங்களில் மிகப் பெரியது எது?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், **"அல்லாஹ் உன்னைப் படைத்திருக்க, அவனுக்கு நீ இணை கற்பிப்பது"** என்று சொன்னார்கள். நான் அவர்களிடம், "நிச்சயமாக அது மிகப் பெரிய பாவம்தான்" என்று சொல்லிவிட்டு, "பிறகு எது?" என்று கேட்டேன். "உன் குழந்தை உன்னுடன் (அமர்ந்து உன் உணவைப் பங்குபோட்டு) உண்ணும் என அஞ்சி அதை நீ கொல்வது" என்று சொன்னார்கள். நான் "பிறகு எது?" என்று கேட்க, அவர்கள், "உன்(மீது அபார நம்பிக்கைவைத்துள்ள) அண்டை வீட்டானின் மனைவி(யைக் கவர்ந்து அவள்) உடன் நீ விபசாரம் செய்வது" என்று சொன்னார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book : 1 **ஸஹீஹ் முஸ்லிம்**

142. அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறியதாவது: ஒரு மனிதர் (நபி (ஸல்) அவர்களிடம் "அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்விடம் எந்தப் பாவம் மிகப்பெரியது?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், **"அல்லாஹ் உன்னைப் படைத்திருக்க, அவனுக்கு நீ இணைவைப்பதுதான், (பெரும் பாவம்)" என்று பதிலளித்தார்கள்**. அவர், "பிறகு எது?" என்று கேட்டார். அவர்கள், "உன் குழந்தை உன்னுடன் (அமர்ந்து உன் உணவைப் பங்குபோட்டு) உண்ணும் என அஞ்சி அதை நீ கொல்வது" என்று சொன்னார்கள். "பிறகு எது?" என்று அவர் கேட்க, "உன் அண்டை வீட்டானின் மனைவி(யைக் கவர்ந்து அவள்) உடன் நீ விபசாரம் செய்வது" என்று அவர்கள் பதிலளித்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில், "மேலும், அவர்கள் அல்லாஹ்வுடன் வேறெந்தத் தெய்வத்தையும் அழைப்பதில்லை. மேலும், (கொலை செய்யக் கூடாது என்று) அல்லாஹ் தடை விதித்துள்ள எந்த உயிரையும் (சட்டபூர்வமான) உரிமையின்றி அவர்கள் கொலை செய்வதில்லை; மேலும், விபசாரமும் செய்வதில்லை. யாரேனும் இச்செயல்களைச் செய்தால் அவன் (தன் பாவத்திற்கான) தண்டனையைப் பெற்றே தீருவான்" எனும் (25:68ஆவது) வசனத்தை அல்லாஹ் அருளினான். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book : 1 **ஸஹீஹ் முஸ்லிம்**

பாடம் : 38 பெரும் பாவங்களும் மிகப்பெரும் பாவங்களும்.

143. அபூபக்ரா நுஃபைஉ பின் அல்ஹாரிஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது: நாங்கள் (ஒரு நாள்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அருகில் இருந்தோம். அப்போது அவர்கள், "பெரும் பாவங்களிலேயே மிகப்பெரும் பாவங்களை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என்று (மூன்று முறை) கேட்டு விட்டு, "**அல்லாஹ்வுக்கு இணைவைப்பது**, பெற்றோரைப் புண்படுத்துவது, "பொய் சாட்சியம் சொல்வது" அல்லது "பொய் பேசுவது" ஆகியவை (தாம் அவை)" என்று கூறினார்கள். அப்போது சாய்ந்துகொண்டிருந்த அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எழுந்து அமர்ந்து இ(றுதியாகச் சொன்ன)தை திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டேயிருந்தார்கள். இதைக் கண்ட நாங்கள் "அவர்கள் நிறுத்திக் கொள்ளக்கூடாதா!" என்று கூறினோம். Book : 1 **ஸஹீஹ் முஸ்லிம்**

144. அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வுக்கு இணைவைப்பது, பெற்றோரைப் புண்படுத்துவது, கொலைசெய்வது மற்றும் பொய் பேசுவது ஆகியவை பெரும்பாவங்களில் அடங்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். - அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது: (ஒரு முறை) "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பெரும் பாவங்கள் பற்றிக் கூறினார்கள்" அல்லது "பெரும் பாவங்கள் குறித்து அவர்களிடம் வினவப்பட்டது". அப்போது அவர்கள், "**அல்லாஹ்வுக்கு இணைவைப்பது**, கொலை செய்வது, பெற்றோரைப் புண்படுத்துவது ஆகியன (பெரும்பாவங்களாகும்)" என்று கூறினார்கள். பிறகு "பெரும் பாவங்களிலேயே மிகப் பெரும் பாவம் ஒன்றை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என்று கேட்டுவிட்டு, "பொய் பேசுவது" அல்லது "பொய் சாட்சியம் கூறுவது" தான் (அது) என்று சொன்னார்கள். அறிவிப்பாளர்களில் ஒருவரான ஷுஅபா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "பொய் சாட்சியம்" என்றே நான் பெரிதும் கருதுகிறேன். Book : 1 **ஸஹீஹ் முஸ்லிம்**

145. அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "பேரழிவை ஏற்படுத்தும் ஏழு பெரும் பாவங்களைத் தவிர்த்திடுவீர்!" என்று கூறினார்கள். அப்போது, "அல்லாஹ்வின் தூதரே! அவை எவை?" என்று கேட்கப்பட்டது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "**அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பது**, சூனியம் செய்வது, (சட்டபூர்வமான) உரிமையின்றி கொல்லக் கூடாது என்று அல்லாஹ் தடை விதித்துள்ள உயிரைக் கொல்வது, அநாதைகளின் செல்வத்தை உண்பது, வட்டியை உண்பது, போரின்போது புறமுதுகிட்டு ஓடுவது, அப்பாவிகளான, இறை நம்பிக்கை கொண்ட, கற்புள்ள பெண்கள்மீது அவதூறு கூறுவது ஆகியவைதாம் (அந்தப் பெரும் பாவங்கள்)" என்று பதிலளித்தார்கள். Book : 1 **ஸஹீஹ் முஸ்லிம்**

அல்லாஹ்விற்கு இணைவைப்பது பெறிய பாவம். அதனாலேயே அனைத்து நபிமார்களும் ஷிர்க்கைப் பற்றி அஞ்சினார்கள். ஷிர்க்கிலிருந்து பாதுகாப்பு தேடினார்கள்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு) வசனம் 126 ல்

2:126 وَاِذْ قَالَ اِبْرٰهٖمُ رَبِّ اجْعَلْ هٰذَا بَلَدًا اٰمِنًا وَّارْزُقْ اَهْلَهٗ مِنَ الثَّمَرٰتِ مَنْ اٰمَنَ مِنْهُمْ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ‌ؕ قَالَ وَمَنْ كَفَرَ فَاُمَتِّعُهٗ قَلِيْلًا ثُمَّ اَضْطَرُّهٗۤ اِلٰى عَذَابِ النَّارِ‌ؕ وَبِئْسَ الْمَصِيْرُ

2:126. (இன்னும் நினைவு கூறுங்கள்:) இப்ராஹீம்: "**இறைவா! இந்தப் பட்டணத்தைப் பாதுகாப்பான இடமாக ஆக்கி வைப்பாயாக!** இதில் வசிப்போரில் யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறார்களோ அவர்களுக்குப் பல வகைக் கனிவர்க்கங்களையும் கொண்டு உணவளிப்பாயாக" என்று கூறினார்; அதற்கு இறைவன் கூறினான்: "(ஆம்;) யார் நம்பிக்கை

கொள்ளவில்லையோ அவனுக்கும் சிறிது காலம் சுகானுபவத்தை அளிப்பேன்; பின்னர் அவனை நரக நெருப்பின் வேதனையில் நிர்பந்திப்பேன் - அவன் சேரும் இடம் மிகவும் கெட்டதே."

இப்ராஹிம் (அலை) அல்லாஹ்விடம் வேண்டினார்கள் - யார் பார்வையும் படாத ஒரிடத்தில் தன் மனைவி ஹாஜர் அவர்களையும் மகன் இஸ்மாயீலையும் விட்டு விட்டு உறுதிப்பாட்டுடனும் உள்ளச்சத்துடனும் இறைவனிடத்தில் பிரார்த்தித்தார்கள்.

وَإِذْ قَالَ إِبْرَاهِيمُ رَبِّ اجْعَلْ هَٰذَا الْبَلَدَ آمِنًا وَاجْنُبْنِي وَبَنِيَّ أَن نَّعْبُدَ الْأَصْنَامَ

"இறைவா! இவ்வூரை அபயமளிக்கக் கூடியதாக ஆக்குவாயாக! என்னையும், என் பிள்ளைகளையும் சிலைகளை வணங்குவதை விட்டும் காப்பாயாக!"

ஸூரத்துந் நஹ்ல் (தேனி)

16:120 اِنَّ اِبْرٰهِيْمَ كَانَ اُمَّةً قَانِتًا لِّلّٰهِ حَنِيْفًا ؕ وَلَمْ يَكُ مِنَ الْمُشْرِكِيْنَۙ

16:120. நிச்சயமாக இப்ராஹீம் ஒரு வழிகாட்டியாகவும் அல்லாஹ்வுக்கு அடிபணிந்தவராகவும் (நேரான பாதையில்) சார்ந்தவராகவும் இருந்தார்; மேலும், **அவர் முஷ்ரிக்குகளில் (இணை வைப்போரில்) ஒருவராக இருக்கவில்லை.**

ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் ஷிர்க்கைப் பற்றி தெள்ளத் தெளிவாக அதன் அபாயத்தை விளக்கியுள்ளார்கள். அதே நேரம் ஷிர்க்கிலிருந்து பாதுகாப்பு பெற துஆவையும் கற்றுத்தந்துள்ளார்கள்.

اللّهُمَّ إِنّـي أَعـوذُبِكَ أَنْ أُشْـرِكَ بِكَ وَأَنا أَعْـلَمْ، وَأَسْتَـغْفِرُكَ لِما لا أَعْـلَم

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் அறிந்து கொண்டே உனக்கு இணைவைப்பிலிருந்து உன்னைக் கொண்டு காவல் தேடுகின்றேன். நான் அறியாதவற்றிற்காக உன்னிடம் பாவம் பொறுத்தருள வேண்டுகின்றேன். (ஆதாரம் - அஹ்மத்)

இவ்வாறான கொடிய பாவத்தை விட்டும் நாம் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக்கொண்டே இருக்கவேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம் அனைவரையும் வணக்க வழிபாடுகள் அல்லாஹ்வுக்கே மட்டுமே செய்ய தவ்ஃபீக் செய்வானாக. அதற்கு அல்லாஹ் நமக்கு உதவி புரிவானாக. அதே நேரத்தில் ஷிர்க்கிலிருந்தும் பெரும் பாவங்களிலிருந்தும் நம் அனைவரையும் பாதுகாப்பானாக.

அகீதா 10 - பெரிய இணைவைத்தல்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் இம்ரான் உமரி மதனீ

ஷிர்க் இரு வகைப்படும். ஷிர்க் அக்பர் - பெரிய இணைவைத்தல், ஷிர்க் அஸ்கர் - சிறிய இணைவைத்தல்.

பெரிய ஷிர்க் என்பது இபாதத்தை முழுமையாகவோ அல்லது இபாதத்தின் ஒரு சில அம்சங்களையோ பிறருக்காக செய்துவிடுவது. பெரிய ஷிர்க் ஆனது ஒருவரை மார்க்கத்திலிருந்து வெளியாக்கிவிடும். அவர் மீது சொர்க்கம் ஹராம் ஆகிவிடும். நரகத்திலேயே அவர் நிரந்தரமாக தங்குவார். அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா அவரை ஒருபோதும் மன்னிக்கமாட்டான். இந்த உலகில் அவரது செல்வமும் உயிரும் பாதுகாப்பற்றது என்று ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இத்தகைய கொடிய பாவத்திலிருந்து நாம் விலகி இருக்குவேண்டுமானால், இதனை நாம் அறிந்து இருக்கவேண்டும். இதற்காக நாம் துஆவும் செய்யவேண்டும், மேலும் மார்க்கத்தை கற்றுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

இதனை நாம் உதாரணங்கள் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

முதலாவதாக - ஷிர்க்குத் துஆ அல்லது ஷிர்க் பி இபாதா - இபாதத் விஷயத்தில் அல்லாஹ்வோடு பிறரை இணையாக்குவது. துஆ என்றால் அழைப்பது, இபாதத் செய்வது, வணங்குவது என்று பொருள். அல்லாஹ் கூறுகின்றான்.

ஸூரத்து யூனுஸ் (நபி)

10:106 وَلَا تَدْعُ مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَنْفَعُكَ وَ لَا يَضُرُّكَ‌ ۚ فَاِنْ فَعَلْتَ فَاِنَّكَ اِذًا مِّنَ الظّٰلِمِيْنَ

10:106. **உமக்கு (எவ்வித) நன்மையையோ, தீமையையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாததை எதனையும் நீர் பிரார்த்திக்க வேண்டாம்**; (அவ்வாறு) செய்வீராயின் நிச்சயமாக நீர் அநியாயக்காரர்களில் ஒருவராகிவிடுவீர்.

ஸூரத்துல் அஹ்காஃப் (மணல் திட்டுகள்)

46:5 وَمَنْ اَضَلُّ مِمَّنْ يَّدْعُوْا مِنْ دُوْنِ اللّٰهِ مَنْ لَّا يَسْتَجِيْبُ لَهٗۤ اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ وَهُمْ عَنْ دُعَآٮِٕهِمْ غٰفِلُوْنَ
46:6 وَاِذَا حُشِرَ النَّاسُ كَانُوْا لَهُمْ اَعْدَآءً وَّكَانُوْا بِعِبَادَتِهِمْ كٰفِرِيْنَ

46:5. கியாம நாள்வரை (அழைத்தாலும்) தனக்கு பதில் கொடுக்க மாட்டாத - அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பவர்களைவிட வழி கெட்டவர்கள் யார்? தங்களை அழைப்பதையே அவர்கள் அறியமுடியாது.

46:6. அன்றியும் மனிதர் ஒன்று கூட்டப்படும் (அந்நாளில்) இவர்கள் அவர்களுடைய பகைவர்களாக இருப்பர்; அவர்கள் தங்களை வழிபட்டுக் கொண்டு இருந்ததையும் நிராகரித்து (மறுத்து) விடுவர்.

ஸூரத்துல் கஹ்ஃபு (குகை)

18:52 وَيَوْمَ يَقُوْلُ نَادُوْا شُرَكَآءِىَ الَّذِيْنَ زَعَمْتُمْ فَدَعَوْهُمْ فَلَمْ يَسْتَجِيْبُوْا لَهُمْ وَجَعَلْنَا بَيْنَهُمْ مَّوْبِقًا

18:52. “எனக்கு இணையானவர்களென எவர்களை நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்களோ அவர்களை நீங்கள் அழையுங்கள் என்று அவன் கூறக்கூடிய நாளில் இவர்கள் அவர்களை அழைப்பார்கள். ஆனால் அவர்கள் இவர்களுக்கு பதிலளிக்க மாட்டார்கள்; இன்னும் அவர்களுக்கிடையே நாசத்தை நாம் ஏற்படுத்துவோம்.”

சிலைகளை வணங்குவது மட்டுமே இணைவைத்தல் கிடையாது. அல்லாஹ்வை தவிர்த்து வேறு யாரை அழைத்தாலும், யாரை இபாதத் செய்தாலும், இபாதத்தின் சில விஷயங்களையோ அல்லது முழுவதுமாகவோ பிறருக்கு செய்துவிட்டால் அதுதான் இணைவைத்தல். சிலைகளை அழைத்தாலும் ஈஸாவை அழைத்தாலும் உஜைரை அழைத்தாலும் கௌசை அழைத்தாலும் அலியை அழைத்தாலும் எல்லாம் இணைவைத்தல்தான் என்பதை புரிந்துகொள்ள நாம் கடமைப்பட்டுள்ளோம். அதுபோல உதவிக்காக பிறரை அழைப்பது, இறந்தவர்களை அழைப்பது, அவர்கள் மூலமாக உதவியை நாடுவது அவர்களுக்காக அறுத்துப் பலியிடுவது அவர்கள் பெயரில் நேர்ச்சை செய்வது, அவர்களுக்கு அஞ்சுவது, அவர்களை அல்லாஹ்வைப் போன்றோ அல்லது அதைவிட அதிகமாக நேசிப்பது - இது போன்ற செயல்கள் அனைத்தும் இணைவைத்தல் - ஷிர்க் ஆகும். அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா ஒருபோதும் மன்னிக்கமாட்டான்.

ஸூரத்துன்னிஸாவு (பெண்கள்)

4:116 اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰ لِكَ لِمَنْ يَّشَآءُ‌ ؕ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ ضَلَّ ضَلٰلاً ۢ بَعِيْدًا

4:116. நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கவே மாட்டான்; இது அல்லாத (பாவத்)தைத் தான் நாடியவருக்கு மன்னிப்பான்; எவன் ஒருவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றானோ, அவன் நிச்சயமாக வெகு தூரமான வழிகேட்டில் ஆகிவிட்டான்.

ஸூரத்துல் மாயிதா (ஆகாரம்) (உணவு மரவை)

5:72 لَقَدْ كَفَرَ الَّذِيْنَ قَالُوْۤا اِنَّ اللّٰهَ هُوَ الْمَسِيْحُ ابْنُ مَرْيَمَ‌ؕ وَقَالَ الْمَسِيْحُ يٰبَنِىْۤ اِسْرَآءِيْلَ اعْبُدُوا اللّٰهَ رَبِّىْ وَرَبَّكُمْ‌ؕ **اِنَّهٗ مَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ حَرَّمَ اللّٰهُ عَلَيْهِ الْجَـنَّةَ وَمَاْوٰٮهُ النَّارُ‌ؕ وَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ اَنْصَارٍ**

5:72. "நிச்சயமாக மர்யமுடைய மகனாகிய மஸீஹ் (ஈஸா) தான் அல்லாஹ்" என்று கூறுகிறவர்கள் உண்மையிலேயே நிராகரிப்பவர்கள் ஆகிவிட்டார்கள்; ஆனால் மஸீஹ் கூறினார்: "இஸ்ராயீலின் சந்ததியினரே! என்னுடைய இறைவனும், உங்களுடைய இறைவனுமாகிய அல்லாஹ்வை வணங்குங்கள்" என்று. **எனவே எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹராமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், அக்கிரமக்காரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை.**

நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய விஷயம் அல்லாஹ்வுடன் எதையும் இணையாக்காமல் இருப்பது. ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் உம்மத்தை ஷிர்க்கைவிட்டு தடுத்தார்கள். விவரித்து கூறினார்கள்.

حَدَّثَنِي إِسْحَاقُ بْنُ إِبْرَاهِيمَ، سَمِعَ يَحْيَى بْنَ آدَمَ، حَدَّثَنَا أَبُو الأَحْوَصِ، عَنْ أَبِي إِسْحَاقَ، عَنْ عَمْرِو بْنِ مَيْمُونٍ، عَنْ مُعَاذٍ ـ رضى الله عنه ـ قَالَ كُنْتُ رِدْفَ النَّبِيِّ صلى الله عليه وسلم عَلَى حِمَارٍ يُقَالُ لَهُ عُفَيْرٌ، فَقَالَ " يَا مُعَاذُ، هَلْ تَدْرِي حَقَّ اللَّهِ عَلَى عِبَادِهِ وَمَا حَقُّ الْعِبَادِ عَلَى اللَّهِ ". قُلْتُ اللَّهُ وَرَسُولُهُ أَعْلَمُ. قَالَ " فَإِنَّ حَقَّ اللَّهِ عَلَى الْعِبَادِ أَنْ يَعْبُدُوهُ وَلاَ يُشْرِكُوا بِهِ شَيْئًا، وَحَقَّ الْعِبَادِ عَلَى اللَّهِ أَنْ لاَ يُعَذِّبَ مَنْ لاَ يُشْرِكُ بِهِ شَيْئًا ". فَقُلْتُ يَا رَسُولَ اللَّهِ، أَفَلاَ أُبَشِّرُ بِهِ النَّاسَ قَالَ " لاَ تُبَشِّرْهُمْ فَيَتَّكِلُوا ".

2856. முஆத் (ரலி) அறிவித்தார். நான் நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னால் 'உஃபைர்' என்றழைக்கப்பட்ட கழுதையின் மீது அமர்ந்திருந்தேன். அப்போது அவர்கள், 'முஆதே! அல்லாஹ்வுக்கு மக்களின் மீதுள்ள உரிமை என்ன, மக்களுக்கு அல்லாஹ்வின் மீதுள்ள உரிமை என்ன என்பதை நீர் அறிவீரா?' என்று (என்னிடம்) கேட்டார்கள். நான், 'அல்லாஹ்வும்

அவனுடைய தூதருமே நன்கறிந்தவர்கள்' என்று பதில் கூறினேன். நபி(ஸல்) அவர்கள், 'மக்களின் மீது அல்லாஹ்வுக்குள்ள உரிமை என்னவென்றால், அவர்கள் அவனை(யே) வணங்கிட வேண்டும், அவனுக்கு எதனையும் (எவரையும்) இணை கற்பிக்கக் கூடாது என்பதாகும். அல்லாஹ்வின் மீது மக்களுக்குள்ள உரிமை, அவனுக்கு இணை கற்பிக்காமலிருப்பவரை அவன் வேதனைப்படுத்தாமல் இருப்பதாகும்' என்று பதில் கூறினார்கள். நான், 'இறைத்தூதர் அவர்களே! நான் மக்களுக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கட்டுமா?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'அவர்களுக்கு (இந்த நற்செய்தியை) அறிவிக்காதீர்கள். அவர்கள் இதையே நம்பி (நற்செயல்களில் ஈடுபடாமல்) இருந்து விடுவார்கள்' என்று பதிலளித்தார்கள். Volume: 3 Book: 56 - **ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்**

இதற்கு முன் ஷிர்க்குத் துஆ என்றால் என்னவென்று பார்த்தோம். அடுத்தது ஷிர்க்கு மஹப்பாஹ்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு) வில் அல்லாஹ் கூறுகின்றான்

2:165 وَمِنَ النَّاسِ مَنْ يَّتَّخِذُ مِنْ دُوْنِ اللّٰهِ اَنْدَادًا يُّحِبُّوْنَهُمْ كَحُبِّ اللّٰهِؕ وَالَّذِيْنَ اٰمَنُوْٓا اَشَدُّ حُبًّا لِّلّٰهِ ؕ وَلَوْ يَرَى الَّذِيْنَ ظَلَمُوْٓا اِذْ يَرَوْنَ الْعَذَابَۙ اَنَّ الْقُوَّةَ لِلّٰهِ جَمِيْعًا ۙ وَّاَنَّ اللّٰهَ شَدِيْدُ الْعَذَابِ

2:165. அல்லாஹ் அல்லாதவர்களை அவனுக்கு இணையாக வைத்துக் கொண்டு, அவர்களை அல்லாஹ்வை நேசிப்பதற்கொப்ப நேசிப்போரும் மனிதர்களில் இருக்கிறார்கள்; ஆனால் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வை நேசிப்பதில் உறுதியான நிலையுள்ளவர்கள்; இன்னும் (இணை வைக்கும்) அக்கிரமக்காரர்களுக்குப் பார்க்க முடியுமானால், (அல்லாஹ் தரவிருக்கும்) வேதனை எப்படியிருக்கும் என்பதைக் கண்டு கொள்வார்கள்; அனைத்து வல்லமையும் அல்லாஹ்வுக்கே சொந்தமானது; நிச்சயமாக தண்டனை கொடுப்பதில் அல்லாஹ் மிகவும் கடுமையானவன் (என்பதையும் கண்டு கொள்வார்கள்).

அல்லாஹ்வுக்கு இணையாக இன்னொருவரை நேசிப்பதும் ஷிர்க்கின் ஒரு வகை - ஷிர்க்கு மஹப்பாஹ். இன்னொரு ஷிர்க் வகை - ஷிர்க்குத் த்தாஆ - கீழ்ப்படிதல் விஷயத்தில் பிறரை அல்லாஹ்விற்கு இணையாக்குவது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவோடு பிறரை சட்டங்கள் இயற்றும் விஷயத்தில் இணையாக்கிக்கொள்வது. ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதனை விவரிக்கும் வகையில் சொன்னார்கள். மார்க்க சட்டங்களை இயற்றும் விஷயத்திலும் ஹலாலை ஹராமாக்கும் விஷயத்திலும் ஹராமை ஹலாலாக்கும் விஷயத்திலும் மற்ற அனைத்து மார்க்க விஷயங்களிலும் அல்லாஹ் கூறுவதை விட்டுவிட்டு உலமாக்களையும் மதத் தலைவர்களையும் பின்பற்றினால் அது ஷிர்க்குத் த்தாஆ - கீழ்ப்படிதல் விஷயத்தில் பிறரை அல்லாஹ்விற்கு இணையாக்குவது ஆகும். ஏனென்றால் அல்லாஹ்வுக்கு மட்டும்தான் முற்றிலும் நாம் கீழ்ப்படியவேண்டும். அல்லாஹ்வுடைய சட்டங்களைத்தான் நாம் பின்பற்றவேண்டும்.

மற்றுமொரு ஷிர்க் வகை - ஷிர்க்குத் தஸர்ருஃப். இந்த பிரபஞ்சத்தின் காரியத்தை நிர்வகிப்பதில் பிறருக்கும் பங்கு உண்டு. நல்லோர்களும் அவ்லியாக்களும் இந்த பிரபஞ்சத்தின் காரியங்களை நிர்வகிப்பதில் அல்லாஹ்வுக்கு துணையாக இருக்கின்றார்கள் என்று யார் சொல்வார்களோ அவர்கள் தஸர்ருஃப் - காரியங்களை நிர்வகிக்கக்கூடிய விஷயத்தில் அல்லாஹ்வோடு பிறரை இணையாக்குகின்றார்கள். முஸ்லிம்களில் பலர் இவ்வாறுதான் நினைத்துக் கொண்டிருக்கிறர்கள்.

32:5 يُدَبِّرُ الْاَمْرَ مِنَ السَّمَآءِ اِلَى الْاَرْضِ ثُمَّ يَعْرُجُ اِلَيْهِ فِىْ يَوْمٍ كَانَ مِقْدَارُهٗۤ اَلْفَ سَنَةٍ مِّمَّا تَعُدُّوْنَ

32:5. **வானத்திலிருந்து பூமி வரையிலுமுள்ள காரியத்தை அவனே ஒழுங்குபடுத்துகிறான்**; ஒரு நாள் (ஒவ்வொரு காரியமும்) அவனிடமே மேலேறிச் செல்லும், அந்த (நாளின்) அளவு நீங்கள் கணக்கிடக்கூடிய ஆயிரம் ஆண்டுகளாகும்.

85:16 فَعَّالٌ لِّمَا يُرِيْدُ

85:16. தான் விரும்பியவற்றைச் செய்கிறவன்.

அல்லாஹ்தான் இந்த உலகைப் படைத்தான். அவனே அதனை ஆளுகின்றான், நிர்வகிக்கின்றான். அந்த உரிமை அவனுக்குமட்டுமே உரியது.

அடுத்து - ஷிர்க்குல் கவ்ஃப் - மறைமுகமாக அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவை விட்டுவிட்டு ஒரு சிலரை பயப்படுவது அஞ்சுவது. அவர்களும் நன்மையை செய்ய ஆற்றலுள்ளவர்கள் அல்லது தீங்கு விளைவிப்பார்கள் என்று மறைமுகமாக உள்ளத்தில் அவர்களுக்கு பயப்படுவது. இறந்தவர்களுக்கு நாம் ஃபாத்திஹா செய்யவிட்டால் நமக்கோ நம் வியாபாரத்திற்கோ அல்லது நம் குழந்தைகளுக்கு தீங்கு ஏற்படும் என்று அஞ்சுவது. ஷைத்தான் மனிதர்களை வழிகெடுக்க இது போன்ற பயங்களை உள்ளத்தில் ஏற்படுத்துகிறான்.

ஸூரத்துல்ஆல இம்ரான் (இம்ரானின் சந்ததிகள்) ல் அல்லாஹ் கூறுகின்றான்

3:175 اِنَّمَا ذٰلِكُمُ الشَّيْطٰنُ يُخَوِّفُ اَوْلِيَآءَهٗ فَلَا تَخَافُوْهُمْ وَخَافُوْنِ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ

3:175. ஷைத்தான்தான் தன் சகாக்களைக் கொண்டும் இவ்வாறு பயமுறுத்துகிறான்; ஆகவே நீங்கள் அவர்களுக்குப் பயப்படாதீர்கள் - நீங்கள் முஃமின்களாகயிருப்பின் எனக்கே பயப்படுங்கள்.

ஷைத்தான் இவ்வாறு பயமுறுத்தினாலும் முஃமின்களோ ஹஸ்புனல்லாஹு வ நிஃமல் வகீல் (அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவே போதுமானவன், அவனே பொறுப்பேற்க சிறந்தவன்) என்று கூறுவார்கள்.

அடுத்து ஷிர்க்குத் தவக்குல் - அல்லாஹ்விடம் தவக்குல் வைப்பதில் சிலரை இணையாக்குவது. காரியங்கள் அனைத்தையும் அல்லாஹ்விடம் ஒப்படைத்து நன்மையை எதிர்பார்த்து, தீமையிலிருந்து விலக அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவை சார்ந்திருப்பது சரியான தவக்குல் ஆகும். இதையே பிறர் மீது சார்ந்திருந்தால், ஒரு நபி, வலி அல்லது நல்லவரையோ சார்ந்திருந்தால் - அவர்கள் நமக்கு நன்மை செய்வார்கள், தீமையிலிருந்து காப்பாற்றுவார்கள் என்று நினைத்தால் அது ஷிர்க்குத் தவக்குல் ஆகும்.

ஷிர்க்குல் 'ஹுலூல்' (இரண்டறக் கலப்பின் மூலம் இணை வைத்தல்) - அல்லாஹ் படைப்பினங்களுடன் கலந்து இருக்கிறான் என்று நம்புவது . இது மிகவும் கெட்ட அகீதாவாகும். இப்னு அரபி என்று ஒரு சூஃபி இருந்தான். அவன்தான் இதை சொன்னவன். ஆனால் இது முற்றிலும் தவறு.

20:5 اَلرَّحْمٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوٰى

20:5. அர்ரஹ்மான் அர்ஷின் மீது அமைந்தான்.

அர்ரஹ்மான் அர்ஷின் மீது அமைந்தான் என்று குர்ஆனில் பல இடங்களில் நாம் பார்க்கமுடியும். அல்லாஹ் எங்கு இருக்கின்றான்? அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா இருப்பது வானங்களுக்கு மேல், அர்ஷில். ஆனால் அல்லாஹ் பூமியில் இருக்கின்றான், எங்கும் இருக்கின்றான், படைப்பினங்களுடன் கலந்து இருக்கிறான் என்று சொல்வது தவறு. தூணிலும் இருக்கின்றான் துரும்பிலும் இருக்கின்றான் என்று கூறுவது இந்துக்களின் கருத்து. இதனை நாம் தவிர்க்கவேண்டும்.

ஷிர்க்குல் கஸ்த்தி வல் இராதா - எண்ணத்திலும் குறிக்கோளிலும் இணையாக்குவது. அல்லாஹ்வை நிராகரித்து மறுமையை நிராகரித்து உலகத்தையே லட்சியமாக வைத்து வாழ்வது. உலகத்துடைய இன்பங்கள், வெற்றி இதுதான் அவர்களுடைய குறிக்கோளாக இருக்கும்.

அல்லாஹ் ஸுரத்து ஹுதில் கூறுகின்றான்

11:15 مَنْ كَانَ يُرِيْدُ الْحَيٰوةَ الدُّنْيَا وَ زِيْنَتَهَا نُوَفِّ اِلَيْهِمْ اَعْمَالَهُمْ فِيْهَا وَهُمْ فِيْهَا لَا يُبْخَسُوْنَ
11:16 اُولٰٓـئِكَ الَّذِيْنَ لَـيْسَ لَهُمْ فِى الْاٰخِرَةِ اِلَّا النَّارُ ۖ وَحَبِطَ مَا صَنَعُوْا فِيْهَا وَبٰطِلٌ مَّا كَانُوْا يَعْمَلُوْنَ

11:15. எவரேனும் இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் (மட்டுமே) நாடினால் அவர்களுடைய செயல்களுக்குரிய (பலன்களை) இவ்வுலகத்திலேயே நிறைவேற்றுவோம்; அவற்றில், அவர்கள் குறைவு செய்யப்பட மாட்டார்கள்.

11:16. இத்தகையோருக்கு மறுமையில் நரக நெருப்பைத் தவிர வேறெதுவுமில்லை, (இவ்வுலகில்) இவர்கள் செய்த யாவும் அழிந்துவிட்டன; அவர்கள் செய்து கொண்டிருப்பவையும் வீணானவையே!

இந்த வசனங்களில் நாம் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் யார் அல்லாஹ்வை விட்டுவிட்டு மறுமையை விட்டுவிட்டு சொர்க்கத்தில் நுழைய வேண்டும் என்ற குறிக்கோளில்லாமல் உலகத்தையே அவர்கள் குறிக்கோளாக வைத்து வாழ்வார்களோ அவர்களும் எண்ணத்தில் பிறரை இணையாக்குகிறார்கள். இவ்வாறான நிலை மிகவும் ஆபத்தான நிலை. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா ஷிர்க்கின் அனைத்து வகைகளிருந்தும் நம்மைக் காப்பாற்றுவானாக.

Aqeedah 11 Shirk Types and Rules on Thaayath

அகீதா 11 - ஷிர்க் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? தாயத்து அணிவதின் சட்டம் என்ன?

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ஷிர்க் என்றால் என்ன? ஷிர்க்கின் வகைகள் யாவை? ஷிர்க் என்றால் அல்லாஹ்விற்கு இணைகற்பிப்பது. தவ்ஹீத் என்றால் ஒருமைப்படுத்துதல். இந்த உலகத்தை படைத்தது பரிபாலிக்கும் அல்லாஹுதஆலா தனித்தவன், அவனுக்கு யாரும் இணை கிடையாது. அந்த ஓரிறைவனை விட்டு வேறு யாரையும் வணங்கக்கூடாது. அல்லாஹ்வின் பெயர்களிலும் தன்மைகளிலும் அல்லாஹ் தனித்தவன். தவ்ஹீத் மூன்று வகைப்படும். அவை தவ்ஹீதுர் ருபூபிய்யாஹ், தவ்ஹீதுல் உலூஹிய்யாஹ், தவ்ஹீத் அஸ்மா வஸிஃபத். இவற்றிற்கு மாற்றமாக நடந்தால், மாற்றமாக நம்பிக்கை கொண்டால் அது ஷிர்க் ஆகும். இதில் ஏதாவது ஒன்றிலோ அல்லது மூன்றிலுமோ மாற்றமாக நம்பிக்கை கொண்டால் அது ஷிர்க் - இணைவைப்பாகும்.

ஷிர்க் எத்தனை வகைப்படும்? இரண்டு வகைகள் உள்ளன. அதில் ஒன்று ஷிர்க்குல் அக்பர் - பெரிய இணைவைப்பு, மற்றொன்று ஷிர்க்குல் அஸ்கர் - சிறிய இணைவைப்பு.

பெரிய ஷிர்க் என்பது மிகப்பெரிய பாவம். அதைவிட பெரிய பாவம் எதுவுமே கிடையாது.

ஸூரத்து லுக்மான்

31:13 وَاِذْ قَالَ لُقْمٰنُ لِا بْنِهٖ وَهُوَ يَعِظُهٗ يٰبُنَىَّ لَا تُشْرِكْ بِاللّٰهِ‌ ؕ اِنَّ الشِّرْكَ لَـظُلْمٌ عَظِيْمٌ

31:13. இன்னும் லுஃக்மான் தம் புதல்வருக்கு: “என் அருமை மகனே! நீ அல்லாஹ்வுக்கு இணை வைக்காதே; **நிச்சயமாக இணை வைத்தல் மிகப் பெரும் அநியாயமாகும்**,” என்று நல்லுபதேசம் செய்து கூறியதை (நினைவுபடுத்துவீராக).

141. அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறியதாவது: நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், "அல்லாஹ்விடம் பாவங்களில் மிகப் பெரியது எது?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், **"அல்லாஹ் உன்னைப் படைத்திருக்க, அவனுக்கு நீ இணை கற்பிப்பது"** என்று சொன்னார்கள். நான் அவர்களிடம், "நிச்சயமாக அது மிகப் பெரிய பாவம்தான்" என்று சொல்லிவிட்டு, "பிறகு எது?" என்று கேட்டேன். "உன் குழந்தை உன்னுடன் (அமர்ந்து உன் உணவைப் பங்குபோட்டு) உண்ணும் என அஞ்சி அதை நீ கொல்வது" என்று சொன்னார்கள். நான் "பிறகு எது?" என்று கேட்க, அவர்கள், "உன்(மீது அபார நம்பிக்கைவைத்துள்ள) அண்டை வீட்டானின் மனைவி(யைக் கவர்ந்து அவள்) உடன் நீ விபசாரம் செய்வது" என்று சொன்னார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book: 1 ஸஹீஹ் முஸ்லிம்

இரண்டாவதாக, **பெரிய ஷிர்க்** செய்து தவ்பா செய்யாமல் ஒருவர் இறந்துவிட்டால் அந்த **பாவம் மன்னிக்கப்படாது**. உயிருடன் இருக்கும்போது தவ்பா செய்தால் அனைத்து பாவங்களும் மன்னிக்கப்படும், இன்ஷா அல்லாஹ். தவ்பா வாசல் மூடப்பட்டால் (மரணத்திற்கு பிறகு) மன்னிக்கப்படமாட்டாது.

எல்லா பாவங்களும் மன்னிக்கப்படும் ஆனால் ஷிர்க்கைத் தவிர. அதாவது தவ்பா கேட்காமல் ஒருவர் மரணித்துவிட்டால் ஷிர்க்கைத்தவிர மற்ற எல்லா பாவங்களையும் அல்லாஹ்

நாடினால் அவன் மன்னித்துவிடுவான். இதையே ஸூரத்துன்னிஸா (பெண்கள்) வில் அல்லாஹ் கூறுகின்றான்.

4:116 اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰ لِكَ لِمَنْ يَّشَآءُ ؕ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ ضَلَّ ضَلٰلاً ۢ بَعِيْدًا

4:116. நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கவே மாட்டான்; இது அல்லாத (பாவத்)தைத் தான் நாடியவருக்கு மன்னிப்பான்; எவன் ஒருவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றானோ, அவன் நிச்சயமாக வெகு தூரமான வழிகேட்டில் ஆகிவிட்டான்.

மூன்றாவதாக, மன்னிக்கப்படாத இந்த பாவத்திற்கு தண்டனை **நிரந்தர நரகம்**.

ஸூரத்துல் மாயிதா (ஆகாரம்) (உணவு மரவை)

5:72 لَقَدْ كَفَرَ الَّذِيْنَ قَالُوْۤا اِنَّ اللّٰهَ هُوَ الْمَسِيْحُ ابْنُ مَرْيَمَ ؕ وَقَالَ الْمَسِيْحُ يٰبَنِىْۤ اِسْرَآءِيْلَ اعْبُدُوا اللّٰهَ رَبِّىْ وَرَبَّكُمْ ؕ **اِنَّهٗ مَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ حَرَّمَ اللّٰهُ عَلَيْهِ الْجَـنَّةَ وَمَاْوٰٮهُ النَّارُ** ؕ وَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ اَنْصَارٍ

5:72. "நிச்சயமாக மர்யமுடைய மகனாகிய மஸீஹ் (ஈஸா) தான் அல்லாஹ்" என்று கூறுகிறவர்கள் உண்மையிலேயே நிராகரிப்பவர்கள் ஆகிவிட்டார்கள்; ஆனால் மஸீஹ் கூறினார்: "இஸ்ராயீலின் சந்ததியினரே! என்னுடைய இறைவனும், உங்களுடைய இறைவனுமாகிய அல்லாஹ்வை வணங்குங்கள்" என்று. எனவே **எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹராமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும்**, அக்கிரமக்காரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை.

2856. முஆத் (ரலி) அறிவித்தார். நான் நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னால் 'உஃபைர்' என்றழைக்கப்பட்ட கழுதையின் மீது அமர்ந்திருந்தேன். அப்போது அவர்கள், 'முஆதே! அல்லாஹ்வுக்கு மக்களின் மீதுள்ள உரிமை என்ன, மக்களுக்கு அல்லாஹ்வின் மீதுள்ள உரிமை என்ன என்பதை நீர் அறிவீரா?' என்று (என்னிடம்) கேட்டார்கள். நான், 'அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிந்தவர்கள்' என்று பதில் கூறினேன். நபி(ஸல்) அவர்கள், 'மக்களின் மீது அல்லாஹ்வுக்குள்ள உரிமை என்னவென்றால், அவர்கள் அவனை(யே) வணங்கிட வேண்டும், அவனுக்கு எதனையும் (எவரையும்) இணை கற்பிக்கக் கூடாது என்பதாகும். அல்லாஹ்வின் மீது மக்களுக்குள்ள உரிமை, அவனுக்கு இணை கற்பிக்காமலிருப்பவரை அவன் வேதனைப்படுத்தாமல் இருப்பதாகும்' என்று பதில் கூறினார்கள். நான், 'இறைத்தூதர் அவர்களே! நான் மக்களுக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கட்டுமா?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'அவர்களுக்கு (இந்த நற்செய்தியை) அறிவிக்காதீர்கள். அவர்கள் இதையே நம்பி (நற்செயல்களில் ஈடுபடாமல்) இருந்து விடுவார்கள்' என்று பதிலளித்தார்கள். Volume: 3 Book: 56 - **ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்**

நாம் செய்யும் அனைத்து செயல்களிலும் தவ்ஹீதிற்காக பாடுபடவேண்டும். ஷிர்க்கிலிருந்து மனிதனை பாதுகாக்கவேண்டும்.

அடுத்து சின்ன ஷிர்க். அதை பற்றி இரண்டு விஷயங்கள் தெரிந்துகொள்ளலாம். ஒன்று முகஸ்துதி. இரண்டாவது அல்லாஹ்வைத் தவிர பிறர் மீது சத்தியம் செய்வது.

நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று குணங்களை விட்டு தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள்:

1) முகஸ்துதி, 2) அதிகம் பேசுவது, 3) தேவையற்றவற்றில் ஈடுபடுவது.

முகஸ்துதி என்பது பிறர் பார்க்கவேண்டும், பிறர் புகழவேண்டும் என்று நினைத்து வழிபடுவது. இந்த சிறிய ஷிர்க்கினால் நாம் இவ்வாறு செய்யும் வணக்கங்களின் நமக்கு கிடைக்காமல் போகும். மேலும் எண்ணத்தில் கோளாறு இருப்பதால் இது பெரிய ஷிர்க்கில் கொண்டுபோய் சேர்க்கும். அதனால்தான் உளத்தூமையோடு அல்லாஹ்வை வணங்கவேண்டும்.

அதுபோலத்தான் அல்லாஹ்வைத் தவிர பிறர் மீது சத்தியம் செய்வதும் சின்ன ஷிர்க். பல அறிஞர்கள் கூறுகிறர்கள் - சின்ன ஷிர்க்கும் பெரிய ஷிர்க்கைப் போன்றதுதான். அதுவும் பெரிய பாவம் போலத்தான். ஆனால் சில அறிஞர்கள் கூறுகின்றனர், குறிப்பாக இப்னு உசைனி (ரஹ்) கூறுகிறார்கள். பெரிய ஷிர்க்கிற்கும் சின்ன ஷிர்க்கிற்கும் வேறுபாடு உள்ளது. அதாவது சின்ன ஷிர்க்குடன் ஒருவர் தவ்பா கேட்காமல் இறந்துவிட்டால், அவருக்கு நிரந்தர நரகம் கிடையாது. சூரா நிஸாவில் குறிப்பிட்டுள்ளபடி சின்ன ஷிர்க் மன்னிக்கப்படாத குற்றம். ஆனால் நிரந்தர நரகம் என்பது அல்லாஹ் நாடினால் மன்னிக்கப்படும்.

அடுத்து தாயத்துக்களுடைய சட்டம் என்ன? தாயத்து என்றால் என்ன? கையிலோ, கழுத்திலோ, காலிலோ, இடுப்பிலோ அல்லது உடலின் ஏதாவது ஒரு உறுப்பில் கயிறு கட்டுவது, தகடு கட்டுவது அல்லது வீட்டு வாசலிலேயோ, வண்டி முன்னாடி எதையாவது தொங்க விடுவது - இவை அனைத்துமே தாயத்துகளில் அடங்கும்.

தாயத்து மார்க்கத்தில் தடை செய்யப்பட்ட ஒரு விஷயம். இது ஒரு வகை ஷிர்க்காகும். ஏனென்றால் மக்களின் தவக்குல், அதாவது நம்பிக்கை, அந்த தாயத்தில் மேல் உள்ளது. ஆனால் நம் நம்பிக்கை எவ்வாறு இருக்கவேண்டும்? நன்மையாக இருந்தாலும் தீமையாக இருந்தாலும் அது அல்லாஹ்வின் புறத்திலிருந்து உள்ளது. நன்மை தீமை இரண்டும் அல்லாஹ்வின் நாட்டமே. தீமையிலிருந்து நம்மை பாதுகாத்து நன்மை பக்கம் கொண்டு செல்வதும் அல்லாஹ்தான்.

ஸூரத்துத் தவ்பா (மனவருந்தி மன்னிப்பு தேடுதல்)

9:51 قُلْ لَّنْ يُّصِيْبَنَاۤ اِلَّا مَا كَتَبَ اللّٰهُ لَـنَا‌ ۚ هُوَ مَوْلٰٮنَا‌ ۚ وَعَلَى اللّٰهِ فَلْيَتَوَكَّلِ الْمُؤْمِنُوْنَ

9:51. “ஒருபோதும் அல்லாஹ் விதித்ததைத் தவிர (வேறு ஒன்றும்) எங்களை அணுகாது; அவன் தான் எங்களுடைய பாதுகாவலன்” என்று (நபியே!) நீர் கூறும்; முஃமின்கள் அல்லாஹ்வின் மீதே பூரண நம்பிக்கை வைப்பார்களாக!

எனவே முஃமீன்கள் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைக்கவேண்டும். இந்த தகடு தாயத்து மீது நம்பிக்கை வைக்கக்கூடாது. அது ஷிர்க்காகிவிடும்.

முஸ்னது அஹ்மத் எனும் ஹதீத் கிரந்தத்தில் பதிவாகியுள்ள ஸஹீஹான ஹதீஸில், தாயத்து அணிவது அன்றைய அறியாமைக் கால மக்களின் நடைமுறையாக இருந்து வந்தது என்பது தெளிவாகின்றது. உக்பா பின் ஆமிர் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

அல்லாஹ்வின் தூதரிடத்தில் பத்துப் போர் கொண்ட ஒரு குழுவினர் (பைஅத்) உறுதிப் பிரமாணம் எடுக்க வந்தார்கள். அவர்களில் ஒன்பது நபர்களுக்கு பைஅத் செய்த நபிகளார் ஒருவரை மாத்திரம் விட்டு விட்டார்கள். உடனே அக்குழுவினர் அல்லாஹ்வின் தூதரே! அவருக்கு மாத்திரம் தாங்கள் ஏன் உறுதிப்பிரமாணம் (பைஅத்) கொடுக்கவில்லை? என வினவினார்கள். அதற்கு நபிகளார் அவரிடத்தில் தாயத்து உள்ளது (அதனால் நான் பைஅத் கொடுக்கவில்லை) என்றார்கள். அப்போது அம்மனிதர் தனது தாயத்தைக் கழட்டி வீசினார். பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவருக்கு உறுதிப்பிரமாணம் (பைஅத்) வழங்கினார்கள். மேலும், (உங்களில்) எவர் தாயத்து அணிகின்றாரோ அவர் அல்லாஹ்விற்கு இணை கற்பித்துவிட்டார் எனக் கூறினார்கள். (முஸ்னத் அஹ்மத்:16969)

எனவே நாம் மற்றவர்களிடமிருந்து தாயத்தை எடுத்து எறிய முயல வேண்டும். தாயத்து கட்டுவதால் ஷி.ஃ.பா நிவாரணம் கிடைக்கிறது என சிலர் வாதிடலாம். ஆனால் நிவாரணம் அதனால்தான் என நாம்

உறுதியாகக் கூற முடியாது. ஆனால் தாயத்து கட்டுவது ஷிர்க் என்பதில் சந்தேகமில்லை என்பதைக் கூறிவிடலாம். இது திருக்குர்ஆன், ஹதீதுகளில கூறப்பட்ட ஒன்று.

மது ஹராமக்கப்பட்டதுதான். அதில் ஒரு சில நன்மைகள் இருக்கலாம். அதன் காரணமாக அதனை ஹலாலக ஆக்க முடியாது. அதுபோல்தான் தாயத்தும். தாயத்தினால் ஷி∴பா கிடைத்தது என நம்புவது ஷிர்க் ஆகும். அல்லாஹ் மட்டுமே ஷி∴பா அளிக்கிறான். இப்னு மஸ்வூத் رَضِي الله عَنْهُ தாயத்து போடுவதைத் தடுக்கும்போது, அதனால் ஷி∴பா இருக்கிறதே என ஒருவர் கூறியபோது, அவரது பதில்: ஷைத்தான் நரம்பின் மீது உட்காருவான். அதனால் உங்களுக்கு வருத்தம் ஏற்படலாம். தாயத்துப் போட்ட பிறகு, அவன் உங்களைக் கெடுக்க வேண்டும் என் எண்ணத்தில் போய்விடுகிறான். வருத்தமும்ட நீங்கிவிடும். இவ்வாறு தாயத்தின் மீது தவக்கல் வைக்க உங்களைத் தூண்டவே அவ்வாறு செய்கிறான். ஷைத்தானுடைய விளையாட்டு, ஒரு வகையில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுடைய சோதனை. நாம் தாயத்தின் மீது தவக்கல் வைக்காமல், அல்லாஹ்வின் மீது தவக்கவல் வைக்கிறோமா என்பதற்கான சோதனையாக இருக்கலாம். தாயத்து தடுக்கப்பட்டது என்பது தெளிவானது என்பதால், அதனை நிராகரிக்க வேண்டும். மற்றொரு விஷயம் திருக்குர்ஆன் வசனத்தை வைத்து தாயத்து போடலாமா என சிலர் வினவலாம். திருக்குர்ஆன் வசனங்களில் ஷி∴பா உள்ளது என்பது சரிதான். கருஞ்சீரகத்தில் நிவராணம் உள்ளதுதான். ஆனால் அதனை அருந்தினால்தான் அது கிடைக்கும். அதற்குப் பதிலாக குப்பியில் போட்டு நாம் கழுத்தில் மாட்டிக் கொண்டால் ஷி∴பா கிடைக்குமா? அதுபோலத்தான், திருக்குர்ஆன் வசனங்களில் ஷி∴பா, அதனை அறிந்து, அதனை ஓதுவதன் மூலமும், ஓதி தமது உடலின் தடவுவதன் மூலமும் அடையலாம். பதிலாக அதனைத் தாயத்தாத அணிந்தால் ஷி∴பா கிடைக்கும் ரஸூலுல்லாஹ் ﷺ என கூறவில்லை. ஓதி ஓதித்தான் பெற்றார்கள். தாயத்தினை அணியவில்லை. அதுபோல ஸஹாபாக்களில் யாரும் அவ்வாறு செய்யவில்லை. அபு ஹனி∴பா رَحْمَةُ الله عَلَيْهِ வின் சீடர் இப்ராஹிம் அந்நகரி கூறுவதாவது, நபித்தோழர்கள் அனைவரும் தாயத்தை வெறுத்தார்கள். எந்த விதத்திலும் தாயத்தை அணியக்கூடாது, அனுமதிக்கப்பட்ட வழிகளில் ஷி∴பாவைத் தேட வேண்டும்.

Aqeedah 12 What is Vahdhathul Ujoodh?

அகீதா 12 - வஹ்தத்துல் உஜூத் என்றால் என்ன? இது இஸ்லாமிய நம்பிக்கையா? இந்த கொள்கையின் விபரீதங்கள் என்ன?

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

இந்த அகிலத்தைப் படைத்தது பரிபாலித்து ஆட்சி அதிகாரம் செய்வதில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தனித்தவனாக இருக்கிறான். அவனுக்கு அதில் இணை யாரும் கிடையாது, ஒரு ஈயைக் கூட அல்லாஹ்வைத் தவிர அவர்கள் யாரையெல்லாம் வணங்குகிறார்களோ அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் கூட படைக்க முடியாது. அவன் தனித்தவன். அத்தகைய அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை மட்டும் வணங்க வேண்டும். வணத்திற்கு உரியவன் அல்லாஹ் ஒருவனே. வேறு யாரும் தகுதியானவர்கள் இல்லை. மேலும் அல்லாஹ்வுக்கு உள்ள தன்மைகள் மற்றும் பண்புகள் அவனுக்கே உரியது. வேறு யாருக்கும் அந்தத் தன்மைகளில் ஒன்றை கூட அவனுக்கு இணையாக்க முடியாது. உயர்வான வானவர்களோ, அல்லது படித்தரத்தில் உயர்ந்த இறைத்தூதர்களோ கூட அவனது தன்மையில் ஒன்றைக் கூட பெற முடியாது.

மேலும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுடைய பண்புகளை, அவன் இப்படிப்பட்டவன் என நாம் அறியும்போது, அத்தகைய அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை நாம் நேராகப் பார்க்க முடியுமா? நாம் இவ்வுலகில் அவனைக் காண முடியாது. ஆனால் மறுமையில் சுவனவாசிகள் மட்டும் அவனைக் கண்ணாரக் காணலாம். ஒரு மு.்.மினுக்குக் கிடைக்கக் கூடிய நி.்.மத் அவனை மறுமையில் காண்பது. அல்லாஹ் எங்கிருக்கிறான் என்பதனை நாம் முன்பு பார்த்தோம். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தனது அர்ஷின் மீது உயர்ந்திருக்கிறான், நிலை பெற்றிருக்கிறான் என்பதுதான் திருக்குர்ஆனில் வெளிப்படையாக ஒரு கொள்கையாகும். இதற்கு நேர்மாறான கொள்கையாக, ஒட்டு மொத்த தவ்ஹீதை, ஒட்டு மொத்த இஸ்லாத்தைத் தகர்க்கக் கூடிய கொள்கைதான் வஹ்ததுல் உஜூத் என்பதாகும்.

எப்படி நாம் கலிமாவைச் சொல்லும்போது, லாயிலாஹ இல்லல்லாஹ்- வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று சொல்வோமோ, அதனைப் போல இந்தக் கொள்கை உடையவர்கள் வேறு ஒரு கலிமாவை கூறுவார்கள். ‘லா மவ்ஜூத இல்லல்லாஹ் - அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை. மவ்ஜூத் என்றால் இருக்கிறான் (exist) அதாவது யாரும் இல்லை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வைத் தவிர. இதற்கான வெளிப்பாடானது, இருக்கிறது எல்லாம் அல்லாஹ்தான் என்ற பொருள் கொள்கிறார்கள். இதற்குத்தான் வஹ்ததுல் உஜூத் என்பார்கள்.

பொதுவாக மக்களிடத்தில் நாம் அல்லாஹ் எங்கிருக்கிறான் என்று கேட்டால், பாமர மக்கள் அல்லாஹ் எல்லா இடத்திலும் இருப்பதாகக் கூறுவார்கள். தூணிலும், துரும்பிலும் என அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இல்லாத இடமில்லை என்பார்கள். சிறு வயதில் நமக்கும் இவ்வாறுதான் கூறப்பட்டது. இது வஹ்ததுல் உஜூத் என்ற கொள்கையின் வெளிப்பாடுதான். அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை என்று அவர்கள் கூறும்போது, இருப்பது எல்லாம் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தான் என்று நம்பி, இந்த முடிவுக்குக் கொண்டு வரும்.

இந்தக் கொள்கை வந்த காலம் எப்போது? ஸஹாபாக்கள், தாயிபீன்கள், மற்றும் அவர்களுக்குப் பின்னர் வந்த தப்வத் தாயின்பீன்கள் காலத்தில் இந்தக் கொள்கை ஏற்படவே இல்லை. முஸ்லிம்கள் தொகுத்த நூலிலும் இதனைக் காண முடியாது. பின்னர்தாம் இந்தியாவில் ஒரு கால கட்டத்திற்குப்

பிறகு, இங்குள்ள மக்களின் நம்பிக்கையைப் போல, அந்த கருத்து உருவானது. இது மற்ற மக்களினாலும் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதிலும் குறிப்பாக ஹிஜ்ரி 7 ஆம் நூற்றாண்டில் இப்னு அரபி தமது நூற்களில் இந்தக் கொள்கை பற்றி எழுதி, அதனை முஸ்லிம்கள் கூட்டத்தில் பரப்ப முயற்சி செய்து ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினர் உருவாக காரணமானார். காலப் போக்கில் அக்கூட்டத்தினரைச் சேராத முஸ்லிம்களும் அதனை ஏற்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்தக் கொள்கையின் விபரீதம் என்ன? அதை ஏற்றுக் கொண்டால் வரும் விளைவு என்ன? அவற்றை எல்லாம் ஆய்ந்து பார்க்காமல் பாரமர மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். இந்தக் கொள்கையின் வெளிப்பாடு என்ன என்பது இதனை பரப்பும் அறிஞர்கள் அதனைப் பற்றி அறிந்தவர்களாக உள்ளனர். ஆனால் இஸ்லாத்தில் இந்தக் கொள்கைக்கு எந்த வித ஆதாரமும் கிடையாது. ஒட்டுமொத்த இஸ்லாத்தைக் தகர்த்து, சீரழிக்கக் கூடிய கொள்கையாக உள்ளது. இதனை மக்களுக்குத் திணிக்க விரும்புவர்கள் திருக்குர்ஆன் மற்றும் ஹதீதுகளிலிருந்து ஆதாரத்தை எடுக்க முயல்கிறார்கள்.

திருக்குர்ஆனிலிருந்து அவர்கள் ஆதாரத்தை எடுத்து, தங்களுக்குத் தகுந்த மாதிரி அதனை வளைத்துக் கொள்ள முனைகிறார்கள். உதாரணத்திற்கு இரண்டு ஆதாரங்களை எடுத்துக் கொள்வோம்.

ஸூரத்து ஃகாஃப்

50:16 وَلَقَدْ خَلَقْنَا الْاِنْسَانَ وَنَعْلَمُ مَا تُوَسْوِسُ بِهٖ نَفْسُهٗ ‌ۖۚ **وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ**

50:16. மேலும் நிச்சயமாக நாம் மனிதனைப் படைத்தோம், அவன் மனம் அவனிடம் என்ன பேசுகிறது என்பதையும் நாம் அறிவோம்; **அன்றியும், (அவன்) பிடரி(யிலுள்ள உயிர்) நரம்பை விட நாம் அவனுக்கு சமீபமாகவே இருக்கின்றோம்.**

இந்த வசனத்தை எடுத்துக் கொண்டு அல்லாஹ் நம்மிடம் நெருங்கி நம்மோடு இருக்கிறான். அல்லாஹ் எங்கும் இருக்கிறான் என்று கூறுவார்கள்.

ஸூரத்துல் முஜாதலா (தர்க்கித்தல்)

58:7 اَلَمْ تَرَ اَنَّ اللّٰهَ يَعْلَمُ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْاَرْضِ‌ؕ مَا يَكُوْنُ مِنْ نَّجْوٰى ثَلٰثَةٍ اِلَّا هُوَ رَابِعُهُمْ وَلَا خَمْسَةٍ اِلَّا هُوَ سَادِسُهُمْ وَلَاۤ اَدْنٰى مِنْ ذٰ لِكَ وَلَاۤ اَكْثَرَ اِلَّا هُوَ مَعَهُمْ اَيْنَ مَا كَانُوْا‌ۚ ثُمَّ يُنَبِّئُهُمْ بِمَا عَمِلُوْا يَوْمَ الْقِيٰمَةِ‌ؕ اِنَّ اللّٰهَ بِكُلِّ شَىْءٍ عَلِيْمٌ

58:7. நிச்சயமாக அல்லாஹ் வானங்களிலுள்ளவற்றையும் பூமியிலுள்ளவற்றையும் அறிகிறான் என்பதை நீர் பார்க்கவில்லையா? மூன்று பேர்களின் இரகசியத்தில் அவன் அவர்களில் நான்காவதாக இல்லாமலில்லை; இன்னும் ஐந்து பேர்களி(ன் இரகசியத்தி)ல் அவன் ஆறாவதாக இல்லாமலில்லை; இன்னும் அதைவிட மிகக் குறைந்தோ, அதைவிட மிக அதிகமாகவோ, அவர்கள் எங்கிருந்தாலும் அவன் அவர்களுடன் இல்லாமலில்லை - அப்பால் கியாம நாளில் அவர்கள் செய்தவற்றைப் பற்றி அவர்களுக்கு அவன் அறிவிப்பான்; நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருட்களைப் பற்றியும் நன்கறிந்தவன்.

இதுமாதிரியான வசனங்களைக் கொண்டு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எங்கும் இருக்கிறான் என்று கூறுவார்கள். முதலாவது நாம் அல்லாஹ் எங்கு இருக்கிறான் என்பதற்கு நேரடியாக திருக்குர்ஆனில் அல்லது ஹதீதில் உள்ளதைத்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் என ஏழு இடங்களில் திருக்குர்ஆனில் நேரடியாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் பல வசனங்களில் நாங்கள் வேதத்தை இறக்கினோம், மழையை இறக்கினோம், வானவர்கள் ஏறி வருகிறார்கள் என்பன போன்று கூறப்பட்டுள்ளது அல்லாஹ் மேலே இருக்கிறான் என்பதனை உறுதிப்படுத்துகிறது.

ஆனால் சந்தேகத்திற்குரிய வசனத்தை எடுத்துக் கொண்டு நாம் கருத்தினை எடுத்துக் கொள்ளக் கூடாது.

ஸூரத்துல்ஆல இம்ரான் (இம்ரானின் சந்ததிகள்)

3:7 هُوَ الَّذِىۡۤ اَنۡزَلَ عَلَيۡكَ الۡكِتٰبَ مِنۡهُ اٰيٰتٌ مُّحۡكَمٰتٌ هُنَّ اُمُّ الۡكِتٰبِ وَاُخَرُ مُتَشٰبِهٰتٌ‌ؕ فَاَمَّا الَّذِيۡنَ فِىۡ قُلُوۡبِهِمۡ زَيۡغٌ
فَيَتَّبِعُوۡنَ مَا تَشَابَهَ مِنۡهُ ابۡتِغَآءَ الۡفِتۡنَةِ وَابۡتِغَآءَ تَاۡوِيۡلِهٖ‌ۚ وَمَا يَعۡلَمُ تَاۡوِيۡلَهٗۤ اِلَّا اللّٰهُ ‌ۘ وَالرّٰسِخُوۡنَ فِى الۡعِلۡمِ يَقُوۡلُوۡنَ
اٰمَنَّا بِهٖۙ كُلٌّ مِّنۡ عِنۡدِ رَبِّنَا ‌ۚ وَمَا يَذَّكَّرُ اِلَّاۤ اُولُوا الۡاَلۡبَابِ

3:7. அவன்தான் (இவ்) வேதத்தை உம்மீது இறக்கினான். இதில் விளக்கமான வசனங்களும் இருக்கின்றன. இவை தான் இவ்வேதத்தின் அடிப்படையாகும். மற்றவை (பல அந்தரங்கங்களைக் கொண்ட) முதஷாபிஹாத் (என்னும் ஆயத்துகள்) ஆகும்; எனினும் எவர்களுடைய உள்ளங்களில் வழிகேடு இருக்கிறதோ அவர்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக முதஷாபிஹ் வசனங்களின் விளக்கத்தைத் தேடி அதனைப் பின்பற்றுகின்றனர். அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அதன் உண்மையான விளக்கத்தை அறியமாட்டார்கள். கல்வியில் உறுதிப்பாடு உடையவர்கள் அவை அனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவைதான். நாங்கள் அதை நம்பிக்கை கொள்கிறோம், என்று அவர்கள் கூறுவார்கள். அறிவுடையோரைத் தவிர மற்றவர்கள் இதைக்கொண்டு நல்லுபதேசம் பெறமாட்டார்கள்.

தெளிவான வசனங்களிலிருந்து தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். மனிதர்களைச் சோதிப்பதற்காகத்தான் சில் முதஷாபிஹ் வசனங்களை கூறுகிறான். ரஸுலுல்லாஹ் ﷺ அவர்களிடம் ஒருவர் தாம் ஒரு பெண்ணை அவர் மூ.்.மினாக இருந்தால் விடுதலை செய்யப் போவதாகவும், அதனை அவர்கள் உறுதிபடுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். ரஸுலுல்லாஹ் ﷺ அவரிடம் சில கேள்விகளைக் கேட்கிறார்கள். தங்களை அல்லாஹ்வின் தூதர் என்று அவர் ஏற்றுக் கொள்கிறாரா என வினவினார்கள். அவர் ஆம் சாட்சி சொல்கிறேன் என்றார். பின்னர் அல்லாஹ் எங்கிருக்கிறான் என்று கேட்டதற்கு தமது கையைத் தூக்கி மேலே காட்டி அல்லாஹ் வானத்தின் மேல் இருக்கிறான் என்று கூறியதும் அவர் மூ.்.மின்தான் என்றார்கள். அவர் கூறியது தவறு என்றால், ரஸுலுல்லாஹ் ﷺ அப்போதே கூறியிருப்பார்கள்.

எனவே திருக்குர்ஆனிலும், ஹதீதிலும் இதுபோன்ற நேரடியான கருத்துக்களை எடுத்துக் கொண்டு அல்லாஹ் அர்ஷில் உள்ளான் என்பதை நாம் உறுதி கொள்ள வேண்டும். சந்தேகத்திற்கு உரிய வசனத்தைக் கொண்டு புரிந்து கொள்ளக் கூடாது,

மேல் கூறிய வசனத்தின் கருத்தானது, அல்லாஹ் நம்முடன் நெருங்கி இருக்கிறான் என்பது பொருள். நாம் மூன்று அல்லது நான்காக இருந்தால், நாம் பேசுவது அவனுக்குத் தெரியும் என்ற பொருளில் அவன் நம்முடன் உள்ளான் எனக் கூறப்பட்டுள்ளது. சில அறிஞர்கள் இந்த விளக்கத்தைக் கூடச் சொல்லாமல், வசனத்தில் உள்ளது மாதிரி கூறினால் போதும் என்கிறார்கள். அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான் என்று கூறப்பட்டால் அவ்வாறே கூற வேண்டும். அர்ஷில் உள்ளான் என்பதை அவ்வாறே கூற வேண்டும்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எல்லா இடத்திலும் இருக்கிறான் என்ற கொள்கை இஸ்லாத்தின் கொள்கையாக இருந்திருந்தால், அவர்களும் இது குறித்து நிச்சயமாக ரஸுலுல்லாஹ் ﷺ அடிக்கடி கூறியிருப்பார்கள். தங்களின் வாழ்க்கையையே அர்பணித்த அவர்கள், மக்காவில் 13 வருடங்கள் இருந்த அவர்கள், இந்தக் கொள்கையைப் பற்றி தெளிவாகக் கூறியிருப்பார்கள். இந்தக் கொள்கை அடிப்படையான கொள்கையாக இருந்தால், தவ்ஹீதைப் பற்றி கூறியது போல தெளிவான ஆதாரங்கள் பல இருந்திருக்கும். ரஸுலுல்லாஹ் ﷺ அவர்களோ, ஸஹாபாக்களோ இது பற்றி கூறியிருப்பார்கள்.

ஆனால் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அர்ஷில் இருக்கிறான் என்று தான் திருக்குர்ஆனில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.
எனவே தெளிவான ஆதாரங்கள் இக்கொள்கைக்கு இல்லாமல், நேர் மாறான ஆதாரங்கள் தாம் உள்ளன.

இப்னு தைய்மிய்யாஹ் رَحْمَةُ اللهِ عَلَيْهِ இந்தக் கொள்கை யூதர்கள், கிருத்துவர்களின் கொள்கையை விட மோசமானது. பல சிலைகளை வணங்குபவர்களின் கொள்கைகளைவிட மோசமானது. யூதர்கள் உஸைர் அலை என ஒருவரை அல்லாஹ்வின் மகன் என்றார்கள். கிருத்துவர்கள் அல்லாஹ்வுடன் ஈஸா அலை மற்றும் மர்யம் அலை ஆகிய இருவரை எடுத்துக் கொண்டார்கள். சிலை வணங்கிகள் பலரை எடுத்துக் கொண்டார்கள். அதுபோல இந்தக் கொள்கையை உடையவர்கள் படைப்பினங்களும் அல்லாஹ்தான் என எல்லோரையும் அல்லாஹ்வாக ஆக்கிவிடுவதால், இது மோசமான வெளிப்பாடுகளைக் கொண்டு வரும்.
இக்கொள்கையின் வெளிப்பாடுகள்:

முதலாவது அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எதிலும் இருக்கிறான், தூணிலும், துரும்பிலும் இருக்கிறான் என்றால், அல்லாஹ் சாக்கடை, குப்பைத் தொட்டி, அனாச்சார விடுதிகள், கழிவறைகள் என்று பொருள்படுமே! நவூது பில்லாஹ்! இந்தக் கொள்கையைப் பற்றி இந்தியாவில் மிகப் பெரிய மதரஸாவில் படித்த ஒரு அறிஞர் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கழிவறையிலும், கெட்ட இடங்களிலும் இருக்கிறான், என்றாலும் அதனை வெளிப்படையாகச் சொல்ல மாட்டோம் என்கிறார். கெட்ட இடங்களில் இருந்தாலும் அதனை நாம் உதாரணமாகச் சொல்ல மாட்டோம். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எல்லாவற்றையும் படைத்தான் என்று கூறினாலும் அவன் வானம் பூமி மனிதர்கள் ஜின்கள் ஆகியவற்றைப் படைத்தான் என்றுதான் நாம் கூறி, அசுத்தங்களை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى படைத்தாலும் நாம் உதாரணமாகச் சொல்ல மாட்டோம் என்பது போல, இதனையும் நாம் கூறமாட்டோம் என்று கூறுகிறார். இவ்வாறு கூறி மனிதர்களை ஏமாற்றுகிறார்கள். எனவே இந்த கொள்கையில் உள்ள ஒருவர் இறந்த ஒரு பன்றியைப் பார்த்து எனது கடவுள் இறந்து விட்டார் எனக் கூறுவிட்டார்.

இரண்டாவது வெளிபாடு: ஒவ்வொரு பொருளுக்கு உள்ளும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இருக்கிறான் என எடுத்துக் கொள்வது. இவ்வாறு எடுத்துக் கொண்டால் ஷிர்க் என்ற கொடியது இல்லாமல் போய்விடும். அல்லாஹ் சிலையிலும் இருக்கிறான் என்று எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். முஸ்லிம்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை நேரடியாக வணங்குகிறார்கள். மற்றவர்கள் சிலையிலும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இருக்கிறான் என்ற நிலையில் வணங்குகிறார்கள் என்றாகிவிடும். இவ்வாறு ஷிர்க் என்ற ஒன்று இல்லாமல் ஆகிவிடும். இக்கொள்கையைக் கொண்ட ஒருவரிடம் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى சிலைகளிலும் உள்ளானா என வினவியபோது, ஆம் என்று கூறி கேட்டவரைத் துரத்திவிடுவார்கள்.
மற்றொருவர் கூறுகிறார், பள்ளிவாசலில் தொழுபவர்களும், சர்ச்சில் ஈஸாவை வணங்குபவரும் சரி சமமானவார்கள். ஏனெனில் ஈஸாவினுள்ளும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இருக்கிறான் என்பதால் என்கிறார்கள். தொழுபவர்களும், ஈஸாவை வணங்குபவர்களும், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வும் எல்லாம் ஒன்றுதான் என முடிக்கிறார்கள்.
மூன்றாவது வெளிப்பாடு: அவர்களின் கலிமாவின் அடிப்படையில் உள்ள ஒன்று. நமக்கு உலகில் பல விதமான இபாதத்துகள் உள்ளன. திக்ரு, தொழுகை, குர்பானி போன்ற பல நற்செயல்கள் உள்ளன.

அதுபோல பாவங்கள் ஷிர்க், கொலை, கொள்ளை போன்றவை எல்லாம் கூட உள்ளன. இருப்பது எல்லாம் அல்லாஹ் என்றால் ஷிர்க்கில் இருப்பதும், தவ்ஹீதில் இருப்பதும் ஒன்றுதான். பொய் சொல்வதும், உண்மை கூறுவதும் ஒன்றுதான் என்று ஆகிவிடும். எனவே நன்மை தீமை என்ற ஒன்று இல்லாமல் ஆகிவிடும். இஸ்லாத்தின் அடிப்படையே தகர்ந்துவிடும். எனவே இந்த மக்கள் ஆடுவார்கள், பாடுவார்கள், இசையைப் பயன்படுத்துவார்கள். இத்துடன் தொழுகையையும் சேர்த்து எல்லாம் இபாதத் என்பார்கள். ஒரு தலைவர் ஏதும் தவறு செய்வதைப் பார்த்து அவர் தவறு செய்வதாகக் கூறினால், அவ்வாறு கூறுவதைத் தடுத்து அது அவரது இபாதத்தின் ஒரு பகுதி என்று கூறிக் கொள்வார்கள். அவருக்கு அது பாவம் இல்லை என்பார்கள். இது பற்றி தெளிவாக மேலும் சொல்கிறோம்.

இந்தக் கொள்கைப் பற்றி சரியாக உணர்ந்து இதனைத் தவிர்த்து திருக்குர்ஆன் ஹதீதுபடி நாம் ஒழுக அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நமக்கு அருள் பாலிப்பானாக! ஆமீன்.

Aqeedah 13 Islamic position on inauspicious things, Astrology

அகீதா 13 - துர்சகுணம் பார்ப்பது ஷிர்க், குறி பார்த்தல் மற்றும் ஜோதிடம் குறித்து இஸ்லாமிய நிலைப்பாடு

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

துற்சகுனம் (தைய்யாராத்) இஸ்லாத்தில் உள்ளதா? தைர் என்றால் பறவை என்று பொருள். அறியாமை காலத்திய அரபியர்கள் வெவ்வாளைலக் கொண்டு காரியத்தை முடிவு செய்வார்கள். அதனைப் பறக்க விட்டு, அது வலது பக்கம் சென்றால் தங்களின் காரியத்தைச் செய்ய அனுமதி என்று எடுத்துக் கொள்வார்கள். இடப்பக்கம் சென்றால், சரியில்லை எனவும் தற்போது அதனைச் செய்ய வேண்டாம் என்று எடுத்துக் கொள்வார்கள். எனவே அதனைக் கொண்டு நன்மை, தீமையை முடிவு செய்வார்கள். ஆனால் இஸ்லாத்தின் கொள்கையான விதிக்கு மாற்றமானது. உலகமே திரண்டு முயன்றாலும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நாடிய நன்மையையோ அல்லது தீமையையோ யாராலும் தடுக்க முடியாது. எனவே இந்த அடிப்படைக்கு மாற்றமான இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. நன்மை தீமை இரண்டும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வருவதுதான். பறவையைக் கொண்டு அதனை முடிவு செய்ய முடியாது. வெவ்வாள் வலப்புறம் போன பிறகு செய்யப்படும் செயல் தீமையிலும் முடியலாம். இடப்பக்கம் சென்றால் செய்யாமல் போன செயல் நன்மைக்கு ஏதுவானதும் இருக்கலாம். எல்லாம் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் நாட்டம்தான். எனவே அவைகளைக் கொண்டு நாம் சகுனம் பார்க்கக் கூடாது.

ஸூரத்துல் அஃராஃப் (சிகரங்கள்)

7:131 فَاِذَا جَآءَتْهُمُ الْحَسَنَةُ قَالُوْا لَـنَا هٰذِهٖ‌ ۚ وَاِنْ تُصِبْهُمْ سَيِّئَةٌ يَّطَّيَّرُوْا بِمُوْسٰى وَمَنْ مَّعَهٗ‌ ؕ اَلَاۤ اِنَّمَا طٰۤـئِرُهُمْ عِنْدَ اللّٰهِ وَلٰـكِنَّ اَكْثَرَهُمْ لَا يَعْلَمُوْنَ

7:131. அவர்களுக்கு ஒரு நன்மை வருமானால், “அது நமக்கு (உரிமையாக) வரவேண்டியது தான்” என்று கூறினார்கள்; ஆனால் **அவர்களுக்கு ஒரு கெடுதி ஏற்படுமானால், அது மூஸாவினாலும், அவருடனிருப்பவர்களாலும் வந்த பீடையென்பார்கள்;** அறிந்து கொள்ளுங்கள்: அவர்களுடைய இந்த துர்பாக்கியமெல்லாம் அல்லாஹ்விடமிருந்தே வந்துள்ளது - எனினும் அவர்களில் பெரும்பாலோர் இதனை அறிந்து கொள்வதில்லை.

நன்மை கிடைத்தால் தங்களின் முயற்சி எனவும், தீமையாக இருந்தால் மூஸா عَلَيْهِ السَّلَامُ அவர்களை வைத்து துர்சகுனம் எனக் கூறுவார்கள். ஆனால் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வைச் சார்ந்த விஷயம் எனக் கூறுகிறான்.

ஸூரத்துன்னிஸாவு (பெண்கள்)

4:78 اَيْنَ مَا تَكُوْنُوْا يُدْرِكْكُّمُ الْمَوْتُ وَلَوْ كُنْتُمْ فِىْ بُرُوْجٍ مُّشَيَّدَةٍ‌ ؕ وَاِنْ تُصِبْهُمْ حَسَنَةٌ يَّقُوْلُوْا هٰذِهٖ مِنْ عِنْدِ اللّٰهِ‌ ۚ وَاِنْ تُصِبْهُمْ سَيِّئَةٌ يَّقُوْلُوْا هٰذِهٖ مِنْ عِنْدِكَ‌ ؕ قُلْ كُلٌّ مِّنْ عِنْدِ اللّٰهِ‌ ؕ فَمَالِ هٰٓؤُلَۤاءِ الْقَوْمِ لَا يَكَادُوْنَ يَفْقَهُوْنَ حَدِيْثًا

4:78. “நீங்கள் எங்கிருந்தபோதிலும் உங்களை மரணம் அடைந்தே தீரும்; நீங்கள் மிகவும் உறுதியாகக் கட்டப்பட்ட கோட்டைகளில் இருந்த போதிலும் சரியே! (போருக்குச் சென்ற முனாஃபிக்களுக்கு) ஏதேனும் ஒரு நன்மை ஏற்பட்டால் “இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது” என்று கூறுகிறார்கள்; ஆனால், அவர்களுக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டாலோ, “இது உம்மிடம் இருந்துதான் ஏற்பட்டது” என்று கூறுகிறார்கள், (நபியே! அவர்களிடம்) கூறும்: “எல்லாம்

அல்லாஹ்விடமிருந்தே வந்திருக்கின்றன; இந்த மக்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது? எந்த ஒரு விஷயத்தையும் அவர்களுக்கு விளங்கிக் கொள்ள முடியவில்லையே!"

அனைத்துமே அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى விடமிருந்து வருவது. இவ்வாறு துர்சகுனம் பார்ப்பது பாவம் மட்டும் அல்லாமல், ஷிர்க் (இணை வைப்பது) ஆக ஆகிவிடும். அபு தாவூது அறிவிப்பில்
துர்சகுனம் பார்ப்பது இணை வைத்தல் ஆகும் என மூன்று முறை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்.
அஹ்மது அறிவிப்பில்
துர்சகுனம் பார்த்து எவர் ஒரு காரியத்தைச் செய்யவிடாமல் தடுத்துக் கொண்டாரோ அவர்கள் ஷிர்க் செய்துவிட்டார்
உதாரணமாக பூனை குறுக்கே சென்று விட்டது என யாரும் ஒரு காரியத்தை செய்யாமல் விட்டால், அவர் ஷிர்க் செய்தவராக ஆகிவிடுவார்.
புஹாரி பதிவில்
மார்க்கத்தில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நாட்டம் இல்லாமல் தொற்று நோய் இல்லை. ஸபர் மாதம் குறித்த கொள்கைகள் மார்க்கத்தில் ஹாமா என்ற (ஆந்தை) பற்றிய கொள்கையும் இஸ்லாத்தில் இல்லை. துர்சகுனம் என்ற கொள்கையும் இஸ்லாத்தில் இல்லை.
உதாரணங்கள் பல உள்ளன.
பழக்கப்பட்ட காரணத்தினால் நம்மை மீறி அறியாமல் செய்தாலும், துர்சகுனமாக நினைத்து சில நொடிகள் நாம் தவற வாய்ப்புண்டு. அவ்வாறு மறதியாக செய்ய முனைந்து, நினைவு கொண்டு நாம் மாற்ற விளையும்போது, இந்த துஆவை ஓதுவதற்கு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.
அல்லாஹும்ம ல கைர இல்லாஹ் கைருக், வ லா தைய்ரா இல்லாத தைருக், வலா இலாஹ ஹைருக். யா அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ! நீ விதித்த நல்லதைத் தவிர வேறு இல்லை. நீ விதித்த தீமையைத் தவிர வேறு தீமை இல்லை. உன்னைத் தவிர வணக்கத்திற்கு வேறு யாரும் இல்லை எனக் கூறி நமது ஈமானை நாம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அறியாமையில் செய்த அதனை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى மன்னித்துவிடுவான்.
அதே நேரத்தில் நற்சகுனம் இஸ்லாத்தில் ஏற்கப்பட்ட ஒன்று. நற்சகுனம் என்பது நல்ல சொற்கள் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ என கூறியுள்ளார்கள். இதற்கு உதாரணமாக ஹுதைபிய்யாஹ் உடன்படிக்கையின் போது மக்கத்து கா.ஃபிர்கள் சார்பாக ஸுகைல் பேச்சுவார்த்தைக்கு வந்தார். அவர் பெயருக்கு சுலபம் என்று பொருள். அந்த நல்ல சொல் ரஸுலுல்லாஹ் ﷺ பற்றி ஸுகைல் வருகிறார் என்பதால் காரியம் இலகுவாக முடியும் என்றார்கள்.
குறிபார்த்தல், ஜோதிடம் பார்த்தல் குறித்து:
மார்க்கத்தில் தடை செய்யப்பட்ட ஷிர்க்கான காரியம். தாயத்துகள், துர்சகுனம் ஆகியவை ஷிர்க் என்பதற்குக் காரணம் அவற்றின் மீது தவக்கல் வைப்பதால். குறிப்பார்த்தலில் உள்ள ஷிர்க் மறைவானவற்றை அறிவது என்பதாகும். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வே ஆலிமுல் கைப் - மறைவானவற்றை அறிந்தவன். தமக்குத் திருமணம் பற்றி, வியாபாரம் பற்றி என மறைவானவற்றை தெரிய விரும்புவதால் இவை ஷிர்க் ஆகும்.
ஸூரத்துல் அன்ஆம் (ஆடு, மாடு, ஒட்டகம்)

6:59 وَعِنْدَهٗ مَفَاتِحُ الْغَيْبِ لَا يَعْلَمُهَاۤ اِلَّا هُوَ‌ؕ وَيَعْلَمُ مَا فِى الْبَرِّ وَالْبَحْرِ‌ؕ وَمَا تَسْقُطُ مِنْ وَّرَقَةٍ اِلَّا يَعْلَمُهَا وَلَا حَبَّةٍ فِىْ ظُلُمٰتِ الْاَرْضِ وَلَا رَطْبٍ وَّلَا يَابِسٍ اِلَّا فِىْ كِتٰبٍ مُّبِيْنٍ

6:59. அவனிடமே மறைவானவற்றின் திறவு கோல்கள் இருக்கின்றன. அவற்றை அவனன்றி எவரும் அறியார். மேலும் கரையிலும் கடலிலும் உள்ளவற்றையெல்லாம் அவன் அறிவான்; அவன் அறியாமல் ஓர் இலையும் உதிர்வதில்லை. பூமியின் (ஆழத்தில் அடர்ந்த) இருள்களில் கிடக்கும் சிறு வித்தும், பசுமையானதும், உலர்ந்ததும் (எந்தப் பொருளும்) தெளிவான (அவனுடைய) பதிவேட்டில் இல்லாமலில்லை.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வைத் தவிர யாரும் மறைவான விஷயத்தை அறிய முடியாது.

6:50 قُلْ لَّاۤ اَقُوْلُ لَـكُمْ عِنْدِىْ خَزَآٮِٕنُ اللّٰهِ وَلَاۤ اَعْلَمُ الْغَيْبَ وَلَاۤ اَقُوْلُ لَـكُمْ اِنِّىْ مَلَكٌ‌ ۚ اِنْ اَتَّبِعُ اِلَّا مَا يُوْحٰٓى اِلَىَّ‌ ؕ قُلْ هَلْ يَسْتَوِى الْاَعْمٰى وَالْبَصِيْرُ‌ ؕ اَفَلَا تَتَفَكَّرُوْنَ

6:50. (நபியே!) நீர் கூறும்: “என்னிடத்தில் அல்லாஹ்வின் பொக்கிஷங்கள் இருக்கின்றன என்று நான் உங்களிடம் கூறவில்லை. மறைவானவற்றை நான் அறியமாட்டேன்; நிச்சயமாக நான் ஒரு மலக்காக இருக்கின்றேன் என்றும் நான் உங்களிடம் சொல்லவில்லை; எனக்கு (வஹீயாக) அறிவிக்கப்பட்டதைத் தவிர (வேறு எதையும்) நான் பின்பற்றவில்லை.” இன்னும் நீர் கூறும்: “ குருடனும் பார்வையுடையவனும் சமமாவாரா? நீங்கள் சிந்திக்க வேண்டாமா?”

தங்களுக்கு மறைவான விஷயங்கள் தெரியாது என கூறுமாறு ரஸுலுல்லாஹ் ﷺ அவர்களை அல்லாஹ் பணிக்கிறான். எனவே அவர்கள் மறைவான விஷயங்களை அறிந்தவர்கள் என்பது கூறக்கூடாது. மனிதர்களில் சிறந்த அவர்களுக்கே மறைவானவை தெரியாது என்ற நிலையில் மற்றவர்களுக்கு எவ்வாறு தெரியும். ஜோதிடர்களுக்கு மறைவான விஷயங்கள் தெரியும் என அவர்களிடம் செல்வது ஷிர்க் ஆகும்.

அஹ்மதில் பதியப்பட்டது,

யாரொருவர் ஜோதிடர் அல்லது குறிகாரரிடம் ஒரு விஷயம் பற்றி கேட்டாலே அவரது நாற்பது நாட்கள் தொழுகைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

அபுதாவூதில் அதிகப்படியாக, அவர்கள் கூறியதை உண்மை என்றால், அவர் முஹம்மது ﷺ அவர்களின் மீது இறக்கப்பட்டதை மறுத்துவிட்டான் எனக் கூறியுள்ளார்கள். அதாவது மார்க்கத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள் எனப் பொருள்.

ஆனால் சில சமயங்களில் அவர்கள் கூறுவது போல் நடக்கிறதே என்பதற்குப் பதிலாவது, அவர்கள் விஷயங்களைப் பொதுவான மாதிரித்தான் கூறுவார்கள். உதாரணமாக உங்களுக்கு இந்த கம்பெனியில் இந்தத் பதவி இந்த சம்பளத்தில் என்று குறிப்பிட்டு எதனையும் கூற மாட்டார்கள். மாறாக கூடிய விரைவில் நல்ல செய்தி கிடைக்கும், வேலை கிடைக்கும் என்பது போலக் கூறுவார்கள். அவ்வாறு நடந்தால் மக்கள் அதனை உயர்வாகக் கூறுவார்கள். நடக்காத விஷயங்களை மக்கள் எளிதில் மறந்து விடுவார்கள்.

ஒரு சிலர் ஜின்களோடு தொடர்பு இருக்க வாய்ப்பு உண்டு, புஹாரி ஹதீதின்படி, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வானவர்களுடன் பேசுவதை சில ஜின்கள் ஒட்டுக் கேட்பார்கள். உலக வேலைகள் பற்றி வானவர்களுக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அறிவிப்பதை அவர்கள் கேட்பார்கள். எனினும் அவர்கள் துரத்தப்படுவார்கள். ஒரு சில விஷயங்களை ஜோதிடர்களின் காதில் அவர்கள் போட்டு விடுவார்கள். அவர்கள் அதில் மெருகூட்டி ஜோசியமாகக் கூறிவிடுவார்கள். ஒரு சில விஷயங்கள் அவ்வாறு

உண்மையாகலாம். நடந்த விஷயங்கள் பாராட்டப்பட்டு, பல நடக்காத விஷயங்கள் மறக்கப்பட்டு விடும். மக்கள் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும்

Aqeedah 14 Islamic position on inauspicious things, Astrology

அகீதா 14 - அவ்லியாக்களை குறித்து மார்க்க நிலைப்பாடு என்ன? அல்லாஹ்வை தவிர பிறர் மீது சத்தியம் செய்வது, நாம் அல்லாஹ்வை பார்க்க முடியுமா? அல்லாஹ் எங்கே இருக்கிறான்? அல்லாஹ் உருவமற்றவனா? மார்க்கத்தின் சரியான நிலைப்பாடு என்ன?

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

அவ்லியாக்கள் குறித்த நிலைப்பாடு

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை அஞ்சி நம்பிக்கைக் கொண்டு நல்லமல் செய்து அதன்படி நடக்கும் நேசர்களான (உண்மையான) அவ்லியாக்களை நாம் நேசிப்பது ஈமானின் ஒரு பகுதியாகும். ஆனால் அவ்வாறு நேசிப்பதில் வரம்பு மீறிச் செல்லக் கூடாது. இதற்கு ஆதாரம். அன்ஸாரி சிறுமி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைக் குறித்து ஒரு கவி கூறினார், "எங்கள் மத்தியில் ஒரு இறைத்தூதர் இருக்கிறார்கள். நாளை என்ன நடக்கும் என்பது அவருக்குத் தெரியும்." மறைவான ஞானம் அவர்களுக்கு இருப்பதாக இணை வைக்கும் செயலைச் செய்து விட்டார். அவர்களுக்கு மறுமையைப் பற்றிய விவரம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட வஹீயில் மூலமாகத்தான் தெரியும். நமக்கும் அவ்வாறு அந்தந்த ஹதீதுகளைப் படிக்கும்போது தெரியக்கூடும். இதனைக் கேட்ட சிறுமி, அவர்களுக்கு மறைவான விஷயம் என நினைத்து அவ்வாறு பாடிவிட்டார். ஆனால் அவர்கள் அதனை மறுத்து, "என்னைப் புகழ்வதாக இருந்தால், நான் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவின் அடியார் மற்றும் அவனது தூதர் என்று கூறுங்கள். இது போதுமானது." என்றார்கள். எனவே வரம்பு மீறி புகழவோ, கண்ணியப்படுத்தவோ கூடாது.

கிருத்துவர்கள் எப்படி ஈஸா عَلَيْهِ السَّلَامُ அவர்களைப் புகழந்து அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவின் மகன் எனப் புகழ்ந்தது போல, வரம்பு மீறித் தங்களைப் புகழ வேண்டாம் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கூறியுள்ளார்கள். அது போல, இவ்வுலகை அவர்கள் பிரியும் தருவாயில், யூதர்களையும், கிருத்துவர்களையும் அளித்துவிடுவானாக என சபித்த, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்கள் அதற்குக் காரணம் அவர்கள் தங்களின் இறைத்தூதர்களின் மண்ணறைகளை வணக்க இடமாக ஆக்கிவிட்டார்கள் என கூறினார்கள். இவ்வாறு வரம்பு மீறிப் போகிவிடக் கூடாது என்பதற்குத்தான் அவர்கள் அவ்வாறு கூறியுள்ளார்கள்.

மண்ணறையைப் பொறுத்தளவில் அதன் மீது கட்டிடம் கட்டக் கூடாது என்று ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்கள் கூறியுள்ளார்கள். அந்த இடத்தில் வணக்கத்தலமாகவும் ஆக்காக் கூடாது, அலி رَضِيَ اللهُ عَنْهُஅவர்களை உயர்த்திக் கட்டப்பட்ட மண்ணறைகளை இடிக்க ஏவினார்கள். தங்கள் காலத்தில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்கள் மண்ணறைக் கட்டவில்லை. ஷஹீதான எந்த நபித்தோழர்களின் மண்ணறையைக் கட்டவில்லை.

அவ்லியாக்களின் மண்ணறையிலிருந்துதான் ஷிர்க் ஆரம்பிக்க வாய்ப்புள்ளது. ஆரம்பத்தில் மண்ணறைக்குப் போகக் கூடாது எனத் தடுக்கப்பட்டார்கள். ஆனால் நபித்தோழர்களின் ஈமான் வலுப் பெற்ற பின்னர், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள், ‘‘மண்ணறைக்குப் போவதைத் தடுத்திருந்தேன். இப்போது அதனைப் பார்த்தால் மறுமை நினைவுக்கு வரும் என்பதால் இப்போது அனுமதிக்கிறேன்.’’ என்றார்கள். பெண்கள் விஷயத்தில் இப்போதும் அது தடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மண்ணறை இடத்தில் தொழுவது தடுக்கப்பட்டுள்ளது. மண்ணறையை வணங்கும் நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான். அது போல ஜனாஸா தொழுகையில் ருக்உ மற்றும் ஸஜ்தா இல்லாமல் இருப்பது, ஜனாஸாவுக்கு அவைகளைச் செய்யும் நிலை ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகதான்.

எனவே அவ்லியாக்களை நேசிக்கும் விஷயத்தில் மிகவும் கவனமாக, வரம்பு மீறக் கூடாது. ஆனால் அவர்களை வழி கெடுக்க, சிலர் அறிஞர்கள் எனக் கூறிக் கொண்டு ஷிர்க் விஷயங்களைக் சரியாக்கும் நிலையிலிருந்து நாம் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும்.

பிறர் மீது சத்தியம் செய்வது

இது சிறிய ஷர்க்கின் மற்றுமொரு வகை

பிறர் மீது சத்தியம் செய்வது, இஸ்லாத்தின்படி ஹராமாகும். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், ‘‘யாரொருவர் சத்தியம் செய்ய விழைகிறாரோ, அவர் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்ய வேண்டும். அல்லது அவர் சத்தியம் செய்யாமல் மௌனமாக இருக்க வேண்டும்.’’ மற்றொரு ஹதீதில் தங்களின் தாய் தந்தையர்களின் மீது சத்தியம் செய்வதைத் தடுத்துள்ளார்கள். இதுபோல குழைந்தைகள் மற்றும் க.்.பாவின் மீது சத்தியம் செய்வது ஹராம். பிறர் மீது செய்யப்படும் உண்மையான சத்தியத்தை விட, அல்லாஹ் வின் மீது செய்யப்படும் பொய்யான சத்தியம் தமக்கு விருப்பமானது எனஇப்னு மஸ்வூது கூறியுள்ளார். ஏனெனில் பிறர் மீது செய்யப்படும் சத்தியம் ஷிர்க்காகும். மற்றொன்று பாவமாக இருந்தாலும், ஷிர்க் இல்லை. இந்த ஷிர்க் சிறியதா அல்லது பெரியதா என்பதில அறிஞர்களிடம் கருத்து வேறுபாடு உள்ளது, யாரின் பெயரால் ஷிர்க் செய்யப்படுகிறதோ, அவரை அல்லாஹ்வின் தரத்தில் நினைத்து அவ்வாறு சத்தியம் செய்தால், அது பெரிய ஷிர்க் ஆகும். அது அல்லாமல் சாதாரண நினைப்பில் செய்தால் சிறிய ஷிர்க் ஆகும். இதன் தண்டனை நிரந்த நரகம் இல்லை என்றாலும் அது தடை செய்யப்பட்டுள்ளதால் நாம் தடுத்துக் கொள்ள வேண்டும்.

பழக்கத்தின் அடிப்படையில் மறதியாக நாம் வாயில் சத்தியம் வந்துவிட்டால், அது குறித்து குற்றம் பிடிக்க மாட்டாது.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:225 لَا يُؤَاخِذُكُمُ اللّٰهُ بِاللَّغْوِ فِىْٓ اَيْمَانِكُمْ وَلٰـكِنْ يُّؤَاخِذُكُمْ بِمَا كَسَبَتْ قُلُوْبُكُمْ‌ؕ وَاللّٰهُ غَفُوْرٌ حَلِيْمٌ

2:225. (யோசனையின்றி) நீங்கள் செய்யும் வீணான சத்தியங்களுக்காக அல்லாஹ் உங்களைக் குற்றம் பிடிக்க மாட்டான்; ஆனால் உங்களுடைய இதயங்கள் (வேண்டுமென்றே) சம்பாதித்துக் கொண்டதைப் பற்றி உங்களைக் குற்றம் பிடிப்பான்; இன்னும் அல்லாஹ் மன்னிப்போனாகவும்; மிக்க பொறுமையுடையோனுமாகவும் இருக்கின்றான்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அதனை மன்னிக்கக் கூடியவன்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வைக் காண முடியுமா?

இக்கேள்வியில் இந்த உலகிலா அல்லது மறுமையிலா என்ற இரு நிலை உள்ளது. இந்த உலகைப் பொறுத்தளவில், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவைக் காண முடியாது என்பதுதான் சரியான நிலை. பார்த்தவர்கள் யாரும் இருந்தால் ஆதாரத்தைக் காட்ட வேண்டும். பார்க்கவில்லை என்பதற்கு ஆதாரம் தேவையில்லை. எனினும் மூஸா عَلَيْهِ السَّلَامُஅவர்கள் குறித்த வரலாறு ஒரு ஆதாரம். அவர்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவைக் காண விரும்பும்போது, தன்னைக் காண இயலாது என கூறினான். எனினும் மூஸா عَلَيْهِ السَّلَامُவலியுறுத்தவே ஒரு மலையின் மீது தனது தஜல்லியைக் காண அல்லாஹ் கூறியபோது, அவர்களால் காண இயலாமல் மூர்ச்சையாகி விட்டார்கள். அவர்களின் விண்ணேற்றத்திற்குப் பிறகு, அவர்கள் அல்லாஹ்வை பார்த்தார்களா என அபுதர் வினவியபோது, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவுக்கும், தங்களுக்கும் இடையில் ஒரு நூர் இருக்கும்போது எப்படிப் பார்க்க முடியும் என்றார்கள். முஸ்லிம் 5659

சிலர் அல்லாஹ் வை பார்த்தார்கள் எனக் கூறலாம். ஆனால் அதற்கு ஆதாரம் இல்லை. எனினும் இப்னு அப்பாஸ் அவர்களின் ஹதீதை ஆதாரமாகக் கூறுவார்கள். ஆனால் அவர்களின் ஹதீதின் கருத்து, அல்லாஹ்வை அவர்கள் நேரடியாகக் கண்ணால் காணவில்லை, மாறாக கனவில் அவர்கள் அழகான தோற்றத்தில் பார்த்ததாகக் கூறினார்கள்.

மறுமையில் பார்க்க முடியுமா? ஆம்! மு'.மின்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவின் அருள் கொண்டு காண்பார்கள்.

ஸூரத்துல் கியாமா (மறுமை நாள்)

75:22 وُجُوْهٌ يَّوْمَٮِٕذٍ نَّاضِرَةٌ ۙ
75:23 اِلٰى رَبِّهَا نَاظِرَةٌ ۚ

75:22. அந்நாளில் சில முகங்கள் (மகிழ்ச்சியால்) செழுமையாக இருக்கும்.
75:23. தம்முடைய இறைவனளவில் நோக்கியவையாக இருக்கும்.

ஸூரத்துல் முதஃப்ஃபிஃபீன் (அளவு நிறுவையில் மோசம் செய்தல்)

83:15 كَلَّاۤ اِنَّهُمْ عَنْ رَّبِّهِمْ يَوْمَٮِٕذٍ لَّمَحْجُوْبُوْنَؕ

83:15. (தீர்ப்புக்குரிய) அந்நாளில் அவர்கள் தங்கள் இறைவனை விட்டும் திரையிடப்பட்டவர்களாவார்கள்.

ஹதீதிலும் அதற்கான ஆதாரம். புஹாரி மற்றும் முஸ்லிம்

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவைக் காண முடியுமா என நபித்தோழர்கள் வினவியபோது, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَபதினைந்தாம் நாள் இரவில் சந்தினைப் பார்க்க இயலுமா? என வினவினார்கள்.

ஆம் என அவர்கள் கூறியபோது ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்கள் கூறினார்கள்,

"அவ்வாறுதான் எந்தப் பிரச்சனையில்லாமல் பார்க்கலாம்."

மு'.தஸிலா கூட்டத்தினர் இதனை மறுக்கிறார்கள். அவர்களுக்கு நேர்வழி கிடைக்க வேண்டும் அல்லது அவர்கள் அவ்வாறு பாரக்க முடியாமல் போக வேண்டும் என சில அறிஞர்கள் அவர்களின் மீது சாபமிடுகிறார்கள்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எங்கு உள்ளான் ?

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அர்ஷில் உள்ளான் என்பதுதான் நமது நிலைபாடு.

ஸூரத்து தாஹா

20:5 اَلرَّحۡمٰنُ عَلَى الۡعَرۡشِ اسۡتَوٰى

20:5. அர்ரஹ்மான் அர்ஷின் மீது அமைந்தான்.

அது போல திருக்குர்ஆனில் மேலும் 6 இடங்களில் குறிப்பிட்டுள்ளான்.

ஸூரத்துல் கத்ரி (கண்ணியமிக்க இரவு)

97:1 اِنَّاۤ اَنۡزَلۡنٰهُ فِىۡ لَيۡلَةِ الۡقَدۡرِ ۖ ۚ

97:1. நிச்சயமாக நாம் அதை (குர்ஆனை) கண்ணியமிக்க (லைலத்துல் கத்ர்) என்ற இரவில் இறக்கினோம்.

இறக்கினோம் என்பது அல்லாஹ் மேலே இருக்கிறான் என்பது தெளிவாகிறது.

ஸூரத்து ஃபாத்திர் (படைப்பவன்)

35:10 مَنۡ كَانَ يُرِيۡدُ الۡعِزَّةَ فَلِلّٰهِ الۡعِزَّةُ جَمِيۡعًا ؕ اِلَيۡهِ يَصۡعَدُ الۡـكَلِمُ الطَّيِّبُ وَالۡعَمَلُ الصَّالِحُ يَرۡفَعُهٗ ؕ وَ الَّذِيۡنَ يَمۡكُرُوۡنَ السَّيِّاٰتِ لَهُمۡ عَذَابٌ شَدِيۡدٌ ؕ وَمَكۡرُ اُولٰۤٮِٕكَ هُوَ يَبُوۡرُ

35:10. எவன் இஸ்ஸத்தை - கண்ணியத்தை நாடுகிறானோ, அவன், எல்லாக் கண்ணியமும் அல்லாஹ்வுக்கே உரியதாகும் (என்பதை அறிந்து கொள்ளட்டும்); தூய்மையான வாக்குகளெல்லாம் அவன் பக்கமே மேலேறிச் செல்கின்றன; ஸாலிஹான (நல்ல) அமலை எல்லாம் அவன் உயர்த்துகிறான்; அன்றியும் எவர்கள் தீமைகளைச் செய்யச்சதி செய்கிறார்களோ அவர்களுக்குக் கடினமான வேதனையுண்டு - இன்னும் இவர்களுடைய சதித்திட்டம் அழிந்து போகும்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை நோக்கி உயர்ந்து செல்கின்றன என்பதில் அல்லாஹ் மேலே இருக்கிறான் என்பது தெளிவாகிறது.

ஹதீதுகளிலும் பல ஆதாரங்கள் உள்ளன. அவர்கள் மிஃராஜுக்கு வானம் நோக்கி சென்றதும் அல்லாஹ் மேலே இருக்கிறான் என்பதற்கு ஆதாரமாகும்.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் ஒருவர் தாம் ஒரு பெண்ணை அவர் மூஃமினாக இருந்தால் விடுதலை செய்யப் போவதாகவும், அதனை அவர்கள் உறுதிபடுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவரிடம் சில கேள்விகளைக் கேட்கிறார்கள். தங்களை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் தூதர் என்று அவர் ஏற்றுக் கொள்கிறாரா என வினவினார்கள். அவர் ஆம் சாட்சி சொல்கிறேன் என்றார். பின்னர் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எங்கிருக்கிறான் என்று கேட்டதற்கு தமது கையைத் தூக்கி மேலே காட்டி அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வானத்தின் மேல் இருக்கிறான் என்று கூறியதும் அவர் மூஃமின்தான் என்றார்கள். அவர் கூறியது தவறு என்றால், ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அப்போதே கூறியிருப்பார்கள்.

Aqeedah 15 What is Aqeeda and its importance? What is belief and its foundations? What is thowheed and its type? What is thowheedul uloohiyyah?

அகீதா 15 - அகீதா என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன? ஈமான் என்றால் என்ன? அதன் அடிப்படைகள் எத்தனை? அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதில் உள்ளடங்கும் விஷயங்கள் யாவை? தவ்ஹீத் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? தவ்ஹீதுல் உலூஹிய்யா என்றால் என்ன?

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

அகீதா மற்றும் அதன் முக்கியத்துவம்

அகீதா என்றால் உள்ளத்தால் உறுதியாக, கடுகளவும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஏற்றுக் கொள்ளும் விஷயம் ஆகும். இந்தக் கொள்கை இருந்தால்தான் மறுமையில் வெற்றி அடைய முடியும்.

ஸூரத்துல் அன்ஆம் (ஆடு, மாடு, ஒட்டகம்)

6:82 اَلَّذِيْنَ اٰمَنُوْا وَلَمْ يَلْبِسُوْۤا اِيْمَانَهُمْ بِظُلْمٍ اُولٰۤٮِٕكَ لَهُمُ الْاَمْنُ وَهُمْ مُّهْتَدُوْنَ

6:82. எவர் ஈமான் கொண்டு அதன் பின்னர் தம்முடைய ஈமானை (இணை வைத்தல் என்னும்) அநீதியைக் கொண்டு களங்கப்படுத்தவில்லையோ, அவர்களுக்கே அபயமுண்டு; இன்னும் அவர்களே நேர்வழியைப் பெற்றுக் கொண்டவர்கள்.

சரியான கொள்கையிலிருந்து அநீதி கலக்காமல் இருந்தால், அபயம் இருக்கும். அந்தச் சரியான கொள்கை இல்லாவிட்டால் சுவனத்தில் நுழைவது சாத்தியமில்லை.

ஸூரத்துல் அஃராஃப் (சிகரங்கள்)

7:40 اِنَّ الَّذِيْنَ كَذَّبُوْا بِاٰيٰتِنَا وَاسْتَكْبَرُوْا عَنْهَا لَا تُفَتَّحُ لَهُمْ اَبْوَابُ السَّمَآءِ وَلَا يَدْخُلُوْنَ الْجَـنَّةَ حَتّٰى يَلِجَ الْجَمَلُ فِىْ سَمِّ الْخِيَاطِ‌ؕ وَكَذٰلِكَ نَجْزِى الْمُجْرِمِيْنَ

7:40. எவர்கள் நம் வசனங்களை பொய்ப்பித்து இன்னும் (அவற்றைப் புறக்கணித்து) பெருமையடித்தார்களோ நிச்சயமாக அவர்களுக்கு வானத்தின் (அருள்) வாயில்கள் திறக்கப்பட மாட்டா - மேலும் ஊசியின் காதில் ஒட்டகம் நுழையும் வரையில் அவர்கள் சுவனபதியில் நுழைய மாட்டார்கள் - இவ்வாறே குற்றம் செய்பவர்களுக்கு கூலி கொடுப்போம்.

சரியான கொள்கை இல்லாமல் பல வருடங்கள் நற்செயல் செய்தாலும் பயனில்லாமல் அனைத்தும் வீணாகி விடும்.

ஸூரத்துல் கஹ்ஃபு (குகை)

18:103 قُلْ هَلْ نُـنَبِّئُكُمْ بِالْاَخْسَرِيْنَ اَعْمَالًا ؕ

18:103. “(தம்) செயல்களில் மிகப் பெரும் நஷ்டவாளிகள் யார் என்பதை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?” என்று (நபியே!) நீர் கேட்பீராக.

அப்துல்லாஹ் இப்னு ஜர்ராஹ் அறியாமை காலத்தில் வாழ்ந்தவர். ஏழைகளுக்கு உதவி செய்வது, உறவினர்களைப் பேணுதல் ஆகிய நற்காரியங்களைச் செய்தவர். அவர் குறித்து அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் வினவியபோது, அவரது நற்காரியங்கள் அகீதா இல்லாததனால் மறுமையில் எந்த பயனும் அளிக்காது என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள்.

கொள்கை (அகீதா) இருந்தால்தான் மறுமையில் வெற்றி, இல்லை என்றால் நிரந்த நரகம், சுவனத்திற்குள் நுழைய முடியாது, மேலும் நற்செயல்கள் மறுமையில் பலனிக்காது என்ற மூன்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஈமான் என்றால் என்ன? அதன் தூண்கள் (அடிப்படைகள்) எவை?

நாவால் மொழிந்து, உள்ளத்தால் நம்புவது மற்றும் அதன்படி நற்செயல்கள் செய்வது ஆகிய மூன்றும் ஈமானில் அடங்கும்.

ஈமானின் தூண்கள் ஆறு. இந்த ஆறு தூண்களும் ஒரே வசனத்தில் வரவில்லை. முதல் ஐந்து விஷயங்களையும் அத்தியாயம் பகரா 177ல் காணலாம்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:177 لَيْسَ الْبِرَّ اَنْ تُوَلُّوْا وُجُوْهَكُمْ قِبَلَ الْمَشْرِقِ وَ الْمَغْرِبِ وَلٰـكِنَّ الْبِرَّ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَالْمَلٰٓٮِٕكَةِ وَالْكِتٰبِ وَالنَّبِيّٖنَ‌ۚ وَاٰتَى الْمَالَ عَلٰى حُبِّهٖ ذَوِى الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنَ وَابْنَ السَّبِيْلِۙ وَالسَّآٮِٕلِيْنَ وَفِى الرِّقَابِ‌ۚ وَاَقَامَ الصَّلٰوةَ وَاٰتَى الزَّکٰوةَ ‌ۚ وَالْمُوْفُوْنَ بِعَهْدِهِمْ اِذَا عٰهَدُوْا ۚ وَالصّٰبِرِيْنَ فِى الْبَاْسَآءِ وَالضَّرَّآءِ وَحِيْنَ الْبَاْسِ‌ؕ اُولٰٓٮِٕكَ الَّذِيْنَ صَدَقُوْا ‌ؕ وَاُولٰٓٮِٕكَ هُمُ الْمُتَّقُوْنَ

2:177. புண்ணியம் என்பது உங்கள் முகங்களைக் கிழக்கிலோ, மேற்கிலோ திருப்பிக்கொள்வதில் இல்லை; ஆனால் புண்ணியம் என்பது **அல்லாஹ்வின் மீதும், இறுதி(த் தீர்ப்பு) நாளின் மீதும், மலக்குகளின் மீதும், வேதத்தின் மீதும், நபிமார்கள் மீதும் ஈமான் கொள்ளுதல்;** (தன்) பொருளை இறைவன் மேலுள்ள நேசத்தின் காரணமாக, பந்துக்களுக்கும், அநாதைகளுக்கும், மிஸ்கீன்(ஏழை)களுக்கும், வழிப் போக்கர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும், (அடிமைகள், கடனாளிகள்) போன்றோரின் மீட்புக்காகவும் செலவு செய்தல்; இன்னும் தொழுகையை ஒழுங்காகக் கடைப்பிடித்து முறையாக ஜகாத் கொடுத்து வருதல்(இவையே புண்ணியமாகும்); இன்னும் தாம் வாக்களித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோரும்; (வறுமை, இழப்பு போன்ற) துன்பத்திலும், (நோய் நொடிகள் போன்றவற்றின்) கஷ்டத்திலும், யுத்த சமயத்திலும், உறுதியுடனும், பொறுமையுடனும் இருப்போரும் தான் நன்னெறியாளர்கள்; இன்னும் அவர்கள் தாம் முத்தகீன்கள்(பயபக்தியுடையவர்கள்).

விதியைப் பற்றி அத்தியாயம் அல் கமல் 49ல்

ஸூரத்துல் கமர் (சந்திரன்)

54:49 اِنَّا كُلَّ شَىْءٍ خَلَقْنٰهُ بِقَدَرٍ

54:49. நாம் ஒவ்வொரு பொருளையும் நிச்சயமாக (குறிப்பான) அளவின்படியே படைத்திருக்கின்றோம்.

ஹதீது ஜிப்ரயீல் : புஹாரி

50. நபி(ஸல்) அவர்கள் ஒரு நாள் மக்களுக்கிடையில் இருந்தபோது ஒருவர் அவர்களிடம் வந்து **'ஈமான் என்றால் என்ன?'** என்று கேட்டதற்கு **'ஈமான் என்பது அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய சந்திப்பையும் அவனுடைய தூதர்களையும் நீர் நம்புவது. மேலும், மரணத்திற்குப் பின் எழுப்பப்படுவதையும் நீர் நம்புவது'** எனக் கூறினார்கள். அடுத்து 'இஸ்லாம் என்றால் என்ன?' என்று கேட்டதற்கவர்கள் கூறினார்கள். 'இஸ்லாம் என்பது அல்லாஹ்வுக்கு (எதனையும்) நீர் இணையாகக் கருதாத நிலையில் அவனை நீர் வணங்குவதும் தொழுகையை நிலை நிறுத்தி வருவதும் கடமையாக்கப்பட்ட ஸகாத்தை நீர் வழங்கி வருவதும் ரமலான் மாதம் நீர் நோன்பு நோற்பதுமாகும்' என்று கூறினார்கள். அடுத்து 'இஹ்ஸான் என்றால் என்ன?' என்று அவர் கேட்டதற்கவர்கள் கூறினார்கள்: '(இஹ்ஸான் என்பது) அல்லாஹ்வை (நேரில்) காண்பதைப் போன்று நீர் வணங்குவதாகும். நீர் அவனைப் பார்க்காவிட்டாலும் நிச்சயமாக அவன் உம்மைப் பார்த்துக் கொண்டே

இருக்கிறான் என்றார்கள்' அடுத்து 'மறுமை நாள் எப்போது?' என்று அம்மனிதர் கேட்டதற்கு இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அதைப் பற்றிக் கேட்கப்பட்டவர் (நான்) அதைப் பற்றிக் கேட்கின்ற உம்மை விட மிக்க அறிந்தவரல்லர். (வேண்டுமானால்) அதன் (சில) அடையாளங்களைப் பற்றி உமக்குச் சொல்கிறேன். அவை, ஓர் அடிமைப் பெண் தனக்கு எஜமானாகப் போகிறவனை ஈன்றெடுக்கல்; மேலும் கறுப்பு நிற ஒட்டகங்களை மேய்த்துக் கொண்டிருந்த மக்கள் உயர்ந்த கட்டிடங்கள் கட்டித் தமக்குள் பெருமையடித்துக் கொள்ளல். ஐந்து விஷயங்களை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறியமாட்டார்' என்று கூறிவிட்டு, பின்வரும் வசனத்தை ஓதிக் காட்டினார்கள். 'மறுமை நாளைப் பற்றிய ஞானம் அல்லாஹ்விடமே உள்ளது.' (திருக்குர்ஆன் 31:34) பின்னர் அம்மனிதர் திரும்பிச் சென்றார். 'அவரை அழைத்து வாருங்கள்' என்றார்கள். சென்று பார்த்தபோது அவரைக் காணவில்லை. அப்போது, 'இவர்தான் ஜிப்ரீல். மக்களுக்கு அவர்களின் மார்க்கத்தைக் கற்றுக் கொடுக்க வந்திருக்கிறார்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். ஜிப்ரீல்(அலை) அவர்களின் கேள்விகளுக்கு நபி(ஸல்) அவர்கள் அளித்த பதில்கள் அனைத்தும் நம்பிக்கையைச் சேர்ந்தது என்று புகாரி ஆகிய நான் கூறுகிறேன். Book: 2 **ஸஹீஹுல் புகாரி 50**

ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلَامُ ஒரு தடமை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் ஈமான் குறித்து விவவியபோது, அவர்கள் இந்த ஆறு விஷயங்களையும் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை ஈமான் கொள்ளும் விஷயம்

இதில் முக்கியாமாக நான்கு விஷயங்கள் உள்ளன. அவையாவன: அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இருக்கிறான் என்று நம்புவது. (நாத்தீகத்தை மறுப்பது). அவன் ஒருவன்தான் (தவ்ஹீது). அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அர்ஷின் மீது உள்ளான். நான்காவதாக மு∴மீன்கள்மறுமையில் அல்லாஹ்வை நாம் காணலாம்.

தவ்ஹீது என்றால் என்ன?

தவ்ஹீது என்றால் ஒருமைப் படுத்துதல். அவன் ஒருவன் மற்றும் தனித்தவன். ஓரிறைக் கொள்கை.

7372. இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் முஆத் இப்னு ஜபல்(ரலி) அவர்களை யமன் நாட்டுக்கு அனுப்பியபோது அவர்களிடம், 'நீங்கள் வேதம் வழங்கப்பெற்ற ஒரு சமுதாயத்தாரிடம் செல்கின்றீர்கள். எனவே, அவர்களுக்கு முதலாவதாக, அல்லாஹ் ஒருவன் எனும் (ஏக இறைக்) கொள்கையை ஏற்கும்படி அழைப்புக் கொடுங்கள். அதை அவர்கள் புரிந்து (ஏற்றுக்) கொண்டால், தினந்தோறும் ஐந்து நேரத் தொழுகைகளை அவர்களின் மீது அல்லாஹ் கடமையாக்கியுள்ளான் என்று அவர்களிடம் தெரிவியுங்கள். அவர்கள் (அதை ஏற்று) தொழவும் செய்தால் அவர்களிடையேயுள்ள செல்வர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அவர்களிடையேயுள்ள ஏழைகளுக்குச் செலுத்தப்படுகிற ஸகாத்தை அவர்களின் செல்வங்களில் அல்லாஹ் கடமையாக்கியுள்ளான் என்று அவர்களிடம் தெரிவியுங்கள். அதையும் அவர்கள் ஒப்புக்கொண்டால் அவர்களிடமிருந்து (ஸகாத்தை) வசூலித்துக் கொள்ளுங்கள். (ஆனால்,) மக்களின் செல்வங்களில் சிறந்தவற்றைத் தவிர்த்திடுங்கள்' என்றார்கள்.3 Book: 97 - **ஸஹீஹுல் புகாரி 7372**

தவ்ஹீதின் வகைகள்

1. வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ் ஒருவனே.
2. இவ்வுலகத்தைப் படைத்து பரிபாலனம் செய்பவன் அவன் ஒருவனே.

3. அவனக்குள்ள தன்மை மற்றும் பண்புகளிலும் அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாரும் இல்லை.

தவ்ஹீதுன் உளூஹிய்யாஹ்

இதற்குத் தவ்ஹீதுல் இபாதாஹ் என்றும் பெயர். வணக்க வழிபாடு விஷயத்தில் அல்லாஹ் ஒருவனே. அவனுக்கு யாரும் இல்லை. நம்மை அல்லாஹ் படைத்தான்.

ஸூரத்துத் தாரியாத் (புழுதியைக் கிளப்பும் காற்றுகள்)

51:56 وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

51:56. இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை.

வணக்கத்திற்கு உரிவன் அல்லாஹ் ஒருவனே என்ற தவ்ஹீதைக் கொண்டுதான் இறைத்துாதர்கள் அனுப்பப்பட்டார்கள்.

ஸூரத்துந் நஹ்ல் (தேனி)

16:36 وَلَقَدْ بَعَثْنَا فِىْ كُلِّ اُمَّةٍ رَّسُوْلًا اَنِ اعْبُدُوا اللّٰهَ وَاجْتَنِبُوا الطَّاغُوْتَ‌ۚ فَمِنْهُمْ مَّنْ هَدَى اللّٰهُ وَمِنْهُمْ مَّنْ حَقَّتْ عَلَيْهِ الضَّلٰلَةُ‌ ؕ فَسِيْرُوْا فِى الْاَرْضِ فَانْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُكَذِّبِيْنَ

16:36. மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், “அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்; ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்” என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத்தோம்; எனவே அ(ந்த சமூகத்த)வர்களில் அல்லாஹ் நேர்வழி காட்டியோரும் இருக்கிறார்கள்; வழிகேடே விதிக்கப்பெற்றோரும் அவர்களில் இருக்கிறார்கள்; ஆகவே நீங்கள் பூமியில் சுற்றுப்பயணம் செய்து, பொய்யர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதைக் கவனியுங்கள்.

அல்லாஹ்வை ஒருமைப் படுத்துவது மற்றும் அவனை மட்டுமே வணங்குவதுதான் இம்மை மறுமை வெற்றியுள்ளது என்பதனையும் அறிந்து கொள்ள வேண்டும்.

Aqeedah 16 What is Ibaadah and its foundations? What is thavheed ruboobiyyah and thavheedul asmaa vassifaath?

அகீதா 16 - இபாதத் என்றால் என்ன? அதன் அடிப்படைகள் யாவை? தவ்ஹீதுர் ருபூபிய்யாஹ் என்றால் என்ன? தவ்ஹீதுல் அஸ்மா வஸ்ஸிஃபாத் என்றால் என்ன? அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களையும் தன்மைகளையும் எவ்வாறு நம்பிக்கை கொள்ள வேண்டும்?

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

இபாதத் மற்றும் அதன் வகைகள்

இப்னு தைமிய்யாஹ் رَحْمَةُ اللّٰهِ عَلَيْهِ வின் கூற்றுப்படி, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் நெருக்கத்தைப் பெற்றுத் தரக்கூடிய ஒவ்வொரு வெளிப்படையான மற்றும் மறைவான சொற்களும், செயல்களும் இபாதத் ஆகும். அவை என்ன? ஷிரியத்தில், குர்ஆன் மற்றும் ஹதீதுகளில் உள்ளவற்றை அடிப்படையாக உள்ளவைதான் இபாதத் ஆகும். நம் விருப்பப்படி நல்லது என்று செய்வதெல்லாம் இபாதத் என்பதில் அடங்காது.

இபாதத்தின் அடிப்படைகள் மூன்று. ஒன்றாவது மஹப்பத் (நேசம்), இரண்டாவது கவ்.ஃப் மற்றும் மூன்றாவது ரஜஅ (ஆதரவு) எனவே அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் மீதுள்ள நேசம், அல்லது அவன் மீதுள்ள அச்சத்தின் காரணமாக, அல்லது அவனிடம் ஆதரவு கொண்டு செய்யபடுவவை இபாதத் ஆகும், அத்தியாயம் அல் ஸஜ்தா 16 ல் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கூறுகிறான்,

ஸூரத்துஸ் ஸஜ்தா (சிரம் பணிதல்)

32:16 تَتَجَافٰى جُنُوْبُهُمْ عَنِ الْمَضَاجِعِ يَدْعُوْنَ رَبَّهُمْ خَوْفًا وَّطَمَعًا وَّمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ

32:16. அவர்களுடைய விலாக்களைப் படுக்கைகளிலிருந்து (தூக்கத்தைத் துறந்து) உயர்த்தி **அவர்கள் தங்களுடைய இறைவனை அச்சத்தோடும் நம்பிக்கை ஆர்வத்தோடும் பிரார்த்தனை செய்வார்கள்;** மேலும் நாம் அவர்களுக்கு அளித்ததிலிருந்து (தானதர்மங்களில்) செலவும் செய்வார்கள்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் நேசத்திற்கான ஆதாரம் அல் இன்ஸான் 9

ஸூரத்துத் தஹ்ர் (காலம்)

76:9 اِنَّمَا نُطْعِمُكُمْ لِوَجْهِ اللّٰهِ لَا نُرِيْدُ مِنْكُمْ جَزَآءً وَّلَا شُكُوْرًا

76:9. “உங்களுக்கு நாங்கள் உணவளிப்பதெல்லாம், **அல்லாஹ்வின் முகத்திற்காக (அவன் திருப்பொருத்தத்திற்காக);** உங்களிடமிருந்து பிரதிபலனையோ (அல்லது நீங்கள்) நன்றி செலுத்த வேண்டுமென்பதையோ நாங்கள் நாடவில்லை” (என்று அவர்கள் கூறுவர்).

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் பொருத்தத்திற்காக அன்றி, உங்களிடம் பலனை எதிர்ப்பார்த்து நாங்கள் செய்யவில்லை என மு.ஃ.மின்கள் கூறுவார்கள்.

இந்த மூன்றும் திருக்குர்ஆனிலும், ஹதீதிலும் சொல்லப்பட்டவை. எனவே பயத்தின் அடிப்படையிலும், ஆதரவின் அடைப்படையிலும், அச்சத்தின் அடிப்படையிலும் நமது இபாபத் இருக்க வேண்டும். இந்த

மூன்றில் எந்த ஒன்றை மட்டும் அதிகமாக எடுத்துக் கொள்ளாமல், மூன்றையும் சம அளவில கொண்டு இபாதத் இருக்க வேண்டும்.

உதாரணமாக, தந்தை மகன் இருவரும் தங்களுக்கிடையில் அன்பைப் பொழிந்து கொள்ளலாம். ஆனால் அதே அன்பின் காரணமாகத் தந்தை தனது மகனின் தவறுகளை அன்பின் காரணமாகத் தட்டாமல் விடுவதும், மகன் தமது தந்தையின் அன்பின் காரணமாக தாம் எந்தத் தவறு செய்தாலும் தம்மை தந்தை தண்டிக்க மாட்டார் என்பதும், அந்த அன்பின் வெளிப்பாட்டை தவறாக்கிவிடும். எனவே நாம் அல்லாஹ்வின் மீது அன்பு, அச்சம் மற்றும் ஆதரவைக் கொண்டு இபாதத் செய்ய வேண்டும்.

மூன்றாவதாக, ஸூ..பியாக்கள், கவாரிஜீன்கள் மற்றும் முர்ஜியாக்கள் வழி கெட்டவர்கள் என்பதனை அறிந்து கொள்ள வேண்டும். ஸூ..பியாக்கள் அல்லாஹ் வின் மீதுள்ள நேசம் அதிகமாக, அவனது மீதுள்ள அச்சத்தை நீக்கி விட்டு (சுவனம், நரகம் என்று இரண்டும் இல்லை எனவும், அல்லது சுவனத்தை ஆசை குறித்து அவனை இபாதத் செய்யக் கூடாது எனவும், நரகத்தைப் பயந்து இபாதத் செய்யக் கூடாது எனவும் கூறி) மற்றவற்றை அச்சத்தையும், ஆதரவையும் விட்டுவிட்டார்கள்.

கவாரிஜீன்கள் அச்சத்தை அதிகமாக எடுத்துக் கொண்டு, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى மன்னிக்கக் கூடியவன், கருணையாளன் என்பதை எல்லாம் விட்டு விட்டு, பொய் சொன்னால் கூட கா..பிர் என்பது போல, கு..ப்ரில் உள்ளடங்காத விஷயங்களையும் பெரிதாக எடுத்துக் கொண்டு . முர்ஜியாக்கள் அல்லாஹ்வின் மீது அதிக ஆதரவு வைத்து, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எந்தப் பாவத்தைச் செய்தாலும், வாழ்நாள் முழுவதும் பாவம் செய்தாலும் மன்னிப்பான் எனக் கூறி அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் கடுமையான பிடி குறித்து கவலை கொள்ள மாட்டார்கள்.

இவ்வாறில்லாமல், நாம் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் மீது அன்பு, அச்சம் மற்றும் ஆதரவு மூன்றையும் கொள்ள வேண்டும்.

தவ்ஹீதுர் ருபூபிய்யாஹ் (படைத்துப் பரிபாலிக்கும் இரட்சகனாகிய அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவது)

இந்த உலகத்தைப் படைத்து, பரிபாலனம் செய்து, ஆட்சியதிகாரம் செய்வதுதான் ருபீபிய்யத் ஆகும். இதில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ஒருவன் என உறுதி கொள்வதுதான் தவ்ஹீத் ருபூபிய்யாஹ் ஆகும். ரப் என்றால் இரட்சகன் என்பது பொருள். அவனே இரட்சகன். அதற்கான ஆதாரம்.

ஸூரத்துர் ரூம் (ரோமானியப் பேரரசு)

30:40 اَللّٰهُ الَّذِىْ خَلَقَكُمْ ثُمَّ رَزَقَكُمْ ثُمَّ يُمِيْتُكُمْ ثُمَّ يُحْيِيْكُمْ‌ؕ هَلْ مِنْ شُرَكَآٮِٕكُمْ مَّنْ يَّفْعَلُ مِنْ ذٰ لِكُمْ مِّنْ شَىْءٍ‌ؕ سُبْحٰنَهٗ وَتَعٰلٰى عَمَّا يُشْرِكُوْنَ

30:40. அல்லாஹ்தான் உங்களைப் படைத்தான்; பின் உங்களுக்கு உணவு வசதிகளை அளித்தான்; அவனே பின்னர் உங்களை மரணிக்கச் செய்கிறான். பிறகு அவனே உங்களை உயிர்ப்பிப்பான் - **இவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்யக் கூடியதாக உங்கள் இணை தெய்வங்கள் இருக்கிறதா?** அல்லாஹ் மிகவும் தூயவன்; **அவர்கள் இணை வைப்பதை விட்டும் மிகவும் உயர்ந்தவன்.**

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى செய்யும் காரியங்கள் எதனையும், இணை வைப்பவர்கள் யாராலும் செய்ய முடியாது.

ஸூரத்துல் ஹஜ்

22:73 يٰۤاَيُّهَا النَّاسُ ضُرِبَ مَثَلٌ فَاسْتَمِعُوْا لَهٗ‌ؕ اِنَّ الَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ لَنْ يَّخْلُقُوْا ذُبَابًا وَّلَوِ اجْتَمَعُوْا لَهٗ‌ؕ وَاِنْ يَّسْلُبْهُمُ الذُّبَابُ شَيْـــًٔا لَّا يَسْتَنْـقِذُوْهُ مِنْهُ‌ؕ ضَعُفَ الطَّالِبُ وَالْمَطْلُوْبُ

22:73. மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது. எனவே செவிதாழ்த்திக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வையன்றி (வேறு) எவர்களை நீங்கள் பிரார்த்திக்கின்றீர்களோ, **அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ஈயைக்கூடப் படைக்க முடியாது**; இன்னும், அவர்களிடமிருந்து ஒரு பொருளை எடுத்துக் கொண்டு போனால் அவர்களால் அதனை அந்த ஈயிடத்திலிருந்து திரும்பக் கைப்பற்றவும் முடியாது; தேடுவோனும், தேடப்படுவோனும் பலஹீனர்களே.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் பிரமாண்டமான படைப்புகளான வானம், பூமியை விட்டு விடுங்கள். சாதாரண ஒரு ஈயையும் இணை வைக்கப்படுபவைகள் படைக்க முடியாது. எனவே அவை வணங்கப்படக் கூடாது.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:21 يٰۤاَيُّهَا النَّاسُ اعْبُدُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ وَالَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ۙ

2:21. மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். (அதனால்) நீங்கள் தக்வா (இறையச்சமும்; தூய்மையும்) உடையோராகலாம்.

எனவே அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் ருபூபியத்தில் யாரையும் இணை வைக்கக் கூடாது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அவை நமக்கு எவ்வித உதவியையும் அளிக்க முடியாத நிலையில் நாம் எவ்வாறு அவ்வாறு வணங்க வேண்டும்.

மக்கத்துக் கா∴பிர்களின் நிலையை நாம் எண்ணிப்பாரக்க வேண்டும்.

ஸூரத்துல் அன்கபூத் (சிலந்திப் பூச்சி)

29:61 وَلَٮِٕنْ سَاَلْتَهُمْ مَّنْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَسَخَّرَ الشَّمْسَ وَالْقَمَرَ لَيَقُوْلُنَّ اللّٰهُ‌ ۚ فَاَنّٰى يُؤْفَكُوْنَ

29:61. மேலும், (நபியே!) "நீர் இவர்களிடத்தில் வானங்களையும், பூமியையும் படைத்துச் சூரியனையும் சந்திரனையும் (தன் அதிகாரத்தில்) வசப்படுத்திருப்பவன் யார்?" என்று கேட்டால், "அல்லாஹ்" என்றே இவர்கள் திட்டமாக கூறுவார்கள்; அவ்வாறாயின் அவர்கள் (உண்மையை விட்டு) எங்கே திருப்பப்படுகிறார்கள்?

அந்த கா∴பிர்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் ருபூபிய்யத்தை ஒப்புக் கொண்டார்கள். இருந்தாலும் அவர்கள் செய்த தவறு, வணக்கத்திற்கு உரியவன் அவன் மட்டும்தான் என்று ஏற்றுக் கொள்ளாமல், அல்லாஹ்வுடன் 360 சிலைகளை எடுத்துக் கொண்டார்கள். எனவே அவர்களை உலூஹிய்யாஹ்வில், அல்லாஹ் வை வணங்குவதில் இணை வைத்து விட்டார்கள். இதற்காகத் தான் நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மக்காவிலும், மதினாவிலும் இந்தத் தவ்ஹீது கொள்கை குறித்துதான் மக்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

தவ்ஹீத் அஸ்மா வஸ்ஸிஃபாத்

அல்லாஹ்வின் سُبْحَانَهُ وَتَعَالَى அழகிய நற்பெயர்களிலும், அவனது தன்மையிலும் அவனை தனிமைப் படுத்துதல். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு உள்ள பண்புகளான ஆற்றல், நாட்டம், படைத்தல் பரிபாலித்தல் ஆகியவற்றில் அனைத்திலும் ஒருமைப் படுத்துதல். எல்லா தன்மைகளில் எந்த ஒன்றும் மற்றவர்களுக்கு இருப்பதாக எண்ணுவது ஷிர்க் ஆகும். வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ் ஒருவன் என எடுத்துக் கொண்டிருந்தாலும், அவனது பண்புகளில் ஒரு சில மற்றவர்களுக்கு இருக்கலாம் என்று நினைத்தல் கூடாது.

ஸூரத்துல் ஹஷ்ர் (ஒன்று கூட்டுதல்)

59:22 هُوَ اللّٰهُ الَّذِىْ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ‌ ۚ عٰلِمُ الْغَيْبِ وَالشَّهَادَةِ‌ ۚ هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ
59:23 هُوَ اللّٰهُ الَّذِىْ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ‌ۚ اَلْمَلِكُ الْقُدُّوْسُ السَّلٰمُ الْمُؤْمِنُ الْمُهَيْمِنُ الْعَزِيْزُ الْجَـبَّارُ الْمُتَكَبِّرُ‌ؕ سُبْحٰنَ اللّٰهِ عَمَّا يُشْرِكُوْنَ
59:24 هُوَ اللّٰهُ الْخَـالِـقُ الْبَارِئُ الْمُصَوِّرُ‌ لَـهُ الْاَسْمَآءُ الْحُسْنٰى‌ؕ يُسَبِّحُ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ‌ۚ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

59:22. அவனே அல்லாஹ்; வணக்கத்திற்குரியவன்; அவனைத் தவிர வேறு நாயன் இல்லை; மறைவானதையும், பகிரங்கமானதையும் அறிபவன்; அவனே அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையோன்.
59:23. அவனே அல்லாஹ், வணக்கத்திற்குரிய நாயன் அவனைத் தவிர, வேறு யாரும் இல்லை; அவனே பேரரசன்; மிகப்பரிசுத்தமானவன்; சாந்தியளிப்பவன்; தஞ்சமளிப்பவன்; பாதுகாப்பவன்; (யாவரையும்) மிகைப்பவன்; அடக்கியாள்பவன்; பெருமைக்குரித்தானவன் - அவர்கள் இணைவைப்பவற்றையெல்லாம் விட்டு அல்லாஹ் மிகத் தூய்மையானவன்.
59:24. அவன்தான் அல்லாஹ்; படைப்பவன்; ஒழுங்குபடுத்தி உண்டாக்குபவன்; உருவமளிப்பவன் - அவனுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன; வானங்களிலும், பூமியிலும் உள்ளவையாவும் அவனையே தஸ்பீஹு (செய்து துதி) செய்கின்றன - அவனே (யாவரையும்) மிகைத்தவன் ஞானம் மிக்கவன்.

ஸூரத்துஷ் ஷூறா (கலந்தாலோசித்தல்)

42:11 فَاطِرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ‌ؕ جَعَلَ لَـكُمْ مِّنْ اَنْفُسِكُمْ اَزْوَاجًا وَّ مِنَ الْاَنْعَامِ اَزْوَاجًا‌ ۚ يَذْرَؤُكُمْ فِيْهِ‌ ؕ لَيْسَ كَمِثْلِهٖ شَىْءٌ‌ ۚ وَهُوَ السَّمِيْعُ الْبَصِيْرُ

42:11. வானங்களையும், பூமியையும் படைத்தவன் அவனே; உங்களுக்காக உங்களில் இருந்தே ஜோடிகளையும் கால் நடைகளிலிருந்து ஜோடிகளையும் படைத்து, அதைக் கொண்டு உங்களை(ப் பல இடங்களிலும்) பல்கி பரவச் செய்கிறான், **அவனைப் போன்று எப்பொருளும் இல்லை; அவன் தான் (யாவற்றையும்) செவியேற்பவன், பார்ப்பவன்.**

இவ்வாறாக அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு அநேகப் பண்பு(ப் பெயர்)கள் இருந்தாலும், அவனைப் போன்று எந்தப் பொருளும் இல்லை. இதுதான் தவ்ஹீத் அஸ்மாவுஸ் ஸி∴பாஹ்

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் தன்மைகளை விட, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் பெயர்கள் குறைவானது. ஏனெனில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் பெயர்களில் தன்மைகள் உள்ளன. ஆனால் எல்லா தன்மைகளுக்கும் பெயர் அறிவிக்கப்படவில்லை. உதாரணமாக, அர் ரஹ்மான், அர் ரஹீம் ஆகிய பெயர்களுக்கு அருள் என்ற தன்மை இருக்கிறது. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வருவான், சிரிப்பான் என ஹதீதுகளில் குறிப்பிடப்பட்டிருந்தும், அவைகளுக்கான பெயர்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

பெயர்களாகட்டும், தன்மைகளாகட்டும் இவை அனைத்தும் தவ்கீ∴பிய்யாஹ், அதாவது திருக்குர்ஆன் மற்றும் ஹதீதில் குறிப்பிடப்பட்ட பெயர்கள் அல்லது தன்மைகளைத்தான் நாம் எடுத்துக் கொள்ள முடியுமே அல்லாமல், நாமாக சுயமாக ஒரு தன்மையையோ, பெயரையோ அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு ஏற்படுத்திக் கொள்ள முடியாது.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு 99 பெயர்கள் உள்ளன. யார் அவர்களை மனனம் செய்து அமல் செய்வார்களோ அவர்கள் சுவனம் செல்வார் என்ற நற்செய்தி ஹதீதில் உள்ளது.

حَدَّثَنِي مُحَمَّدُ بْنُ رَافِعٍ، حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ، حَدَّثَنَا مَعْمَرٌ، عَنْ أَيُّوبَ، عَنِ ابْنِ سِيرِينَ، عَنْ أَبِي هُرَيْرَةَ، وَعَنْ هَمَّامِ بْنِ مُنَبِّهٍ، عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " إِنَّ لِلَّهِ تِسْعَةً وَتِسْعِينَ اسْمًا مِائَةً إِلاَّ وَاحِدًا مَنْ أَحْصَاهَا دَخَلَ الْجَنَّةَ " . وَزَادَ هَمَّامٌ عَنْ أَبِي هُرَيْرَةَ عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم " إِنَّهُ وِتْرٌ يُحِبُّ الْوِتْرَ " .

5198. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: **அல்லாஹ்வுக்குத் தொண்ணூற்று ஒன்பது பெயர்கள் உள்ளன. அவற்றை (நம்பிக்கை கொண்டு) மனனமிட்டவர் சொர்க்கம் செல்வார்.** மேலும், அல்லாஹ் ஒற்றையானவன். ஒற்றைப்படையையே அவன் விரும்புகிறான். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். - **ஸஹீஹ் முஸ்லிம்**

எனினும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு அதனைவிட அதிகமான பெயர்கள் உள்ளன.

இந்தக் கல்விக்கான பயன், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் பெயர்களையும், தன்மையையும் அறியும் போது, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை புரிந்து கொள்ள வாய்ப்புண்டு. பல திருக்குர்ஆன வசனங்கள் பெயர்களில்தான் முடியும். உதாரணமாக, அத்தியாயம் யாஸீன் வசனங்கள்:

ஸூரத்து யாஸீன்

36:5 تَنْزِيْلَ الْعَزِيْزِ الرَّحِيْمِ ۙ

36:38 وَالشَّمْسُ تَجْرِىْ لِمُسْتَقَرٍّ لَّهَا ؕ ذٰلِكَ تَقْدِيْرُ الْعَزِيْزِ الْعَلِيْمِؕ

36:5. (இது) யாவரையும் மிகைத்தோன், கிருபையுடையவனால் இறக்கி அருளப்பட்டதாகும்.
36:38. இன்னும் (அவர்களுக்கு அத்தாட்சி) சூரியன் தன் வரையரைக்குள் அது சென்று கொண்டிருக்கிறது; இது யாவரையும் மிகைத்தோனும், யாவற்றையும் நன்கறிந்தோனுமாகிய (இறை)வன் விதித்ததாகும்.

நம்மைப் படைத்தவனை அறிந்து கொள்வதை விட அழகான கல்வி வேறு ஏது இருக்க முடியும். அதனை அறிந்து நாம் பயன் பெறுவோமாக!

அஸ்மாயி வஸ் ஸி:.பாஹ்வை எப்படி நம்பிக்கை கொள்வது? ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஸஹாபாக்கள் மற்றும் ஸல:.பிகள் எவ்வாறு நம்பிக்கைக் கொண்டார்களோ அவ்வாறே நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். திருக்குர்ஆன் மற்றும் ஹதீது அடிப்படையிலேயே அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் பெயர்களும், தன்மைகளும் எவ்வாறு கூறப்பட்டுள்ளதோ அவ்விதமாகவே நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதில் நாம் செய்யக் கூடாதவை:

த:.தீல், தஹ்ரீ:.ப் (தக்வீல்) தஷ்பீக் (தம்ஸீல்) மற்றும் தக்லீக் செய்யக் கூடாது. மறுத்தல், பொருளை மாற்றுதல், அல்லாஹ்வைப் படைப்பினங்களுடன் ஒப்பிடுதல், கூடுதல் விளக்கம் கொடுத்தல் ஆகியன அவற்றின் பொருட்களாகும். உதாரணமாக,

இரவின் இறுதிப்பகுதியில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இறங்கி வருவான் என்ற ஹதீதில் நாம் அதனை அவ்வாறே நம்ப வேண்டும், அந்த நேரத்தில் நாம் துஆ கேட்க வேண்டும். அவ்வாறில்லாமல் அதனைப் (அவ்வாறெல்லாம் வர மாட்டான் எனப்) புறக்கணித்தல், அல்லது அந்த ஹதீதே இல்லை என மறுத்தல், இவ்வாறு ஜஹ்மிய்யாஹ் என்ற கூட்டத்தினர் உள்ளனர். அல்லது புறக்கணிக்காமல் பொருளை மாற்றுதல், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இறங்கி வரமாட்டான், அவனது கட்டளை அல்லது அருள்தான் இறங்கி வரும் எனக் கூறுவது, அஷாயிராஹ் என்ற கூட்டத்தினர் இவ்வாறு எடுத்துக்

கொள்வார்கள். நாம் படிக்கட்டில் இறங்கி வருவது போல என நாம் நினைகக் கூடாது. எவ்வாறு இறங்கி வருவான் என்பது பற்றிய கூடுதல் விளக்கத்தையும் நம் மனோ இச்சையின்படி நாடக்கூடாது. இமாம் மாலிக் رَحْمَةُ اللهِ عَلَيْهِ சபையில் ஒருவர் வந்து, 'அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அர்ஷில் மீது உயர்ந்துள்ளான் என்று வருகிறதே, அவன் எவ்வாறு அர்ஷில் உள்ளான்?' என்று வினவியபோது, அவர்கள் கூறினார்கள், 'அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அர்ஷில் உள்ளான் என்பது எல்லோராலும் அறியப்பட்ட ஒன்று. ஆனால் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எவ்வாறு அர்ஷில் உள்ளான், எப்படி அமைந்துள்ளான் என்பது யாராலும் அறியப்படாத ஒன்று. அதனைப் பற்றி அறிய நினைப்பது பித்அத் ஆகும். இது பற்றி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறவில்லை. இதே போன்றே ஈமான் கொள்வது வாஜிப்.'

அகீதா 17 - மலக்குமார்களை நம்பிக்கை கொள்வது, வேதங்களை நம்பிக்கை கொள்வது

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

மலக்குமார்களை நம்பிக்கை கொள்வது

வானவர்கள் என்பது சர்ச்சைக்குரிய சொல் என்பதல் மலக்குமார்கள் என சொல்வது சாலச் சிறந்தது. அவர்களை நம்பிக்கைக் கொள்வது ஈமானின் ஒரு பகுதிதான். ஈமானின் மற்ற அம்சங்களை மட்டும் நம்பி இதனை விட்டுவிட்டால் ஈமான் முழுமை அடையாது.

மலக்குமார்கள் பற்றி அவர்கள் இறைவனின் படைப்பு என்று ஈமான் கொண்டாலே பாமர முஸ்லிம்களுக்குப் போதுமானது. எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. ஆர்வம் உள்ளவர்கள மேலும் அறிந்து கொள்ளலாம்.

மலக்குமார்களின் தோற்றம். அவர்கள் ஒளியால் படைக்கப்பட்வர்கள். மற்றும் ஜின்கள் நெருப்பால் படைக்கப்பட்டவர்கள். ஆதம் எதனால் படைக்கப்பட்டார் என்பது தெரிந்த ஒன்று என புஹாரியில் பதியப்பட்டுள்ளது.

(10) باب فِي أَحَادِيثَ مُتَفَرِّقَةٍ

حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ رَافِعٍ، وَعَبْدُ بْنُ حُمَيْدٍ، قَالَ عَبْدٌ أَخْبَرَنَا وَقَالَ ابْنُ رَافِعٍ، حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ، أَخْبَرَنَا مَعْمَرٌ، عَنِ الزُّهْرِيِّ، عَنْ عُرْوَةَ، عَنْ عَائِشَةَ، قَالَتْ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " خُلِقَتِ الْمَلاَئِكَةُ مِنْ نُورٍ وَخُلِقَ الْجَانُّ مِنْ مَارِجٍ مِنْ نَارٍ وَخُلِقَ آدَمُ مِمَّا وُصِفَ لَكُمْ " .

(10) Chapter: Miscellaneous Ahadith

'A'isha reported that Allah's Messenger (ﷺ) said:

The Angels were born out of light and the Jinns were born out of the spark of fire and Adam was born as he has been defined (in the Qur'an) for you (i. e. he is fashioned out of clay). - Sahih Muslim 2996 Book 55, Hadith 78

அவர்கள் பலசாலிகளாக இருப்பார்கள். அத்தியாயம் தக்வீர் 20ல் ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلَامُ பற்றி கூறப்பட்டுள்ளது.

ஸூரத்துத் தக்வீர் (சுருட்டுதல்)

81:20 ذِىْ قُوَّةٍ عِنْدَ ذِى الْعَرْشِ مَكِيْنٍۙ

81:20. (அவர்) சக்திமிக்கவர்; அர்ஷுக்குடையவனிடம் பெரும் பதவியுடையவர்.

மற்ற மலக்குமார்களின் சக்தி குறித்தும் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

மலக்குமார்கள் பிரமாண்டமான தோற்றத்தைக் கொண்டவர்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் படைப்பில் மிகப் பெரிய படைப்பாக உள்ளார்கள். முஸ்லிம் பதியப்பட்ட ஹதீது. ஹிராக் குகையில் முதலில் ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلَامُ அவர்களைப் பார்த்த பிறகு, இரண்டாவது தடவையாக ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அவர்களை பிரமாண்டமாக, பூமியிலிருந்து வானத்தை நிரப்பும் அளவிற்குப் பிரமாண்மாகக் கண்டார்கள்.

அர்ஷை சுமந்திருக்கும் மலக்குமார்களின் காதின் கீழிருந்து தோள்பட்டை வரையுள்ள நீளம் 700 ஆண்டு ஒட்டகத்தில் பயணம் சென்றால் எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ அவ்வளவு தூரம் என ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள். அப்படிப்பட்ட மலக்குகளைப் படைத்த அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எந்த அளவுக்கு சக்தி மிக்கவன் என்பதை நாம் ஆய்ந்தறிந்து நம் ஈமானை வலுப்படுத்திக் கொள்ளலாம்.

மலக்குமார்கள் உணவு அருந்த மாட்டார்கள். தண்ணீர் அருந்த மாட்டார்கள்.

ஸூரத்து ஹூது

11:69 وَلَقَدْ جَآءَتْ رُسُلُنَآ اِبْرٰهِيْمَ بِالْبُشْرٰى قَالُوْا سَلٰمًا‌ ؕ قَالَ سَلٰمٌ‌ فَمَا لَبِثَ اَنْ جَآءَ بِعِجْلٍ حَنِيْذٍ
11:70 فَلَمَّا رَاٰۤ اَيْدِيَهُمْ لَا تَصِلُ اِلَيْهِ نَكِرَهُمْ وَاَوْجَسَ مِنْهُمْ خِيْفَةً‌ ؕ قَالُوْا لَا تَخَفْ اِنَّاۤ اُرْسِلْنَاۤ اِلٰى قَوْمِ لُوْطٍؕ

11:69. நிச்சயமாக நம் தூதர்கள் (வானவர்கள்) இப்ராஹீமுக்கு நற்செய்தி (கொண்டு வந்து) "ஸலாம்" (சொன்னார்கள்; இப்ராஹீமும் "ஸலாம்" (என்று பதில்) சொன்னார்; (அதன் பின்னர் அவர்கள் உண்பதற்காக) பொரித்த கன்றின் (இறைச்சியைக்) கொண்டு வருவதில் தாமதிக்கவில்லை.

11:70. ஆனால், **அவர்களுடைய கைகள் அதன் (உணவின்) பக்கம் செல்லாததைக் கண்டு**, அவர் அவர்களைப் பற்றி ஐயப்பட்டார், அவர்கள் மீது அவருக்குப் பயமும் ஏற்பட்டுவிட்டது; (ஆனால்) அவர்களோ (அவரைப் பார்த்து) "பயப்படாதீர்! நிச்சயமாக நாங்கள் லூத்துடைய சமூகத்தார்பால் அனுப்பப்பட்டிருக்கிறோம்" என்று கூறினார்கள்.

மலக்குமார்களுக்கு இறக்கைகளை படைத்துள்ளான்.

ஸூரத்து ஃபாத்திர் (படைப்பவன்)

35:1 اَ لْحَمْدُ لِلّٰهِ فَاطِرِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ جَاعِلِ الْمَلٰۤٮِٕكَةِ رُسُلًا اُولِىْۤ اَجْنِحَةٍ مَّثْنٰى وَثُلٰثَ وَرُبٰعَ‌ ؕ يَزِيْدُ فِى الْخَـلْقِ مَا يَشَآءُ‌ ؕ اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

35:1. அல்ஹம்து லில்லாஹ் - எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே; வானங்களையும், பூமியையும் படைத்தவன்; இரண்டிரண்டும், மும்மூன்றும், நன்னான்கும் **இறக்கை உள்ளவர்களாக மலக்குகளைத் தன் தூதை எடுத்துச் செல்வோராக ஆக்கினான்**; தான் நாடியதைப் படைப்பிலே மிகுதப்படுத்துவான்; நிச்சயமாக அல்லாஹ் அனைத்துப் பொருள்களின் மீதும் பேராற்றலுடையவன்.

முன்னர் சொன்னபடி, ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلَامُ அவர்களைப் பார்க்கும்போது ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ வானத்திற்கும், பூமிக்கும் இடைப்பட்ட பகுதியை நிரப்பிய ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلَامُ அவர்களுக்கு 600 இறக்கைகளை காண்டார்கள்.

மலக்குமார்களால் தங்களது உருவத்தை மற்றொரு படைப்பின் உருவம் போல மாற்றக்கூடிய சக்தியை அல்லாஹ் அளித்தான். ஆதாரம் இப்ராஹீம் அலை வீட்டிற்கு மனிதர்களின் உருவத்தில் வந்தார்கள்.

மலக்குமார்களுக்குப் பாலினம் கிடையாது, அவர்களின் பண்புகளைப் பொறுத்தளவில், அவர்கள் அல்லாஹ்வுக்கு மாறு செய்ய மாட்டார்கள். முற்றிலும் அவனுக்கு வழிபட்டவர்கள். அவர்களுக்கு வெட்கம் என்ற பண்பும் உண்டு. அவர்கள் கண்ணியமிக்கவர்கள். மலக்குமார்களும் மனிதர்களைப் போல துன்பத்தை உணர்வார்கள். உதாரணமாக, துர்நாற்றம் அவர்களுக்கும் துன்பத்தைக் கொடுக்கும். வணக்கத்தில் அவர்கள் சோர்வடைய மாட்டார்கள். தொடர்ந்து வணங்குவார்கள். ஆணவம் கொள்ள மாட்டார்கள். மிகவும் பணிவாக நடப்பார்கள். எண்ணிக்கையில் மலக்குமார்கள் மனிதர்களை விட பன்மடங்கு அதிகமானவர்கள்.

ஸூரத்துல் முத்தஸ்ஸிர் (போர்த்திக்கொண்டிருப்பவர்)

74:31 وَمَا جَعَلْنَآ اَصْحٰبَ النَّارِ اِلَّا مَلٰٓٮِٕكَةً ۙ وَّمَا جَعَلْنَا عِدَّتَهُمْ اِلَّا فِتْنَةً لِّلَّذِيْنَ كَفَرُوْا ۙ لِيَسْتَيْقِنَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ وَيَزْدَادَ الَّذِيْنَ اٰمَنُوْۤا اِيْمَانًا وَّلَا يَرْتَابَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ وَالْمُؤْمِنُوْنَ ۙ وَلِيَقُوْلَ الَّذِيْنَ فِىْ قُلُوْبِهِمْ مَّرَضٌ وَّالْكٰفِرُوْنَ مَاذَآ اَرَادَ اللّٰهُ بِهٰذَا مَثَلًا ؕ كَذٰلِكَ يُضِلُّ اللّٰهُ مَنْ يَّشَآءُ وَيَهْدِىْ مَنْ يَّشَآءُ ؕ وَمَا يَعْلَمُ جُنُوْدَ رَبِّكَ اِلَّا هُوَ ؕ وَمَا هِىَ اِلَّا ذِكْرٰى لِلْبَشَرِ

74:31. அன்றியும், **நரகக் காவலாளிகளை மலக்குகள் அல்லாமல் நாம் ஆக்கவில்லை;** காஃபிர்களுக்கு அவர்களுடைய எண்ணிக்கையை ஒரு சோதனையாகவே ஆக்கினோம் - வேதம் கொடுக்கப்பட்டவர்கள் - உறுதிகொள்வதற்கும், ஈமான் கொண்டவர்கள், ஈமானை அதிகரித்துக் கொள்வதற்கும் வேதம் கொடுக்கப்பட்டவர்களும், முஃமின்களும் சந்தேகம் கொள்ளாமல் இருப்பதற்கும் (நாம் இவ்வாறு ஆக்கினோம்); எனினும் எவர்களுடைய இருதயங்களில் நோய் இருக்கிறதோ, அவர்களும் காஃபிர்களும்: "அல்லாஹ் (பத்தொன்பது எனும் இந்த எண்ணிக்கையின்) உதாரணத்தைக் கொண்டு எ(ன்ன கருத்)தை நாடினான்?" என கேட்பதற்காகவுமே (இவ்வாறு ஆக்கினோம்). இவ்வாறே அல்லாஹ் தான் நாடியவர்களை வழிகேட்டிலும் விடுகிறான்; இன்னும் தான் நாடியவர்களை நேர்வழியிலும் செலுத்துகிறான்; அன்றியும் உம்முடைய இறைவனின் படைகளை அவனைத் தவிர மற்றெவரும் அறிய மாட்டார்கள்; (ஸகர் பற்றிய செய்தி) மனிதர்களுக்கு நினைவூட்டும் நல்லுபதேசமேயன்றி வேறில்லை.

மேலும் ஏழாவது வானத்தில் இருக்கும் மஸ்ஜித் ம.்.மூர் என்ற இறையில்லத்தைப் பற்றி அவர்கள் கூறும்போது, அங்கு ஒரு நேரத் தொழுகைக்காக 70000 மலக்குமார்கள் செல்வார்கள் என்றார்கள். ஆனால் அதே மலக்குகள் மீண்டும் அங்கு செல்லமாட்டார்கள். அது போல நரகம் பற்றிக் கூறும்போது, நரகம் 70000 சங்கிலிகளால் இழுத்துக் கொண்டு வரப்படும் என்றார்கள். ஒவ்வொரு சங்கிலியையும் 70000 மலக்குமார்கள் இழுத்துக் கொண்டு வருவார்கள்.

மலக்குமார்களின் வேலைகள்: நபிமார்களுக்கு வஹீயைக் கொண்டு வருவது, மனித உயிரைக் கைப்பற்றுவது நன்மை, தீமைகளை பதிவு செய்வது, மண்ணறையில் கேட்வி கேட்பது. ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلَامُ மலக்குமார்களின் தலைவர். மறு பெயர்கள் ரூஹ், மற்றும் ரூஹுல் குத்ஸ். வஹி கொண்டு வருவது இவர்களின் பணி. இஸ்ரா.்.பீல் عَلَيْهِ السَّلَامُ கியாம நாள் அன்று ஸுர் ஊதுவார்கள். மீக்காயில் عَلَيْهِ السَّلَامُ மழை பொழிய வைப்பவது. முன்கர், நகீர் ஆகியோர் عَلَيْهِ السَّلَامُ மண்ணறை கேள்வி கேட்பது, நரகின் மலக்கு மாலிக். மலக்குல் மௌத் இஸ்ராயீல் عَلَيْهِ السَّلَامُ ஆகியோர்.

இறைவேதங்களை நம்பிக்கை கொள்வது

ஈமானின் மூன்றாவது நம்பிக்கை. இதனையும் ஏற்றுக் கொள்ளாவிட்டால் இறை நம்பிக்கை முழுமையாகாது. மறுமையில் சுவனம் அடைய முடியாது.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இறைத்தூதர்களுக்கு வேதங்களை அளித்தான் என நாம் சுருக்காமாக நம்பினாலேயே நம்முடைய ஈமான் முழு பெற்றுவிடும். எனினும் அவற்றைப் பற்றி அதிகமாக அறிவது சிறந்தது.

இறைத்தூதர்களுக்கு வேதம் அளிக்கப்பட்ட காரணம், அவர்கள் இவ்வுலகை விட்டுச் சென்ற பிறகும், மக்கள் நேர்வழியில் நடப்பதற்கு அவற்றை அளித்தான்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:213 كَانَ النَّاسُ اُمَّةً وَّاحِدَةً ۚ فَبَعَثَ اللّٰهُ النَّبِيّٖنَ مُبَشِّرِيْنَ وَمُنْذِرِيْنَ ۚ **وَاَنْزَلَ مَعَهُمُ الْكِتٰبَ بِالْحَـقِّ لِيَحْكُمَ بَيْنَ النَّاسِ فِيْمَا اخْتَلَفُوْا فِيْهِ** ؕ وَمَا اخْتَلَفَ فِيْهِ اِلَّا الَّذِيْنَ اُوْتُوْهُ مِنْۢ بَعْدِ مَا جَآءَتْهُمُ الْبَيِّنٰتُ بَغْيًا ۢ بَيْنَهُمْ‌ۚ فَهَدَى اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا لِمَا اخْتَلَفُوْا فِيْهِ مِنَ الْحَـقِّ بِاِذْنِهٖ ؕ وَاللّٰهُ يَهْدِىْ مَنْ يَّشَآءُ اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ

2:213. (ஆரம்பத்தில்) மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர்; அல்லாஹ் (நல்லோருக்கு) நன்மாராயங் கூறுவோராகவும், (தீயோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வோராகவும் நபிமார்களை அனுப்பி வைத்தான்; **அத்துடன் மனிதர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக அவர்களுடன் உண்மையுடைய வேதத்தையும் இறக்கி வைத்தான்;** எனினும் அவ்வேதம் கொடுக்கப் பெற்றவர்கள், தெளிவான ஆதாரங்கள் வந்த பின்னரும், தம்மிடையே உண்டான பொறாமை காரணமாக மாறுபட்டார்கள்; ஆயினும் அல்லாஹ் அவர்கள் மாறுபட்டுப் புறக்கணித்துவிட்ட உண்மையின் பக்கம் செல்லுமாறு ஈமான் கொண்டோருக்குத் தன் அருளினால் நேர் வழி காட்டினான்; இவ்வாறே, அல்லாஹ் தான் நாடியோரை நேர்வழியில் செலுத்துகின்றான்.

இவ்வாறு நபிமார்களை அனுப்பிய அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வேதங்களையும் அனுப்பினான். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அனுப்பிய வேதங்கள் பல. எனினும் நான்கு வேதங்களின் பெயர்கள் மட்டும் கூறப்பட்டுள்ளன.

தவ்ரா மூஸா عَلَيْهِ السَّلَامُ அவர்களுக்கும், ஜபூர் தாவூத் عَلَيْهِ السَّلَامُ அவர்களுக்கும், இன்ஜீல் ஈஸா عَلَيْهِ السَّلَامُ அவர்களுக்கும், குர்ஆன் நமது நாயகம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. இவற்றின் முந்தைய மூன்று வேதங்களும் நீண்ட நாட்களுக்குப் பாதுகாப்பாக வைக்கப்படவில்லை. அந்தந்த நபிமார்கள் சென்ற பிறகு சில காலங்களே அவை வழங்கப்பட்ட நிலையில் இருந்தன. பின்னர் மக்கள் அதில் தங்களனின் இச்சைப்படி (தஹ்ரீத்) திருத்தினார்கள். சில வசனங்களை நீக்குவது, இல்லாததைப் புகுத்துவது அல்லது வசனங்களை மாற்றி அமைப்பது போன்றவற்றைச் செய்தார்கள்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:79 فَوَيْلٌ لِّلَّذِيْنَ يَكْتُبُوْنَ الْكِتٰبَ بِاَيْدِيْهِمْ ثُمَّ يَقُوْلُوْنَ هٰذَا مِنْ عِنْدِ اللّٰهِ لِيَشْتَرُوْا بِهٖ ثَمَنًا قَلِيْلًا ؕ فَوَيْلٌ لَّهُمْ مِّمَّا كَتَبَتْ اَيْدِيْهِمْ وَوَيْلٌ لَّهُمْ مِّمَّا يَكْسِبُوْنَ

2:79. அற்பக் கிரயத்தைப் பெறுவதற்காகத் தம் கரங்களாலே நூலை எழுதிவைத்துக் கொண்டு பின்னர் அது அல்லாஹ்விடமிருந்து வந்தது என்று கூறுகிறார்களே, அவர்களுக்கு கேடுதான்! **அவர்களுடைய கைகள் இவ்வாறு எழுதியதற்காகவும்** அவர்களுக்குக் கேடுதான்; அதிலிருந்து அவர்கள் ஈட்டும் சம்பாத்தியத்திற்காகவும் அவர்களுக்குக் கேடுதான்!

தங்களின் சுய இலாபத்திற்காக அவர்கள் முக்கியமாக யூதர்கள் அவ்வாறு செய்தார்கள். ஆனால் திருக்குர்ஆன் பாதுகாக்கப்பட்ட ஒரு வேதம். மூஸா عَلَيْهِ السَّلَامُ அவர்கள் ஒரு வேதத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்களுக்குப் பிறகு அவரது மக்கள் அதில் மாற்றம் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு ஈஸா عَلَيْهِ السَّلَامُ அவர்கள் ஒரு வேதத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்களுக்குப் பிறகு அவரது மக்களும் அதில் மாற்றம் கொண்டு வந்தார்கள். ஆனால் அவர்கள் இறுதித் தூதர் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்குப் பிறகு வேறுதூதர் யாரும் இல்லை என்பதால் கியாம நாள்வரை அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட குர்ஆன் இறுதிவரை பாதுகாக்கப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது. அப்படி பாதுகாக்கப்பட்டால்தான், அடிப்படை விஷயமான தவ்ஹீது முதல், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் நாட்டம் என்பது மக்களால் அறிந்து நேர் வழி பெற முடியும். எனவே அல்லாஹ் குர்ஆனைப் பாதுகாக்க தானே பொறுப்பு எடுத்துள்ளதாகக் கூறியுள்ளான். மற்ற வேதங்களுக்கு இவ்வாறு கூறப்படவில்லை.

ஸூரத்துல் ஹிஜ்ர் (மலைப்பாறை)

15:9 اِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَاِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ

15:9. நிச்சயமாக நாம் தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம்; நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கின்றோம்.

குர்ஆன் இன்று வரை பாதுகாப்பாக உள்ளது. இறுதி நாள் வரை பாதுகாப்பாக இருக்கும். யாராலும் அதனைத் திருத்தவோ, மாற்றவோ முடியாது.

மற்ற வேதங்கள் மாற்றப்பட்டுள்ளதால், அதனை நாம் படிக்கவும் கூடாது. நேர்வழி பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அதனைப் பின்பற்றக் கூடாது. குர்ஆனை மட்டும் நேர்வழி பெறவும், அதன்படி நடக்கவும் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் குர்ஆனில் சொல்லப்பட்ட எல்லா நிகழ்வுகள் குறித்து எள்ளளவும் சந்தேகம் கொள்ளாமல் அவைதான் சரியானவை என்ற உறுதியான நம்பிக்கையை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதனைப் போன்று அதில் கூறப்பட்ட சட்டதிட்டங்கள், செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவை (ஹலால், ஹராம், இபாதத், வியாபாரம், திருமணம் ஆகியன போன்ற சட்ட திட்டங்கள்) ஆகியனதாம் நாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய சிறந்த சட்ட திட்டங்கள் என உறுதியாக நம்ப வேண்டும். மனிதர்களுக்காக இறைவனால் ஏற்படுத்தப்பட்ட இந்த சட்டங்கள்தாம் மக்களுக்குக்கான சிறந்த சட்டங்கள் என உறுதியாக எடுத்துக் கொள்ள வேண்டும். இவற்றைவிட மனிதனால் ஏற்படுத்தப்படும் சட்டங்கள் சிறந்ததாக இருக்க முடியாது. மக்களின் எல்லாப் பிரச்சனைக்கும் தீர்வு, மனிதர்களின் நோய்களுக்கும் இது நிவாரணம் அளிக்கக் கூடியது போன்ற விஷயங்களையும் நம்பிக்கைக் கொள்வது அவசியம்.

Aqeedah 18 Belief in messengers

அகீதா 18 - தூதர்களை நம்பிக்கை கொள்வது

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

இறைத் தூதர்களை நம்பிக்கை கொள்ளுதல். (அல் ஈமான் பிர் ரஸுல்) இதுவும் ஈமானின் ஒரு அடிப்படை விஷயம்தான். இது இல்லாமல் மற்ற விஷயங்களை நம்பினாலும் ஈமான் பூரணத்துவம் ஆகாது. திருக்குர்ஆனில் பெயர்கள் கூறப்பட்ட எல்லா நபிமார்களையும் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஒரு சிலரை ஏற்று, ஒரு சிலரை விட்டுவிட்டால் ஈமான் பூர்த்தியாகாது. ஒரு ரஸுலை மட்டும் மறுத்தாலும் அவ்வாறுதான்.

நூஹ் عَلَيْهِ السَّلَامُ அவர்களின் சமூகத்தினர் ரஸுல்மார்களைப் புறக்கணித்தார்கள் என அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கூறுகிறான். அவர் ஒருவர்தான் முதல் ரஸுல் ஆவார். எனினும் பன்மையில் இவ்வாறு கூறக்காரணம், நாம் அனைத்து நபிமார்களையும் ஈமான் கொள்ள வேண்டும் என்பதால்தான்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வால் அனுப்பப்பட்ட தூதர்கள் மக்களுக்கு நேர்வழி காட்ட அனுப்பப்பட்டார்கள் என்று நாம் ஈமான் கொண்டால் போதுமானது என்றாலும், அவர்களைப் பற்றி மேலும் தெரிந்து கொள்வது சிறந்தது. முஸ்னத் அஹ்மதின் அறிவிப்பின்படி 124000 நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள். ரஸுலின் பொறுப்பானது, அவர் முஷ்ரிக்கின் மத்தியில் அனுப்பப்படுவார். அவர் ஏகத்துவத்தை அவர்களுக்கு எடுத்துரைப்பார். அதன் பக்கம் அழைப்பார்கள். ஆனால் நபி இறைவனை ஏற்றவர்களிடம் அனுப்படுபவர். இணை வைப்பவர்களின் பக்கம் அனுப்பப்பட மாட்டார். அவருக்கும் வஹி வரும். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் இறுதித் தூதர் என்பதால், அவர்களுக்குப் பிறகு, அறிஞர்கள் எந்த செயல்களைச் செய்வார்களோ அதுபோல, நபிமார்கள் முஸ்லிம்களின் மத்தியில் அனுப்பப்படுவார்கள். முதல் நபி ஆதம் عَلَيْهِ السَّلَامُ ஆவர்கள். அவர்களுக்குப் பிறந்தவர்களுக்கு அவர்கள் நபியாக அனுப்பப்பட்டார்கள். அவர்கள் ஷிர்க் செய்யாமல் இருந்தவர்கள். அவர்களிடம் சீர்த்திருந்த வேலையைச் செய்தார்கள்.

பின்னர் ஷிர்க் செய்ய மக்கள் ஆரம்பித்ததும், அவர்களுக்கு இடையில் ஏகத்துவத்தைக் கூற ரஸுல் அனுப்பப்படுவார். அவ்வாறு அனுப்பப்பட்ட முதல் ரஸுல்தான் நூஹ் عَلَيْهِ السَّلَامُ ஆவார்கள்.

நபி மற்றும் ரஸுல்மார்கள் மொத்தம் 124000. இவர்களில் மிகச் சிறந்தவர்கள் ஐந்து நபர்கள். நூஹ் عَلَيْهِ السَّلَامُ இப்ராஹீம் عَلَيْهِ السَّلَامُ, மூஸா عَلَيْهِ السَّلَامُ ஈஸா عَلَيْهِ السَّلَامُ முஹம்மது صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

ஐவரிலும் மிகச் சிறந்தவர்கள் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள்

நான் மனிதர்களின் தலைவர் என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள்.

இவர்கள் பாவம் செய்யாமல் பாதுகாக்கப்பட்டவர்கள். சிறு சிறு தவறுகள் செய்ய வாய்ப்புண்டு. மனோ இச்சைகளைப் பின்பற்றமாட்டார்கள். உதாரணமாக யூனுஸ் عَلَيْهِ السَّلَامُ தங்கள் உம்மத்துக்கள் திருந்தவே மாட்டார்கள் என நினைத்து அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் அனுமதியில்லாமல் அவ்வூரை விட்டுச் சென்று விட்டார்கள்.

தூதர்கள் தூய்மையானவர்களாக இருந்தாலும், அவர்களும் மனிதர்களே. அவர்களுக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தன்னுடைய எந்த பண்பையையும் அளிக்கவில்லை.

அவர்களின் உடலை மண் சாப்பிடாது. எப்படி அடக்கம் செய்யப்பட்டார்களோ அவ்விதமாகவே கியாம நாள் வரை இருப்பார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியதாவது, “என் மீது அதிகமாக

ஸலவாத்து சொல்லுங்கள். நீங்கள் சொல்லக் கூடிய ஸலவாத்துகள் என்னிடம் சமர்ப்பிக்கப்பிடும்.'' இவ்வுலகைவிட்டுப் போன பிறகு அது எவ்வாறு முடியும் என நபித்தோழர்கள் வினவ ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கூறினார்கள், ''இறைத்தூதர்களின் உடலை உண்பதற்கு மண்ணுக்கு அல்லாஹ் ஹராமாக்கி இருக்கிறான்.'' எனவே ''இறைத்தூதர்களின் உடலை மண் சாப்பிடாது.

தூதத்துவம் முற்றிலும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வே தேர்ந்தெடுப்பான். யாரும் கடினமாக முயன்று அடைய முடியாது. மருத்துவர், அறிஞர், பொறியாளர் போன்றவற்றை முயன்று அடையலாம். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى யாரைத் தேர்ந்தெடுத்தானோ அவர்கள்தாம் இறைத்தூதர்களாக ஆக முடியும். நாம் முயன்று அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் நேசராக ஆக இயலும். இறைத்தூதராக முயன்று ஆக முடியாது.

இறைத்தூதர்கள் 124000 என அனுப்பப்பட்டாலும், எல்லோருடைய செய்தியும் ஏகத்துவம், மற்றும் எல்லா விஷயங்களையும் சொன்ன செய்திகள் ஒரே செய்திதான். உதாரணமாக, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى, மலக்குகள், இறைத்தூதர்கள், கத்ரு, மறுமை போன்ற அனைத்து அகீதாக்களும் ஒன்றேதான். எனினும் ஷரியத் விஷயத்தில் வேறுபாடுகள் உள்ளன. ஹலால், ஹராம் போன்ற இந்த சட்டதிட்டங்களில் வேறுபாடுகள் உள்ளன.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இந்த நபிமார்களுக்கு அவர்கள் இறைத்தூதர் என உறுதிபடுத்த அற்புதங்களையும், அத்தாட்சிகளையும் வழங்கியுள்ளான்.

இந்த நபிமார்களில் குர்ஆனிலும், ஹதீதுகளிலும் சொல்லப்பட்ட நபிமார்களின் எண்ணிக்கை 25 முதல் 30 வரை இருக்கலாம். ஒரு சிலர் நபியா அல்லது அறிஞரா என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனினும் சிலர் பற்றி தெளிவான கருத்து உள்ளது. அவர்களை நாம் ஈமான் கொள்வது கட்டாயமாகும். மூஸா عَلَيْهِ السَّلَامُ அவர்களை சந்தித்த ஹளிறு عَلَيْهِ السَّلَامُ ரஸூலா, நபியா அல்லது அறிஞரா எனக் கருத்து வேறுபாடு உள்ளது. எனினும் பெரும்பாலோர் கருத்தின்படி அவர் நபிதான்.

நமது அவர்கள் குறித்து பிரத்தியோகமாக நம்பிக்கை கொள்ள வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. அவர்களின் உம்மத்துகள் அவர்களைப் பின்பற்றுவதுதான் கட்டாயக் கடமை. இது குறித்து குர்ஆனிலும், ஹதீதுகளிலும் பல விஷயங்கள் காணப்படுகின்றன. நமது நாயகம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள்தாம் இறுதித்தூதர் ஆவார்கள். அவர்களுக்குப் பிறகு எந்த நபியோ, ரஸூலோ வர மாட்டார்கள்.

ஸூரத்துல் அஹ்ஜாப் (சதிகார அணியினர்)

33:40 مَا كَانَ مُحَمَّدٌ اَبَآ اَحَدٍ مِّنْ رِّجَالِكُمْ وَلٰـكِنْ رَّسُوْلَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ‌ ؕ وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَىْءٍ عَلِيْمًا

33:40. முஹம்மது(ஸல்) உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை; ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை)யாகவும் இருக்கின்றார்; மேலும் அல்லாஹ் எல்லாப் பொருள்கள் பற்றியும் நன்கறிந்தவன்.

இது குறித்து ஏராளமான ஹதீதுகள் உள்ளன. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கூறியுள்ளார்கள், ''என்னோடு தூதத்துவம் முடிந்து விட்டது.'' மேலும் கூறுகிறார்கள், ''தூதத்துவம் என்ற கோட்டையில் ஒரே ஒரு செங்கல் அளவுக்கு மட்டும் காலியாக இருந்தது. அந்த காலி இடத்தை நிரப்பவே நான் வந்தேன்.'' எனவே அவர்கள் வந்த பிறகு தூதத்துவம் முடிந்துவிட்டது, மேலும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள், ''எனக்குப் பிறகு இறைத்தூதர்கள் வரமாட்டார்கள். அவ்வாறு வருவதென்றால் உமர் رَضِيَ اللهُ عَنْهُ வரத் தகுதியானவர்கள். எனினும் எனக்குப் பிறகு எந்தத்

தூதரும் வரப் போவதில்லை.'' இதே கருத்தைக் கொண்ட 30க்கும் அதிகமான ஹதீதுகள் உள்ளன. அவர்களின் வழிகாட்டுதல்தான் வழிகாட்டுதலில் சிறந்தது என்பதை நாம் கட்டாயமாக ஈமான் கொள்ள வேண்டும். அவர்கள் ரஸூலாக எதனைச் சொன்னாலும் அதுவும் வஹீ தான். அவற்றை நாம் எடுத்துக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஸூரத்துந்நஜ்ம் (நட்சத்திரம்)

53:3 وَمَا يَنْطِقُ عَنِ الْهَوٰىؕ
53:4 اِنْ هُوَ اِلَّا وَحْىٌ يُّوْحٰىۙ

53:3. அவர் தம் இச்சைப்படி (எதையும்) பேசுவதில்லை.
53:4. அது அவருக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி வேறில்லை.

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மனிதர்களில் சிறந்தவர், மாமனிதர், ரஸூல்மார்களில் சிறந்தவர்கள் என்றாலும், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் தன்மையை அவர்களுக்கு கற்பிக்கக் கூடாது. அவர்களை மற்ற எல்லோரையையும் விட அதிகமாக நேசிக்கப்பட வேண்டியவர்கள், போற்றப்பட வேண்டியவர்கள, பின்பற்றப்பட வேண்டியவர்கள் என்றாலும், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் பண்பில் எந்த ஒன்றையும் அவர்களுக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது.

Aqeedah 19 Belief in messengers (contd), Importance of following the Sunnah and The consequences of the Bid'ah

அகீதா 19 - தூதர்களை நம்பிக்கை கொள்வதின் தொடர்ச்சி, சுன்னாஹ்வை பின்பற்றுவதின் அவசியம் மற்றும் பித்அத்களின் விபரீதங்கள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

இறுதித் தூதராகிய ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களை நாம் பின்பற்றுவது கட்டாயக் கடமை. அவர்கள் முஹம்மது இப்னு அப்துல்லாஹ் அவர்கள் என்ற நோக்கத்தில் அவர்கள் கூறியவற்றை பின்பற்றுவது கட்டாயம் இல்லை. அவ்வாறு கூறப்பட்டது அனைத்தையும் ஸஹாபாக்கள் அறிவிக்கவில்லை. எனினும் நன்மை பயக்கும் ஒரு சிலவற்றை அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சில விஷயங்கள் அவர்கள் தூதர் என்ற முறையில் சொல்லவில்லை என்பதற்கு சிறிய துப்பு கிடைக்கலாம். உதாரணமாக, ஆயிஷா அவர்கள் ஒரு அடிமைப் பெண்ணை வாங்கி அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கா விற்றுவிடுகிறார்கள். அவரது கணவர் அதுவரை விடுவிக்கப்படவில்லை. இஸ்லாத்தின்படி அவர்கள் இருவரும் ஒன்றாக வாழலாம். அல்லது அப்பெண் தம் கணவரை விட்டுச் செல்லலாம் என்பதற்கான தேர்வினை அவர் விருப்பப்படி எடுத்துக் கொள்ளலாம். அவரின் கணவர் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் வந்து, தம்மை விட்டு அப்பெண்மணி செல்ல வேண்டாம் என சிபாரிசு செய்யுமாறு வேண்டினார். எனவே ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அந்தப் பெண்மணியை அழைத்து தமது கணவரை விட வேண்டாம் என்றார்கள். அதற்கு அப்பெண்மணி, அது அல்லாஹ்வின் கட்டளையா அல்லது அவர்களின் சுய யோசனையா என்ற கேட்டபோது, அது தங்களின் சுய வேண்டுதல்தான் எனக் கூறினார்கள். அப்படியென்றால் தாம் அவருடன் வாழவிரும்பவில்லை எனக் கூறிவிட்டார். இத்தகைய ஹதீதின்படி நாம் ஒரு சில விஷயங்களை நாம் விட்டுவிடுவது தவறில்லை.

ஆனால் மற்ற விஷயங்களை நாம் கட்டாயம் பின்பற்ற வேண்டும். ஒரு தடவை உமர் அவர்கள் தங்களுக்குக் கிடைத்த தவ்ராத்தின் ஒரு சில பகுதிகளை வாசித்துக் கொண்டிருப்பது கண்டு ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கோபமடைந்தார்கள். நேர்வழி காட்டும் குர்ஆன் வந்த பிறகு, தவ்ராத்தைப் படிக்க அவசியமில்லை எனக் கோபப்பட்டார்கள். அதனைக் கண்ணுற்ற நபித்தோழர்கள், அதனை உமர் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களிடம் அதனைக் காணவில்லையா என வினவினார்கள். அதனை அறிந்த பிறகு, உமர் رَضِيَ اللهُ عَنْهُ , ‘ரழீனா பிஹி ரப்பன், வ பி முஹம்மது ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ நபியன் வரஸூலன், வ பி இஸ்லாமி தீனன் எனக் கூறி தங்களின் ஈமானைப் புதுப்பிக்கும் வகையில் கூறினார்கள். அப்போது ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தற்போது மூஸா عَلَيْهِ السَّلَامُ அவர்கள் திரும்பி வந்து விட்டால், தங்களைத்தான் பின்பற்றியே ஆக வேண்டும் எனக் கூறினார்கள். எனவே ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைப் பின்பற்ற வேண்டும் என அறிந்து கொள்ளலாம்.

ஸூரத்துன்னிஸாவு (பெண்கள்)

4:80 مَنْ يُّطِعِ الرَّسُوْلَ فَقَدْ اَطَاعَ اللّٰهَ‌ ۚ وَمَنْ تَوَلّٰى فَمَاۤ اَرْسَلْنٰكَ عَلَيْهِمْ حَفِيْظًا ؕ

4:80. எவர் (அல்லாஹ்வின்) தூதருக்குக் கீழ்படிகிறாரோ, அவர் அல்லாஹ்வுக்குக் கீழ்படிகிறார்; யாராவது ஒருவர் (இவ்வாறு கீழ்படிவதை) நிராகரித்தால் (நீர் வருந்த வேண்டியதில்லை, ஏனெனில்) நாம் உம்மை அவர்களின் மேல் கண்காணிப்பவராக அனுப்பவில்லை.

எனவே அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வைப் பின்பற்றுவதென்றால், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைப் பின்பற்ற வேண்டும்.

ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால், அவர் சாட்சி சொல்ல வேண்டும். அதன் முதல் பகுதி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வைத் தவிர என்பதால், நாம் அவனுக்கு இணை வைக்க முடியாது, அச்சாட்சியின் இரண்டாவது பகுதி ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவனது தூதர் என்பது. அதன் முக்கியத்துவம் அவ்வாறு சாட்சி கூறிய பிறகு, நாம் அவர்களைத்தாம் பின்பற்ற வேண்டும். அவர்களை அன்றியோ, அவர்கள் அல்லாத வேறு யாருடைய வழி முறையையோ பின்பற்றக் கூடாது. அவ்வாறு பின்பற்றி நினைத்தால், நாம் கூறிய சாட்சியை நாம் மறுப்பதாக ஆகிவிடும்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى என்ன சொன்னான், அவனை எவ்வாறு வணங்க வேண்டும் அல்லது கூடாது என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அறிவித்த பிறகு, அவர்கள் கூறாத மற்றவர்கள் கூறியதைப் பின்பற்றினால், நாம் அந்த குறிப்பிட்டவரைப் பின்பற்றியவர்களாக ஆகிவிடும். இது ஈமானைப் பாதிக்கும்.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தங்களின் தூதத்துவப் பொறுப்பை 100 சதவீதம் முழுமையாக்கி விட்டுத்தான் சென்றுள்ளார்கள். தாங்கள் ஒவ்வொரு நன்மையைக் குறித்தும் வழிகாட்டியுள்ளதாகவும், எந்த ஒரு நன்மையையும் விடவில்லை எனவும், எந்தந்த தீமையை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வெறுக்கிறானோ அவை அனைத்தையும் அவர்கள் நம்மிடம் சொல்லாமல் விடவில்லை என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள். எனவே அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை நெருங்கத் தேவையான அனைத்து விஷயங்களும், தவிர்க்க வேண்டிய அனைத்து விஷயங்களும் ஹதீதுகளில் சொல்லப்பட்டுவிட்டன. இதனை முழுமையாக நம்புவதே உண்மையான ஈமான் ஆகும். அவர்கள் தங்களின் பொறுப்பை நிறைவேற்றி விட்டார்கள் என்று நம்பும் மு.்.மின்தான் உண்மையில் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களை ஏற்றுக் கொண்டார்.

இவ்வாறு புரிந்து கொண்ட பிறகு, அவர்கள் காட்டித்தராக விஷயங்கள், அவ்வாறு அவர்கள் செயலால், சொல்லால் மற்றும் அங்கீகாரத்தால் நமக்கு எடுத்துச் சொல்லவில்லையோ அவை எல்லாம் பித்அத் ஆகும். அவை எல்லாம் மார்க்கத்தில் புதிதாக நுழைக்கப்பட்டவை. இந்தப் பித்அத்தைப் பற்றி ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் கருத்தாவது,

இந்த விஷயத்தில் யாரொருவர் புதிதாகச் செய்தாரோ, அவரது காரியம் மறுக்கப்படும். அது அழகாக இருந்தாலும் அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. காரணம் அதில் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் சொல் இல்லாததுதான். நாம் ஒவ்வொரு ஜும்மா குத்பாவிலும் கேட்கும் ஹதீதும் இதனைத்தான் வலியுறுத்துகிறது. அனைத்து புதினமும் வழிகேடுதான். ஒவ்வொரு வழிகேடும் நரகிற்கு இழுத்துச் செல்லும். எனவே பித்அத் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அந்த செயல்கள் மறுக்கப்படும். நன்மையில்லாமல் நரகிற்கு அழைத்துச் செல்லப்படும்.

நபி வழியில் சொல்லப்படாத இந்த பித்அத்துகள், கொலை, கொள்ளை போன்ற பாவத்தை விட மோசமானது. இவ்வாறுக் கூறக் காரணம், இவ்வாறு மனோ இச்சையைப் பின்பற்றி பாவம் செயயும்

முஸ்லிம்கள், தாங்கள் செய்வது பாவம் தான் என அறிந்து செய்வார்கள். எனவே அவர்கள் ஏதேனும் ஒரு கட்டத்தில் அவர்கள் திருந்த வாய்ப்புண்டு. ஆனால் பித்அத் செய்பவர்கள் தாங்கள் நல்லவற்றைத் தான் செய்வதாக நினைப்பதால், அவர்கள் அச்செயல்களை விட்டுத் திருந்தி ஸுன்னாஹ் வழியில் திரும்புவது கடினமாகும்.

இரண்டாவது முக்கிய காரணம், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சொல்லால், செயலால் காட்டித்தராத நோன்பு, தொழுகை போன்ற பித்அத் செயல்களால், தங்களின் செயலைக் கொண்டு, அவர்கள் தங்களின காரியம் நபிவழியாக இல்லாவிட்டாலும், தாங்கள் இவற்றைச் செய்ய வேண்டும் என்றால், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ இவற்றைச் சொல்லாமல் சென்றுவிட்டார் என்பதற்கு ஒப்பாகும். இது கொண்டு மூன்று அவதூறுகள் ஏற்படலாம். இந்த காரியம் குறித்து அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى சொல்லாமல் விட்டதால் அரைகுறையாக மார்க்கம் ஆகிவிட்டது எனவும், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் இதனைச் சொல்லாமல் தங்களின் தூதுத்துவத்தை சரியாகச் செய்யாமல் விட்டு விட்டார்கள் எனவும், மார்க்கம் முழுமையாக்கப்படவில்லை என அல்லாஹ். سُبْحَانَهُ وَتَعَالَى ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மற்றும் மார்க்கம் ஆகிய மூன்று அவதூறுகளை நாம் கூறியவர்களாக ஆகிவிடுவோம்.

ஸூரத்துல் மாயிதா (ஆகாரம்) (உணவு மரவை)

5:3 حُرِّمَتْ عَلَيْكُمُ الْمَيْتَةُ وَالدَّمُ وَلَحْمُ الْخِنْزِيْرِ وَمَآ اُهِلَّ لِغَيْرِ اللّٰهِ بِهٖ وَالْمُنْخَنِقَةُ وَالْمَوْقُوْذَةُ وَالْمُتَرَدِّيَةُ
وَالنَّطِيْحَةُ وَمَآ اَكَلَ السَّبُعُ اِلَّا مَا ذَكَّيْتُمْ وَمَا ذُبِحَ عَلَى النُّصُبِ وَاَنْ تَسْتَقْسِمُوْا بِالْاَزْلَامِ ؕ ذٰلِكُمْ فِسْقٌ ؕ اَلْيَوْمَ
يَىِٕسَ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ دِيْـنِكُمْ فَلَا تَخْشَوْهُمْ وَاخْشَوْنِ ؕ **<u>اَلْيَوْمَ اَكْمَلْتُ لَـكُمْ دِيْنَكُمْ</u> وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِىْ**
وَرَضِيْتُ لَـكُمُ الْاِسْلَامَ دِيْنًا ؕ فَمَنِ اضْطُرَّ فِىْ مَخْمَصَةٍ غَيْرَ مُتَجَانِفٍ لِّاِثْمٍ ۙ فَاِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ

5:3. (தானாகச்) செத்தது, இரத்தம், பன்றியின் இறைச்சி, அல்லாஹ் அல்லாததின் பெயர் அதன் மீது கூறப்பட்ட (அறுக்கப்பட்ட)தும், கழுத்து நெறித்துச் செத்ததும், அடிபட்டுச் செத்ததும், கீழே விழுந்து செத்ததும், கொம்பால் முட்டப் பட்டுச் செத்ததும், (கரடி, புலி போன்ற) விலங்குகள் கடித்(துச் செத்)தவையும் உங்கள் மீது ஹராமாக்கப் பட்டிருக்கின்றன; (அனுமதிக்கப்பட்டவற்றில்) எதை நீங்கள் (உயிரோடு பார்த்து, முறைப்படி) அறுத்தீர்களோ அதைத் தவிர; (அதை உண்ணலாம். அன்றியும் பிற வணக்கம் செய்வதற்காகச்) சின்னங்கள் வைக்கப் பெற்ற இடங்களில் அறுக்கப்பட்டவையும்; அம்புகள் மூலம் நீங்கள் குறி கேட்பதும் (உங்களுக்கு விலக்கப்பட்டுள்ளன) - இவையாவும் (பெரும்) பாவங்களாகும்; இன்றைய தினம் காஃபிர்கள் உங்களுடைய மார்க்கத்தை (அழித்து விடலாம் என்பதை)ப் பற்றிய நம்பிக்கையை இழந்து விட்டார்கள்; எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்சாதீர்கள்; எனக்கே அஞ்சி நடப்பீர்களாக; **இன்றைய தினம் <u>உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன்;</u> மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்; ஆனால் உங்களில் எவரேனும் பாவம் செய்யும் நாட்டமின்றி, பசிக் கொடுமையினால் நிர்ப்பந்திக்கப்பட்டு (மேலே கூறப்பட்ட விலக்கப்பட்டவற்றைப் புசித்து) விட்டால் (அது குற்றமாகாது). ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், கருணை மிக்கோனாகவும் இருக்கின்றான்.**

எனவே நாம் மார்க்கத்தில் எதனையும் நீக்கினாலும், புகுத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
ஒரு தந்தையின் பேச்சைக் கேட்காத மகன், மற்றொருவன் தந்தைக்குக் கட்டுபடுகிறேன் என்று கூறும் மகன். இரண்டாவது மகன் தமது தந்தைக்கு சில விஷயங்கள் தெரியாது, பொறுப்பு தவறிவிட்டார் என்று கூறினால், இருவரில் யார் மோசமானவன் யார்? நிச்சமாக அவதூறு சொல்லி தந்தையைக் குறை கூறுபவன்தான்!

தங்களின் பித்அத்தில் மூலமாக அவர்கள் தாங்கள் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ செய்யாத காரியங்களைச் செய்வதால் தாங்கள் அவர்களை விட உயர்ந்தவர்கள் என்ற நிலையை ஏற்படுத்தி விடக்கூடும். இது மோசமான நிலைக்கு எடுத்துச் சென்று விடும்.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சொல்லாத தொழுகை, நோன்புகள் மற்றும் திக்ருகள் ஆகியவற்றை நன்மையான காரியம் தானே என நாம் அவற்றை நினைக்கக் கூடாது. அவர்கள் வழிகாட்டாத ஒன்றாகும். அவை ஸுன்னாஹ்வுக்கு மாற்றமான ஒன்றாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்னு மஸ்வூத் رَضِي الله عَنْهُ ஒரு கூட்டத்தில் மக்கள் கூட்டமாக இருந்து செய்து கொண்டிருந்ததைக் கண்டார்கள். அந்த மக்களை நோக்கி ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சென்று சில நாட்களே ஆகிவிட்டன, நபித்தோழர்கள் பலர் இன்னும் உயிரோடு இருக்கையில் இவ்வாறு செய்கிறீர்களே எனக் கேட்டார்கள். அக்கூட்டத்தின் தலைவர் தாங்கள் திக்ரு, நன்மையான காரியத்தைத்தான் செய்கிறோம் எனவும் புறம் பேசுதல் போன்ற தீமையான காரியம் எதனையும் செய்யவில்லையே என்றார். பிறரைக் கேலி செய்யவோ, சபிக்கவில்லையே என்றார்கள். அதற்கு அவர் எத்தனையோ நபர்கள் நல்லது செய்யதாலும், அவர்கள் நபிவழியில் செல்லாததால் அதற்கு பயன் கிடைக்காது என்பதோடு, நரகிற்கும் இழுத்துச் சென்று விடும் என்றார்கள்.

சில பித்அத் செய்பவர்கள் மக்களை ஏமாற்றும் நோக்கில், குறிப்பிட்ட காரியத்தை, குறிப்பிட்ட தொழுகையை, குறிப்பிட்ட நோன்புகளை செய்யக் கூடாது என நாம் கூறுவதாக சொல்லலாம். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பிரியாணி போன்ற சுவையான உணவுகளைச் சாப்பிட்டதில்லை, நவீன வாகனங்களை பயன்படுத்தில்லை, நவீன தொடர்பு கருவிகளை பயன்படுத்தியதில்லை என்றாலும், நாம் அவற்றைப் பயன்படுத்துகிறோமே எனவும் இபாதத் விஷயத்தில் மட்டும் பித்அத் கூடாது என்கிறீர்களே எனக் கேட்கலாம். இவ்வாறு கூறி மக்களை ஏமாற்றலாம். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மார்க்க விஷயங்களைக் கற்றுக் கொடுக்க வந்தாரகள் அன்றி, உலக சம்பந்தப்பட்ட வீடு கட்டுவது, மர வேலை போன்ற காரியங்களை கற்றுக் கொடுக்கவில்லை. அவர்கள் தடை செய்ததை நாம் கட்டாயம் விட வேண்டும். உதாரணமாக பன்றி மாமிசம், இறுக்கமாக ஆடைகள் போன்ற தடை செய்யப்பட்ட விஷயங்களை நாம் கட்டாயம் செய்யக் கூடாது. எவற்றைப் பற்றி தடை செய்யப்படவில்லையோ அவற்றை நம் விருப்பப்படி செய்யலாம். இபாதத் விஷயத்தில் நாம் எதனை செய்யச் சொல்லி ஏவப்பட்டோமோ அதனை செய்ய வேண்டும்.

உலக விஷயம் மற்றும் மார்க்க விஷயம் குறித்து நாம் எச்சரிக்கையாக இருப்போம். பார்ப்பதற்கு அழகாக, நன்மையாக தெரிந்தால் போதுமானது என்பது இருந்தால், பித்அத்துக்களை செய்யக் கூடாது என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ஒவ்வொரு ஜும்மாவில் எச்சரிக்கை செய்யக் காரணம் என்ன என எண்ணிப்பாருங்கள். அந்தத் பித்அத்துகள் எவை? எந்த ஒரு காரியத்தையும் இபாதத் என செய்யலாம் என்று எப்படி கூற முடியும். பித்அத் செய்பவர்கள் மறுமையில் கவ்தர் தடாகத்திலிருந்து விரட்டப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளதை நாம் அறிய வேண்டாமா?

எனவே எல்லா பித்அத்திற்கும் நல்லது எனச் சொல்லி ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் எச்சரிக்கையை விட முடியுமா?

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும், அவர்களின் கலி∴பாக்களான அபு பக்ரு رَضِي الله عَنْهُ மற்றும் உமர் رَضِي الله عَنْهُ அவர்கள் செய்த காரியங்களைப் பின்பற்றினால் போதுமானதாக ஆகிவிடாதா? அவை போதுமானதான இல்லை என்று கூறினால், அது ஷிர்க் ஆகிவிடும். அவை போதுமானது என்றால், அவர்கள் செய்யாத புதிய காரியங்களைச் செய்ய அவசியம் என்ன?

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ காட்டித் தந்தவற்றில் ஏராளமான ந.்.பில் தொழுகைகள், நோன்புகள், திக்ருகுள் இருக்கும் நிலையில, அவற்றைப் பின்பற்றவே நாள் போதாது என்ற நிலையில் பித்அத்துகள் தேவைதானா?

அப்படிப்பட்ட பித்அத்துகளிலிருந்து நம்மை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى காப்பானாக! ஆமீன்

Aqeedah 20 Belief in messengers (contd), Examples of Bid'ah and how to find Bid'ah

அகீதா 20 - தூதர்களை நம்பிக்கை கொள்வதின் தொடர்ச்சி, பித்அத்களின் சில உதாரணங்கள் மற்றும் பித்அத்தை கண்டறிவது எவ்வாறு?

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

பித்அத்துகளை எப்படி புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கான உதாரணம் ஒன்றைப் பற்றி இங்கு குறிப்பிடப்படுவது.

பரவலாக காணப்படும், ஹதீதுகளில் ஆதாரமில்லாத ஒன்று,ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பிறந்த நாள் கொண்டாடப்படுவது பற்றிய செய்தி. அதனைக் கொண்டாடுபவர்கள், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பிறந்த நாள் மகிழ்வான விஷயம் அல்லவா? மக்களுக்கு மிகப் பெரிய அருட்கொடை கிடைத்த நாள் அல்லவா? அவர்களின் பிறப்பால் மக்கள் நேர்வழி பெறக் காரணமானவர்களின் பிறந்த நாள் அல்லவா? எனக் கேட்கலாம். அந்த நாள் வரும்போது நாம் மகிழ்வு அடைய வேண்டாமா என்பார்கள்.

பித்அத் ஆன காரியங்கள் தொழுகை, நோன்பு போன்றவைகளாகக் கூட இருக்கலாம். நாம் அவற்றை வெளிப்படையாகப் பார்த்து தவறிவிடக் கூடாது. பித்அத் செய்பவர்களின் காரணங்களைக் கண்டும் நாம் மயங்கி விடக் கூடாது, இப்னு மஸ்வூத் رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் திக்று செய்த கூட்டத்தைப் பற்றி கூறியதை நினைவு கொள்ள வேண்டும். அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் என திக்ருதான் செய்தார்கள் என நாம் எண்ணாமல், செய்யாத ஒன்றைச் செய்கிறாகளே என்று நினைத்தார்கள். வெளித்தோற்றம் அழகாக இருக்கிறது என்று பார்க்காமல், நபிவழிக்கு மாற்றமான ஒன்றாகத்தான் பார்த்தார்கள்.

இப்னு உமர் رَضِيَ اللهُ عَنْهُ ஸுன்னாஹ்வைப் பேணுபவர்களில் சிறந்தவர்கள் ஆவார். அவர் முன்னிலையில், ஒருவர் தும்மிய பிறகு, அவர் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கற்றுக் கொடுத்த அல்ஹம்து லில்லாஹ் என்று சொன்னதுடன், வஸ்ஸலாத்து, வஸ்ஸலாமு அலா ரஸுலுல்லாஹ் என்று சேர்த்தும் கூறினார். அதனை செவியுற்ற இப்னு உமர் رَضِيَ اللهُ عَنْهُ, அவர் ஹம்துவுடன், ஸலவாத்தைத் தானே சேர்த்து சொன்னார் என்று மகிழ்வுடன் அவரது செயலைக் கண்டு கொள்ளாமல் விடவில்லை. மாறாக அவர் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சொல்லித்தராத ஸலவாத்தைக் கூறியதை தடுத்துவிட்டார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அவ்வாறு தங்களின் வாழ்க்கையில் அவ்வாறு செய்யவில்லை, கட்டளையிடவும் இல்லை. எனவே வெளித் தோற்றத்தைக் கொண்டு நாம் முடிவு செய்யக் கூடாது. அதற்காகக் கூறப்படும் காரணங்களையும் நாம் சரிதான் என எண்ணக்கூடாது.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் பிறந்த நாளைத் தானே கொண்டாடுகிறோம். அபு லஹபுடைய பிறந்த நாளையோ, அல்லது பிர்அவுன் பிறந்த நாளையோ நாம் கொண்டாடவில்லையே என்று அவர்கள் கூறலாம். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பிறந்த நாள் மகிழ்வான நாள் என்று வெளித்தோற்றத்தை நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆனால் நாம் கேட்கும் ஒரே கேள்வி, ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அதனைச் செய்தார்களா? அதற்கான ஆதாரம் ஸுன்னாஹ்வில் இருக்கிறதா? நீங்கள் நினைக்கிற விதமாக ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ நினைத்தார்களா?

உங்களுக்குத் தெரிந்த, புரிந்த காரணங்கள் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்குப் புரியவில்லையா?

எனவே மீலாது நபி என்ற கொண்டாட்டத்தை அவர்கள் கொண்டாடினார்களா என்ற கோணத்தில் நாம் அறிய வேண்டும். அவர்கள் ஒரு முறையாவது தங்களின் பிறந்த நாளைக் கொண்டினார்களா என்றால் கொண்டாடவில்லை. அவர்கள் 63 வருடங்கள் வாழ்ந்தார்கள். நபித்துவம் பெற்ற பிறகு 23 வருடங்கள் வாழ்ந்தார்கள். ஒவ்வொரு வருடமும் அந்த நாள் வரும். அவற்றில் ஒரு முறையாவது கொண்டாடினார்களா? அவ்வாறு கொண்டாடி இருந்தால், அவர்களின் பிறந்த நாள் பற்றி கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. மாதம், தேதி என்ன என்பதில் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. பிறந்த மாதம் ரபியுல் அவ்வல் மாதமா, அல்லது முஹர்ரம் மாதமா, அல்லது வேறு ஏதாவது ஒரு மாதமா என்ற கருத்து வேறுபாடுகள் உள்ளன. ரபியுல் அவ்வல் மாதம் என்று எடுத்துக் கொண்டாலும், அம்மாதத்தில் 12ல் அல்லது 8ல் அல்லது வேறு ஒரு நாளா என்ற கருத்தில் ஒற்றுமை இல்லை. ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் பிறந்த நாளைக் கொண்டாடியிருந்தால், இவ்வாறு கருத்து வேறுபாடு கொள்ள அவசியம் இல்லை.

ஈதுல் ஃபித்ர் கொண்டாக்க கூடிய நாள் ஷவ்வால் 1 என்பதில் கருத்து வேறுபாடு ஏதேனும் உண்டா? அவர்கள் வருடாவருடம் கொண்டாடியதால் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை. அதுபோல்தான் இந்த பிறந்த நாள் பற்றியும்.

அபு பக்ரு رَضِي الله عَنْهُ இரண்டு வருடங்கள் ஆட்சி செய்தார்கள். ஒரு நாளும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் பிறந்த நாளை கொண்டாடியதில்லை. அவர்களுக்குப் பிறகு உமர் رَضِي الله عَنْهُ பத்து வருடங்கள் ஆட்சி செய்தார்கள். ஒரு நாளும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் பிறந்த நாளை கொண்டாடியதில்லை. அவர்களுக்குப் பிறகு உத்மான் رَضِي الله عَنْهُ பன்னிடன்டு வருடங்கள் ஆட்சி செய்தார்கள். ஒரு நாளும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் பிறந்த நாளை கொண்டாடியதில்லை. அவர்களுக்குப் பிறகு அலி رَضِي الله عَنْهُ சுமார் நான்கரை வருடங்கள் ஆட்சி செய்தார்கள். ஒரு நாளும் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் பிறந்த நாளை கொண்டாடியதில்லை. பின்வந்த ஸஹாபாக்கள் மற்றும் அறிஞர்கள் யாரும் அவ்வாறு கொண்டாடியதில்லை. சுமார் ஐந்தாறு நூற்றாண்டுகள் கழித்து, எகிப்தில் மார்க்கம் தெரியாத ஒரு அரசன் தொடங்கியதுதான் இந்த கொண்டாட்டம் ஆகும்.

இது நன்மையாக காரியமாக இருந்தால், நமக்கு முன்பே ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும், ஸஹாபாக்களும் இதனைச் செய்திருப்பார்கள். அவர்கள் செய்யாத, ஸுன்னாஹ் இல்லாத இக்காரியத்தை வெளித் தேற்றத்தை வைத்து நாம் செய்வதில் எந்த நன்மையும் இருக்காது. அல்லாஹ் வின் நெருக்கத்தை அடைய இதில் வாய்ப்பிருந்தால், அவர்கள் இதனை முன்னின்று செய்திருப்பார்கள்.

இதற்கு ஏதேனும் ஆதாரம் ஸுன்னாஹ்வில் ஆதாரம் இருந்தால், நாம் அதனைச் செய்ய வேண்டியதில் விருப்பம் கொள்ள வேண்டும். வெளிப்படையான காரியங்களைக் கொண்டு நாம் செய்யக் கூடாது, ஆதாரமான ஸுன்னாஹ்வைக் கொண்டுதான் நாம் செயல்பட வேண்டும். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் பெயரைக் கூறி சொல்லப்படும் எல்லாவற்றையும், அவை உண்மைதானா என்ற ஆராயாமல் நாம் எதனையும் செய்யக் கூடாது. ஸுன்னாஹ் வின் ஆதாரம் இருந்தால், அல்ஹம்து லில்லாஹ் நாம் பின்பற்றலாம். இல்லையென்றால் அதிலிருந்து நாம் விலகிவிடவேண்டும்.

இதற்கு ஒரே வழி, நாம் குர்ஆன், ஹதீது ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும். ஆதாரப் பூர்வமான ஹதீதுகளைத் தேடி, நிரூபிக்கப்பட்ட ஹதீதினபடி நான் செயல்பட வேண்டும். அவர்களின் பெயரை வைத்து சொல்லக் கூடிய எந்த செய்தியையும் நான் எடுத்துக் கொள்ளக் கூடாது. நாம் அது சரிதான என உறுதி படுத்தி, அவற்றை ஸஹாபாக்கள் எப்படி அந்த அமலைச் செய்தார்களோ, அவ்வாறே நாம் செயல்பட வேண்டும்.

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ ஒரு ஹதீதுதினைக் கூறுகிறார்கள்:

திர்மிதி 2676:

حَدَّثَنَا عَلِيُّ بْنُ حُجْرٍ، حَدَّثَنَا بَقِيَّةُ بْنُ الْوَلِيدِ، عَنْ بَحِيرِ بْنِ سَعْدٍ، عَنْ خَالِدِ بْنِ مَعْدَانَ، عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ عَمْرٍو السُّلَمِيِّ، عَنِ الْعِرْبَاضِ بْنِ سَارِيَةَ، قَالَ: **وَعَظَنَا رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَوْمًا بَعْدَ صَلَاةِ الْغَدَاةِ مَوْعِظَةً بَلِيغَةً ذَرَفَتْ مِنْهَا الْعُيُونُ وَوَجِلَتْ مِنْهَا الْقُلُوبُ، فَقَالَ رَجُلٌ: إِنَّ هَذِهِ مَوْعِظَةُ مُوَدِّعٍ، فَمَاذَا تَعْهَدُ إِلَيْنَا يَا رَسُولَ اللَّهِ ؟ قَالَ: أُوصِيكُمْ بِتَقْوَى اللَّهِ، وَالسَّمْعِ، وَالطَّاعَةِ، وَإِنْ عَبْدٌ حَبَشِيٌّ فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ يَرَى اخْتِلَافًا كَثِيرًا، وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُورِ فَإِنَّهَا ضَلَالَةٌ، فَمَنْ أَدْرَكَ ذَلِكَ مِنْكُمْ فَعَلَيْهِ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ،** عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ ، قَالَ أَبُو عِيسَى: هَذَا حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ، وَقَدْ رَوَى ثَوْرُ بْنُ يَزِيدَ، عَنْ خَالِدِ بْنِ مَعْدَانَ، عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ عَمْرٍو السُّلَمِيِّ، عَنْ الْعِرْبَاضِ بْنِ سَارِيَةَ، عَنِ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ نَحْوَ هَذَا.

ஒரு நாள் நபித்தோழர்களின் முன்னால், ரஸூலுல்லாஹ் ﷺ எங்களின் முன்பான பெரியதாக ஒரு உரையை நிகழ்த்தினார்கள். அது அவர்களின் இறுதி உரையாக இருக்குமோ என்ற எண்ணத்தில் தாங்கள் கண்கள் அழுதன, தங்களின் உள்ளங்களும் நடுங்கின என ஸஹாபாக்களே கூறினார்கள். அதில் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதாவது, ‘‘எனக்குப் பின்னால் அதிகமான கருத்து வேறுபாடுகளைக் காண்பீர்கள். அப்போது எனது ஸுன்னத்தையும், நேர்வழி பெற்ற நான்கு கலி∴பாக்களின் ஸுன்னத்தையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். புதிய (பித்அத்) காரியங்கள் குறித்து உங்களுக்கு நான் எச்சரிக்கை செய்கிறேன்.

நேர்வழி பெற்ற நான்கு கலி∴பாக்களின் வழிமுறைகளைப் பற்றிப் பின்பற்ற வேண்டும். அவர்கள் செய்திருக்கிறார்கள் என்று உறுதியாகத் தெரிந்தால் மட்டும் நான் செயல் படுத்த வேண்டும்.

இதில் பித்அத் செய்பவர்கள், குர்ஆன் ஸுன்னாஹ்வுக்கு மாற்றமான சிலவற்றையும் அத்துடன் செய்ய முயல்வார்கள். உதாரணமாக, பித்அத்தான அந்த பிறந்த நாளைக் கொண்டாடும்போது, ஈஸா عَلَيْهِ السَّلَامُ அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும், கிருத்துவர்களின் வழி முறையைப் பின்பற்றியவர்களாக ஆகிவிடுவார்கள். இது ஸுன்னாஹ்வுக்கு மாற்றமான ஒன்றாகும். இவ்வாறு வழிதவறி செல்பவர்களை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى மேலும் வழிதவற விட வாய்ப்புண்டு.

எனவே நாம் குர்ஆன் மற்றும் ஸுன்னாஹ்வின்படி நமது செயல்களை செய்யவும், பித்அத்திலிருந்து விலகி இருக்கவும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நமக்கு அருள் பாலிப்பானாக!

Aqeedah 21 Belief in the Hereafter

அகீதா 21 - மறுமை வாழ்க்கையை நம்பிக்கை கொள்வது

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ஈமானின் ஐந்தாம் அடிப்படை தூணாகிய இறுதி நாள் பற்றி நம்பிக்கை கொள்வது. உலக வாழ்க்கையின் இறுதிநாள் மற்றும், அல்லாஹ் வின் கேள்விக் கணக்கு, தீர்ப்பு போன்றவை நடக்கும் நாளாகும். இந்த உலகம் அழிக்கப்பட்டதிலிருந்து, முடிவே இல்லாத ஒரு வாழ்க்கைதான் மறுமை வாழ்க்கை ஆகும். எல்லோரும் மரணித்து மறுபடியும் எழுப்பப்படுவார்கள். தனிப்பட்ட மனிதரைப் பற்றிச் சொல்வதென்றால், மறுமை என்பது அவரது மரணத்திலிருந்து அந்த முடிவு இல்லாத வாழ்க்கை ஆரம்பித்து விடும். இதனை நம்பிக்கை கொள்ளவது ஈமானின் அடிப்படையாகும்.யார் இதனை நம்பிக்கை கொள்ளவில்லையோ அவர் கா.ஃபிர் ஆவார். ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ மக்காவில் இருக்கும் போது, பதின்மூன்று வருடங்கள் கொள்கையின் பக்கம் மட்டுமே அழைத்து வந்தார்கள். மற்ற சட்டதிட்டங்கள் அனைத்தும், மதினா வாழ்க்கையின்போதுதான், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அவர்களுக்கு இறக்கி வைத்தான். அவர்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى பற்றியும், இறைத்தூதர்கள் பற்றியும், மறுமை வாழ்க்கையைப் பற்றியும்தான் முதல் பதின்மூன்று வருட மக்கத்து வாழ்க்கையில் போதித்தார்கள்.

திருக்குர்ஆனை ஆய்ந்து பார்த்தால், மறுமை வாழ்க்கை பற்றிய வசனங்கள் அடிக்கடி, திரும்பத் திரும்பச் சொல்லிக் காட்டுகிறான். முழு குர்ஆனிலும் ஒரு சில வசனங்கள் விட்டுவிட்டு மறுமையைப் பற்றி குறிப்பிடுகிறான். ஏனெனில் இது அந்த அளவுக்கு முக்கியமான ஒரு நம்பிக்கியாக இருக்கிறது. ஏனெனில் இந்த வாழ்க்கை உண்மையான வாழ்க்கை அல்ல. மறுமைதான் உண்மையான வாழ்க்கை என்பதால், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அதனை நாம் மறந்து விடக் கூடாது என அதனைப் பற்றி திருப்பத் திரும்பக் கூறுகிறான்.

இந்த நம்பிக்கை இல்லாவிட்டால், ஒரு மனிதன் தூரமான வழி கேட்டில் சென்று விடுவான். அவனுக்கு நிரந்த வெற்றி கிடைக்காது.

ஸூரத்துன்னிஸாவு (பெண்கள்)

4:136 يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَالْكِتٰبِ الَّذِىْ نَزَّلَ عَلٰى رَسُوْلِهٖ وَالْكِتٰبِ الَّذِىْۤ اَنْزَلَ مِنْ قَبْلُ‌ؕ وَمَنْ يَّكْفُرْ بِاللّٰهِ وَمَلٰۤٮِٕكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ **وَالْيَوْمِ الْاٰخِرِ فَقَدْ ضَلَّ ضَلٰلًاۢ بَعِيْدًا**

4:136. முஃமின்களே! நீங்கள் அல்லாஹ்வின் மீதும், அவனுடைய தூதர் மீதும், அவன் தூதர் மீது அவன் இறக்கிய (இவ்) வேதத்தின் மீதும், இதற்கு முன்னர் இறக்கிய வேதங்களின் மீதும் ஈமான் கொள்ளுங்கள்; எவர் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், **இறுதி நாளையும் (நம்பாமல்) நிராகரிக்கிறாரோ அவர் வழிகேட்டில் வெகு தூரம் சென்றுவிட்டார்.**

இவ்வாறு மறுமை வாழ்க்கையை மறுக்கிறானனோ, அவன் வழி கேட்டில் மிகத் தூரமாகச் சென்றுவிட்டான். இந்த மறுமை வாழ்க்கை அடிப்டையான விஷயமாகும். முஸ்லிம்களின் எல்லாக் கூட்டங்களும் இதனை மறுக்க வில்லை. நம்பிக்கை கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் கா.ஃபிர்கள் இதனைக் குறித்து கேள்வி எழுப்பினர்.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தங்கள் காலத்திய கா.ஃபிர்களிடம் மறுமை பற்றிய செய்தியினை கூறியபோது, நாம் மரணித்தப் பிறகு, மண்ணோடு மண்ணாக அழுகிய பிறகு, மறுபடியும் எழுப்பப்படுவது சாத்தியமே இல்லை என்றார்கள். இந்த உலக வாழ்க்கைதான் ஒரே வாழ்க்கை என்

அவர்கள் நினைத்து, இவ்வாழ்க்கையை சுகமாகக் கழிப்பதற்கான வழிமுறைகளைத் தேடுகிறார்கள். ஆடம்பரமாக, தங்களின் இச்சைப்படி வாழ்ந்து செல்ல வேண்டும் எனவும், அடுத்த மறுமை வாழ்க்கை என்பது சாத்தியப்படாத ஒன்று என்வும் அதனை மறுத்தார்கள். ஆனால் திருக்குர்ஆனில் பல அல்லாஹ் سُبْحَانَهٗ وَتَعَالَى ஆதாரங்களைக் குறிப்பிட்டுள்ளான். ஒரு சில ஆதாரங்கள் இதோ:

அல்லாஹ் இந்த அகிலத்தைப் படைத்த, இந்த உலகைப் படைத்துப் பின்னர் மனிதர்களைப் படைத்து, அவனுக்குத் தேவையானவற்றைப் படைத்து, பின்னர் அவன் எப்படி வாழ வேண்டும் என்பதனை கடமையாக்கிய பின்பு, இதற்குப் பிறகு வேறு வாழ்க்கை ஏதும் இல்லை என்று நாம் நினைத்தால், அனைத்தையும் படைத்தற்கு எவ்வித பொருளும் இல்லாமல் போய்விடும்.

பிறகு மறுமை வாழ்க்கை இல்லை, இவ்வுலக வாழ்க்கையோடு முடிந்துவிடும் என்று சொன்னால், இந்த அகிலத்தைப் படைத்ததில் எவ்வித நோக்கமும் இல்லாமல் போய்விடும். எனவே நோக்கம் இல்லாமல் எல்லாவற்றறையும் அல்லாஹ் سُبْحَانَهٗ وَتَعَالَى படைத்துவிட்டானோ என்ற கேள்வி எழும்.

ஸூரத்துல் முஃமினூன் (விசுவாசிகள்)

23:115 اَفَحَسِبْتُمْ اَنَّمَا خَلَقْنٰكُمْ عَبَثًا وَّاَنَّكُمْ اِلَيْنَا لَا تُرْجَعُوْنَ

23:115. “நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?” (என்றும் இறைவன் கேட்பான்.)

அல்லாஹ் سُبْحَانَهٗ وَتَعَالَى நம்மை வீணாகப் படைக்கவில்லை. எல்லோரும் இறந்துவிடுவார்கள், பின்னர் நன்மை, தீமை செய்தவாறு கூலி இல்லை என்றால், எல்லாம் வீண் என்றாகிவிடும். ஆனால் மறுமை வாழ்க்கைக்காகவே படைத்தான். அங்குதான் நமது செயல்களுக்குத் தக்கவாறு கூலி கொடுக்கப்படும்.

கா∴பிர்கள் நினைப்பது போது மறுமை வாழ்க்கை அல்லாஹ் سُبْحَانَهٗ وَتَعَالَى க்கு சாத்தியப்படாத ஒன்றா என்பதற்கு, அல்லாஹ் سُبْحَانَهٗ وَتَعَالَى உதாரணம் கூறுகிறான்.

ஸூரத்து மர்யம்

19:67 اَوَلَا يَذْكُرُ الْاِنْسَانُ اَنَّا خَلَقْنٰهُ مِنْ قَبْلُ وَلَمْ يَكُ شَيْـًٔـــا

19:67. யாதொரு பொருளுமாக இல்லாதிருந்த அவனை நிச்சயமாக நாம் முன்னர் படைத்தோம் என்பதை மனிதன் நினைத்துப் பார்க்க வேண்டாமா?

ஒன்றும் இல்லாத நிலையில், மனிதனைப் படைத்த அல்லாஹ் سُبْحَانَهٗ وَتَعَالَى வுக்கு, மீண்டும் படைப்பது கடினமா என்று நம்மை சிந்திக்குமாறு அவன் கூறுகிறான். அறிவியல் காரணமாக நாம் உடலிலுள்ள உறுப்புகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதனை நாம் அறிய வாய்ப்புள்ளது. அந்த அளவிற்கு சக்தி பெற்ற அல்லாஹ் سُبْحَانَهٗ وَتَعَالَى வுக்கு, மீண்டும் மனிதனை உயிர்கொடுத்து எழுப்புவான் என்பது எவ்வாறு சாத்தியப்படாத ஒன்றாக இருக்கும்?

மற்றும் ஒரு ஆதாரம்:

ஸூரத்துல் அஹ்காஃப் (மணல் திட்டுகள்)

46:33 اَوَلَمْ يَرَوْا اَنَّ اللّٰهَ الَّذِىْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَلَمْ يَعْىَ بِخَلْقِهِنَّ بِقٰدِرٍ عَلٰٓى اَنْ يُّحْیِۦَ الْمَوْتٰى‌ؕ بَلٰٓى اِنَّهٗ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

46:33. வானங்களையும், பூமியையும் படைத்து அவற்றின் படைப்பால் எவ்வித சோர்வுமின்றி இருக்கின்றானே அல்லாஹ் அவன் நிச்சயமாக மரித்தோரை உயிர்ப்பிக்கும் ஆற்றலுடையவன்; ஆம்! நிச்சயமாக அவன் எல்லாப் பொருள்கள் மீதும் பேராற்றலுடையவன் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா?

வானங்களையும், பூமியையும் படைப்பது பெரிய விஷயம். இந்த அகிலத்தின் முன்னால் மனிதன ஒரு சிறிய படைப்பு. எனவே அவனைப் படைக்கவும், திருப்பி உயிர்ப்பிக்கவும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ஆற்றல் உள்ளவன்தான்.

ஸூரத்து யாஸீன்

36:77 اَوَلَمْ يَرَ الْاِنْسَانُ اَنَّا خَلَقْنٰهُ مِنْ نُّطْفَةٍ فَاِذَا هُوَ خَصِيْمٌ مُّبِيْنٌ
36:78 وَضَرَبَ لَنَا مَثَلًا وَّ نَسِيَ خَلْقَهٗ ؕ قَالَ مَنْ يُّحْىِ الْعِظَامَ وَهِىَ رَمِيْمٌ
36:79 قُلْ يُحْيِيْهَا الَّذِىْۤ اَنْشَاَهَاۤ اَوَّلَ مَرَّةٍ ؕ وَهُوَ بِكُلِّ خَلْقٍ عَلِيْمُ ۙ
36:80 اۨلَّذِىْ جَعَلَ لَـكُمْ مِّنَ الشَّجَرِ الْاَخْضَرِ نَارًا فَاِذَاۤ اَنْـتُمْ مِّنْهُ تُوْقِدُوْنَ

36:77. மனிதனை ஒரு துளி இந்திரியத்திலிருந்து நாமே நிச்சயமாகப் படைத்தோம் என்பதை அவன் பார்க்கவில்லையா? அவ்வாறிருந்தும், அவன் (நமக்கு) வெளிப்படையான தர்க்க வாதியாகி விடுகிறான்.

36:78. மேலும், அவன் தன் படைப்பை (தான் படைக்கப்பட்டதெப்படி என்பதை) மறந்துவிட்டு, அவன் நமக்காக ஓர் உதாரணத்தையும் கூறுகின்றான்; "எலும்புகள் அவை மக்கிப் போய் விட்ட பின் அவற்றை உயிர்ப்பிப்பது யார்?" என்று.

36:79. "முதல் முதலில் அவற்றை உண்டு பண்ணியவனே (பின்னும்) அவற்றுக்கு உயிர் கொடுப்பான். அவன் எல்லாவகைப் படைப்புகளையும் நன்கறிந்தவன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

36:80. "பசுமையான மரத்திலிருந்து உங்களுக்காக நெருப்பை உண்டாக்குபவனும் அவனே; அதிலிருந்தே நீங்கள் (தீ) மூட்டுகிறீர்கள்.

முதல் முறையில் மனிதனை அவன் இல்லாமல் இருந்த நிலையில் படைத்த அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு, மீண்டும் உயிர்கொடுக்க முடியாதா என வினவுகிறான்.

மக்கிய பூமியை, மழை பொழிவித்து பயிரை உருவாக்கும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அதனை உதாரணமாக நமக்குக் கூறி, நம்மையும் அவ்வாறு உயிர்ப்பிப்பான் என்றும் கூறுகிறான்.

மேலும் இறந்தவர்களை இவ்வுலகிலும் உயிர்ப்பித்துக் காட்டி மறுமை நிகழ்வை நிரூபித்துள்ளான். ஈஸா அவர்களின் மூலமாக மரித்தவர்களையும், இப்ராஹீம் அவர்களின் மூலமாக இறந்த பறவைகளையும், உஜைர் அவர்களுக்கு இறந்த கழுதையும் உயிர்ப்பித்துக் காட்டியுள்ளான்.

எனவே மறுமையை நம்பி, அந்த வாழ்க்கைக்காகவே நாம் இங்கு வாழவேண்டும். நாம் இறந்தவுடன் நம் உயிரை மலக்குமார்கள் வானுக்கு எடுத்துச் செல்வார்கள். நல்லவர்களின் ரூஹ் இல்லிய்யூன் என்ற இடத்திற்கும், தீயவர்களின் ரூஹ் ஸிஜ்ஜீன் என்ற இடத்திற்கும் எடுத்துச் செல்லப்படும். மேலும் மண்ணறையில் கேள்விக்கணக்கு, மண்ணறை ஃபித்னாக்கள் (சோதனைகள்) இருக்கின்றன. கேள்வியில் வெற்றி பெற்றால், சுகமான மண்ணறை வாழ்க்கையும், தோல்வி அடைந்தால், மண்ணறை வேதனையும் இருக்கும்.

பிறகு உலக முடியும் நாளில் ஸூர் ஊதப்படும். எல்லோரும் மீண்டும் எழுப்பப்படுவார்கள். மறுபடியம் எழுப்பப்பட்ட நாம் மஹ்ஷர் மைதானத்தில் ஒன்று திரட்டப்படுவோம். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் ஷஃபாஅத்தும், கவ்தர் நீரும் நமக்குக் கிடைக்கும். பிறகு கேள்விக் கணக்குடன், அமல்கள் எடை பார்க்கப்படும். நன்மை கனத்தால் சுவனமும், தீமை கனத்தால் நரகமும் தீர்ப்பளிக்கப்படும். பின்னர் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மற்ற நபிமார்கள், மற்றும் நல்லடியார்களின் சிபாரிசு கிடைக்கும். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى யாருக்கு அனுமதித்தானே அவர்களின் சிபாரிசினால் சிலருக்கு வேதனை குறைக்கப்படும் அல்லது சுவனம் பரிசளிக்கப்படும். இறுதியில் மக்கள் சுவனம் மற்றும் நரகை நாடிச் செல்வார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى

மு.ஃ.மின்களை ஒரு கட்டத்திற்குப் பிறகு மன்னித்து, சுவனத்தைக் கொடுத்துவிடுவான். பின்னர் அல்லாஹ் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى மரணத்தை ஒரு ஆட்டின் வடிவில் கொண்டு வந்து அறுத்து விடுவான். மரணம் என்ற நிகழ்வு பின்னர் ஏற்படாது. மக்கள் நிரந்தரமாக சுவனத்திலும், நரகிலும் இருப்பார்கள். சுவனவாசிகள் தங்களுக்கு பிடித்த வாழ்க்கையிலும், நரக வாசிகள் நிரந்த வேதனையிலும் இருப்பார்கள்.

எனவே மக்கள் தங்களுக்குப் பிடித்த நிரந்த வாழ்க்கைக்கு, இவ்வுலக வாழ்க்கையில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்குப் பிடித்தவாறு வாழ்ந்து, அதனைப் பெறவேண்டும்.

ஸூரத்துல் அஃலா (மிக்க மேலானவன்)

87:17 وَالْاٰخِرَةُ خَيْرٌ وَّ اَبْقٰىؕ

87:17. ஆனால் மறுமை (வாழ்க்கை)யோ சிறந்ததாகும்; என்றும் நிலைத்திருப்பதும் ஆகும்.

சிறந்த, நிலையான வாழ்க்கையை நாம் அனைவரும் பெறுவதற்கான வழியில், மறுமையின் வாழ்க்கையை எவ்வாறு நம்பிக்கை கொண்டு, நாம் வாழ்வில் அதனைப் பிரதிபலிக்க வேண்டுமோ, அவ்வாறு வாழ்ந்து, அந்த நல்வாழ்க்கையை நாம் நிலைநிறுத்தி, மறுமையில் வெற்றி பெறும் பாக்கியத்தை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நமக்கு அளிப்பானாக! ஆமீன்.

Aqeedah 22 Belief in Destiny

அகீதா 22 - விதியை நம்பிக்கை கொள்வது

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ஈமானின் ஆறாவது அடிப்படை விதியை நம்புவது ஆகும். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கூறுகிறான், "ஒவ்வொரு விஷயத்தையும் நான் விதியின் அடிப்படையில்தான் படைத்துள்ளோம்."

விதி என்பதற்கு இரண்டு சொற்கள் பயன் படுத்தப்பட்டுள்ளது. ஒன்றாவது கத்ர். (قدر)

ஸூரத்துல் கத்ரி (கண்ணியமிக்க இரவு)

97:1 اِنَّاۤ اَنْزَلْنٰهُ فِىْ لَيْلَةِ الْقَدْرِ ۖ ۚ

97:1. நிச்சயமாக நாம் அதை (குர்ஆனை) கண்ணியமிக்க (லைலத்துல் **கத்ர்**) என்ற இரவில் இறக்கினோம்.

ஒரு கருத்தின்படி விதி என்பது பொருள்படும். விதி இறக்கப்படும் அந்த இரவு.. என்று பொருள். மற்றுமொரு சொல் கழா (قَضَا)என்பது. நாம் குனூத்தில் ஓதுவதில் இந்த சொல் வருகிறது.

وَقِنِي شَرَّ مَا قَضَيتَ

'நீ (விதித்த) விதியில் உள்ள தீமையிலிருந்து என்னைக் காப்பாற்றுவாயக!"

விதியில் நன்மையோ அல்லது தீமையோ எழுதப்பட்டுள்ளது. நன்மை நடக்கப் போகிறது என்றால் அது எழுதப்பட்டுவிட்டது. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى பாதுகாப்பானாக! ஒரு தீமை நடக்கப் போகிறது என்றால் அதுவும் எழுதப்பட்டுவிட்டது. ஒரு விஷயத்தை நன்றாகப் புரிய வேண்டும். குர்ஆனிலும், ஹதீதிலும் எவ்வாறு விதி பற்றி சொல்லப்பட்டிருக்கிறதோ, அவற்றை மட்டும் முழுமையாக நாம் நம்பிக்கை கொள்ள வேண்டுமே அன்றி, அவற்றில் சொல்லப்படாத எந்த ஒன்றைப் பற்றியும் நாம் சிந்தித்துப் பார்ப்பது அறவே கூடாது.

வேகமாக கரை புரண்டு சென்று கொண்டிருக்கும் ஆற்றின் ஒரு கரையில் நாம் இருக்கிறோம். மற்றொரு கரையில் நம் வீடு உள்ளது. நடுவில் ஒரு பாலம் உள்ளது. நாம் ஆற்றினைக் கடந்து சென்றால்தான் வீட்டை அடைய முடியும். நாம் கட்டாய நிலையில் உள்ளது. அதற்காக நாம் ஆற்றைக் குறிந்து, அதில் ஆழம் எவ்வளவு உள்ளது, எந்த வேகத்தில் செல்கிறது என ஆராய முற்படும் நோக்கில் ஆற்றினுள் இறங்குவோமானால், நாம் ஆற்றில் அடித்து செல்லப்படக் கூடும். நாம் வீட்டை அடைய முடியாது.

அது போல, விதியை ஈமான் கொண்டு அதனைக் கடந்து சென்றால்தான் சுவனத்தை அடையலாம். அவ்வாறு இல்லாமல், நாம் விதியைக் குறித்து ஆராய்ந்து, ஏன், எப்படி எனக் கேட்க முற்பட்டால், மிக ஆழத்திற்குச் சென்று வீழக் கூடும். திரும்பி வருவது கடினமாகும். அவ்வாறு ஆராய முற்பட்டு, பின்னர் விதியை மறுக்கும் சூழ்நிலையில் வழிகேட்டில் சென்ற நிகழ்வுகள் ஏராளம் உள்ளன. குர்ஆனிலும், ஹதீதிலும் தெளிவாகக் குறிப்பிட்டவற்றை அவ்வாறே ஈமான் கொள்வதுதான் சிறந்தது. அது அல்லாமல் தேவையில்லாத சிந்தனைகளிலிருந்து நாம் விலகிக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இவ்வுலகில் என்ன நடக்கவிருக்கிறது, ஒருவருக்கு அது நன்மையா அல்லது தீமையா என்பது போன்ற எல்லாவற்றையும் அது நடைபெறும் முன்மே அறிந்தவன் ஆவான். அவனது ஞானம் விசாலமானது. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்குத் தெரியாது எதுவும் இல்லை. நிகழ்வு ஏற்படும் முன்பே, அவன் எல்லாவற்றையும் அறிந்தவன். என்ன நடக்கப் போகிறது, அல்லது

என்ன நடக்காது, எவ்வாறு நடக்கும் என்பது எல்லாம் அவனுக்குத் தெரியும். உதாரணமான மரத்தின் இலை விழுவது பற்றியும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அறிவான்.

ஸூரத்துல் அன்ஆம் (ஆடு, மாடு, ஒட்டகம்)

6:59 وَعِنْدَهٗ مَفَاتِحُ الْغَيْبِ لَا يَعْلَمُهَاۤ اِلَّا هُوَ‌ؕ وَيَعْلَمُ مَا فِى الْبَرِّ وَالْبَحْرِ‌ؕ وَمَا تَسْقُطُ مِنْ وَّرَقَةٍ اِلَّا يَعْلَمُهَا وَلَا حَبَّةٍ فِىْ ظُلُمٰتِ الْاَرْضِ وَلَا رَطْبٍ وَّلَا يَابِسٍ اِلَّا فِىْ كِتٰبٍ مُّبِيْنٍ

6:59. அவனிடமே மறைவானவற்றின் திறவு கோல்கள் இருக்கின்றன. அவற்றை அவனன்றி எவரும் அறியார். மேலும் கரையிலும் கடலிலும் உள்ளவற்றையெல்லாம் அவன் அறிவான்; அவன் அறியாமல் ஓர் இலையும் உதிர்வதில்லை. பூமியின் (ஆழத்தில் அடர்ந்த) இருள்களில் கிடக்கும் சிறு வித்தும், பசுமையானதும், உலர்ந்ததும் (எந்தப் பொருளும்) தெளிவான (அவனுடைய) பதிவேட்டில் இல்லாமலில்லை.

அவற்றை அவன் எழுதி வைத்துவிட்டான். அதுதான் களா கத்ர் என்பது. அந்த விதியை எப்போது எழுதி வைத்தான். ஒரு ஹதீஸ்படி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறுகிறார்கள்,

“அல்லாஹ் பேனாவைப் படைத்ததும், அதனை எழுதுமாறு கட்டளை இட்டான். அதற்குப் இறைவா எதனை எழுதுவது என பேனா கேட்டது. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அனைத்தையும் எழுதிவிடு எனக் கட்டளையிட்டான்.”

அவ்வாறு நடக்க இருப்பது அனைத்தும் எழுதப்பட்டு விட்டது. அதனை உம்முல் கிதாப் என அல்லாஹ் கூறுகிறான். அந்த ஏடுகளுக்கு மற்றொரு பெயர், அல் லவ்ஹுல் மஹ்பூப் (பாதுகாக்கப்பட்ட ஏடுகள்) என்பதாகும். அது எப்போது எழுதப்பட்டது என்பதறை அதே அறிவிப்பில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறுகிறார்கள், “ஏழு வானங்களும், பூமியையும் படைக்கப்பட்ட 50000 வருடங்களுக்கு முன்பு அல்லாஹ் எழுதுகோலைப் படைத்து எழுதிவிட்டான்.” எழுதுகோல்தான் முதலில் படைத்தானா என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் அதற்கு முன்பாக அர்ஷைப் படைத்துவிட்டான் என்பார்கள்.

விதிகளின் வகைகள். இவற்றைப் புரிந்து கொள்வது, அதில் தெரிவதாக இருக்கக் கூடிய வெளிப்படையான முரண்பாடுகளை களையும். விதியின் முதல் வகை அல் லவ்ஹுல் மஹ்பூல் (உம்முல் கிதாப்) என்பதாகும். இதில் அனைத்து விஷயங்களையும் எழுதி வைத்துள்ளான். எதனையும் விட்டு வைக்க வில்லை என அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கூறுகிறான். இரண்டாவது, தக்தீருல் உம்ரி – வயது குறித்த கத்ர் - குர்ஆனிலோ அல்லது ஹதீதிலோ இந்தப் பெயர் குறிப்பிடப்படவில்லை. அறிஞர்கள் கொடுத்த பெயர் இது. தனிப்பட்ட மனிதனின் ஆயுட்காலத்தைக் குறிக்கும். எல்லாம் எழுதப்பட்ட லவ்ஹுல் மஹ்பூலின் சிறு பகுதி. உதாரணமாக, குர்ஆனின் முழுப் பகுதி இருப்பது போல, ஒவ்வொரு ஜுஸ்வும் தனியாக அச்சிடப்பட்டு நாம் வைத்திருப்பதைப் போல, அல்லது அத்தியாயங்கள் யாஸீன், அர்ரஹ்மான் போல தனியாக வைத்திருப்தைப் போல. அது போல, தனிப்பட்ட மனிதரின் ஆயட்காலம் பற்றிய தனிக்குறிப்பாகும். இதற்கு ஆதாரம். இப்னு மஸ்வூத் அறிவிப்பதாவது, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறுவதாவது, “உங்களின் ஒரு தம் தாயில் வயிற்றில் நாற்பது நாட்கள் இந்திரியத்துளியாக இருப்பார். பின்னர் நாற்பது நாட்கள் இரத்தக் கட்டியாக இருப்பார். பின்னர் நாற்பது நாட்கள் சதைக் கட்டியாக இருப்பார். இவ்வாறு 120 நாட்கள் முடிவடைந்த பிறகு, அல்லாஹ் அந்த சதை துண்டாக இருப்பதில், ஒரு மலக்கை அனுப்பி வைத்து ரூஹை ஊத வைத்து, அந்தக் குழந்தை குறித்த நான்கு விஷயங்கள் பற்றிய விதியை எழுத வைக்கிறான். அவை அந்தக் குழந்தையின் ஆயட்காலம், வாழ்வாதாரம் (ரிஸ்க்), அந்தக் குழந்தை செய்யவிருக்கும் நன்மை தீமைகள், அதன் செயல்பாடுகள் ஆகியன். இவ்வாறு முன்னரே எழுதப்படும்

அதுதான் அக்குழந்தையின் தக்தீருல் உம்ரி ஆகும். இது முன்னரே லவ்ஹுல் மஹ்பூலில் எழுதப்பட்டுள்ளது. அதன் இச்சிறுபகுதி இதில் எழுதப்படும்.

மூன்றாவது தக்தீருல் ஸனத்தி. ஒரு வருடத்தின் நிகழ்வு பற்றிய விதி. இது குறித்துதான் அத்தியாயம் அல் கதரில் கூறப்பட்டுள்ளது.

ஸூரத்துல் கத்ரி (கண்ணியமிக்க இரவு)

97:1 إِنَّآ أَنزَلْنَٰهُ فِى لَيْلَةِ ٱلْقَدْرِ
97:2 وَمَآ أَدْرَىٰكَ مَا لَيْلَةُ ٱلْقَدْرِ
97:3 لَيْلَةُ ٱلْقَدْرِ خَيْرٌ مِّنْ أَلْفِ شَهْرٍ
97:4 تَنَزَّلُ ٱلْمَلَٰٓئِكَةُ وَٱلرُّوحُ فِيهَا بِإِذْنِ رَبِّهِم مِّن كُلِّ أَمْرٍ
97:5 سَلَٰمٌ هِىَ حَتَّىٰ مَطْلَعِ ٱلْفَجْرِ

97:1. நிச்சயமாக நாம் அதை (குர்ஆனை) கண்ணியமிக்க (லைலத்துல் கத்ர்) என்ற இரவில் இறக்கினோம்.
97:2. மேலும் கண்ணியமிக்க இரவு என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது?
97:3. கண்ணியமிக்க (அந்த) இரவு ஆயிரம் மாதங்களை விட மிக்க மேலானதாகும்.
97:4. அதில் மலக்குகளும், ஆன்மாவும் (ஜிப்ரீலும்) தம் இறைவனின் கட்டளையின் படி (நடைபெற வேண்டிய) சகல காரியங்களுடன் இறங்குகின்றனர்.
97:5. சாந்தி (நிலவியிருக்கும்); அது விடியற்காலை உதயமாகும் வரை இருக்கும்.

பொறுப்புதாரிகளாக உள்ள மலக்குமார்களிடம், அந்த வருடத்திய கத்ரைக் கொண்டு அல்லாஹ் அனுப்புகிறான். அந்த வருடத்திலிருந்து, அடுத்த வருடம் வரை எங்கு, எவ்வளவு மழை பொழிய வேண்டும், யாரெல்லாம் மரணிக்கப் போகிறார்கள் என்பன போன்றவற்றை அல்லாஹ் குறிப்பிடுகிறான். இதுவும் முன்னரே லவ்ஹுல் மஹ்பூலில் எழுதப்பட்டுள்ளது. அதன் இச்சிறுபகுதி இந்தத் தக்தீருல் ஸனத்தியில் எழுதப்படும்.

இம்மூன்று வகைகளையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

1. கத்ர் (விதி) முழுவதும் எழுதப்பட்ட லவ்ஹுல் மஹ்பூல்
2. குறிப்பிட்ட ஒருவர் விதி பற்றி எழுதப்பட்ட தக்தீருல் உம்ரி
3. ஒரு வருடத்திற்கு எழுதப்பட்ட விதியான தக்தீருல் ஸனத்தி.

இவற்றை நாம் புரிந்து கொண்டால், நான் சிலவற்றைப் புரிந்து கொள்ளலாம். அல்லாஹ் குர்ஆனில் 'லா யுபத்தலு கவ்லு லதைய்ய' (என்னிடம் பேச்சு (விதித்தது) மாற்றப்படமாட்டாது) எனக் கூறுகிறான். அல்லாஹ் எதனை எழுதினானோ, அதில் மாற்றம் இருக்காது எனக் கூறுகிறான். ஆனால் ஒரு ஹதீதின் கருத்து: துஆவைத் தவிர வேது எதுவும் விதியை மாற்றாது. அதாவது துஆ செய்தால் விதியில் கூட மாற்றம் ஏற்படும். இதில் முரண்பாடு இருப்பதாக தோன்றலாம். அவ்வாறு இல்லை. லவ்ஹுல் மஹ்பூலில் எழுதப்பட்டுள்ளதில் எவ்வித மாற்றமும் நிகழாது. அதே சமயத்தில் ஹதீதில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றம் தக்தீருல் உம்ரியில் வரலாம். அவ்விதமாக வரக்கூடிய மாற்றம் பற்றியும் லவ்ஹுல் மஹ்பூலில் எழுதப்பட்டிருக்கும்.

முன்னர் குறிப்பிடப்பட்ட ஹதீதின்படி எழுதுகோலைக் கொண்டு நடை பெறப்போகும் நிகழ்வுகளை வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றை படைப்பதற்கு 50000 வருடங்கள் முன்பே எழுதிவிட்டான். அதே நேரத்தில் மூஸா عَلَيْهِ السَّلَامُ அவர்கள் ஆதம் عَلَيْهِ السَّلَامُ அவர்களிடம் நடத்திய விவாதம் குறித்து நாம் அறிந்துள்ளோம். ஆதம் அவர்களின் தவறு காரணமாகத்தான், நாம் சுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாகக் மூஸா عَلَيْهِ السَّلَامُ கூறினார்கள். அதற்குப் பதிலாக, தாங்கள் படைக்கப்பட்டதற்கு 40 வருடங்களுக்கு முன்பாகவே எழுதப்பட்ட விதியைக் குறித்தா தங்களிடம்

கேட்க விளைகிறீர்கள் எனக் கூறி, மூஸா عَلَيْهِ السَّلَامُ அவர்களைத் தர்க்கத்தில் ஆதம் عَلَيْهِ السَّلَامُ வெற்றி பெற்றுவிட்டதாக ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறுகிறார்கள்.

வானங்கள் மற்றும பூமி படைக்கப்பட்ட 50000 வருடங்கள் முன்பாகவே எழுதப்பட்டது என்று முன்னர் கூறப்பட, ஆதம் عَلَيْهِ السَّلَامُ அவர்களோ, தாங்கள் படைக்கப்பட்டு 40 வருடங்கள் முன்பாக எழுதப்பட்டதாகக் கூறியுள்ளார்கள். வானங்கள் மற்றும பூமி படைக்கப்பட்ட பிறகுதான் ஆதம் படைக்கப்பட்டார். எனவே வருடக்கணக்கில் முரண்பாடு உள்ளதாகத் தோன்றலாம். இதற்கும முந்தைய பதிலே பொருந்தும். முழுமையான விதி லவ்ஹுல் மஹ்பூலில் ஏற்கனவே எழுதப்பட்ட ஒன்று. ஆனால் ஆதம் عَلَيْهِ السَّلَامُ அவர்கள் பற்றி 40 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்டது அவர்கள் குறித்த தனிப்பட்ட விதி பற்றியதாகும். நாம் தாயில் வயிற்றில் இருக்கும்போது, நம் ஆயுட்காலம் பற்றி கரு தரித்த 120 நாட்களுக்கு முன்னர் எழுதினான். ஆனால் எந்தத் தாயின் வயிற்றில் பிறக்காத நிலையில், அவர்கள் பற்றிய கத்ரை 40 வருடங்கள் முன்பாக எழுதிவிட்டான்.

இந்த கத்ர் குறித்து வழிகேட்டில் சென்றவர்கள் இரண்டு கூட்டத்தினர். ஒன்று கதரிய்யாஹ் கூட்டத்தினர். மற்றொன்று ஜபரிய்யாஹ் கூட்டத்தினர்.

கதரிய்யாஹ் என்பவர்கள் விதி குறித்து சிந்தனை செய்து அதன் காரணமாக அதனை மறுத்தவர்கள். ஜபரிய்யாஹ் கூட்டத்தினர் எல்லாமே விதிதான் என எடுத்துக் கொண்டு தங்களின் பொறுப்புகளை விட்டுவிட்டு, விதியின் மீது பழி போடுவார்கள். தவறு ஏற்பட்டால் அதற்கு விதிதான் காரணம் என்று கூறிவிடுவார்கள். நாம் விதியை ஏற்றுக் கொண்டு, பொறுப்புடன் செயல்பட வேண்டும். தவறுகளைச் செய்துவிட்டு விதியின் மீது சாட்டிவிடக் கூடாது.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ தங்களின் மகளார் ஃபாத்திமாஹ் رَضِيَ اللهُ عَنْهَا மற்றும் மருமகனார் அலி رَضِيَ اللهُ عَنْهُ ஆகியோரைக் காணச் சென்றார்கள். அவர்கள் தஹஜ்ஜத் தொழாததைக் கண்ணுற்ற ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அது குறித்து விசாரிக்க், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நாடியிருந்தால் தாங்கள் தொழுதிருப்போம் என அலி رَضِيَ اللهُ عَنْهُ விதியின் மீது பொறுப்பு சாட்டினார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ குர்ஆன் வசனத்தை ஓதிக் கொண்டே சென்றார்கள், ''மனிதன் அதிகம் தர்க்கம் செய்தவனாக உள்ளான்.''

எனவே நாம் விதியை நம்புவதோடு, நமது பொறுப்புகளைச் சரிவர செய்ய வேண்டும். அல்லாஹ் விதிப்படி என தாம் செய்யாத செயல்களை அதன் மீது பொறுப்பு சாட்டாக் கூடாது. சாலையில் வாகனம் நம்மை நோக்கி வந்தால், விதிப்படிதான் எல்லாம் நடக்கும் என நாம் அங்கேயே இருக்கக்கூடாது. ஒதுங்கித்தான் செல்ல வேண்டும். இவ்வாறு உலக விஷயத்திலும், மார்க்க விஷயத்திலும் நமது காரியங்களை நிறைவேற்றி, முடிவை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் விதிப்படி விட்டுவிட வேண்டும். அப்படிப்பட்ட விதத்தில் நாம் விதி குறித்து ஈமான் கொள்ளவும், நாம் நம்பிக்கை கொள்ள வேண்டிய ஆறு காரியங்கள் குறித்து முழுமையான ஈமான் நமக்கு இருக்கவும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நமக்கு அருள்பாலிப்பானாக! ஆமீன்

Aqeedah 23 What is Witchcraft? Types of Witchcraft, Islamic View on Witchcraft

அகீதா 23 - சூனியம் என்றால் என்ன? சூனியத்தின் வகைகள், இஸ்லாமிய பார்வையில் சூனியம்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

சூனியத்திற்கு அரபியில் سحر என்று பெயர். மொழியியலின்படி மறைவான விஷயங்கள், ஏமாற்றம், யதார்த்துக்கு மாற்றமான தோன்றக் கூடியவை. நமக்கு தெரிந்த ஒரு சொல், ஸஹர் - நோன்புக்கான ஸஹர் நேரம் என்பது. அது இருட்டான நேரம். எதனையும் காண முடியாது. நம்முடைய பார்வையை மறைக்கும் இருட்டு என்பதால் ஸஹர் என்பது. அது போல ஸிஹ்ர். திருக்குர்ஆன் மற்றும் ஹதீதுகளில் சூனியம், செய்வினை என்ற பொருளில் வருகிறது. சூனியக் காரர்கள் மறைவான சில விஷயங்களைக் கொண்டு, மனிதர்கள் காணாத வரையில் சில காரியங்களைச் செய்வார்கள். வாழ்க்கையில் சில மாற்றங்களை ஏற்படுத்தக் கூடும். அவ்வாறு ஏற்படுவதற்கான காரணங்கள் மறைவானதாக இருக்கும்.

சாப்பிடக் கூடாத சில உணவுவகைகளை நாம் சாப்பிட்டால், அதன் காரணமாக நமது உடல்நிலையில் கோளாறு ஏற்படாலம். ஆனால் சூனியத்தினால் நமது உடல் நிலை மாறும்போது, அதற்காக காரணத்தை நாம் அறிய முடியாது. காரணம் மறைந்திருக்கும். இதைத்தான் சூனியம் என்பார்கள். இஸ்லாத்தில் சூனியம் உள்ளது. அதன் தாக்கமும் உள்ளது என்பது இஸ்லாமிய கொள்கை.

ஸூரத்துல் ஃபலக் (அதிகாலை)

113:1 قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِۙ **113:2** مِنْ شَرِّ مَا خَلَقَۙ **113:3** وَمِنْ شَرِّ غَاسِقٍ اِذَا وَقَبَۙ **113:4** وَمِنْ شَرِّ النَّفّٰثٰتِ فِى
الْعُقَدِۙ **113:5** وَمِنْ شَرِّ حَاسِدٍ اِذَا حَسَدَ

113:1. (நபியே!) நீர் சொல்வீராக: அதிகாலையின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன்.
113:2. அவன் படைத்தவற்றின் தீங்கை விட்டும்-
113:3. இருள் பரவும் போது ஏற்படும் இரவின் தீங்கை விட்டும்-
113:4. இன்னும், முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கை விட்டும்,
113:5. பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும் போதுண்டாகும் தீங்கை விட்டும் (காவல் தேடுகிறேன்).

இந்த அத்தியாயம் சூனியத்திற்குப் பாதுகாப்பு தேடச் சொல்கிறான். சூனியம் என்பது இல்லை அல்லது அது உடலில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படாது என்பதாக இருந்தால், இந்த அத்தியாத்தை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى இறக்கியிருக்க மாட்டான். பாதுகாவல் தேடும் அவசியமும் இருக்காது.

சூனியத்தின் வகைகள் இரண்டு. 1. இல்லாத விஷயத்தை மனிதனுக்குத் தோன்றுமாறு செய்தல் - தஸ்யீல் - தோன்றுதல் என்பதாகும்.

ஸூரத்து தாஹா

20:66 قَالَ بَلْ اَلْقُوْا‌ ۚ فَاِذَا حِبَالُهُمْ وَعِصِيُّهُمْ يُخَيَّلُ اِلَيْهِ مِنْ سِحْرِهِمْ اَنَّهَا تَسْعٰى

20:66. அதற்கவர்: “அவ்வாறன்று! நீங்களே (முதலில்) எறியுங்கள்” என்று (மூஸா) கூறினார். (அவர்கள் எறியவே) அவர்களுடைய கயிறுகளும் அவர்களுடைய தடிகளும் அவர்கள் சூனியத்தால் (பாம்புகளாக) நிச்சயமாக நெளிந்தோடுவது போல் அவருக்குத் தோன்றியது.

மூஸா عَلَيْهِ السَّلَامُ அவர்களும், சூனியக்காரர்களுக்கும் இடையில் நடந்த போட்டியில், சூனியக்காரர்கள் எறிநத் கயிறுகள் (பாம்புகளைப் போல) நெளிவது போல் அவர்களுக்குத் தேன்றியது. உண்மையில்

அவை பாம்புகள். இது போல பல வசனங்கள் வந்துள்ளன. 2. நட்டத்தை ஏற்படுத்துமாறு செய்யப்படும் சூனியம். இதில் பல உள்ளன. உதாரணமாக கணவன் மனைகளுக்கு இடையில் பிரிவினை ஏற்படுத்துவது.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:102 وَاتَّبَعُوْا مَا تَتْلُوا الشَّيٰطِيْنُ عَلٰى مُلْكِ سُلَيْمٰنَ‌ۚ وَمَا كَفَرَ سُلَيْمٰنُ وَلٰـكِنَّ الشَّيٰـطِيْنَ كَفَرُوْا يُعَلِّمُوْنَ النَّاسَ السِّحْرَ وَمَآ اُنْزِلَ عَلَى الْمَلَـكَيْنِ بِبَابِلَ هَارُوْتَ وَمَارُوْتَ‌ؕ وَمَا يُعَلِّمٰنِ مِنْ اَحَدٍ حَتّٰى يَقُوْلَآ اِنَّمَا نَحْنُ فِتْنَةٌ فَلَا تَكْفُرْ‌ؕ **فَيَتَعَلَّمُوْنَ مِنْهُمَا مَا يُفَرِّقُوْنَ بِهٖ بَيْنَ الْمَرْءِ وَ زَوْجِهٖ‌ؕ** وَمَا هُمْ بِضَآرِّيْنَ بِهٖ مِنْ اَحَدٍ اِلَّا بِاِذْنِ اللّٰهِ‌ؕ وَيَتَعَلَّمُوْنَ مَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ‌ؕ وَلَقَدْ عَلِمُوْا لَمَنِ اشْتَرٰٮهُ مَا لَهٗ فِى الْاٰخِرَةِ مِنْ خَلَاقٍ‌ؕ وَلَبِئْسَ مَا شَرَوْا بِهٖۤ اَنْفُسَهُمْ‌ؕ لَوْ كَانُوْا يَعْلَمُوْنَ

2:102. அவர்கள் ஸுலைமானின் ஆட்சிக்கு எதிராக ஷைத்தான்கள் ஓதியவற்றையே பின்பற்றினார்கள்; ஆனால் ஸுலைமான் ஒருபோதும் நிராகரித்தவர் அல்லர்; ஷைத்தான்கள் தாம் நிராகரிப்பவர்கள்; அவர்கள்தாம் மனிதர்களுக்குச் சூனியத்தைக் கற்றுக்கொடுத்தார்கள்; இன்னும், பாபில் (பாபிலோன் என்னும் ஊரில்) ஹாரூத், மாரூத் என்ற இரண்டு மலக்குகளுக்கு இறக்கப்பட்டதையும் (தவறான வழியில் பிரயோகிக்கக் கற்றுக்கொடுத்தார்கள்). ஆனால் அவர்கள் (மலக்குகள்) இருவரும் “நிச்சயமாக நாங்கள் சோதனையாக இருக்கிறோம் (இதைக் கற்று) நீங்கள் நிராகரிக்கும் காஃபிர்கள் ஆகிவிடாதீர்கள்” என்று சொல்லி எச்சரிக்காத வரையில், **எவருக்கும் இ(ந்த சூனியத்)தைக் கற்றுக் கொடுக்கவில்லை; அப்படியிருந்தும் கணவன் - மனைவியிடையே பிரிவை உண்டாக்கும் செயலை அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள்.** எனினும் அல்லாஹ்வின் கட்டளையின்றி அவர்கள் எவருக்கும் எத்தகைய தீங்கும் இதன் மூலம் இழைக்க முடியாது; தங்களுக்குத் தீங்கிழைப்பதையும், எந்த வித நன்மையும் தராததையுமே - கற்றுக் கொண்டார்கள். (சூனியத்தை) விலை கொடுத்து வாங்கிக் கொண்டவர்களுக்கு, மறுமையில் யாதொரு பாக்கியமும் இல்லை என்பதை அவர்கள் நன்கறிந்துள்ளார்கள். அவர்கள் தங்கள் ஆத்மாக்களை விற்றுப்பெற்றுக்கொண்டது கெட்டதாகும். இதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?

கணவன் மனைகளுக்கு இடையில் பிரிவினை ஏற்படுத்தும் சூனியம் இது. எனினும் தான் நாடினால் அன்றி அவர்கள் அவ்வாறு செய்ய முடியாது எனவும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கூறுகிறான்.

மற்றொரு தாக்கம் மறதி ஏற்படுத்துவது.

حَدَّثَنَا عُبَيْدُ بْنُ إِسْمَاعِيلَ، حَدَّثَنَا أَبُو أُسَامَةَ، عَنْ هِشَامٍ، عَنْ أَبِيهِ، عَنْ عَائِشَةَ، قَالَتْ سُحِرَ النَّبِيُّ صلى الله عليه وسلم حَتَّى إِنَّهُ لَيُخَيَّلُ إِلَيْهِ أَنَّهُ يَفْعَلُ الشَّىْءَ وَمَا فَعَلَهُ، حَتَّى إِذَا كَانَ ذَاتَ يَوْمٍ وَهْوَ عِنْدِي دَعَا اللَّهَ وَدَعَاهُ، ثُمَّ قَالَ " أَشَعَرْتِ يَا عَائِشَةُ أَنَّ اللَّهَ قَدْ أَفْتَانِي فِيمَا اسْتَفْتَيْتُهُ فِيهِ ". قُلْتُ وَمَا ذَاكَ يَا رَسُولَ اللَّهِ قَالَ " جَاءَنِي رَجُلاَنِ، فَجَلَسَ أَحَدُهُمَا عِنْدَ رَأْسِي وَالآخَرُ عِنْدَ رِجْلَىَّ، ثُمَّ قَالَ أَحَدُهُمَا لِصَاحِبِهِ مَا وَجَعُ الرَّجُلِ قَالَ مَطْبُوبٌ. قَالَ وَمَنْ طَبَّهُ قَالَ لَبِيدُ بْنُ الأَعْصَمِ، الْيَهُودِيُّ مِنْ بَنِي زُرَيْقٍ. قَالَ فِيمَا ذَا قَالَ فِي مُشْطٍ وَمُشَاطَةٍ، وَجُفِّ طَلْعَةٍ ذَكَرٍ. قَالَ فَأَيْنَ هُوَ قَالَ فِي بِئْرِ ذِي أَرْوَانَ ". قَالَ فَذَهَبَ النَّبِيُّ صلى الله عليه وسلم فِي أُنَاسٍ مِنْ أَصْحَابِهِ إِلَى الْبِئْرِ، فَنَظَرَ إِلَيْهَا وَعَلَيْهَا نَخْلٌ، ثُمَّ رَجَعَ إِلَى عَائِشَةَ فَقَالَ " وَاللَّهِ لَكَأَنَّ مَاءَهَا نُقَاعَةُ الْحِنَّاءِ، وَلَكَأَنَّ نَخْلَهَا رُءُوسُ الشَّيَاطِينِ ". قُلْتُ يَا رَسُولَ اللَّهِ أَفَأَخْرَجْتَهُ قَالَ " لاَ، أَمَّا أَنَا فَقَدْ عَافَانِي اللَّهُ وَشَفَانِي، وَخَشِيتُ أَنْ أُثَوِّرَ عَلَى النَّاسِ مِنْهُ شَرًّا ". وَأَمَرَ بِهَا فَدُفِنَتْ.

5766. ஆயிஷா (ரலி) அறிவித்தார். இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு சூனியம் செய்யப்பட்டது. இதையடுத்து தாம் செய்யாத ஒன்றைச் செய்வது போன்ற பிரமை அவர்களுக்கு ஏற்பட்டது. இறுதியில் ஒரு நாள் அவர்கள் என்னிடம் இருந்தபோது அல்லாஹ்விடம் (உதவி கோரிப்) பிரார்த்தித்துக் கொண்டேயிருந்தார்கள். பிறகு என்னிடம், 'ஆயிஷா (விஷயம்) தெரியுமா? எந்த விஷயத்தில் தெளிவளிக்கும்படி அல்லாஹ்விடம் நான் கேட்டுக்கொண்டிருந்தேனோ அந்த விஷயத்தில் அவன் எனக்குக் தெளிவளித்துவிட்டான்' என்று கூறினார்கள். நான், 'என்ன அது, இறைத்தூதர் அவர்களே!' என்று கேட்டேன். அதற்கு இறைத்தூதர்(ஸல்)

அவர்கள் கூறினார்கள்: (கனவில்) என்னிடம் (வானவர்கள்) இருவர் வந்தனர். அவர்களில் ஒருவர் என்னுடைய தலைமாட்டிலும் இன்னொருவர் என்னுடைய கால்மாட்டிலும் அமர்ந்தனர். பிறகு அவர்களில் ஒருவர் மற்றவரிடம், 'இந்த மனிதரின் நோய் என்ன?' என்று கேட்க, மற்றவர், 'இவருக்குச் சூனியம் செய்யப்பட்டுள்ளது என்று பதிலளித்தார். முதலாமவர், 'இவருக்கு யார் சூனியம் வைத்தார்?' என்று கேட்க, மற்றவர், 'பனூ ஸுரைக் குலத்தைச் சேர்ந்த லபீத் இப்னு அஃஸம் எனும் யூதன்' என்று பதிலளித்தார். முதலாமவர், 'எதில் சூனியம் வைக்கப்பட்டுள்ளது?' என்று கேட்க, அடுத்தவர், 'சீப்பிலும் சிக்குமுடியிலும் ஆண்பேரீச்சம் பாளையின் உறையிலும்' என்று கூறினார். முதலாமவர், 'அது எங்கே வைக்கப்பட்டுள்ளது?' என்று கேட்க, அடுத்தவர், 'தூஅர்வான் குலத்தாரின் கிணற்றில்' என்று பதிலளித்தார். எனவே, நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்கள் சிலருடன் அந்தக் கிணற்றுக்குச் சென்று அதைக் கூர்ந்து கவனித்தார்கள். சுற்றிலும் பேரீச்ச மரங்கள் இருந்தன. (சூனியப் பொருள் கட்டைக் கிணற்றிலிருந்து வெளியே எடுத்தார்கள்.) பிறகு ஆயிஷா(ரலி) அவர்களிடம் வந்து, 'அந்தக் கிணற்றின் தண்ணீர் மருதாணிச் சாற்றைப் போன்ற (கலங்கலாக) இருந்தது. அதன் பேரீச்ச மரங்கள் ஷைத்தானின் தலைகளைப் போன்று இருந்தன' என்று கூறினார்கள். நான், 'இறைத்தூதர் அவர்களே! அந்தக் கட்டைத் தாங்கள் திறந்(து பார்த்)தீர்களா?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'இல்லை; எனக்கோ அல்லாஹ் ஆரோக்கியமளித்து குணப்படுத்திவிட்டான். அதைத் திறந்து காட்டினால் மக்கள் குழப்பமடைந்துவிடுவார்களோ என அஞ்சினேன்' என்று கூறினார்கள். பின்னர் நபி(ஸல்) அவர்களின் ஆணையின் பேரில் அக்கிணறு தூர்க்கப்பட்டது. Book : 76 ஸஹீஹுல் புகாரி

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு லதீத் இப்னு அ.்.ஸம் ஒரு யூதன் சூனியம் செய்தான். அதனால் அவர்கள் தாங்கள் செய்யாத ஒன்றைச் செய்ததாக நினைப்பார்கள். ஒரு மாதிரியான வஸ்வஸா.

மற்றொன்று குழந்தை பிறக்க விடாமல் செய்வது. எனினும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் நாட்டமில்லாமல் எதனையும் செய்ய முடியாது. மக்காவை விட்டு முஹாஜிரீன்கள் மதினா வந்த போது, பல மாதங்கள் அவர்கள் யாருக்கும் ஒரு குழந்தையும் பிறக்கவில்லை. மதினா யூதர்கள் சூனியம் செய்து விட்டார்கள் என வதந்தி பரவியது. ஸஹாபாக்களும் பயந்தார்கள். எனினும் ஜுபைர் இப்னு அவ்வாம் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களுக்கு குழந்தை (அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் رَضِيَ اللهُ عَنْهُ) பிறந்தது. ஸஹாபாக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். யூதர்கள் செய்வினை செய்யவில்லை. அல்லது அவர்கள் செய்திருந்தாலும் பலிக்கவில்லை என்ற நோக்கில் ஸஹாபாக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இவ்வாறு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் நாட்டம் கொண்டு சூனியத்தினால் நட்டம் ஏற்படக் கூடும். இதுதான் நம்முடைய கொள்கையாகும். இது போல வியாபார நட்டம், நோய்கள் போன்றவை.

சூனியம் பற்றிய இஸ்லாமிய சட்டங்கள்:

இது தடை (ஹராம்) செய்யப்பட்ட விஷயங்களில் மிகவும் மோசமான பெரிய பாவங்களில் ஒன்றாகும். இஸ்லாத்தை விட்டு வெளியேற்றி விடும், ஷிர்க்குடைய விஷயமாகும். முந்தைய பகரா 102ல் இந்த சூனியத்தை கு.்.ப்ர் செய்வது பற்றிய ஆதாரம். இந்த ஜின் சூனியத்தைக் கற்றுக் கொடுத்து அவர்கள் கு.்.ப்ர் செய்தார்கள் எனக் கூறுவதால், அது கு.்.ப்ர் என்று அலலாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கூறுகிறான். ஒரு ஹதீதில் மனிதனை அழிவுக் கொண்டு செல்லும் ஏழு பெரிய பாவங்களிலிருந்து தூரமாக இருங்கள் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ என்று கூறுகிறார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு இணை வைப்பது, சூனியம், அப்பாவியைக் கொலை செய்வது, வட்டி, அனாதையின் பொருளை அநியாயமாக உண்பது, போரில் புறமுதுகிட்டு திருப்புவது, மற்றும பெண்களைப் பற்றி அவதூறு

கூறுவது ஆகியன அந்த எழு பாவங்களாகும். இவற்றில் ஷிர்க்கிற்கு அடுத்ததாக சூனியம் சொல்லப்பட்டுள்ளது.

சூனியக்காரர்களின்படி அறிஞர்களின் நிலைபாடு, அவர்கள் தாங்களே ஒப்புக் கொண்டால், அல்லது நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்குத் தண்டனை மரணதண்டனை தான். உமர் அவர்கள் தங்களின் ஆட்சி காலத்தில் சூனியக்காரர்களைக் கொன்றார்கள். அதனைப் பார்த்த ஸஹாபாக்கள் குர்ஆனிலும், ஹதீதுகளிலும் அது குறித்து ஆதாரம் இல்லையென்றாலும், அதனை தடுக்கவில்லை. அவர்களின் தீமைகளை அறிந்ததால் அவ்வாறு அதனைத் தடுக்கவில்லை. அடுத்து வரும் அறிஞர்களும் அதனை எடுத்துக் கொண்டு, அவ்வாறு செய்வது சரி என்கிறார்கள்.

ஹதீது: யார் துற்சகுணம் பார்க்கிறாரோ, யாருக்குப் பாரக்கப்படுகிறதோ, யார் ஜோஸியம் பார்க்கிறாறோ, அல்லது யாருக்குப் பார்க்கப்படுகிறதோ, யார் சூனியம் செய்கிறார்களோ அல்லது யாருக்குச் சூனியம் செய்யப்படுகிறதோ அவர்கள் நம்மைச் சார்ந்தவர்கள் அல்ல என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறுகிறார்கள். எனவே இரண்டு பிரிவினர்களும் நம்மைச் சேர்ந்தவர்கள் அல்ல. எனவே சூனியம் குறித்து, குறிப்பாக பெண்கள், மார்க்கம் அறிந்த பெண்கள் கூட ஏதாவது செய்ய முடியுமா என, முக்கியமாக கணவன் மனைவி சம்பந்தப்பட்ட ஏதேனும் செய்ய முடியுமா என்று தேடிச் செல்வதைக் காண்கிறோம், பொறமையின் காரணமாவோ அல்லது நல்ல காரணம் என்று நினைத்தோ சூனியத்தைத் தேடக்கூடாது. உதாரணமாக கணவர் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகவோ அல்லது சூனியம் செய்யப்பட்டதற்குப் பதிலாக என நல்ல காரியம் என்று எடுத்துக் கொண்டாலும், அதற்கான தீர்வாக அதனை எடுக்க் கூடாது. காரணம் அவை ஷிர்க்கைச் சேரந்ததாகும். தொழுகை போன்ற நற்காரியங்கள் என்றாலும், ஸுன்னாஹ்வில் சொல்லப்படாத பித்அத் எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படாதோ, அதுபோல்தான் இதுவும் என்பதை அறிய வேண்டும். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வை நெருங்க வேண்டும் என்ற நோக்கம் என்றாலும் அந்த பித்அத்துகளை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ஏற்றுக் கொள்ள மாட்டான். அது போலத்தான் சூனியம் விஷயத்திலும், நல்ல நோக்கம் என்று அதனை நாம் நாடக்கூடாது.

அகீதா 24 - சூனியம் தொடர்பான பாடங்கள்: சூனியக்காரர்கள் எப்படி சூனியம் செய்வார்கள்? ஜின்கள் மனிதர்களை தீண்ட முடியுமா?

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

சூனியக்காரர்கள் எவ்வாறு செய்வார்கள்?

1.சில வார்த்தைகள் அல்லது மந்திரங்களைக் கூறி அவர்கள் சூனியம் செய்யலாம். அதற்கான ஆதாரம் முன்னர் கூறப்பட்டுள்ள அத்தியாயம் பகரா 102ல் காணலாம்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:102 وَاتَّبَعُوْا مَا تَتْلُوا الشَّيٰطِيْنُ عَلٰى مُلْكِ سُلَيْمٰنَ

2:102. அவர்கள் ஸுலைமானின் ஆட்சிக்கு எதிராக ஷைத்தான்கள் ஓதியவற்றையே பின்பற்றினார்கள்;

அவர்கள் கெட்ட ஜின்கள் ஓதியவற்றைப் பின்பற்றுவார்கள். இவ்வாறு மந்திரங்கள் வைத்து சூனியம் செய்வார்கள்.

2. முடிச்சுகள் போட்டு அதில் ஊதி சூனியம் செய்யலாம். ஆதாரம்:

ஸூரத்துல் ஃபலக் (அதிகாலை)

113:4 وَمِنْ شَرِّ النَّفّٰثٰتِ فِى الْعُقَدِۙ

113:4. இன்னும், முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கை விட்டும்,

3. யார் மீது சூனியம் செய்யப்படப்படுகிறதோ, அவனது துணி, முடி அல்லது அவர்கள் பயன்படுத்துவது போன்றவற்றை எடுத்து சூனியம் செய்யப்படும். முன்னர் கூறப்பட்ட புஹாரி ஹதீது 5766ல்

قَالَ وَمَنْ طَبَّهُ قَالَ لَبِيدُ بْنُ الأَعْصَمِ، الْيَهُودِيُّ مِنْ بَنِي زُرَيْقٍ. قَالَ فِيمَا ذَا قَالَ فِي مُشْطٍ وَمُشَاطَةٍ، وَجُفِّ طَلْعَةٍ ذَكَرٍ. قَالَ فَأَيْنَ هُوَ قَالَ فِي بِئْرِ ذِي أَرْوَانَ

5766. முதலாமவர், 'எதில் (சூனியம் வைக்கப்பட்டுள்ளது?' என்று கேட்க, அடுத்தவர், 'சீப்பிலும் சிக்குமுடியிலும் ஆண்பேரீச்சம் பாளையின் உறையிலும்' என்று கூறினார். முதலாமவர், 'அது எங்கே வைக்கப்பட்டுள்ளது?' என்று கேட்க, அடுத்தவர், 'தூஅர்வான் குலத்தாரின் கிணற்றில்' என்று பதிலளித்தார். **ஸஹீஹுல் புகாரி**

சூனியம் எவ்வாறு செய்வார்கள் என்ற விவரம் சரியாகத் தெரியவில்லை. கா∴பிர்கள் சிலர் தங்கள் வழிவழியாக அவற்றைக் கற்றுக் கொண்டு அதனைச் செய்கிறார்கள்.

4. சூனியம் செய்வதற்கு ஜின்களின் உதவியைத் தேடுவார்கள். அவைதாம் அவர்களுக்கு அதற்கான வழிமுறைகளைச் செய்வார்கள்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:102 ... وَلٰـكِنَّ الشَّيٰـطِيْنَ كَفَرُوْا يُعَلِّمُوْنَ النَّاسَ السِّحْرَ

2:102. ... ஷைத்தான்கள் தாம் நிராகரிப்பவர்கள்; அவர்கள்தாம் மனிதர்களுக்குச் சூனியத்தைக் கற்றுக்கொடுத்தார்கள்;

எனவே ஜின்கள்களுக்கும், மனிதர்களுக்கும் இடையில் வலுவான தொடர்வு உள்ளது என்பது என்பது புலப்படுகிறது. ஆனால் கண்ணுக்குப் புலப்படாத ஜின்களுக்கும், மனிதர்களுக்கும் எப்படி தொடர்பு ஏற்பட முடியும் எனக் கூறி சிலர் இந்தக் கருத்தை மறுக்கின்றனர். ஆனால் கண்ணுக்குப் புலப்படாத ஜின்களுக்கும், மனிதர்களுக்கும் தொடர்பு ஏற்பட முடியும் என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

அவற்றில் ஒன்று அந்த அத்தியாயம் பகரா 102ஆம் வசனம். இருவருக்கும் இடையில் தொடர்பு இருந்தால்தானே அவர்களுக்கு அதனைக் கற்றுக் கொடுக்க முடியும்.

புஹாரி 3288

ال وَقَالَ اللَّيْثُ حَدَّثَنِي خَالِدُ بْنُ يَزِيدَ، عَنْ سَعِيدِ بْنِ أَبِي هِلاَلٍ، أَنَّ أَبَا الأَسْوَدِ، أَخْبَرَهُ عُرْوَةُ، عَنْ عَائِشَةَ ـ رضى الله عنها ـ عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " الْمَلاَئِكَةُ تَتَحَدَّثُ فِي الْعَنَانِ ـ وَالْعَنَانُ الْغَمَامُ ـ بِالأَمْرِ يَكُونُ فِي الأَرْضِ، فَتَسْمَعُ الشَّيَاطِينُ الْكَلِمَةَ، فَتَقُرُّهَا فِي أُذُنِ الْكَاهِنِ، كَمَا تُقَرُّ الْقَارُورَةُ، فَيَزِيدُونَ مَعَهَا مِائَةَ كَذِبَةٍ ".

3288. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: வானவர்கள் மேகங்களுக்கிடையே (சஞ்சரித்த வண்ணம்) பூமியில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளைக் குறித்துப் பேசிக் கொள்கிறார்கள். அப்போது ஷைத்தான்கள் (வானவர்களுடைய) வாக்கை (ஒட்டுக்) கேட்கின்றன. பின்னர், (பாட்டிலைக் கவிழ்த்து தோல் பையின் வாயில் வைத்து நீரை ஊற்றும் போது) பாட்டில் (அதில்) பொருத்தப்படுவதைப் போன்று சோதிடனின் காதில் தன் வாயை வைத்து (தாம் ஒட்டுக் கேட்டவற்றை இரகசியமாகக்) கூறி விடுகின்றனர். (இனி நடைபெறவிருக்கும் ஒரு விஷயத்தை சோதிடர்கள் தெரிந்து கொண்டு) அதனுடன் நூறு பொய்களை (புனைந்து) சேர்த்து விடுகிறார்கள். என ஆயிஷா(ரலி) அறிவித்தார். Book :59 ஸஹீஹுல் புகாரி

ஜின்கள் சொல்வதை மனிதர்கள் கேட்பார்கள் என்பதற்கு இது ஆதாரமாகும்.

மற்றொரு ஆதாரம்: புஹாரி 6173

حَدَّثَنَا أَبُو الْيَمَانِ، أَخْبَرَنَا شُعَيْبٌ، عَنِ الزُّهْرِيِّ، قَالَ أَخْبَرَنِي سَالِمُ بْنُ عَبْدِ اللَّهِ، أَنَّ عَبْدَ اللَّهِ بْنَ عُمَرَ، أَخْبَرَهُ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ انْطَلَقَ مَعَ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم فِي رَهْطٍ مِنْ أَصْحَابِهِ قِبَلَ ابْنِ صَيَّادٍ، حَتَّى وَجَدَهُ يَلْعَبُ مَعَ الْغِلْمَانِ فِي أُطُمِ بَنِي مَغَالَةَ، وَقَدْ قَارَبَ ابْنُ صَيَّادٍ يَوْمَئِذٍ الْحُلُمَ، فَلَمْ يَشْعُرْ حَتَّى ضَرَبَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم ظَهْرَهُ بِيَدِهِ ثُمَّ قَالَ " أَتَشْهَدُ أَنِّي رَسُولُ اللَّهِ ". فَنَظَرَ إِلَيْهِ فَقَالَ أَشْهَدُ أَنَّكَ رَسُولُ الأُمِّيِّينَ. ثُمَّ قَالَ ابْنُ صَيَّادٍ أَتَشْهَدُ أَنِّي رَسُولُ اللَّهِ فَرَضَّهُ النَّبِيُّ صلى الله عليه وسلم ثُمَّ قَالَ " آمَنْتُ بِاللَّهِ وَرُسُلِهِ ". ثُمَّ قَالَ لاِبْنِ صَيَّادٍ " مَاذَا تَرَى ". قَالَ يَأْتِينِي صَادِقٌ وَكَاذِبٌ. قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " خُلِّطَ عَلَيْكَ الأَمْرُ ". قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِنِّي خَبَأْتُ لَكَ خَبِيئًا ". قَالَ هُوَ الدُّخُّ. قَالَ " اخْسَأْ، فَلَنْ تَعْدُوَ قَدْرَكَ ". قَالَ عُمَرُ يَا رَسُولَ اللَّهِ أَتَأْذَنُ لِي فِيهِ أَضْرِبْ عُنُقَهُ. قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم " إِنْ يَكُنْ هُوَ لاَ تُسَلَّطُ عَلَيْهِ، وَإِنْ لَمْ يَكُنْ هُوَ فَلاَ خَيْرَ لَكَ فِي قَتْلِهِ

6173. அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவித்தார். இறைத்தூதர்(ஸல்) அவர்களோடு உமர் இப்னு கத்தாப்(ரலி) அவர்கள் (தன்னை இறைத்தூதர் என்று வாதிட்டுக் கொண்டிருந்த) இப்னு ஸய்யாத் (எனும் யூதச் சிறுவனை) நோக்கி நபித் தோழர்கள் சிலருடன் நடந்தார்கள். 'பனூ மஃகாலா' குலத்தாரின் மாளிகைகளுக்கருகே சிறுவர்களுடன் இப்னு ஸய்யாத் விளையாடிக் கொண்டிருக்கக் கண்டார்கள். அப்போது இப்னு ஸய்யாத் பருவ வயதை நெருங்கிவிட்டிருந்தான். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தங்களின் கரத்தால் அவனுடைய முதுகில் தட்டும் வரை அவன் (இவர்கள் வந்திருப்பதை) உணர வில்லை. பிறகு நபி(ஸல்) அவர்கள், 'நான் இறைத்தூதர்தாம் என்று நீ உறுதி கூறுகிறாயா?' என்று கேட்டார்கள். நபி(ஸல்) அவர்களை (ஏறெடுத்து)ப் பார்த்துவிட்டு இப்னு ஸய்யாத்,'நீங்கள் (எழுதப் படிக்கத் தெரியாத மக்களான) உம்மீகளின் தூதர் என்று நான் உறுதி கூறுகிறேன்' என்றான். பிறகு இப்னு ஸய்யாத் (நபி(ஸல்) அவர்களிடம்), 'நான் அல்லாஹ்வின் தூதன் என்று (என்னை ஏற்று) உறுதி கூறுகின்றீர்களா?' என்று கேட்டான். உடனே நபி(ஸல்) அவர்கள் அவனைத் தள்ளிவிட்டுவிட்டு, 'நான் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர்களின் மீதும் நம்பிக்கை கொண்டேன்' என்று கூறினார்கள். பின்னர் நபி(ஸல்) அவர்கள் இப்னு ஸய்யாதிடம் '(உன்னிடம்) நீ என்ன காண்கிறாய்?' என்று கேட்டார்கள். அதற்கு இப்னு ஸய்யாத் என்னிடம், 'மெய்யான செய்திகளும் பொய்யான செய்திகளும் (மனத்தில் தோன்றும் ஓர் உதிப்பாய்)

வருகின்றன' என்று சொன்னான். இறைத்தூதர்(ஸல்) அவர்கள், 'உனக்கு இப்பிரச்சினையில் (ஷைத்தானால் மெய்யும் பொய்யும் கலந்து) குழப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது' என்று கூறிவிட்டு, 'நான் (உன்னைச் சோதிப்பதற்காக) ஒன்றை மனத்தில் மறைத்துவைத்துள்ளேன். (அது என்னவென்று சொல்!)' என்று கேட்டார்கள். 'அது அத்துக் (அத்துதான் எனும் 44 வது)' என்று பதிலளித்தான். உடனே நபி(ஸல்) அவர்கள் 'தூர விலகிப்போ! நீ உன் எல்லையைத் தாண்டிவிட முடியாது' என்றார்கள். (அங்கிருந்த) உமர்(ரலி) அவர்கள், 'இவனைக் கொல்ல எனக்கு அனுமதியளிப்பீர்களா? இவனுடைய கழுத்தைக் கொய்துவிடுகிறேன்' என்று கேட்டார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள், 'இவன் அவனாக (தஜ்ஜாலாக) இருந்தால் இவனைக் கொல்லும் பொறுப்பு உங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இவன் அவனில்லையென்றால் இவனைக் கொல்வதால் உங்களுக்கு நன்மையேதும் இல்லை' என்றார்கள். Book :78 **ஸஹீஹுல் புகாரி**

இந்த சிறுவனிடம் தாம் மனதில் நினைத்திருந்த அத்தியாயம் துாகனைப் பற்றி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கேட்டபோது, அது அத் துத்துக் என்றான். ஜின்கள் அவனது காதில் போட்டதைக் கொண்டு அவன் அரைகுறையாக பதில் கூறினான். ஜின்களுக்கும், மனிதனுக்கும் தொடர்பு இருப்பதற்கு இது ஆதாரமாகும்.

சிலர் அத்தியாயம் ஜின்னை ஓதினால், ஜின்னை நாம் வசப்படுத்திவிடலாம் என்பார்கள். அவர்களை நமது கைதி போல ஆக்கிவிடலாம் என்பார்கள். இவை எல்லாம் பொய்யானவை. ஜின்களை மனிதர்களால் கட்டுப்படுத்த முடியாது. சக்தியைப் பொருத்தளவில் உடல் சக்தியில் ஜின்கள் மனிதர்களை விட பல மடங்கு சக்தி மிக்கவர்கள் எனவும், ஆனால் அறிவு ரீதியில் மனிதர்கள் அவர்களை மிகைத்தவர்கள் என இப்னு தைய்மிய்யாஹ் رَحْمَةُ اللهِ عَلَيْهِ கூறியுள்ளார். அதற்கான ஆதாரம், ஜின்கள் ஏழு வானங்களைக் கடந்து செல்ல ஆற்றல் படைத்தவர்கள். ஒரு சில வினாடிகளில் அவர்கள் பறந்து சென்று வந்துவிடுவார்கள். எனவே அவர்களை வசப்படுத்துவது கடினம். எனினும் அறிவில்லாத யானை போன்ற பெரிய பிராணிகளை நாம் வசப்படுத்தலாம்.

ஸூரத்து ஸாத்

38:35 قَالَ رَبِّ اغْفِرْ لِىْ وَهَبْ لِىْ مُلْكًا لَّا يَنْۢبَغِىْ لِاَحَدٍ مِّنْۢ بَعْدِىْ‌ۚ اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ

38:35. "என் இறைவனே! என்னை மன்னித்தருள்வாயாக! அன்றியும், பின்னர் எவருமே அடைய முடியாத ஓர் அரசாங்கத்தை எனக்கு நீ நன்கொடையளிப்பாயாக! நிச்சயமாக நீயே மிகப்பெருங் கொடையாளியாவாய்" எனக் கூறினார்.

இவ்வாறு துஆ கேட்ட ஸுலைமான் عَلَيْهِ السَّلَامُ அவர்களுக்குத்தான் ஜின்கள், பறவைகள், மற்றும் காற்றின் மீதும் ஆற்றல் அளிக்கப்பட்டார்கள். அவர்களுக்குப் பிறகு வேறு யாருக்கும் ஜின்களை வசப்படுத்த சக்தியில்லை.

ஒரு தடவை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தொழுது கொண்டிருக்கும்போது, அவர்களுக்கு தொந்தரவு செய்த ஒரு ஷைத்தானைப் பிடித்து, பள்ளிவாசலின் ஒரு துாணில் கட்டிப் போட விரும்பினார்கள். எனினும் ஸுலைமான் عَلَيْهِ السَّلَامُ அவர்களின் துஆ நினைவுக்கு வரவே அவ்வாறு அவர்கள் செய்ய விரும்பவில்லை எனக் கூறினார்கள். எனவே ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களே அவ்வாறு செய்யாதபோது, மற்றவர்களால் அவர்களை வசப்படுத்த முடியாது.

எனினும் சூனியம் செய்வதற்கு ஜின்களின் துணை இல்லாமல் எதுவும் நடக்காது. ஜின்களை அவர்கள் உதவி கேட்கும் விதமாக தவறானவற்றைச் செய்வார்கள். உதாரணமாக, சிறுநீர் கொண்டோ, அல்லது மாதவிடாய் இரத்தம் கொண்டோ வசனங்களை எழுதச் சொல்வது, மலஜலம் உபயோகப்படுத்துவது,

அல்லது தமக்கு சிரம் பணிய வேண்டும் என்ற ஷிர்க்கான காரியங்களை அவர்களிடமிருந்து ஜின்கள் வற்புறுத்திக் கேட்பார்கள். அப்போதுதான் தாங்கள் உதவி செய்வோம் எனக் கூறுவார்கள். இப்படியாக அந்த மனிதர்கள்தாம், கெட்ட ஜின்களின் வயப்பட்டு, அவர்களுக்குக் கீழ்ப்படிவார்கள்.
சிலர், ஜின்கள் மனிதர்களின் மீது ஏறி அவர்களை ஆட்டிப் படைக்க முடியுமா? எனக் கேட்கலாம்.
ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:275 اَلَّذِيْنَ يَاْكُلُوْنَ الرِّبٰوا لَا يَقُوْمُوْنَ اِلَّا كَمَا يَقُوْمُ الَّذِىْ يَتَخَبَّطُهُ الشَّيْطٰنُ مِنَ الْمَسِّ

2:275. யார் வட்டி (வாங்கித்) தின்கிறார்களோ, அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போலல்லாமல் (வேறுவிதமாய் எழ மாட்டார்கள்.

ஜின்கள் மனிதர்களைத் தீண்டுவார்கள் என்பது இதற்கு ஆதாரமாகும். தீண்டுவது என்பது ஜின்கள் அவர்களின் மீது ஏறுவார்கள் என்பதாகும்.
ஷைத்தான் மனிதனுடைய இரத்த நாளங்களில் ஓடுவான் என கூறியுள்ளார்கள். எனவே மனிதனின் உடலுக்குள் செல்லலாம் என்பததை அறிவிக்கிறது.
அல்பானி رَحْمَةُ اللهِ عَلَيْهِ ஸஹீஹ் எனக் கூறும் ஒரு ஹதீதில், ஒரு பெண்மணி தமது மகனை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் கூட்டி வந்தார்கள். அவன் மீது சுமார் 7 வருடங்கள் ஜின் ஏறி ஒரு நாளுக்கு இரண்டு முறை அவன் வித்தியாமான முறையில் செயல்படுமாறு செய்வதாகக் கூறினார். அவனைத் தம் அருகில் வரச்சொன்ன ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ , அவனது முதுகில் அல்லது மார்பில் தட்டி, அவன் வாயில் எச்சிலைத் தடவி விட்டு, ‘‘நான் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் எதிரியே! அவனை விட்டு வெளியேறி விடு’’ என்று கூறினார்கள். பின்னர் அந்தப் பெண்மணியிடம் அந்த சிறுவன் குறித்த செயல்பாட்டை தங்களிடம் தெரிவிக்குமாறு கூறினார்கள். பின்பொருநாள், அந்த சிறுவனைப் பற்றி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அந்தப் பெண்மணியிடம் கேட்டபோது, அதற்குப் பிறகு அவன் அவ்வாறு எந்த மாதிரியும் வித்தியாசமாக நடக்கவில்லை எனக் கூறினார்கள்.
இந்த நிகழ்வு, அவனை விட்டு வெளியேறுமாறு கூறியது, ஜின்கள் அவனுக்கு உள்ளே இருந்திருக்கிறான் என்பதை நாம் அறியலாம்.
இதுபோக, யாரும் மறுக்க முடியாத வகையில், பலர் ஜின்கள் குறித்துத் தங்களின் வாழ்க்கையில் அனுபவங்களைப் பெற்றிருக்கலாம். உதாரணமாக, என்னுடைய அனுபவம் குறித்துக் கூறுகிறேன்:
என்னுடைய தந்தையார் இதுபோன்ற நிகழ்வுகளுக்கு குர்ஆன் வசனங்கள் மூலம் பலருக்கு உதவி செய்ய முயன்றுள்ளார்கள். நானே சிலவற்றை நேரில் கண்டுள்ளேன். ஒரு விஷயத்தை நான் கூறுகிறேன். தெலுங்கு மொழி பேசும் ஒரு சிறுவன் வீட்டில், அவனுக்கு ஓதி சுகம் கிடைக்க எனது தந்தையார் அங்கு சென்றார்கள். அவன் மீது அவர் குர்ஆன் வசனங்களை ஓத ஊதும்போது, அந்த சிறுவன் வித்தியாசமாக பேச ஆரம்பித்தான். பேசும் பாணி மாறுகிறது. வீட்டிலுள்ள மக்களை அவர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல், அவர்களின் பட்டப் பெயரைக் கொண்டு அழைத்துப் பேசினான். தந்தையாரின் வேலை முடிந்ததும், அச்சிறுவனின் பாட்டி ஒரு விஷயம் குறித்து ஆச்சரியமாகக் கூறினார். அதாவது, அந்த சிறுவனின் வித்தியாசமான பேச்சாகிறது, இறந்த தாத்தாவின் பாணியிலேயே இருந்தது. அவர் எவ்வாறு மற்றவர்களைச் செல்லமாகக் கூப்பிடுவாறோ, அதே போன்றே அவனும கூப்பிட்டான். அது பற்றி அவனுக்குத் தெரிய வாய்ப்பில்லை என்றார்.
மற்றுமொரு நிகழ்வு, ஒரு வீட்டில் ஒரு சிறுவனின் மீது ஏறிய ஜின், அந்த வீட்டில் இருவருக்கு மட்டும் தெரிந்த இரகசியங்களைக் அவன் வாயிலாகக் கூறிய நிகழ்வும் நடந்துள்ளது.

அதுபோல, பெங்களூருவிலிருந்து ஒருவர் என்னிடம் தமது மனைவியைக் கூட்டி வந்தார். நானும் ருக்கையாஹ் செய்து அவர் மீது ஓத, அப்பெண் மிகவும் ஆவேசம் கொண்டார். நான்கு நபர்கள் அவரை கட்டுப்படுத்த முயன்றார்கள். அவர் மீறிய ஜின், தான் அவர் குறிப்பிட்ட ஒரு தோட்டத்திற்குச் சென்றபோது ஏறியதாகக் கூறியது. கணவரிடம் கேட்டபோது, அப்பெண் அங்கு சென்ற பிறகுதான் வித்தியாசமாகப் பேசியதாகக் கூறினார். பின்னர் அவர் நன்றானபோது, சாதாரணமாக அவர் பேச ஆரம்பித்தார். அவர் சுகமாக ஆன சுமார் பத்து, பதினைந்து நாட்கள் ஆனது. இது அனுபவித்த நிகழ்வு ஒன்றாகும். மறுக்க இயலாது. அஹ்மது இப்னு ஹன்பல் رَحْمَةُ اللهِ عَلَيْهِ ஜின்கள் அவ்வாறு ஏறாது என கூறும் ஒருவரைக் குறித்து, அவர் அவ்வாறு பேசுவதே அவர் மீது ஏறிய ஜின்தான் எனக் கூறுகிறார்கள். எனவே குர்ஆன், ஹதீதுகளில் கூறப்பட்டுள்ளதால், இதனை நாம் நம்ப வேண்டும். அறிவுப் பூர்வமாக இல்லை என மறுக்கக் கூடாது.

அகீதா 25 - சூனியம் தொடர்பான பாடங்கள்: ருகைய்யா:சூனியத்திற்கான இஸ்லாமிய தீர்வு

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

சூனியம் இருக்கிறது, அதில் நட்டம் இருக்கிறது என்றால், அதற்கான தீர்வு என்ன? குர்ஆன் ஓதுவதுதான் அதற்கான தீர்வாகும்.

அத்தியாயம் ∴பாத்திஹா பற்றிய ஹதீது:

அபு ஸயீத் அல் குத்ரி رَضِيَ اللهُ عَنْهُ அறிவிக்கிறார்கள்,

“நாங்கள் ஒரு பயணத்தின்போது, ஒரு இடத்தில் தங்கினோம். ஒரு சிறுமி எங்களிடம் வந்து கூறினாள், “இந்தக் கிளையினரைச் சேர்ந்த தலைவர் தேளினால் கொட்டப்பட்டுள்ளார். எங்களைச் சேர்ந்த மக்கள் யாரும் இங்கு இல்லை. உங்களில் யாரேனும் அவருக்கு சிகிட்சை அளிக்க ஏதேனும் ஓதிப்பார்க்க முடியுமா?” ஒரு மனிதர் அந்தச் சிறுமியுடன் சென்றார். அவருக்கு அந்த வைத்தியம் தெரியும் என நாங்கள் நினைக்கவில்லை. எனினும் எங்களது நண்பர் அந்தத் தலைவரிடம் சென்று, அவருக்கு சிலவற்றை ஓதிப் பார்த்தார். அந்தத் தலைவருக்கு குணமானது. அதற்காக அத்தலைவர் அவருக்கு முப்பது ஆடுகளைப் பரிசளித்தார். எங்களுக்கு பாலையும் அருந்தக் கொடுத்தார். அவர் திரும்பி வந்தவுடன், எங்களின் நண்பரிடம் நாங்கள் வினவினோம், “அவருக்குக் குணமளிக்கக்கூடிய ஓதுதல் எதனையும் நீர் அறிந்துள்ளீரா?” அவர் கூறினார், “இல்லை, நான் உம்முல் கிதாப் (அத்தியாயம்ஃபாத்திஹா) வைத்தான் அவர் மீது ஓதி ஊதினேன்.” இது பற்றி மதினா சென்று நாம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் (ஓதிப் பார்த்தல் மற்றும் அதன் பரிசான ஆடுகள் நமக்கு ஹலாலா அல்லவா? என) விசாரித்து அறியும்வரை நாம் ஒன்றும் செய்ய வேண்டாம் என அவர்கள் கூறிக் கொண்டோம். மதினா சென்றதும் நாங்கள் இதனை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் அறிவித்தோம். அதற்கு அவர்கள் கூறினார்கள்,

وَمَا كَانَ يُدْرِيهِ أَنَّهَا رُقْيَةٌ اقْسِمُوا وَاضْرِبُوا لِي بِسَهْمٍ

“அத்தியாயம் ஃபாத்திஹா குணமளிக்க ஓதிபார்க்க பயன்படுத்தலாம் எவ்வாறு நீர் அறிந்தீர்? அந்தப் பரிசை உங்களுக்கிடையில் பங்கு போட்டுக் கொள்ளுங்கள். எனக்கும் ஒரு பங்கினைக் கொடுங்கள்.” (புஹாரி)

அத்தியாயம் ∴பாத்திஹாவுக்கு மற்றொரு பெயர் அத்தியாயம் ஷி∴பா என்பதாகும்.

ஆயத்துல் குர்ஸி வசனமும் ஷைத்தானை விட்டுப் பாதுகாப்பு வசனம் என ஹதீதில் உள்ளது. அத்தியாயம் ∴பலக் மற்றும் அத்தியாயம் நாஸ் ஆகிய இரண்டு அத்தியாயங்களுக்கும், ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்குச் செய்யப்பட்ட சூனியத்திற்கு குணமளிக்கும் விதமாக ஜிப்ரயீல் عَلَيْهِ السَّلاَمُ அவர்களால் கொண்டு வரப்பட்டது. இந்த அத்தியாயங்களின் வசனங்கள் ஒவ்வொன்றையும் ஓதும்போது, சூனியத்தின் ஒவ்வொரு முடிச்சாக அவிழ்க்கப்பட்டது. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் முடிகளில் போடப்பட்ட முடிச்சுகள் அவிழ்க்கப்பட்டன.

மேலும் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவிடம் துஆக்களையும் பொதுவாகவும், குறிப்பிட்ட துஆக்களையும் ஓதலாம். உதாரணமாக,

الْمُلْكُ	لَهُ	لَهُ،	لَا شَرِيْكَ	وَحْدَهُ	إِلَّا اللهُ	لَا إِلٰهَ
ஆட்சியதிகாரம்	அவனுக்கே	அவனுக்கு	இணை ஏதும் இல்லை	அவன் தனித்தவன்	அல்லாஹ்வைத் தவிர	எந்த இறைவனும் இல்லை

قَدِيْرٌ.	عَلٰى كُلِّ شَيْءٍ	وَهُوَ	الْحَمْدُ،	وَلَهُ
ஆற்றல் கொண்டவன்.	ஒவ்வொருப் பொருளின் மீதும்	மேலும் அவன்	எல்லாப் புகழும், நன்றியும்	மேலும் அவனுக்கு

இந்த நான்காம் கலிமா கூறினால் பகலில் 100 தடவை கூறினால் 100 நன்மை, 10 அடிமை விடுதலை நன்மை, ஷைத்தானிடமிருந்து பாதுகாப்பு, அந்நாளில் அவரை விடச் சிறந்தவர் அதனை விட அதிகமாக ஓதியவர்தான்.

இந்த குர்ஆன் வசனங்கள், துஆக்களை நாமே இரு கரங்களிலும் சிறிது துப்பி பின்னர் நமது கரத்தால் உடலில் தடவிக் கொள்ள வேண்டும். இதுவே ருகைய்யா செய்யும் முறை. நமக்கு நாமே செய்வதுதான் சிறந்த முறையாகும். அடுத்தது மற்றவர்களைக் கொண்டு செய்வது. இதற்கும் அனுமதி உண்டு.

ஒரு ஹதீதின் சாரமாவது:

“எனது உம்மத்தில் 70000 நபர்கள் கேள்விக் கணக்கின்றி சுவனம் செல்வார்கள். அல்லாஹ் வை முழுமையாக தங்களின் காரியங்களில் எடுத்துக் கொள்வார்கள். தவக்கல் செய்வார்கள். ஷி.ஃ.பாவுக்காக நெருப்பைப் பயன்படுத்த மாட்டார்கள். (ஏமாற்றக் கூடிய) தவறான மக்களிடம் தங்களுக்காக ருகைய்யா செய்யும்படிக் கூறமாட்டார்கள்.”

நல்ல மக்களிடம் ருகைய்யா செய்யச் சொல்லலாம். ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَதங்களுக்கு நோய் ஏற்பட்டபோது, அத்தியாயம் ஃ.பலக் மற்றும் அத்தியாயம் நாஸ் ஆகிய இரண்டு அத்தியாயங்களையும் ஓதி தங்கள் கரங்களில் துப்பியவாறு ஊதி, தங்களின் மேனியில் தடவிக் கொள்வார்கள். அவர்களின் நோய் கடுமையானபோது, ஆயிஷா رَضِيَ الله عَنْهَاஅவர்கள் தாங்கள் ஓதி, ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَகரங்களில் ஊதி தடவச் செய்வார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَஅவர்களின் கரங்களின் பரகத்திற்காக அவ்வாறு அவர்களின் கரங்களிலேயே ஓதி ஊதுவார்கள்.

இந்த ஆதாரம் புஹாரி (5735)யில் பதியப்பட்டுள்ளது.

حَدَّثَنِي إِبْرَاهِيمُ بْنُ مُوسَى، أَخْبَرَنَا هِشَامٌ، عَنْ مَعْمَرٍ، عَنِ الزُّهْرِيِّ، عَنْ عُرْوَةَ، عَنْ عَائِشَةَ ـ رضى الله عنها ـ أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم كَانَ يَنْفُثُ عَلَى نَفْسِهِ فِي الْمَرَضِ الَّذِي مَاتَ فِيهِ بِالْمُعَوِّذَاتِ، فَلَمَّا ثَقُلَ كُنْتُ أَنْفِثُ عَلَيْهِ بِهِنَّ، وَأَمْسَحُ بِيَدِ نَفْسِهِ لِبَرَكَتِهَا. فَسَأَلْتُ الزُّهْرِيَّ كَيْفَ يَنْفِثُ قَالَ كَانَ يَنْفِثُ عَلَى يَدَيْهِ، ثُمَّ يَمْسَحُ بِهِمَا وَجْهَهُ.

5735. ஆயிஷா(ரலி) கூறினார் நபி(ஸல்) அவர்கள், தாம் எந்த நோயில் இறந்தார்களோ அந்த நோயின்போது (குர்ஆனில் உள்ள) பாதுகாப்புக் கோரும் (இறுதி மூன்று) அத்தியாயங்களை ஓதித் தம் மீதே ஊதிக்கொள்வார்கள். அவர்களுக்கு நோய் கடுமையானபோது நானே அவற்றை ஓதி அவர்களின் மீது ஊதிக்கொண்டும் அவர்களின் கையாலேயே (அவர்களின் மீது) தடவியபடியும் இருந்தேன். அவர்களின் கரத்தின் சுபிட்சம் (பரக்கத்) கருதி இவ்வாறு

செய்தேன். (இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான) மஅமர் இப்னு ராஷித்(ரஹ்) கூறினார்: நான் இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ(ரஹ்) அவர்களிடம், 'நபி(ஸல்) அவர்கள் எப்படி (ஓதி) ஊதுவார்கள்?' என்று கேட்டேன். அவர்கள், 'நபி(ஸல்) அவர்கள் தம் இருகரங்களின் மீதும் ஊதிப் பிறகு அவற்றால் தம் முகத்தில் தடவிவந்தார்கள்' என்று பதிலளித்தார்கள்.66 Book : 76
ஸஹீஹுல் புகாரி

குர்ஆனில் உள்ள மற்ற வசனங்களை ஓதி நாம் ருகைய்யாவைச் செய்யலாமா? அதற்கான ஆதாரங்கள் என்ன?

பனீ இஸ்ராயீல் (இஸ்ராயீலின் சந்ததிகள்)

17:82 وَنُنَزِّلُ مِنَ الْـقُرْاٰنِ مَا هُوَ شِفَآءٌ وَّرَحْمَةٌ لِّلْمُؤْمِنِيْنَ‌ۙ وَلَا يَزِيْدُ الظّٰلِمِيْنَ اِلَّا خَسَارًا

17:82. இன்னும், நாம் முஃமின்களுக்கு ரஹ்மத்தாகவும், அருமருந்தாகவும் உள்ளவற்றையே குர்ஆனில் (படிப்படியாக) இறக்கிவைத்தோம்; ஆனால் அக்கிரமக்காரர்களுக்கோ இழப்பைத் தவிர வேறெதையும் (இது) அதிகமாக்குவதில்லை.

10:57 يٰۤاَيُّهَا النَّاسُ قَدْ جَآءَتْكُمْ مَّوْعِظَةٌ مِّنْ رَّبِّكُمْ وَشِفَآءٌ لِّمَا فِى الصُّدُوْرِ ۙ وَهُدًى وَّرَحْمَةٌ لِّلْمُؤْمِنِيْنَ

10:57. மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு நிச்சயமாக ஒரு நல்லுபதேசமும் வந்துள்ளது. (உங்கள்) இதயங்களிலுள்ள நோய்களுக்கு அருமருந்தும் (வந்திருக்கிறது;) மேலும் (அது) முஃமின்களுக்கு நேர்வழிகாட்டியாகவும், நல்லருளாகவும் உள்ளது.

திர்மிதி ஹதிஸ்: அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَاஅவர்களுக்கு ஒரு பெண்மணி ருகைய்யா செய்து கொண்டிருந்தார். அதனைப் பார்த்த ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِஅல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவின் வேதத்தைக் கொண்டு ருகைய்யா செய்யுமாறு அப்பெண்மணியிடம் கூறினார்கள். இவ்வாறு ஒட்டு மொத்த குர்ஆனைக் கொண்டு என்ற பொருளை எடுத்துக் கொள்ளலாம். அல்லது குர்ஆன், ஸுன்னாஹ் அனுமதித்த வழிமுறைகளைக் கொண்டு என்றும் எடுத்துக் கொள்ளலாம். குர்ஆன் வசனங்களைக் கொண்டும், துஆக்களைக் கொண்டும் ருகைய்யா செய்யலாம். ஜைத்தூன் எண்ணெய், தேன் போன்றவற்றின் சிறப்புகள் குர்ஆனில் கூறப்பட்டுள்ளதால் அதனையும் எடுத்துக் கொள்ளலாம்.

முந்தைய ஹதீதல் அந்த பெண்மணியிடம் அவர் எதனைக் கொண்டு ருகைய்யா செய்தார் என ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِவினவினார்கள். அவர் தாம் ஓதியதைக் கூறினார். ஷிர்க் இல்லாதவாறு கவனித்து ருகைய்யாவை ஓதுமாறு அவர்கள் கூறினார்கள். எனவே நாம் குர்ஆனைக் கொண்டும், துஆக்களைக் கொண்டும் அல்லது தம் விருப்பப்படியும், ஆனால் ஷிர்க் இல்லாத வகையிலும் நாம் ருகைய்யா செய்யலாம் என்பது இதைக் கொண்டு நாம் அறியலாம்.

Aqeedah 26 Lessons on witchcraft: Illusions of witchcraft, and the explanation of the skeptics who deny witchcraft

அகீதா 26 - சூனியம் தொடர்பான பாடங்கள்: சூனியம் தொடர்பான வழிகெட்ட சிந்தனைகள், சூனியத்தை மறுப்பவர்களின் சந்தேகங்களுக்கான விளக்கம்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

ஸஹாபாக்கள் எவ்விதமாக நம்பிக்கை கொண்டார்களோ அதைப் போன்று அகீதா விஷயத்தில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதுபோலத்தான் இந்த சூனியத்தைப் பற்றியும் அவர்களின் நம்பிக்கை தாம் அளவுகோலாகும். இந்த சூனியம் என்பது உள்ளது எனவும், அதன் தாக்கம் உண்மை எனவும்தான் ஸஹாப்பாக்களின் நம்பிக்கையாக இருந்தது. நாமும் அவர்களின் வழிமுறையைத்தான் பின்பற்ற வேண்டும். அதுதான் சுவனத்தை அடைவதற்கான சரியான வழியாகும்.

வழிகெட்ட சிலர் இதனை மறுக்கிறார்கள். அவர்களில் ஒரு சிலர் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் மீது சூனியம் செய்யப்பட்டது என்பதனை மட்டும் மறுப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் சில அறிஞர்களும் உண்டு. அபு பக்கர் அல் இஸ்ரா என்பவர், ஹன.ீபி மத்ஹப்பைச் சேர்ந்த ஒரு அறிஞரும் உள்ளார். வழி கெட்ட கூட்டத்தினர் சிலரும் உள்ளனர். அதற்கு மறுப்பு என்னவென்றால், முதலில் இது குறித்து ஆதாரப்பூரவமான ஹதீது உள்ளது. இரண்டாவதாக, ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் ஒரு மனிதர்தாம் என்ற அடிப்படையில், பிறர் மீது சூனியம் நடை பெற முடியும் என்றால், அவர்கள் மீதும் நடைபெறும் வாய்ப்பு உள்ளது. ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ நோய்வாய்ப்பட்ட நிலையில், சுகம் விசாரிக்க அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களின் வீட்டிற்கு வருகிறார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைப் பார்த்து தங்களுக்கும் இவ்வாறு நோய் வரக் கூடுமா என வினவினார். அதற்கு ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள், “உங்களின் இரண்டு மனிதர்கள் நோய்வாய்ப்படுகிற மாதிரி நானும் நோய்வாய்ப்படுகிறேன்.” அதற்கு அவர் வினவினார், “இரண்டு நபர்களுக்கு பாவங்கள் மன்னிப்படுவது போல, தங்களுக்கும் இதனால் பாவங்கள் மன்னிக்கப்படுமா?” எனக் கேட்டார். அவர் அதனை நன்றாகப் புரிந்து வைத்துள்ளதாக ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறினார்கள். எனவே ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கும் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதை மறுக்க வேண்டியதில்லை.

ஆனால் இதனை மறுப்பவர்கள், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்கு சூனியம் செய்யப்பட்ட காலத்தில் இறக்கப்பட்ட வஹிகளை ஒழுங்காகப் பெற்றார்களா, அல்லது பாதிக்கப்பட்ட காலத்தில் அவர்கள் தவறாகச் சொல்லி விட்டார்கள் என்ற குற்றம் சாட்ட வாய்ப்புள்ளதாக நினைத்து அதனை மறுக்கிறார்கள். ஆனால் அதே ஹதீதில் அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்கள் கூறுகிறார்கள், “ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சூனியம் செய்யப்பட்ட நிலையில் கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் இருந்தார்கள். அப்போது அவர்கள் தங்கள் மனைவியருடன் சேர்ந்திருக்காத நிலையில், தாங்கள் சேர்ந்திருப்பதாக நினைப்பார்கள். எனவே தாங்கள் முழுக்குக் கடமையானவர்கள் என்ற குழப்பம் கொள்வார்கள். இவ்வாறு அவர்களின் நடை பெற்ற மாற்றம் பற்றி

சொல்லப்பட்டுவிட்டது. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தான் இறக்கும் வஹியைப் பாதுகாப்பான் என்று கூறியபிறகு, அது குறித்து நான் சந்தேகம் கொள்ளக் கூடாது.

ஸூரத்து ஹாமீம் ஸஜ்தா

41:42 لَّا يَأْتِيْهِ الْبَاطِلُ مِنْۢ بَيْنِ يَدَيْهِ وَلَا مِنْ خَلْفِهٖ تَنْزِيْلٌ مِّنْ حَكِيْمٍ حَمِيْدٍ

41:42. அதனிடம், அதற்கு முன்னிருந்தோ அதற்குப் பின்னிருந்தோ உண்மைக்குப் புறம்பான எதுவும் நெருங்காது; (இது) புகழுக்குரிய ஞானம் மிக்கவன் - (அல்லாஹ்)விடமிருந்து இறங்கியுள்ளது.

எவ்வித கெட்டதும் வஹியில் நுழைய முடியாது என அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கூறிய பிறகு, அவ்வாறு சந்தேகம் கொள்ளக் கூடாது.

இரண்டாவது வழிகேடு, சூனியம் என்ற ஒன்றே இல்லை என்பதாகும். அப்படி ஒன்று இருந்தாலும், அது இல்லாத ஒன்று இருப்பதாகக் காட்டப்படுவது மட்டும்தான் என்பார்கள். மூஸா عَلَيْهِ السَّلَامُ அவர்கள் காலத்தில் கயிற்றைப் பாம்பு போல நெளியச் செய்தது போல என்பார்கள். இவ்வாறு மறுப்பவர்கள் மு∴தஸிலாஹ் கூட்டத்தினர். இவர்களின் இந்தக் கூற்றை நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது. இவர்கள் சூனியத்தை மட்டுமல்லாமல், நபிமார்களின் மு∴ஜிஸாத்துகளையும், அல்லாஹ்سُبْحَانَهُ وَتَعَالَى வின் பண்புகளையுமோ மறுத்துள்ளார்கள். எனவே அவர்களின் கூற்றை நாம் ஒரு பொருட்டாகவே எடுக்கக் கூடாது.

மூன்றாவதாக, இக்காலத்திய சில வழி கெட்ட கொள்கை வாதிகள் சூனியமே இல்லை என்று கூறுகிறார்கள். அது ஒரு ஏமாற்றம் என்கிறார்கள். சூனியத்தில் ஒரு தாக்கம் என்று நாம் நம்பினால், அதில் ஷிர்க் வந்துவிடும் எனக் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் சொல்வது மாதிரி அவ்வாறு ஷிர்க் வராது. காரணம், ஒன்றாவது, சூனியத்தில் தீங்கு ஏற்படும் தாக்கத்தைக் கொடுத்தவன் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தான். கத்தி வெட்டுவதையும், நெருப்பை எறிக்கவும் தாக்கத்தைக் கொடுத்தவன் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தான். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அவ்வாறு அத்தன்மையைக் கொடுக்காவிட்டால், கத்தி வெட்டாது, நெருப்பும் எரிக்காது. அதனால் தான் இப்ராஹீம் عَلَيْهِ السَّلَامُ அவர்களை நெருப்பு தாக்கவில்லை. மேலும் அவர்களின் கத்தி இஸ்மாயீல் عَلَيْهِ السَّلَامُ அவர்களை வெட்டவில்லை. அதுபோல, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நாடாவிட்டால், உலகில் உள்ள அனைத்து சூனியக்காரர்களும் ஒன்று சேர்ந்தாலும், யாருக்கும் ஒரு சிறு தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. எனவே அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தான் தாக்கத்தைக் கொடுப்பான் அல்லது தடுப்பான். எனவே இந்த நம்பிக்கையில் ஷிர்க் ஏற்பட வழியில்லை.

இரண்டாவது, எந்த ஒரு நபரையும் நேரடியாகத் தாக்கினால், அவரின் மீது காயம் ஏற்பட வாய்ப்புண்டு. கல்லைத் தூக்கிப் போட்டு அல்லது கட்டையைத் தூக்கிப் போட்டு காயம் ஏற்படுவது ஒன்றும் தவறான நம்பிக்கை அல்ல. ஆனால் எங்கோ இருக்கும் சூனியக்காரன், அவனைத் தாக்குகிறான் என்று கூறுவது ஷிர்க் ஆகாதா என வினவுகிறார்கள். அவ்வாறு மறைவான இடத்திலிருந்து அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வால் தான் ஒரு காரியத்தை செய்ய முடியும். எனவே அவ்வாறு சூனியம் இருப்பது என்பது இணை வைப்பது போல ஆகிவிடும் என்பார்கள். ஆனால் சூனியக்காரர்கள் ஜின்கள் உதவி மற்றும் சிலவற்றைச் செய்த பிறகுதான் அதனைச் செய்கிறார்கள் என்பதனை குர்ஆன் மற்றும் ஹதீதுகளில் உள்ளது. இவ்வாறு அவர்கள் எதாவது செய்துதான் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அத்தியாயம் யாஸீன் ல் கூறியதைப் போல்,

36:82 اِنَّمَاۤ اَمْرُهٗۤ اِذَاۤ اَرَادَ شَيْـــًٔا اَنْ يَّقُوْلَ لَهٗ كُنْ فَيَكُوْنُ

36:82. எப்பொருளையேனும் அவன் (படைக்க) நாடினால், அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம்; ‘‘குன்’’ (ஆய்விடுக) என்று கூறுவதுதான்; உடனே அது ஆகிவிடுகிறது.

‘குன் ஃப எகூன்’ அவன் ஆகுக! என்றால் உடனே ஆகிவிடும், என்பது போல அவர்கள் நடத்தவில்லை. எனவே இதில் அவர்களை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு இணையாக ஆக்க முடியாது. அதனால் அங்கு ஷிர்க் இருக்கிறது என்று சொல்ல வாய்ப்பில்லை.

ஆனால் சூனியத்தை மறுக்கிறவர்கள், இல்லாத ஒன்றைக் காட்டுவது போல உள்ள சூனியத்தை ஏற்கிறார்கள். மூஸா அவர்களின் வரலாறு குர்ஆனில் அதிகமாகச் சொல்லப்படுவதால், அந்த வழிகேடர்களுக்கு இதனை மறுக்க முடியாது. எனவே சூனியத்தின் இந்த மாதிரியை ஏற்பார்கள். அவர்களிடம் சூனியத்தை நம்புவது ஷிர்க் என்று கூறும் நிலையில், இவ்விதமாக இல்லாத ஒன்றை, அதாவது கயிறுகளை பாம்பாக மாற்றிக் காட்டும் போது, அதில் மட்டும் ஷிர்க் இருக்கிறது என்று கூற முடியாதா? என்ற கேள்வியை எழுப்பலாம். அதுவும் சூனியக் காரர்கள் நம் கண்களின் அருகில் வராமல் செய்யும் வேலைதானே? அதில் ஷிர்க் இல்லையென்றால், மற்ற சூனியங்களில் மட்டும் ஷிர்க் உள்ளது என எவ்வாறு கூற முடியும்.

மேலும், சூனியம் இருப்பதை ஸஹாபாக்கள் நம்பினார்கள். அவர்களுக்குப் பிறகு வந்தவர்களும் நம்பினார்கள். புஹாரி, முஸ்லிம் போன்ற இமாம்களும், சூனியம் குறித்த ஹதீதுகளைப் பதிவு செய்துள்ளார்கள். சிலர்தான் மறுத்தார்கள். அவர்களும் அவற்றை நம்பினால், அதில் ஷிர்க் வரும் என்பதால் மறுக்கவில்லை. அதனை நம்பினால் வஹி விஷயம் பற்றி கேள்விக் குறி ஏற்பட்டு விடும் என்பதாகவே மறுத்தார்கள். முஃதஸிலாவினரும் இது முடியாத ஒன்று என்றுதான் மறுத்தார்களே அன்றி அது ஷிர்க் என்று மறுக்கவில்லை. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் நாட்டப்படியே சூனியக்காரர்களினால் தீங்கு ஏற்பட்டு விடும் என்பதில் எவ்வித ஷிர்க்கும் ஏற்படாது. அல்லாஹ் இவ்விஷயத்தில் நம் அனைவருக்கும் நேர்வழி காட்டுவானாக!

தங்களின் கருத்துக்கு ஆதாரமாக அவர்கள் எடுத்துக் காட்டுவது, உண்மையில் ஆதாரங்கள் அல்ல. அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள்தாம். முதலில் அவர்கள் கூறுவது அது ஷிர்க் என்பது. சூனியர்கள் செய்வது அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு இணையான சக்தி எனக் கூறி, அவர்கள் ஷிர்க் சம்பந்தப்பட்ட ஆதாரங்களைக் கூறுகிறார்கள். ஆனால் சூனியக்காரர்கள் ஒரு குறிப்பவருக்கு தீங்கு விளைக்க வேண்டும் என்று நினைத்தவுடன் நடைபெறுவதில்லை. அதற்காக அவர்கள் பல முயற்சிகளை எடுத்துப் பின்னர், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நாடினால்தான் அவர்கள் தீங்கு செய்ய முடியும். அல்லாஹ் செய்வது போல, ஆகுக! என்ற உடனே ஆகிவிடாது. இரண்டாவதாக, சூனியத்தை நம்புவரகளின் மீது அவர்கள் அவதூறு கூற முற்படுகிறார்கள். சூனியம் செய்தால் கண்டிப்பாக நிறைவேறும் என்று நாம் நம்புவதாக முதல் அவதூறு கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் அவ்வாறு கூறவில்லை. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நாடினால்தான் நடை பெறும் என்றே நம்புகிறோம். அத்தியாயம் பகரா 102 அது உறுதி படுத்துகிறது. அவ்வாறு நம்பினால்தான் ஷிர்க ஏற்படும். ஆனால் நம் நம்பிக்கை அவ்வாறு இல்லை. நம் மீது இவ்வாறு அவதூறாகத்தான் அவர்கள் கூறுகிறார்கள். நபிமார்கள் பல முஃஜிஸாத்துகளைச் செய்துள்ளார்கள். உதாரணமாக, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பூமியில் இருந்து கொண்டே, வானில் இருந்த சந்திரனைத் தங்களின் விரல்களைக் கொண்டு பிளந்து காட்டினார்கள். நம் அருகில் இருக்கும் பாறையை நாம் ஆயுதம் கொண்டு பிளக்கச் சாத்தியம். ஆனால் விண்ணில் உள்ள சந்திரனை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ பிளந்து காட்டினார்கள். இது அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுடைய தன்மை என்று சொல்லி நபிமார்களின் அத்தாட்சிகளை இவர்கள் மறுக்க முடியுமா? இது அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுடைய சக்திக்கு

நிகரானதாக இல்லை எனவும், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் நாட்டத்தின் காரணமாகத்தான் அவ்வாறு செய்ய முடியும் என்பார்கள். அதுபோலத்தான், சூனியமும், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் நாட்டமில்லாமல் செய்ய முடியாது என்று நம்புவதில் என்ன ஷிர்க் இருக்க முடியும்.

இதைப் போல்தான் தஜ்ஜாலின் செயல்களும். அவன் இறந்த ஒருவரை உயிர்ப்பித்துக் காட்டுவான். காய்ந்த நிலத்தின மீதி மழை பொழியச் செய்து, அதில் பயிர்களை முளைப்பிக்கச் செய்வான் என்று சொல்லப்பட்டுள்ளது. அதனை இவர்கள் ஏற்பார்கள். அவை தஜ்ஜாலினால் முடியும் என்று எடுத்துக் கொள்வது ஷிர்க் இல்லையா என்று கேட்டால், அவை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அவனுக்கு அப்போது கொடுக்கக் கூடிய சக்தி என்பார்கள். ஆம், மக்களை சோதனைக்கு ஆளாக்கும் அந்த செயல்களை எவ்வாறு ஷிர்க் என்று கூற முடியாதோ, அதனைப் போலவே சூனியத்தை நம்புவது ஷிர்க் ஆக முடியாது. தஜ்ஜாலுக்கும், நபிமார்களுக்கும், சூனியக் காரர்களுக்கும், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நாட்டமில்லமல் எதனையும் செய்ய இயலாது. எனவே வழிகேடர்களின் இந்த ஆதாரங்கள் அவர்களின் சந்தேகம்தான்.

அந்த வழிகேடர்கள் எடுத்து வைக்கும் மற்றொரு ஆதாரம் (அவர்களின் குழப்பம்) அத்தியாயம் இஸ்ரா மற்றும் ∴புர்கான் அத்தியாயங்களில் உள்ளன.

பனீ இஸ்ராயீல் (இஸ்ராயீலின் சந்ததிகள்)

17:47 نَحْنُ اَعْلَمُ بِمَا يَسْتَمِعُوْنَ بِهٖۤ اِذْ يَسْتَمِعُوْنَ اِلَيْكَ وَاِذْ هُمْ نَجْوٰٓى اِذْ يَقُوْلُ الظّٰلِمُوْنَ اِنْ تَتَّبِعُوْنَ اِلَّا رَجُلًا مَّسْحُوْرًا

17:47. (நபியே!) அவர்கள் உமக்குச் செவி சாய்த்தால், என்ன நோக்கத்துடன் செவி சாய்க்கின்றார்கள் என்பதையும் அவர்கள் தமக்குள் இரகசியமாக ஆலோசனை செய்யும் போது, "சூனியம் செய்யப்பட்ட ஒரு மனிதரையே அன்றி (வேறெவரையும்) நீங்கள் பின்பற்றவில்லை" என்று (தங்களுக்குள்) அந்த அநியாயக்காரர்கள் சொல்வதையும் நாம் நன்கறிவோம்.

ஸூரத்துல் ஃபுர்ஃகான் (பிரித்தறிவித்தல்)

25:8 اَوْ يُلْقٰٓى اِلَيْهِ كَنْزٌ اَوْ تَكُوْنُ لَهٗ جَنَّةٌ يَّاْكُلُ مِنْهَا ؕ **وَقَالَ الظّٰلِمُوْنَ اِنْ تَتَّبِعُوْنَ اِلَّا رَجُلًا مَّسْحُوْرًا**

25:8. "அல்லது இவருக்கு ஒரு புதையல் அளிக்கப்பட்டிருக்க வேண்டாமா? அல்லது அதிலிருந்து உண்பதற்கு (ஒரு பழத்)தோட்டம் உண்டாயிருக்க வேண்டாமா?" (என்றும் கூறுகின்றனர்;) அன்றியும், **இந்த அநியாயக் காரர்கள்; (முஃமின்களை நோக்கி) "சூனியம் செய்யப்பட்ட ஒரு மனிதரையேயன்றி, வேறெவரையும் நீங்கள் பின்பற்றவில்லை" என்றும் கூறுகிறார்கள்.**

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைக் குறித்து கா∴பிர்கள் முஸ்லிம்களைப் பார்த்து கூறுவார்கள், "நீங்கள் சூனியம் செய்யப்பட்ட ஒரு நபரை அன்றியே பின்பற்றவில்லை" எனவே ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மீது சூனியம் ஏற்பட்டது என நாம் நம்பினால், கா∴பிர்களின் பேச்சை நாம் ஏற்றுக் கொள்வது போவது போல ஆகிவிடுமே என்று அவர்கள் வினவுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு சில மாதங்கள் தான் அவ்வாறு பாதிப்பு ஏற்பட்டது. அந்த பாதிப்பு மறதி போன்றதுதான். ஆனால் கா∴பிர்களோ, சூனியத்தால் பாதிக்கப்பட்ட நபரைத்தான் பின்பற்றுகிறீர்கள் என்றும் வேதம் கொடுக்கப்பட்ட நபரைப் பின்பற்றவில்லை என்று கூறுகிறார்கள். நாம் நம்புவது, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் சூனியத்தால் பாதிகப்பட்டது ஒரு சில காலம்தான் எனவும், அதுவும் அது மறதி சம்பந்தப்பட்ட ஒன்றும் என்பதுதான். ஆனால் கா∴பிர்களோ அவர்களின் வாழ்நாள் முழுவதையும், வஹிகளையும் பற்றி மொத்தமாகத் தவறாகக் கூறுகிறார்கள் என்ற கருத்தில் அந்த வசனம் உள்ளது.

அடுத்து அவர்கள் மூஸா عَلَيْهِ السَّلَامُ அவர்களின் வரலாற்றைத் தங்கள் ஆதாரமாக அந்த வழிகேடர்கள் வைக்கிறார்கள். அல்லாஹ் அது பற்றிய வசனத்தில் சூனியக்காரர்கள் ஒரு பெரிய சூனியத்தைக் கொண்டு வந்தார்கள் எனக் கூறியுள்ளான். எனவே கண்ணுக்குத் தெரியுமாறு ஒரு பொருளை மாற்றிக் காட்டுவதுதான் பெரிய சூனியம் எனவும், அதைத் தவிர மக்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துவது, கணவன் மனைவிக்கு இடையே பிரிவினை ஏற்படுத்துவது என்பன போன்ற சூனியம் ஏதும் இல்லை என அவர்கள் வாதத்தை வைக்கிறார்கள்.

ஸூரத்துல் அஃராஃப் (சிகரங்கள்)

7:116 قَالَ اَلْقُوْا ۚ فَلَمَّاۤ اَلْقَوْا سَحَرُوْۤا اَعْيُنَ النَّاسِ وَاسْتَرْهَبُوْهُمْ **وَجَآءُوْ بِسِحْرٍ عَظِيْمٍ**

7:116. அதற்கு (மூஸா), ‘‘நீங்கள் (முதலில்) எறியுங்கள்’’ என்று கூறினார். அவ்வாறே அவர்கள் (தம் கைத்தடிகளை) எறிந்தார்கள்; மக்களின் கண்களை மருட்டி அவர்கள் திடுக்கிடும்படியான **மகத்தான சூனியத்தை செய்தனர்.**

அதில் *அளீம்* என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளான். அந்த சொல் ஒன்றை விட ஒன்றை பெரியது என ஒப்பிட்டுக் காட்ட பயன்படுத்துவான். அதனை விடப் பெரிய ஒன்று கிடையாது என்று வாதிட முடியாது. அப்போதைக்கு அது பெரிய ஒன்று என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே இந்த வாதமும் சரியாக இருக்க முடியாது. இது போல அவர்கள் பலவாறு ஆதாரங்களைக் கூற முயற்சி செய்யலாம். நாம் அது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

Aqeedah 27 Policy on Companions in Ahlus Sunnah val Jama'a - Part 1

அகீதா 27 - ஸஹாபாக்கள் குறித்த அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய கொள்கை - பாகம் 1

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

இந்த சமுகத்தில் சில ஸஹாப்பாக்களை கண்ணியப்படுத்துகிறோம் என்ற பெயரில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவுக்கு நிகராக, அவனது பண்புகளைக் கொடுக்கிறார்கள். சிலர் அவர்களை திட்டுவதும், சபிப்பது, அவர்களின் வழிமுறைக்கு மாறுபடுவது என்ற நிலையில் உள்ளார்கள். எனவே நாம் இது குறித்து எந்த நிலையை எடுக்க வேண்டும் என்பதை அறிவது கடமையாகும். குர்ஆன் ஹதீதின்படி அவர்களைப் பற்றி நாம் அறிய முற்பட வேண்டும்.

முதலில் ஸஹாபாக்கள் என்றால் யார் என்ன? அதன் வரையறை என்ன? யார் அவர்களை முஸ்லிமாக சந்தித்து, அவ்வாறே இஸ்லாத்திலும், ஈமானிலும் மரணிக்க வேண்டும். இமாம் புஹாரி رَحْمَةُ الله, அஹ்மது இப்னு ஹன்.ஃபல்رَحْمَةُ الله , மற்றும் பல அறிஞர்கள் கூறியுள்ளார்கள்.

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمஒரு தடவை "நான் எனது சகோதர்களைப் பார்த்திருக்கலாமே" என தங்களின் ஆசையை வெளிப்படுத்தினார்களா. அதற்கு ஸஹாபிகள், "நாங்கள் உங்கள் சகோதரர்கள் இல்லையா?" என வினவினார்கள். அதற்கு அவர்கள், "அல்ல! நீங்கள் எனது தோழர்கள். எனது சகோதரர்கள் இன்னும் வரவில்லை. அவர்கள் என்னைச் சந்திக்காமலேயே என்னைக் குறித்து விசுவாசம் கொள்வார்கள்." எனக் கூறினார்கள். அவர்கள் பின்னர் வந்த நம்மைக் குறித்துதான் இவ்வாறு கூறியுள்ளார்கள். யார் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمஅவர்களைக் கண்டார்களோ, அவர்கள் ஸஹாபாக்கள். அவர்களைக் காணாமலே விசுவாசம் கொண்டவர்கள் சகோதரர்கள் ஆவார்கள்.

அபு ஜஹல் போன்றவர்களும், முனா.ஃபிகீன்களும் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمஅவர்களைக் கண்டாலும், முன்னர் சொல்லப்பட்ட வரையறையின்படி ஸஹாபாக்கள் அல்லர். ஏனெனில் ஈமானுடன் அவர்கள் சந்திக்கவில்லை. யாரெல்லாம் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمசந்தித்தார்களோ, அவர்கள் அந்த நேரத்தில் முஸ்லிமாக இருக்க வேண்டும். உதாரணமாக அக்கால மன்னர் கைஸரின் தூதர் ஒரு தடவை ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمஅவர்களைச் சந்தித்தார். அந்த நேரத்தில் அவர் இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை. பின்னர் அவர் முஸ்லிமாக ஆனார். எனினும் அவர் ஸஹாபாவாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. சில ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمஇவ்வுலகை விட்டு சென்ற பிறகு, முஸ்லிம் ஆகி, அவர்களை அடக்கம் செய்யும் முன்பு பார்த்தாலும், அவர் ஸஹாபியாக ஆக மாட்டார். உதாரணம் காலித் என்ற ஒரு நபர், இவ்வாறு அவர்களை உயிரோடு காணவில்லை. அதேபோல் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمஅவர்களை முஸ்லிமாகச் சந்தித்தும், அவர்களின் காலத்திலேயோ, அல்லது அவர்களின் மறைவிற்குப் பிறகோ இஸ்லாத்தை விட்டு வெளியேறி விட்டால், அவர்களும் ஸஹாபாக்கள் அல்ல. யார் அவர்களை முஸ்லிமாக சந்தித்து, அவ்வாறே இஸ்லாத்திலும், ஈமானிலும் மரணித்தார்களோ அவர்கள் மட்டும்தான் ஸஹாபாக்கள் ஆவார்கள்.

ஸஹாபாக்களின் சிறப்பு என்ன? ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் தோழர்களாக அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى தேர்ந்தெடுத்துள்ளான். இந்த ஜமாஅத்தை, முதன்முதலாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களாக, முதல் ஈமான் உள்ளவர்களாக, முதல் அழைப்பாளர்களாக, ஹதீதுகளை முதன் முதலாக அறிவிக்கக் கூடியவர்களாக, முதன் முதலாக ஜிஹாத் செய்யக் கூடிய பாக்கியம் உடையவர்களாக ஆக்கியுள்ளான். இவ்வளவு சிறப்புக்கும் சொந்தக்காரர்களாக ஆக்கியுள்ளான்.

இவர்களின் சிறப்பு குறித்து குர்ஆனிலும், ஹதீதிகளும் உள்ள சான்றுகள்.

ஸூரத்துத் தவ்பா (மனவருந்தி மன்னிப்பு தேடுதல்)

9:100 وَالسّٰبِقُوْنَ الْاَوَّلُوْنَ مِنَ الْمُهٰجِرِيْنَ وَالْاَنْصَارِ وَالَّذِيْنَ اتَّبَعُوْهُمْ بِاِحْسَانٍ ۙ رَّضِىَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ وَاَعَدَّ لَهُمْ جَنّٰتٍ تَجْرِىْ تَحْتَهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَاۤ اَبَدًا ؕ ذٰ لِكَ الْـفَوْزُ الْعَظِيْمُ

9:100. இன்னும் முஹாஜிர்களிலும், அன்ஸார்களிலும், முதலாவதாக (ஈமான் கொள்வதில்) முந்திக்கொண்டவர்களும், அவர்களை(எல்லா) நற்கருமங்களிலும் பின் தொடர்ந்தவர்களும் இருக்கின்றார்களே அவர்கள் மீது அல்லாஹ் திருப்தி அடைகிறான்; அவர்களும் அவனிடம் திருப்தியடைகின்றார்கள்; அன்றியும் அவர்களுக்காக, சுவனபதிகளைச் சித்தப்படுத்தியிருக்கின்றான், அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும், அவர்கள் அங்கே என்றென்றும் தங்கியிருப்பார்கள் - இதுவே மகத்தான வெற்றியாகும்.

ஸஹாபாக்களையும், அவர்களைத் தொடர்ந்து வந்தவர்களும் வெற்றி பெற்றவர்களாக அல்லாஹ் கூறியுள்ளான்.

புஹாரி மற்றும் முஸ்லிம் ஹதீதுகள்: 29

2652. حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ كَثِيرٍ، أَخْبَرَنَا سُفْيَانُ، عَنْ مَنْصُورٍ، عَنْ إِبْرَاهِيمَ، عَنْ عَبِيدَةَ، عَنْ عَبْدِ اللَّهِ ـ رضى الله عنه ـ عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ "" خَيْرُ النَّاسِ قَرْنِي، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ، ثُمَّ يَجِيءُ أَقْوَامٌ تَسْبِقُ شَهَادَةُ أَحَدِهِمْ يَمِينَهُ، وَيَمِينُهُ شَهَادَتَهُ "". قَالَ إِبْرَاهِيمُ وَكَانُوا يَضْرِبُونَنَا عَلَى الشَّهَادَةِ وَالْعَهْدِ.

2652. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களில் சிறந்தவர்கள் என் தலைமுறையினர். பிறகு அவர்களை அடுத்து வருபவர்கள். பிறகு அவர்களை அடுத்து வருபவர்கள். பிறகு சில சமுதாயங்கள் வரும். அவர்களின் சாட்சியம் அவர்களின் சத்தியத்தையும், அவர்களின் சத்தியம் அவர்களின் சாட்சியத்தையும் முந்திக் கொள்ளும். என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவித்தார். இப்ராஹீம் நகயீ(ரஹ்), '(சிறுவர்களான) எங்களை அவர்கள் (நபித் தோழர்கள்), 'அஷ்ஹது பில்லாஹ்' அல்லாஹ்வைக் கொண்டு சாட்சியம் அளிக்கிறேன்' என்றோ, 'அல்லாஹ்வுடன் செய்த ஒப்பந்தப்படி' என்றோ கூறினால் கடிந்து (கண்டித்து) வந்தார்கள்' என்று கூறினார். Book :52 - **ஸஹீஹுல் புகாரி**

4962. ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது: ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம், "மக்களில் சிறந்தவர் யார்?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "(மக்களில் சிறந்தவர்கள்) நான் யாரிடையே இருக்கிறேனோ அந்தத் தலைமுறையினர். பிறகு இரண்டாவது தலைமுறையினர். பிறகு மூன்றாவது தலைமுறையினர்" என்று விடையளித்தார்கள். இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. Book : 44 - **ஸஹீஹ் முஸ்லிம்**

மக்களில் சிறந்தவர்கள் எந்த மக்கள் மத்தியில் நான் அனுப்பப்பட்டிருக்கிறேனோ (ஸஹாபாக்கள்) அவர்கள், பின்னர் அவர்களைத் தொடர்ந்து வந்தவர்கள்.'' இவ்வாறு அவர்கள் சிறந்தவர்கள் என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சான்று அளித்துள்ளார்கள்.

ஸூரத்துல் ஃபத்ஹ் (வெற்றி)

48:29 مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ ؕ وَالَّذِيْنَ مَعَهٗۤ اَشِدَّآءُ عَلَى الْكُفَّارِ رُحَمَآءُ بَيْنَهُمْ‌ تَرٰىهُمْ رُكَّعًا سُجَّدًا يَّبْتَغُوْنَ فَضْلًا مِّنَ اللّٰهِ وَرِضْوَانًا سِيْمَاهُمْ فِىْ وُجُوْهِهِمْ مِّنْ اَثَرِ السُّجُوْدِ‌ ؕ ذٰ لِكَ مَثَلُهُمْ فِى التَّوْرٰىةِ ۛۚ وَمَثَلُهُمْ فِى الْاِنْجِيْلِ ۛۚ كَزَرْعٍ اَخْرَجَ شَطْئَـهٗ فَاٰزَرَهٗ فَاسْتَغْلَظَ فَاسْتَوٰى عَلٰى سُوْقِهٖ يُعْجِبُ الزُّرَّاعَ لِيَـغِيْظَ بِهِمُ الْكُفَّارَ‌ ؕ وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ مِنْهُمْ مَّغْفِرَةً وَّاَجْرًا عَظِيْمًا

48:29. முஹம்மது(ஸல்) அல்லாஹ்வின் தூதராகவே இருக்கின்றார்; அவருடன் இருப்பவர்கள், காஃபிர்களிடம் கண்டிப்பானவர்கள், தங்களுக்கிடையே இரக்கமிக்கவர்கள். ருகூஃ செய்பவர்களாகவும், ஸுஜூது செய்பவர்களாகவும்; அல்லாஹ்விடமிருந்து (அவன்) அருளையும் (அவனுடைய) திருப்பொருத்தத்தையும் விரும்பி வேண்டுபவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர்; அவர்களுடைய அடையாளமாவது: அவர்களுடைய முகங்களில் (நெற்றியில்) ஸுஜூதுடைய அடையாளமிருக்கும்; இதுவே தவ்ராத்திலுள்ள அவர்களின் உதாரணமாகும், இன்ஜீலிலுள்ள அவர்கள் உதாரணமாவது: ஒரு பயிரைப் போன்றது; அது தன் முளையைக் கிளப்பி(ய பின்) அதை பலப்படுத்துகிறது; பின்னர் அது பருத்துக் கனமாகி, பிறகு விவசாயிகளை மகிழ்வடையச் செய்யும் விதத்தில், அது தன் அடித்தண்டின் மீது நிமிர்ந்து செவ்வையாக நிற்கிறது; இவற்றைக் கொண்டு நிராகரிப்பவர்களை அவன் கோப மூட்டுகிறான் - ஆனால் அவர்களில் எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான கூலியையும் வாக்களிக்கின்றான்.

ஸஹாபாக்கள் குறித்து இவ்வசனத்தில் சிறப்பிக்கிறான். மேலும் பல சான்றுகள் குர்ஆனிலும், ஹதீதுகளிலும் வந்துள்ளன. அபு பக்ரு رَضِيَ الله عَنْهُ , உமர் رَضِيَ الله عَنْهُ போன்ற சில குறிப்பிட்ட ஸஹாபாக்களின் சிறப்புகள், முஹாஜிரீன்கள், அன்ஸாரிகள், பத்ருப் போரில் கலந்து கொண்ட ஸஹாபாக்கள், பையத்துல் ரிழ்வான் ஸஹாபாக்கள் போன்ற பல தனித்தனி சிறப்புகளும் அதிகமாக உள்ளன. இவ்வாறு சிறப்பிக்கப்பட்ட ஸஹாபாக்களை நேசிப்பது, கண்ணியப்படுத்துவது அகீதாவைச் சேர்ந்ததாகும். இதனால்தான், அந்தக் கால அறிஞர்கள் அகீதாவைக் கூறும்போது, ஸஹாபாக்கள் குறித்த நிலைபாட்டைக் கூறியுள்ளார்கள்.

ஆனால் அவர்கள் குறித்து கூறுபவர்களில் பல ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. சில ஸஹாப்பாக்களை கண்ணியப்படுத்துகிறோம் என்ற பெயரில் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவுக்கு நிகராக, அவனது பண்புகளைக் கொடுக்கிறார்கள். சிலர் அவர்களை திட்டுவதும், சபிப்பது, அவர்களின் வழிமுறைக்கு மாறுபடுவது என்ற நிலையில் உள்ளார்கள். எனவேதான் அக்கால அறிஞர்கள் அவர்கள் நிலைகுறித்து குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்கள்.

உதாரணமாக, அலி رَضِيَ الله عَنْهُ, ∴பாத்திமா رَضِيَ اللهُ عَنْهَاமற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு வரம்பு மீறிய பண்புகளைக் கொடுத்தார்களோ, உதாரணமாக ஷிஆக்கள், அவர்கள் நிலை தவறானதாகும். அதுபோல, அவர்களை திட்டுவதும், சபிப்பது, அவர்களின் வழிமுறைக்கு மாறுபடுவது என்பதும் தவறானதாகும். இது குறித்து இங்கு கூறுவோம்.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ, “ஸஹாபாக்களை நீங்கள் திட்ட வேண்டாம். உங்களில் ஒருவர் உஹது மலையளவுக்குத் தங்கத்தை (அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவின் வழியில்) செலவிட்டாலும், அத்தோழர்கள் ஒரு *முத்* அளவிற்கு (முக்கால் கிலோ) அல்லது அரை *முத்* அளவிற்கு (அல்லாஹ் வின் வழியில்) செலவிட்ட நன்மையை அடையாது” என்று கூறியுள்ளார்கள். இரண்டும் சமமாக ஆகமாட்டாது. இது அவர்களின் தனிச் சிறப்பைக் குறிக்கிறது. அவர்களைத் திட்டக்கூடிய தகுதி நமக்கு இல்லை.

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் இந்தத் தடையை மீறி, ஷிஆக்களும், ஹவாரிஜீன்களும், அவர்களைத் திட்டுவதும், சபிப்பதுமாக இருந்து, வழி கெட்டுப் போய்விட்டார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ஸஹாபாக்களைப் புகழந்திருக்கிறான். விதிவிலக்காக யாரையும் கூறவில்லை. ஒட்டு மொத்தமாகத்தான் புகழந்திருக்கிறான். ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும் குறிப்பிட்டு யாரையும் விலக்கிவிட்டுச் சிறப்பிக்கவில்லை. அவர்கள் சுவனவாசிகள், அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான் எனக் குர்ஆனிலும், ஹதீதுகளிலும் பல சான்றுகள் இருக்க, ஏதோ ஒரு பொய்யான தகவலினாலோ, பொய்யான வரலாறு அடிப்படையிலோ, பதிவினாலோ அல்லது தங்களின் எண்ண ஓட்டத்தினாலோ ஸஹாபாக்களைத் திட்டுவது என்பது, நியாயமில்லை. குர்ஆனிலும், ஹதீதுகளிலும் சிறப்பிக்கப்பட்டிருக்க, தங்களுக்கு ஏதேனும் தவறான கொள்ளை இருந்தால், அவர்களின் சிறப்புதான் நமது மனதில் மேலோங்கி, தவறான எண்ணத்திலிருந்து நாம் மீளவேண்டுமே தவிர, பொய்யான செய்திகளில் நாம் வீழ்ந்து விடக் கூடாது.

உதாரணமாக, மக்காவை வெற்றி கொள்ளும் ஈடுபாட்டில் இருந்த ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ, இது குறித்த தகவலை யாரும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கக் கூடாது என அறிவுறுத்தி இருந்தார்கள். ஆனால் நபித்தோழர்களில் ஒருவரான ஹாத்திப் رَضِي الله عَنْهُ, மக்கத்துக் கா.ஃ.பிர்களுக்கு, மக்காவை நோக்கி ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களும், முஸ்லிம்களும் மக்காவை நோக்கி வருகிறார்கள் எனவும், அவர்கள் நிச்சயம் வெற்றி பெறுவார்கள் என்று ஒரு கடிதத்தை அனுப்பி விட்டார். அவரது இச்செயல் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் அறிவுறுத்தலுக்கு மாற்றமான செயல்தான். இந்த செய்தியை வஹி மூலமாக அறித்துவிட்டான். ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அந்தத் தகவலை அலி رَضِي الله عَنْهُ மற்றும் மற்றுமொரு தோழரிடம் தெரிவித்தார்கள். கடிதம் ஒரு பெண்மணியிடம் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், அவர் இந்தந்த இடத்தில் இருக்கிறார் என்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே சென்று அந்த குறிப்பிட்ட அடையாளம் கொண்ட அப்பெண்மணியிடம் சென்று கடிதத்தைக் கைப்பற்றி வருமாறு அவர்களுக்கு ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அறிவுறுத்தினார்கள். உடனே சென்ற அலி رَضِي الله عَنْهُ அவர்களும், அத்தோழரும், அப்பெண்ணைக் கண்டு கடிதம் குறித்து விசாரிக்க தம்மிடம் அப்படி ஒன்றும் இல்லை என மறுத்துவிட்டார். பின்னர் அவர்கள் அவரை மிரட்ட, தம் தலையிலிருந்து அக்கடிதத்தை எடுத்துக் கொடுக்க அந்தக் கடிதத்துடன் மீண்டு வந்தார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கடிதம் கொடுத்து அனுப்பிய ஹாத்திப் رَضِي الله عَنْهُ யை விசாரித்தார்கள். அங்கிருந்த உமர் رَضِي الله عَنْهُ, தங்களுக்கு அனுமதியளித்தால் அந்த முனா.ஃ.பிக்கின் தலையை எடுத்துவிடுவதாக ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் கூறினார்கள். அவரின் செயல் காரணமாக அவ்வாறு முனா.ஃ.பிக் என்று உமர் பயன்படுத்தினர்கள். ஆனால் அவருக்கு முனா.ஃ.பிக் என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டாம் எனவும், அதற்குக் காரணம் அவர் பத்ருப் போரில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் எனவும் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறனார்கள். பத்ருப் போரில் கலந்து கொண்ட ஸஹாபாக்களின் சிறப்பாவது, அந்த நாளுக்குப் பிறகு, அவர்கள் என்ன தவறு செய்தாலும், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى மன்னித்து விடுவதாக வாக்களித்தான்.

இதுதான் நம்முடைய நிலைபாடு. ஸஹாபாக்கள் இவ்வாறு தவறு செய்துவிட்டார்கள் என நாம் நினைக்காமல், ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் அவர்களை எப்படி தவறான சொல்லைப்

பயன்படுத்தக் கூடாது என்றார்களோ, அப்படியே நாமும் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தவறு செய்துவிட்டார்களே என காரணம் தேடி அவர்கசை சபிக்கவோ, திட்டவோ கூடாது.

இந்த சம்பவம், நாம் ஸஹாபாக்கள் குறித்து எவ்வித நிலைபாடு எடுக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுக்கிறது. உமர் رَضِي الله عَنْهُ அவர்களையே ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவ்வாறு தவறாகக் கூறக் கூடாது என்று தடுக்கும் போது, உமர் رَضِي الله عَنْهُ அவர்களைவிட பன்மடங்கு தரம் குறைந்த நாம் எவ்வாறு ஸஹாபாக்களைக் குறை கூற முடியும்?

ஷிஆக்கள் அபு பக்ரு رَضِي الله عَنْهُ மற்றும் உமர் رَضِي الله عَنْهُ குறித்து மிகவும் அவதூறாகக் கூறுவார்கள். ஒவ்வொரு நாளும், அவர்களையும் ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களையும் திட்டிக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் குறித்து நாம் பின்னர் கூறுவோம். ஆனால் அஹ்லுஸ் ஸுன்னாஹ் என்று தங்களைக் கூறிக் கொண்டு சிலர் ஸஹாபாக்களைக் குறை கூறுபவர்கள் பற்றி நாம் இங்கு அறிய முற்படுவோம். அவர்கள் உதாரணமாக, உதுமான் رَضِي الله عَنْهُ மற்றும் முஆவியா رَضِي الله عَنْهُ ஆகியோர் குறித்து அவதூறு கூறுவார்கள். உதுமான் رَضِي الله عَنْهُ அவர்களின் ஆட்சிகாலம், இஸ்லாமிய வரலாற்றில் ஒரு சரிவு என்று அவர்கள் கூறுகிறார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சான்றளித்த நேர்வழி பெற்ற கலி∴பாக்களின் ஒருவராக, உதுமான் رَضِي الله عَنْهُ அவர்களைச் சிறப்பித்து கூறியிருக்கும்போது, அவர்களைப் பற்றி இவ்வாறு அவதூறு கூறுவது எப்படி சரியாக இருக்க முடியும். இவ்வாறு கூறுவதை நாம் புறந்தள்ளி விட வேண்டும். முஆவியா رَضِي الله عَنْهُ அவர்களைக் குறித்து, அவர் வேறு வழியில்லாமல், கடைசி நேரத்தில் இஸ்லாத்தைத் தழுவியதாக குறை கூறுவார்கள். இவ்வாறு அவதூறு கூறுவது, முனா∴பிக்தனம் என்பது போல ஆகிவிடும். வஹியை எழுது வைப்பதற்காக ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ நியமித்த ஸஹாபாக்களும் முஆவியா رَضِي الله عَنْهُ அவர்களும் ஒருவர். அப்படிப்பட்ட அவர்களை அவ்வாறு எழுத எப்படித் தேர்ந்தெடுத்திருப்பார்கள். இவ்வாறு அவதூறு பேசுவது எந்த அளவிற்கு தவறானது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு முஆவியா அவர்களைத் திட்டமிட்டு அவதூறு செய்யும் காரணத்தை அறிந்து கொள்ளுங்கள். அவர்களுக்கும், அலி رَضِي الله عَنْهُ அவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால், முஸ்லிம்கள் இரு குழுவினராகப் பிரிந்து விட்டார்கள். உதுமான் رَضِي الله عَنْهُ அவர்களை ஹாரிஜியாக்கள் கொலை செய்து விட்டார்கள். அதன் பிறகு அலி رَضِي الله عَنْهُ கலி∴பாவாக நியமிக்கப்பட்டார்கள். அந்த சமயத்தில் முஆவியா رَضِي الله عَنْهُ அவர்களும், அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களும், உதுமான் رَضِي الله عَنْهُ அவர்களைக் கொலை செய்தவர்களை தண்டிக்கும் விதமாக அவர்களை உடனே கொல்ல வேண்டும் என கலி∴பா பொறுப்பேற்ற அலி رَضِي الله عَنْهُ அவர்களிடம் வற்புறுத்தினார்கள். அலி رَضِي الله عَنْهُ அவர்களோ அவர்கள் கொல்லப்பட வேண்டும் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை எனவும், எனினும் தற்சமயம் பொறுமை காக்குமாறு வேண்டினார்கள். அந்தக் குழப்பவாதிகளை உடனே கொல்வதில் உள்ள சிக்கலை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அதன் காரணமாக, மதினாவில் குழப்பம் அதிகரிக்க வாய்ப்புளதாகக் கருதினார்கள். எனவே பொறுமை காத்தார்கள். ஆனால் முஆவியா رَضِي الله عَنْهُ அவர்களோ உடனடியாக முடிவெடுக்க வேண்டும் என்றார்கள். இதன் காரணமாக முஸ்லிம்கள் இரண்டு குழுவினராகப் பிரிந்தார்க்ள. எனவே முஆவியா رَضِي الله عَنْهُ வேண்டுமென்றே சமுதாயத்தைப் பிரித்து, தாங்கள் ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தார்கள் என இவர்கள் அவர்களின் மீது அவதூறு கூறுகிறார்கள். முஸ்லிம்களின் மத்தியில் பிளவை ஏற்படுத்திவிட்டார்கள் எனக் குற்றம் சாட்டுகிறார்கள்.

அலி رَضِي الله عَنْهُ அவர்களின் பொறுமைக்கு ஹதீதில் ஆதாரம் உள்ளது. ஹவாரிஜின் ஒருவரைப் பற்றி ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ குறிப்பிடுகையில் அவர் இந்த மாதிரி என அடையாளங்களைக் கூறினார்கள். அந்த ஹவாரிஜின் தலைவரை சத்தியத்தை நொருங்கி இருக்கும் இரண்டு கூட்டத்தினருள், சத்தியத்தை அதிகமாக நெருங்கியக் கூட்டத்தினர்தாம் கொலை செய்வார்கள் என ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ முன்னறிவிப்பு செய்திருந்தார்கள்.

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் வர்ணித்த அந்த ஹவாரிஜின் தலைவனை அலி رَضِي الله عَنْهُ அவர்கள் ஹரூரா என்ற இடத்தில் நடந்த போரில் கொன்றார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் கூற்றுபடி இருவரும் சத்தியத்தை நெருங்கி இருக்கும் கூட்டத்தினர்தாம். அவர்களில் அதிகம் நெருங்கியவர்கள் அலி رَضِي الله عَنْهُ அவர்களின் கூட்டத்தினர் ஆகும். எனவே இரு கூட்டத்தினரும் சத்தியத்தில் இருந்தார்கள் என்பதை எடுத்துக் கொள்ள வேண்டும் முஆவியா رَضِي الله عَنْهُ அவர்கள் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் துணைவியார் அன்னை உம்மு ஹபீபா رَضِي الله عَنْهَا அவர்களின் தம்பி, வஹீ எழுத நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர், தூரமான, கடற்பயணம் மேற் கொள்ள வேண்டிய நாட்டிற்கு இஸ்லாத்தை எடுத்துச் சென்றவர் என்ற பல சிறப்புகள் அவர்களுக்கு உண்டு. அப்படிப்பட்டவரை நாம் அவதூறு கூறுவது எந்த விதத்தில் ஏற்றுக் கொள்ள முடியும.

அப்துல்லாஹ் இப்னு முபாரக் என்ற தலை சிறந்த ஹதீது கலை அறிஞரிடம் முஆவியாஹ் رَضِي الله عَنْهُ சிறந்தவரா, உமர் இப்னு அப்துல் அஜீஸ் சிறந்தவரா என்று வினவிப்பட்டது. முஆவியா رَضِي الله عَنْهُ நபித்தோழர். உமர் இப்னு அப்துல் அஜீஸ் தாபியீனைச் சேர்ந்தவர். இரண்டு வருடம் கலி∴பாவாக இருந்தவர். ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுடன் புனிதப் போரில் முஆவியா رَضِي الله عَنْهُ பங்கு கொண்ட நேரத்தில், அவர்கள் பயணித்த குதிரையின் மூக்கில் படிந்திருக்கும் தூசியானது உமர் பின் அப்துல் அஜீஸை விடச் சிறந்தது என்ற கடுமையான பதிலை அவர் கொடுத்தார். ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களை இமாமாகத் தொழுத முஆவியா رَضِي الله عَنْهُ அவர்கள், ருக்வுக்குப் பிறகு அவர்கள் சொல்லிய ஸமி அல்லாஹு லிமன ஹமிதா என்பதற்கான பதிலாக முஆவியா ரப்பனா லக்கல் ஹம்து சொல்ல வாய்ப்பளித்த அவர்களையா உமர் இப்னு அப்துல் அஜீஸுடன் ஒப்பிடுகிறீர்கள் எனக் கடிந்தார்.

ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் கூற்றின்படி, முதல் முப்பது வருடங்களுக்குப் பிறகு, மக்களைக் கடித்து எறியக் கூடிய ஒரு ஆட்சி வரும் என்பதன்படி, அலி رَضِي الله عَنْهُ அவர்களுக்குப் பிறகு 30 ஆண்டுகளுக்குப் பிறகு, முஆவியா رَضِي الله عَنْهُ காலத்து ஆட்சி என்பதாக குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் பிறகு உள்ள எல்லா ஆட்சியையும் அவ்வாறு எனக் கூறமுடியாது. மிகவும் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கும் உமர் இப்னு அப்துல் அஜிஸ் ஆட்சியும் அந்த 30 வருடங்களுக்குப் பிறகு வந்த ஒன்றுதான். முஆவியா رَضِي الله عَنْهُ அவர்களின் ஆட்சி குறித்து ஒரு முஹத்திஸ் கூறும்போது, அவர்களது ஆட்சி பற்றி ஒருவர் அறிந்தால், அவர்கள்தாம் வாக்களிக்கப்பட்ட மஹ்தி عَلَيْهِ وَسَلَّمَ என்று கூறிவிடுவார்கள். மஹ்தி عَلَيْهِ وَسَلَّمَ இப்பூமியில் நீதியை நிலை நாட்டக் கூடியவர்கள் என ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியிருந்தார்கள். இந்த அளவுக்கு முஆவியா رَضِي الله عَنْهُ அவர்கள் பத்து வருடங்கள் ஆட்சி புரிந்தார்கள்.

எனவே நாம் எந்த ஸஹாபாக்களையும் இகழாமல், அவர்களின் பெயருக்குப் பிறகு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அவர்களைப் பொருந்திக் கொண்டான் என்ற பொருளுள்ள ரழியல்லாஹ் அன்ஹு என்று கூறவேண்டும்.

Aqeedah 28 Policy on Companions in Ahlus Sunnah val Jama'a - Part 2

அகீதா 28 - ஸஹாபாக்கள் குறித்த அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய கொள்கை - பாகம் 2

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீரி

ஹதீது: ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறுகிறார்கள், "யூதர்கள் தங்களுக்குக்கிடையில் கருத்து வேறுபாடு கொண்டு 71 கூட்டத்தினராக பிரிந்தார்கள். நஸாராக்கள் (கிருத்துவர்கள்) தங்களுக்குக்கிடையில் கருத்து வேறுபாடு கொண்டு 72 கூட்டத்தினராக பிரிந்தார்கள். என்னுடைய சமுதாயம் கொள்கை விஷயத்தில் தங்களுக்குக்கிடையில் கருத்து வேறுபாடு கொண்டு 73 கூட்டத்தினராக பிரிந்தார்கள். எல்லோரும் நரகத்திற்குச் செல்வார்கள், ஒரே ஒரு கூட்டத்தினரைத் தவிர." இந்த ஹதீதில் ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ நாம் தொழுகை, நோன்பு போன்ற மஸாயில்கள் விஷயத்தில் கருத்து வேறுபாடுகள் கொள்வோம் என்று கூறவில்லை. மாறாக கொள்கை விஷயத்தில்தான் மாறுபடுவோம் என்றார்கள். ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தங்களுடைய உம்மத் என்று சொன்னார்கள். எனவே முஸ்லிம்களின் மத்தியில்தான் 73 கூட்டத்தினர் உருவாகுவார்கள் என்றார்கள். அந்த கூட்டத்தினரில் 72 கூட்டத்தினர் நரகம் செல்வார்கள் என்றார்கள். அவர்கள் தாங்கள் இஸ்லாத்தில் இருப்பதாகக் கூறிக் கொண்டாலும் வழி கேட்டில்தான் இருக்கிறார்கள் என்பது இதிலிருந்து அறிய முடிகிறது. இவர்கள் தங்களின வழிதான் சரியானது என்பதற்கான ஆதாரத்தை என்று குர்ஆன் மற்றும் ஹதீதிலிருந்தே காட்டுவார்கள். அதனாலேயே அவர்கள் நேர்வழி பெற்றவர்கள் அல்லர் என்பதனையும் நாம் அறியலாம். குர்ஆன் ஹதீது என்று பேசக் கூடிய 73 கூட்டத்தினரில் ஒரு கூட்டத்தினர் மட்டும்தான் நேர்வழியில் உள்ளவர்கள்.

உதாரணமாக, ஹவாரிஜிகள் என்ற கூட்டத்தினர் தாம் முதன்முதலாக வழி கெட்ட கூட்டமாகும். அந்த கூட்டத்தினரில் ஒரு ஸஹாபி கூட இல்லை. அவர்கள் 'நிச்சயமாக ஆட்சியதிகாரம், அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கே சொந்தமானது (இனில் ஹுக்மு இல்லா லில்லாஹி) என்ற வசனத்தை எடுத்துக் கொண்டு, மனிதர்கள் ஏதேனும் ஒரு விஷயத்தில் தீர்ப்பு சொல்ல விழையும் போது, இந்த வசனத்தின்படி மனிதர்கள் யாரும் தீர்ப்புச் சொல்லக் கூடாது எனத் தடுப்பார்கள். தீர்ப்பு சொல்பவராக எப்படி மனிதரை நியமிக்கலாம் என்று ஸஹாபாக்களையே கா.்.பிர்கள் என்பார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு உரித்தான தீர்ப்பு செய்யும் உரிமையை மனிதர்களுக்குக் கொடுத்து நியமித்ததால் அவ்வாறு சொன்னார்கள்.

இவர்கள் அடிக்கடி சொல்வது குர்ஆனின் வாக்கியம்தான். ஆனால் அவர்கள் அழைப்பது அசத்தியத்தின்பால் என அவர்களைப் பற்றி அலி رَضِيَ اللّٰهُ عَنْهُ கூறினார்கள். இவ்வாறுதான் குர்ஆன் ஹதீதுகளின் மூலம் சத்தியத்தைக் கூறாமல், அசத்தியத்தைக் கூறுவார்கள்.

இது போல் ஷிஆக்கள் குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் சில முனா.்.பிக்களைச் சபித்துக் கூறிய வசனங்களை, அபு பக்ரு رَضِيَ اللّٰهُ عَنْهُ, உமர் رَضِيَ اللّٰهُ عَنْهُ மற்றும் அன்னை ஆயிஷா رَضِيَ اللّٰهُ عَنْهَا அவர்களைக் குறிக்கும் என்று கூறுவார்கள். இவ்வாறு அவர்கள் குர்ஆன் வசனங்கள் மூலம் அசத்தியத்தைக் கூறுகிறார்கள்.

இதுபோலத்தான் விதியை மறுக்கும் கத்ரியாக்கள், நவீன கூட்டமான 19, 19 என்றுக் கூறிக் கொள்ளும் ஒரு கூட்டத்தனர் போன்ற வழி கெட்ட கூட்டத்தினர் அனைவரும் தங்களின் கருத்துக்கு குர்ஆனைத்தான் ஆதாரமாக எடுத்துக் கூறுகின்றனர்.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் எந்த இஸ்லாத்தை போதித்தார்களோ, அதனைப் பின்பற்றும் அந்த ஒரு கூட்டம்தான் நேர்வழி பெற்று சுவனம் செல்லும் கூட்டமாகும். ஆனால் அந்த ஒரு கூட்டம் யார் என்பதனை எவ்வாறு அறிந்து கொள்வது? இக்காலத்திலும் பல கூட்டங்கள் இருப்பதை நாம் காணலாம். இவர்களில் குர்ஆன் ஹதீதை சரியான முறையில் விளக்கம் கொடுக்கும் கூட்டம் எது என்று எவ்வாறு அறிய முடியும். யார் கொடுக்கும் விளக்கம் சரி என்பதற்கு சொல்பவர்களிடம் யாரிடமாவது அந்தந்தக் கூட்டத்தில் சான்று ஏதும் உள்ளதா? யாரிடமும் தாங்கள் சொல்வதுதான் சரி என்று சொல்வதற்கான சான்று, ஒரு கூட்டத்தினரைத் தவிர வேறு யாரிடத்திலும் இல்லை. நாம் சொல்லக் கூடிய விளக்கம் தான் சரியானது, இதனைப் பின்பற்றினால்தான், வெற்றி அடைவோம் என்று சொல்லும் அந்த ஒரே கூட்டம் யார்?

அதே கேள்வியைத்தான் அன்றைய ஸஹாபாக்கள் ரஸுலுல்லாஹ் صَلَّى اللّٰه عَلَيْهِ وَسَلَّمَ அவர்களிடம் கேட்டார்கள். வெற்றி பெறக் கூடிய அந்த கூட்டம் யார் என அவர்கள் கேட்டார்கள். ‘‘நானும், ஸஹாபக்களாகிய நீங்களும் எந்த வழியில் இருக்கிறோமோ அந்த கூட்டத்தினர்தாம்’’ என்றார்கள்.

Jami At Tirmidhi Hadith No. 2641 Chapter 41 The Book on Faith

كتاب- جامع الترمذي **باب-** كتاب: ايمان و اسلام

حَدَّثَنَا مَحْمُودُ بْنُ غَيْلَانَ، حَدَّثَنَا أَبُو دَاوُدَ الْحَفَرِيُّ، عَنْ سُفْيَانَ الثَّوْرِيِّ، عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ زِيَادٍ بْنِ أَنْعَمُ الْأَفْرِيقِيِّ، عَنْ عَبْدِ اللَّهِ بْنِ يَزِيدَ، عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو، قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: لَيَأْتِيَنَّ عَلَى أُمَّتِي مَا أَتَى عَلَى بَنِي إِسْرَائِيلَ، حَذْوَ النَّعْلِ بِالنَّعْلِ حَتَّى إِنْ كَانَ مِنْهُمْ مَنْ أَتَى أُمَّهُ عَلَانِيَةً لَكَانَ فِي أُمَّتِي مَنْ يَصْنَعُ ذَلِكَ، وَإِنَّ بَنِي إِسْرَائِيلَ تَفَرَّقَتْ عَلَى ثِنْتَيْنِ وَسَبْعِينَ مِلَّةً، وَتَفْتَرِقُ أُمَّتِي عَلَى ثَلَاثٍ وَسَبْعِينَ مِلَّةً كُلُّهُمْ فِي النَّارِ إِلَّا مِلَّةً وَاحِدَةً، قَالُوا: وَمَنْ هِيَ يَا رَسُولَ اللَّهِ ؟ قَالَ: مَا أَنَا عَلَيْهِ وَأَصْحَابِي ، قَالَ أَبُو عِيسَى: هَذَا حَدِيثٌ حَسَنٌ غَرِيبٌ مُفَسَّرٌ، لَا نَعْرِفُهُ مِثْلَ هَذَا إِلَّا مِنْ هَذَا الْوَجْهِ.

யூதர்கள் 71 கூட்டங்களாகப் பிரிந்தார்கள். அவர்களில் ஒரு கூட்டம் சுவர்க்கத்தில் எழுபது கூட்டம் நரகத்தில். கிறிஸ்தவர்கள் 72 கூட்டங்களாகப் பிரிந்தார்கள். அவர்களில் ஒரு கூட்டம் சுவர்க்கத்தில் எழுபத்தி ஒரு கூட்டம் நரகத்தில். முஹம்மதின் ஆத்மா எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக, எனது உம்மத் 73 கூட்டங்களாகப் பிரிவார்கள். அவர்களில் ஒரு கூட்டம் சுவர்க்கத்தில் எழுபத்தி இரண்டு கூட்டம் நரகத்தில். (அப்போது அந்த ஒரு கூட்டம்) யாரென்று கேட்கப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : 'இன்று நானும் எனது தோழர்களும் எதன் மீதிருக்கின்றோமோ' அதில் இருப்பவர்கள்.

மற்றொரு ஹதீதில், ‘‘அல் ஜமாஆ’’ என்றார்கள். இதுவும் ஸஹாபாக்களைத்தான் கூறிக்கும். எனவே ஸஹாபாக்கள் எந்த வழியில் சென்றார்களோ, அந்த வழியைப் பின்பற்றி நாம் நடந்தால், சுவனத்தை அடையலாம்.

அவர்களைத் தவிர கியாம நாள்வரை யாரிடமும் தங்கள் வழிதான் சரியான வழி என்பதற்காக சான்று இருக்காது.

ஸூரத்துன்னிஸாவு (பெண்கள்)

4:115 وَمَنْ يُّشَاقِقِ الرَّسُوْلَ مِنْۢ بَعْدِ مَا تَبَيَّنَ لَـهُ الْهُدٰى وَ يَـتَّبِعْ غَيْرَ سَبِيْلِ الْمُؤْمِنِيْنَ نُوَلِّهٖ مَا تَوَلّٰى وَنُصْلِهٖ جَهَنَّمَ‌ؕ وَسَآءَتْ مَصِيْرًا ۝

4:115. எவனொருவன் நேர்வழி இன்னது என்று தனக்குத் தெளிவான பின்னரும், (அல்லாஹ்வின்) இத்தூதரை விட்டுப் பிரிந்து, முஃமின்கள் செல்லாத வழியில் செல்கின்றானோ, அவனை அவன் செல்லும் (தவறான) வழியிலேயே செல்லவிட்டு நரகத்திலும் அவனை நுழையச் செய்வோம்; அதுவோ, சென்றடையும் இடங்களில் மிகக் கெட்டதாகும்.

இந்த வசனத்தில் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுடன், இருக்கும் மு.ஃ.மின்களின் வழி என்பது ஸஹாபாக்களின் வழிதான் என்பதால், இதுவும் ஒரு ஆதாரமாகும்.

ஸூரத்துல் பகரா (பசு மாடு)

2:137 فَاِنْ اٰمَنُوْا بِمِثْلِ مَآ اٰمَنْتُمْ بِهٖ فَقَدِ اهْتَدَوْا ‌ۚ وَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا هُمْ فِىْ شِقَاقٍ ‌ۚ فَسَيَكْفِيْکَهُمُ اللّٰهُ ‌ۚ وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ؕ

2:137. ஆகவே, நீங்கள் ஈமான் கொள்வதைப்போல் அவர்களும் ஈமான் கொண்டால் நிச்சயமாக அவர்கள் நேர்வழியை பெற்றுவிடுவார்கள்; ஆனால் அவர்கள் புறக்கணித்துவிட்டால் நிச்சயமாக அவர்கள் பிளவில்தான் இருக்கின்றனர். எனவே அவர்களி(ன் கெடுதல்களி)லிருந்து உம்மைக் காப்பாற்ற அல்லாஹ்வே போதுமானவன்; அவன் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், (எல்லாம்) அறிந்தோனுமாகவும் இருக்கிறான்.

இந்த வசனத்தில் நாம் யாரைப் போல் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறான்? அந்த வசனம் இறங்கும்போது இருந்த மு.ஃ.மின்கள் ஸஹாபாக்கள்தாம். எனவே அவர்கள் நம்பிக்கை கொண்டது போல் மற்றவர்களும் நம்பிக்கை கொள்ள வேண்டும் என அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கூறுகிறான்.

இன்று சிலர் சூனியத்தை மறுக்கிறார்கள். ஸஹாபாக்கள் நம்பிக்கை கொண்டார்கள். அதை செய்வது ஷிர்க்கான காரியம் என்று கூறினார்கள். அவ்வாறு அவர்கள் நம்பிக்கை கொண்ட ஒன்றை இவர்கள் மறுப்பதால், யார் வழிகேட்டில் உள்ளாரகள் என அறியலாம். ஒருவர் தம் மனோ இச்சையை தவிர்த்துவிட்டு, இந்த வசனத்தை நாம் எடுத்துக் கொண்டால், நாம் யாரைப் பின்பற்ற வேண்டும் என்பதை தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

எனவே நாம் ஸஹாபாக்களைப் பின்பற்றச் சொல்லும் காரணங்களில் ஒன்று குர்ஆனில் கூறப்பட்ட இந்த வசனங்கள். மேலும் மக்களின் சிறந்தவர்கள் யார் என ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ யாரைக் குறிப்பிட்டுள்ளானோ அவர்களைப் பின்பற்று அவசியமாகிறது அல்லவா

இவ்வாறு ஸஹாபாக்களின் சிறப்புகளை, அவர்களின் ஈமானின் சிறப்புகளை குர்ஆன் ஹதீதுகளில் காணலாம். முன்னர் கூறப்பட்டுள்ள அத்தியாயம் தவ்பா 100ல் அன்ஸாரிகள், முஹாஜிரீன்கள் மற்றும் மு.ஃ.மீன்களையும் பின்பற்ற வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறான். அதேபோல் அத்தியாயம் ஃ.பத்ஹ் கடைசி வசனமும் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸூரத்து யூஸுஃப்

12:108 قُلْ هٰذِهٖ سَبِيْلِىْۤ اَدْعُوْۤا اِلَى اللّٰهِ‌ ؔ عَلٰى بَصِيْرَةٍ اَنَا وَمَنِ اتَّبَعَنِىْ‌ؕ وَسُبْحٰنَ اللّٰهِ وَمَاۤ اَنَا مِنَ الْمُشْرِكِيْنَ

12:108. (நபியே!) நீர் சொல்வீராக! “இதுவே என்னுடைய (நேரிய) வழியாகும்; நான் அல்லாஹ்வின் பால் (உங்களை) அழைக்கின்றேன்; நானும் என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான

ஞானத்தின் மீதே இருக்கின்றோம்; அல்லாஹ் மிகத் தூய்மையானவன்; ஆகவே, அவனுக்கு இணைவைப்போரில் நானும் ஒருவனல்லன்.''

ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَதாங்களும், அவர்களைப் பின்பற்றியவர்களும் தெளிவான ஞானத்தின் மீது இருப்பதை இங்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىசுட்டிக் காட்டியிருக்கிறான். ஸஹாபாக்கள் குறித்த சிறப்பை இதில் காணலாம். இதுபோல, தனிப்பட்ட சில ஸஹாபாக்களும் சிறப்பிக்கப்பட்டுள்ளார்கள். அபு பக்ரு رَضِي الله عَنْهُஅவர்களை ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ இமாமாக நியமித்திருக்கிறார்கள். இமாமின் தகுதி குறித்து அவர்கள் கூறுகையில், அவர்களுக்கு குர்ஆன் பற்றிய ஞானமும், ஸுன்னாஹ் குறித்த ஞானமும் இருக்க வேண்டும் என்றார்கள். எனவே அபு பக்ரு رَضِي الله عَنْهُஅவர்களை இமாமாக நியமித்ததல் பொருட்டு, அவர்களுக்கு அத்தகைய தகுதிகள் உள்ளன என்பதனை அவர்கள் வெளிபடுத்தியிருக்கிறார்கள். உமர் رَضِي الله عَنْهُ அவர்களைக் குறித்தும் ஒரு ஹதீது உள்ளது. ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَகூறுகிறார்கள், ''நான் கனவில பாலைக் குடித்து மீதியை உமர் அவர்களிடம் கொடுத்தேன்.'' அதன் பொருள் என்ன ஸஹாபாக்கள் கேட்டபோது, அதனை மார்க்கக் கல்வி என்று பதில் சொன்னார்கள். இது போல இப்னு மஸ்வூத் رَضِي الله عَنْهُமற்றும் இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُபோன்றவர்கள் மார்க்கக் கல்வியில் சிறந்து விளங்குவதை அறியலாம்.

ஸூரத்துல் ஜுமுஆ (வெள்ளிக் கிழமை)

62:2 هُوَ الَّذِىْ بَعَثَ فِى الْاُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِىْ ضَلٰلٍ مُّبِيْنٍۙ

62:2. அவன்தான், எழுத்தறிவில்லா மக்களிடம் அவனுடைய வசனங்களை ஓதிக்காட்டி, அவர்களைப் பரிசுத்தமாக்கி, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்பிக்கும் படியான தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான்; அவர்களோ, அதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர்.

இதில் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஸஹாபாக்களுக்கு வேதங்களையும், ஞானததையும் கற்றுக் கொடுத்து, அவர்களைப் பரிசுத்தமாக்கினார்கள் என்று கூறுகிறது. இப்படிப்பட்டவர்களை நாம் பின்பற்ற வேண்டியவர்கள்தானே! அவர்கள் தவறு செய்யவே மாட்டார்கள் என்று நாம் சொல்லவில்லை என்றாலும், அவர்கள் நம்மைவிட பன்மடங்கு சிறந்தவர்கள் என்பது நிச்சயமாக ஒன்றாகும். எனவேதான் ஸஹாபாக்களை நாம் பின்பற்ற வேண்டும் என்று சொல்கிறோம்.

ஸஹாபாக்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்களின் நேரடியான மாணவர்கள். நேரடியாக மார்க்கத்தை கற்றார்கள். நேரடியாக குர்ஆன் வசனங்களைக் கேட்டார்கள். ஹதீதுகளை நேரடியாகக் கண்டார்கள். நான் கூறும் எந்த விளக்கமோ, அல்லது மற்ற எந்த அறிஞர்கள் கொடுக்கும் எந்த விளக்கமோ சரியானது என்பதற்கு எவ்வித ஆதாரமும் நான் அளிக்க முடியாது. ஆனால் ஸஹாபாக்கவோ தங்கள் மார்க்கம் குறித்தும், சந்தேகங்களைக் குறித்தும் நேரடியாகவே ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَஅவர்களிடமிருந்து பெற்றார்கள் என்பதால், அவை சரியானதாக இருக்குமா என்பதற்கு ஆதாரம் தேவையில்லை. இவ்வாறு மார்க்கத்தைக் கற்றவர்கள் நம்மை விட சிறந்தவர்கள் என்பதில் எவ்வாறு சந்கேகம் கொள்ள முடியும்? அவர்கள் மார்க்கத்தை நன்றாக விளங்கியிருப்பார்களா அல்லது நாமா? அகீதா விஷயத்தில் புரிந்தில் யார் சிறந்தவர்களாக இருக்க முடியும்?

எனவே இவர்கள் சுவனவாசிகள், அல்லாஹ் அவர்களையும், அவர்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வையும் பொருந்திக் கொண்டான் என ஸஹாபாக்கள் குறித்து குர்ஆனிலும், ஹதீதிலும் பலவாறு கூறப்பட்டிருக்க, அவர்களைப் பின்பற்றுவது சரியாக இருக்குமா? அல்லது நம்மில் இப்போதுள்ளவர்கள், அவர்கள் சுவனவாசிகளா, அவர்கள் ஞானம் உள்ளவர்களா? என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லாத இவர்களைப் பின்பற்றுவது சரியா இருக்குமா? எது சரியான, பாதுகாப்பான வழியாக இருக்க முடியும்?

நான் வெளியூர் பயணம் செல்ல விரும்பும் போது, நமது வாகன ஓட்டியாக நாம் யாரை எடுத்துக் கொள்ள முனைவோம்? அப்பயண வழிகளைத் தெரிந்த, அதில் பயணித்த ஒரு வாகன ஓட்டியையா? அல்லது தமக்கு வாகனம் ஒட்டத் தெரியும் எனக் கூறும் ஒருவரையா? முதலில் உள்ளவர்தாம் நமது தேர்வாக இருக்க முடியும்! அதுபோலத்தான், நபி வழியில் பயணித்த அந்த ஸஹாபாக்களை நாம் பின்பற்றினால்தான் நாம் நமது இலக்கான சுவனத்தை அடைய முடியும். அல்லாஹ் வும் அவர்களைத்தான் அந்த இலக்கிற்கான வழிகாட்டிகளாகக் கூறியுள்ளான். அவர்களைப் பின்பற்றினால் நாம் சுவனம் அடைய முடியாது எனக் கூறும் ஒருவரை நாம் எவ்வாறு எடுத்துக் கொள்ள முடியும்? அப்படிக் கூறும் அவரின் வழிமுறை சரியானதுதான் என்ற ஆதாரம் அவரிடம் உள்ளதா? பின்பற்றுவது உலக காரியத்திற்காக அல்ல, மறுமை நாளுக்கான பின்பற்றுதல். ஸஹாபாக்களின் வழியை விடத் தங்களின் வழிதான் சரியானது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லாமல், அவர்களை நாம் பின்பற்றி, மறுமையில் நட்டம் ஏற்பட்டால் நாம் எவ்வாறு அதனை சரி செய்ய முடியும்? மிகவும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

எனவே ஸஹாபாக்களைப் பின்பற்றுவதால் நான் நேர்வழி பெற்று சுவனம் அடைய முடியும் என்று குர்ஆன் ஹதீதுகளில் ஆதாரம் இருக்க, அவர்களைப் பின்பற்றி நாம் சுவனம் அடைய முயற்சி செய்ய வேண்டும்.

இறுதியில், ஸஹாபாக்களைப் பின்பற்று என்றால், மார்க்க விஷயங்களை அவர்கள் எவ்வாறு புரிந்து கொண்டார்களோ அவ்வாறு நாம் அறிந்து கொள்ள வேண்டும். மார்க்க விஷயத்தில், அகீதாவில், மறுமை பற்றி, அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىவின் பண்புகள் பற்றி, என அனைத்தையும் அவர்கள் எந்த விதத்தில் புரிந்து கொண்டார்களோ அதே விதத்தில் நாமும் எடுத்துக் கொள்ள வேண்டும். மார்க்க விஷயத்தில் எந்த கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும், ஸஹாபாக்களையே முன் உதாரணமாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது கருத்து என ஏதும் இருந்தாலும், அது பதியப்பட்டிருக்கும். தனிப்பட்ட சில வற்றில் ஸஹாபாக்களிடம் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அது செயல்பாட்டு விஷயத்தில், மஸாயில்களின் விஷயத்தில் இருக்கலாம். ஆனால் கொள்கை விஷயத்தில் அவர்கள் என்றும் கருத்து வேறுபாடு கொண்டதில்லை. உமர் رَضِيَ الله عَنْهُஅவர்களோ, இப்னு அப்பாஸ் رَضِيَ الله عَنْهُஅவர்களோ தாங்கள் அறியாத ஒன்றின் காரணமாக, ஃபத்வா விஷயத்தில் சில தவறுகளைச் செய்திருக்கலாம். அவற்றைக் குறித்து எடுத்துக் காட்டி, அவர்கள் தவறு செய்துவிட்டார்களே என்று சுட்டிக் காட்டலாம். ஒரு சில தவறுகளுக்காக, அவர்களின் கொள்கை சம்பந்தமான ஒட்டு மொத்தமான, நிறைவான கருத்துகளை நாம் புறம் தள்ள முடியாது. இவ்வாறு குறை சொல்லி நம்மைக் குழப்பத்திற்கு ஆளாக்கும் நவீனவாதிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இறுதியாக, நாம் ஒவ்வொரு தொழுகையிலும், யாருக்கு அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىஅருள் புரிந்தானோ அந்த நேர்வழியைக் கேட்கிறோம். இவ்வாறு துஆ கேட்டுவிட்டு அத்தகைய அருள் புரிந்தவர்களின் வழியைப் பின்பற்றக் கூடாது என்பது முரண்பாடு என நாம் அறிந்து கொள்ள வேண்டும். இது மிக மோசமாக வழி கேடு. அத்தகைய அருள் பெற்ற ஸஹாபாக்களின் நேர்வழியைப் புரிந்து கொண்டு, அவர்களின் வழியில் பயணக்க அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَىநமக்கு அருள் புரிவானாக!

Aqeedah 29 Policy on Madhab in Ahlus Sunnah val Jama'a - Part 1

அகீதா 29 - மத்ஹபுகள் குறித்த அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய நிலைப்பாடு - பாகம் 1

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

மத்ஹப் பற்றிய அஹ்லுஸ் ஸுன்னாஹ்வின் நிலைப்பாடு: மத்ஹப் என்றால் வழிமுறை என்று பொருளாகும். இங்கு மத்ஹபில் மார்க்க சட்டம் பற்றிய விஷயம் தான் குறிப்பிடப்படுகிறதே அல்லாமல், கொள்கை சம்பந்தப்பட்ட ஒன்றல்ல. பிக்ஹ் சம்பந்தப்பட்ட வழிமுறையைத் தான் நாம் குறிப்பிடுகிறோம். பல உலமாப் பெருமக்கள் பிக்ஹ் குறித்து பேசப்படுகிறார்கள். இவர்களில் பிரபலமானவர்கள் இமாம் அபு ஹனீ.ஃபா رَحْمَةُ الله عَلَيْهِ, இமாம் மாலிக் رَحْمَةُ الله عَلَيْهِ , இமாம் ஷாபியி رَحْمَةُ الله عَلَيْهِ , மற்றும் இமாம் அஹ்மது இப்னு ஹன்.ஃபல் رَحْمَةُ الله عَلَيْهِஆகியோர். இந்த நால்வர்களைத் தவிர மேலும் பல அறிஞர்கள் உள்ளனர். உதாரணமாக, ஸு.ஃப்யான் அத் தவ்லி رَحْمَةُ الله عَلَيْهِ, லை.ஃப் இப்னு ஸஅத் رَحْمَةُ الله عَلَيْهِ , மவ்ஸாயீல் رَحْمَةُ الله عَلَيْهِ , இப்ராஹீம் இப்னு நஸயீ رَحْمَةُ الله عَلَيْهِ , தாவூது ஸாஹிரி رَحْمَةُ الله عَلَيْهِஆகியோர். இவர்கள் எவ்வாறு தாங்கள் பிக்ஹ் சட்ட விஷயத்தைச் சொன்னார்களோ அவற்றைத் தான் வழி முறை.

உதாரணமாக, இமாம் அபு ஹனீ.ஃபா رَحْمَةُ الله عَلَيْهِ மார்க்க ஷரியத் விஷயத்தில், அவர்கள் எவ்வாறு சட்டங்களையும், ஆதாரங்களையும் எடுத்து, எப்படி .ஃபத்வா கொடுப்பார்கள், அவர்கள் பயன் படுத்திய விதிமுறைகள் அனைத்தும் ஹன.ஃபி மத்ஹப் ஆகும். அதுபோல் தான் இமாம் மாலிக رَحْمَةُ الله عَلَيْهِ எந்த விதிமுறைகளைக் கடைபிடித்து, தங்களின் மாணவர்களுக்குப் போதித்தார்களோ, அந்த வழிமுறைதான் மாலிக்கி மஹ்தப் ஆகும். இதைப் போல்தான், ஷாபியி மற்றும் ஹன்.ஃபலி மத்ஹப் வழிமுறைகளாகும்.

இந்த மார்க்கத்திற்காக இதைப் போல பல அறிஞர்கள் வழிமுறைகளை கண்டறிந்தார்கள். எனினும் பல அறிஞர்கள் தொகுத்த வழிமுறைகள் காலப்போக்கில் மறைந்து விட்டன. பிரபலமான முன்னர் கூறிய நான்கு இமாம்களின் வழிமுறைகள், மத்ஹப்களைச் சேர்ந்த மாணவர்கள் தங்களின் நூற்களில் பதிந்து, தங்களின் மாணவர்களுக்கும் கற்பித்தார்கள். இவர்களில் பலர் காழிகளாக (.ஃபத்வா அளிக்கும் அறிஞர்களாக)த் திகழ்ந்தார்கள். இப்படி அந்த மாணவர்கள் தங்களின் மத்ஹப்களுக்காக சேவை செய்ததன் காரணமாக, அவை நிலைத்து நின்றன. மற்ற மத்ஹப்கள் அவ்வாறு வழிவழியாக எடுத்துச் செல்லப்படாமல் இருந்ததால், காலப்போக்கில் மறைந்து விட்டன.

எனவே இந்த இமாம்களின் மாணவர்களின் சேவை, நூற்களாக பதிவு செய்தது, தங்களின் மாணவர்களுக்கும் சொல்லிக் கொடுத்தது காரணமாக இவை பிரபலமாக தொடர்ந்தது. இந்த நான்கு இமாம்களைத் தவிர பல மத்ஹபுகளும் முன்னர் இருந்தன.

இந்த இமாம்கள் தங்களின் மாணவர்களுக்கு விதிமுறைகளைக் கற்றுக் கொடுத்தாலும், இவற்றிக்கு ஆதாரமான குர்ஆன் மற்றும் ஹதீதுகளைத்தான் மூலமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் சொல்லிச் சென்றார்கள். நிச்சயமாக பிக்ஹ் விஷயத்தில், அவர்களுக்கு இடையில், தனிப்பட்ட கருத்துக்களும், விதிமுறைகளும் இருக்கிறது. உதாரணமாக, இமாம் அபு ஹனீ.ஃபா رَحْمَةُ الله عَلَيْهِ அவர்கள் வழி முறையில், கியாஸ் என்னும் அணுகுமுறைக்கு நேர்மாறாக, பலஹீனமான அறிவிப்புகளைக் கொண்ட ஹதீதுகள் இருந்தால், கியாஸைப் பின்பற்றாமல், அந்த பலஹீனமான அறிவிப்புகளைக் கொண்ட ஹதீதுகளைத்தான் பின்பற்றுவார்கள். உதாரணமாக, தொழுகையில் சப்தம்

போட்டு சிரித்தால் உளூ முறிகிறது என்பது இமாம் அபு ஹனி.∴பா رَحْمَةُ اللهُ عَلَيْهِ அவர்களின் ∴பத்வா. ஆனால் அறிவின்படி - கியாஸின்படி தொழுகைக்கு வெளியே சிரித்தாலும் அவ்வாறு உளூ முறியும் என்பதுதான் சரியாக இருக்க முடியும். ஆனால் இமாம் அபு ஹனீ∴பா رَحْمَةُ اللهُ عَلَيْهِ வின் ∴பத்வாவின்படி தொழுகைக்கு வெளியில் சிரித்தால் உளூ முடியாது என்பதே ஆகும். தொழுகையின்போது சப்தமிட்டு சிரித்தால் உளூ முறிந்து விடும் என்ற பலவீனமான ஹதீது இருப்பதால், தங்களின் ∴பத்வாவிற்கு அவ்வாறு எடுத்துக் கொள்வது ஒரு விதிமுறையாக ஆக்கிவுள்ளார்கள்.

அது போல, இமாம் மாலிக் رَحْمَةُ اللهُ عَلَيْهِ மதினாவில் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் சில ஆதாரங்களைப் புரிந்து கொள்வதற்கு மதினாவாசிகளின் அமல்களை துணை ஆதாரமாக (அடிப்படை ஆதாரமாக இல்லாமல்) எடுத்துக் கொள்வார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் காரணமாவது, இந்த மதினா ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் வாழ்ந்த ஊர். அவர்களுக்குப் பல ஸஹாப்பாக்கள் வாழ்ந்துள்ளார்கள். இந்த இடத்தில் மக்கள் செய்யும் அமல்கள் அவர்களிடம் கற்றுக் கொண்ட அமல்களாக இருக்க வாய்ப்புண்டு. எனவே இந்த முறையை அவர்கள் தமக்காக எடுத்துக் கொள்வார்கள். இதே போல, இமாம் ஷா∴பியி رَحْمَةُ اللهُ عَلَيْهِ அவர்களும் தங்களுக்கு உரித்தான வழிமுறையைக் கொண்டுள்ளார்கள். உதாரணமாக, ஒரு ஹதீது உள்ளது. அதனை இப்போது விளக்கினால் புரிய வாய்ப்பில்லை. ஒரு தாயிபீன் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அறிவித்தார்கள் என்று சொல்லும்போது, அவர் ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களை நேரடியாக பார்க்காததால், அவருக்கு அந்த ஹதீதை அறிவித்த ஒருவர் இருக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு ஹதீதில் அந்த நபர் பற்றி ஏதும் குறிப்பிடாமல் இருந்தால், அந்த ஹதீது முர்ஸல் ஹதீது என்று சொல்லப்படும். இமாம் ஷா∴பியி رَحْمَةُ اللهُ عَلَيْهِ அச்சத்தின் இந்த ஹதீதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். குறிப்பிட்ட நிபந்தனை ஏதும் இருந்தால் மட்டும் அதனை ஆதாரமாக எடுத்துக் கொள்வார்கள். இதுதான் இந்த இமாம் அவர்கள் பின்பற்றும் விதிமுறையாகும்.

இமாம் ஹன்∴பல் رَحْمَةُ اللهُ عَلَيْهِ அவர்களின் விதிமுறைக்கு ஒரு உதாரணம், சிறப்புகள் என்ற விஷயத்தில் ஓரளவுக்குப் பலவீனமான ஹதீதுகளை எடுத்துக் கொள்ளலாம் என்ற விதிமுறையைப் பயன்படுத்துவார்கள். இவ்வாறு அவர்களுக்கு இடையில் குறிப்பிட்ட விதமாக வழிமுறைகள் இருந்தாலும், எல்லோரும் தங்களின் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தது, கொள்கை விஷயத்தில் குர்ஆன் ஹதீதை ஆதாரமாக எடுத்துக் கொள்ள வேண்டும். கொள்கை விஷயத்தில் அவர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு இல்லை. அது போல் மன்ஹஜ் விஷயத்திலிரும் அவர்கள் குர்ஆன் ஹதீதுகளைத்தான் வழிமுறையாகக் கொள்வார்கள். எனவேதான் இமாம் அபு ஹனீ∴பா رَحْمَةُ اللهُ عَلَيْهِ அவர்கள் தங்களுக்கு ஸஹீஹான ஹதீது கிடைத்துவிட்டால், அதுதான் தங்களின் மத்ஹப் என்பார்கள். அதனை வைத்துத்தான் தாங்கள் ∴பத்வா கொடுப்பதாக அடிக்கடி கூறுவார்கள். தாங்கள் கூறும் ∴பத்வாக்களுக்கு ஆதாரம் அறியாமல் பின்பற்றக் கூடாது என்பார்கள். எனவே ஆதாரங்கள்தாம் அடிப்படை என்பது தெளிவாகிறது.

எனவேதான் இமாம் அபு ஹனீ∴பா رَحْمَةُ اللهُ عَلَيْهِ அவர்களின் முக்கிய மாணவர்களாகிய அபு யூஸு∴ப் رَحْمَةُ اللهُ عَلَيْهِ மற்றும் இமாம் முஹம்மது பின் ஹஸன் அஸ்ஸைபானி رَحْمَةُ اللهُ عَلَيْهِ ஆகியோர் இமாம் அவர்கள் கொடுத்த சுமார் 30000 ∴பத்வாக்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கு ∴பத்வாக்களை தங்களுக்குப் பின்னர் கிடைத்த ஆதாரங்களின் மூலமாக மாற்றிக் கொடுத்தார்கள்.

எனவே அவர்கள் ஆதாரங்களைப் பின்பற்றினார்களே தவிர தங்கள் இமாமை முழுமையாகப் பின்பற்றவில்லை.

அதுபோல், இமாம் மாலிக் رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்கள் மஸ்ஜிதுந் நபவியில் மக்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். அவர்கள் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைச் சுட்டிக்காட்டியவாறு, யாரும் ஒரு கருத்தினை மறுக்க முயற்சி செய்யலாம். ஆனால் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் ஆதாரப்பூர்வமான ஹதீதினைத் தவிர. ஸஹீஹான ஹதீது கிடைத்துவிட்டால், அதனை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்பார்கள். எனவே மத்ஹப்பைப் பின்பற்றக் கூடிய அறிஞர்கள் என்றாலும், தங்கள் விஷயத்தில் எல்லோம் அடிப்படை ஆதாரத்தைத்தான் பின்பற்ற முனைந்தார்கள்.

மாலிக் மத்ஹப்பைச் சார்ந்த இப்னு ஹுஸ் رَحْمَةُ اللهِ عَلَيْهِ என்ற மார்க்க அறிஞர் தம்முடைய பிக்ஹ் நூலில், இமாம் மாலிக் رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களின் ∴பத்வாக்களை விட்டுவிட்டு, தமக்கு ஆதாரமாகக் கிடைத்த ஹதீதுகளின் அடிப்படையில்தான் ∴பத்வாக்களை மாற்றி அளித்தார்கள். இது போலவே இமாம் ஷா∴பியி رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களும் தங்களின் மாணவர்களுக்கு, ஹதீதுகளைப் பின்பற்றுமாறு போதித்தார்கள். ஒரு இடத்தில் அவர்கள் கூறியதாவது, ''என்னுடைய ∴பத்வாவை, ஆதாரப்பூர்வமான ஹதீது மறுத்தால், அதனை விட்டுவிடுங்கள். அப்படிப்பட்ட ∴பத்வாவை தாங்கள் எழுதும்போது தங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என நினைத்துக் கொள்ளுங்கள். தாங்கள் அந்த நேரத்தில் சரியான கருத்தைச் சொல்லவில்லை என்று எடுத்துக் கொள்ளுமாறு கூறினார்கள்.

இமாம் ஷா∴பி رَحْمَةُ اللهِ عَلَيْهِ யின் முக்கிய மாணவருள் ஒருவரான ஹாஸிம் அவர்களின் ஆசிரியர் முஹம்மது பின் யாகூப் رَحْمَةُ اللهِ عَلَيْهِ கூறியதாக இதனைக் கூறியுள்ளார். ஒரு விஷயம் குறித்து இமாம் ஷா∴பியீ رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களுக்கு ஒரு பலவீனமான ஆதாரம்தான் கிடைத்தது. அதாவது ஒரு பெண்மணி திருமணம் முடித்தார். இருவரும் ஒன்று கூடவில்லை. அதற்கு முன்பே அவரது கணவர் இறந்துவிட்டார். ஆண் மஹரைக் கொடுக்கவில்லை. அதனை இப்போது கொடுக்க வேண்டுமா? கணவரின் சொத்தில் அப்பெண்மணிக்கு பங்கு உண்டா? அப்பெண்ணுக்கு இத்தா காலம் எவ்வளவு? இவற்றைக் குறித்து பலவீனமான ஹதீதுதான் கிடைத்தது. ஸஹீஹான ஆதாரம் கிடைத்திருந்தால், அதனை வைத்து தாங்கள் ∴பத்வா கொடுத்திருப்பேன் எனவும், அவ்வாறு கிடைக்காததால், மற்ற ஆதாரங்களையும் வைத்துதான் ∴பத்வா கொடுத்ததாகக் கூறினார்கள். பின்னர் அவர்கள் காலமாகிவிட்டார்கள்.

பின்னர் வந்த ஷா∴பி மத்ஹப்பைச் சேர்ந்த முஹம்மது பின் யாகூப் தமக்கு அந்த பலவீனமான ஹதீது வேறு அறிவிப்பாளர்களின் மூலமாக ஸஹீஹாகக் கிடைத்துள்ளது என்றார். எனவே இப்போது இமாம் அவர்கள் உயிரோடு இருந்தால், அந்த ஹதீது ஆதாரப்பூர்மாகக் கிடைத்து விட்டது என்பதால், அவர்களை அந்த ∴பத்வாவை மாற்றுமாறு தாம் கூறியிருப்பேன் என்றார். ஆதாரப்பூர்வமான ஹதீது கிடைத்தால், இம்மாதிரி நிலைகளைத்தான் அறிஞர்கள் எடுத்தார்கள்.

இமாம் ஹன்∴பல் رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களும் இவ்வாறு மாணவர்களுக்குப் போதித்தார்கள். அவர்களின் மாணவர்களும் அவ்வாறே குர்ஆன் ஹதீதுகளைப் பின்பற்றுவதில் உறுதியாக இருந்தார்கள். எனவே எல்லோரும் குர்ஆன் ஹதீதுகளைப் பின்பற்றுவதில் ஒரே கருத்தில் இருந்தார்கள். இமாம் ஹன்∴பல் رَحْمَةُ اللهِ عَلَيْهِ கூறியுள்ளார்கள், ''நீங்கள் என்னைப் பின்பற்ற வேண்டாம். இமாம் ஷா∴பியி رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களைப் பின்பற்ற வேண்டாம். மற்ற இமாம்களையும் பின்பற்ற வேண்டாம். மாறாக,

எல்லோரும் எதனைப் பின்பற்றினார்களோ அதனையே பின்பற்ற வேண்டும். எல்லோரும் குர்ஆன் ஹதீதுகளையே பின்பற்றினார்கள்.''

எனவே இந்த இமாம்களின் மத்ஹப் நமக்குத் தேவைதான். ஏனெனில் மார்க்க ஆதாரங்களைப் புரிந்து, ஆய்ந்து ∴பத்வா கொடுப்பது என்பது விளையாட்டான காரியம் அல்ல. மாறாக முக்கியமான மார்க்க விஷயம். அதற்கு அடிப்படை தேவை. உதாரணமாக, பொறியியல் புத்தகத்தைக் கொடுத்து நாம் புரிய முயன்றால், நம்மால் முடியாது. ஆனால் அது குறித்து அடிப்படைகளை நாம் கற்றறிந்த பிறகு, அந்த நூலை கற்க முயன்றால், அத சுலமாக முடியும். அதுபோலவே, அடிப்படையான விஷயங்கள் அறியாமல், குர்ஆன் ஹதீதுகளைப் புரிந்து விஷயங்களை அறிவது சுலபமான காரியம் இல்லை. சட்டங்களைப் புரிந்து கொள்ளும் திறமையை நாம் அதிகரித்துக் கொள்ள, முன்னருள்ள இமாம்களின் நூறகள், ∴பத்வாக்கள் குறித்து நாம் கற்றுக் கொண்டால், எவ்வாறு நாம் மார்க்க விஷயங்களை அணுக வேண்டும் என்பதற்கான பயிற்சியாக அவை அமையும். எனவே எல்லா இமாம்களின் நூற்களை, மறந்து விடப்பட்ட மத்ஹப்களைச் சேர்ந்த இமாம்களின் நூற்களையும் கற்றுக் கொண்டால், தங்களின் மார்க்க அறிவு அதிகரிக்க வாய்ப்பாக அமையும். இது மத்ஹப்களின் அவசியத்தை நமக்கு அறிவிக்கிறது.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى மார்க்க விஷயத்தில் தெளிவாகப் புரிந்து கொள்ளவும், குர்ஆன் ஹதீதுகளை விளங்கவும் செய்வானாக! ஆமீன்.

Aqeedah 30 Policy on Madhab in Ahlus Sunnah val Jama'a - Part 2

அகீதா 30 - மத்ஹபுகள் குறித்த அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய நிலைப்பாடு - பாகம் 2

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

ஒரு அறிஞரைப் பற்றி அவர் ஹன.ஃபி இமாம் என்றால், அவர் .ஃபிக்ஹ் விஷயத்திலும், .ஃபத்வா கொடுக்கும் விஷயத்திலும் இமாம் அபு ஹனி.ஃபா அவர்களின் வழிமுறைப் பின்பற்றுகிறார் என்று பொருளாகும். அது போலவே மாலிகி இமாம், இமாம் மாலிக் அவர்களின் வழிமுறையைப் பின்பற்றுவார். உதாரணமாக, பிரபலமான முஹத்தித் ஆகிய இமாம் அபு ஜஹ்.ஃபர் அத் தஹாபி رَحْمَةُ اللهِ عَلَيْهِ ஆரம்பத்தில் ஷா.ஃபியி அறிஞராக இருந்தவர் பின்னர் ஹன.ஃபி இமாமாக மாறிவிட்டார் என்பார்கள். அவருடைய கூற்றின்படி ஒரே இமாமைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது தவறு என கடினமாகக் கூறியுள்ளார். ஆனாலும் அவருக்கு ஹன.ஃபி இமாம் எனக் கூறக்காரணம், ஆரம்பத்தில் அவர் ஷாபியி رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களின் வழிமுறையைப் பின்பற்றினாலும், பின்னர் ஹன.ஃபி இமாம் அவர்களின் வழிமுறை சிறந்தது என கண்டு, அதனைப் பின்பற்ற ஆரம்பித்ததால், அவரை ஹன.ஃபி என்றார்கள். அவர் ஹன.ஃபி வழிமுறையைத்தான் ஒட்டு மொத்தமாகப் பின்பற்றினார் எனக் கூறமுடியாது. எனவே அந்த காலகட்டத்தில் ஹன.ஃபி, ஷாபியி என்று கூறினால், அதன் பொருள் என்ன என்பதனை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

எனினும் அக்காலத்திலும், சிலர் தம்முடைய இமாமைச் சிறப்பிக்க வேண்டும் என்பதால், மற்ற இமாம்களை மிகவும் தாக்கிப் பேசுவது, தமது இமாமை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் புகழ்ந்ததாக பொய்யாக இட்டுக் கட்டுவது, மற்ற இமாம்களை ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ இகழ்ந்ததாகவும் பொய்யான செய்திகளை இட்டுகட்டியிருக்கிறார்கள்.

அவ்வாறு இட்டுகட்டப்பட்ட ஒரு செய்திதான் இமாம் அபு ஹனி.ஃபா رَحْمَةُ اللهِ عَلَيْهِ 'சிராஜுல் உம்மத்தீ' என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியதாக ஒருச் செய்தி. ஹதீது வல்லுநர்கள் இது பொய்யான செய்தி. 'நு.ஃமான் இப்னு ஸாதிக் என்பவர், அவரின் பட்டப் பெயர் அபு ஹனி.ஃபா رَحْمَةُ اللهِ عَلَيْهِ , அவர் இந்த உம்மத்தின் விளக்கு என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ மூன்று தரம் கூறியதாக ஒரு பொய்யான ஹதீதைத் தங்கள் இமாம்தான் சிறந்தவர் எனக் காட்டும் நோக்கில் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதுபோல மற்ற இமாம்கள் பற்றி அவதூறாகவும் இட்டுக்கட்டப்பட்ட செய்திகள் வந்துள்ளன. உதாரணமாக, 'முஹம்மது இப்னு இத்ரிஸ் என்ற பெயரில் ஒருவர் எனது உம்மத்தில் வருவார். அவருடைய காரியங்கள் ஷைத்தானுடைய காரியங்களை விட மோசமாக இருக்கும்' என்ற ஒரு பொய்யான ஹதீதும் வந்துள்ளது. இவர் இமாம் ஷா.ஃபியி رَحْمَةُ اللهِ عَلَيْهِ யைக் குறிக்கிறது. அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى صَلَّى பாதுகாப்பானாக!

இத்தகைய மனிதர்களும் தங்கள் இமாமின் மீதுள்ள வெறியின் காரணமாகப் பொய் ஹதீதுகளை இட்டுக் கட்டியுள்ளார்கள். எனினும் யாரும் ஒரு குறிப்பிட்ட இமாமைத்தான் பின்பற்ற வேண்டும், ஒரு குறிப்பிட்ட இமாமின் .ஃபத்வாக்களைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும், ஒரு இமாமைத்தான் கட்டாயக் கடமை என யாரும் சொல்லவில்லை. இமாம் அபு ஹனி.ஃபா رَحْمَةُ اللهِ عَلَيْهِ ஹிஜ்ரி 80ல்

வாழ்ந்தவர்கள். அதற்குப் பிறகு சுமார் 50 வருடங்களில் இமாம்களில் இளையவரான ஹன்பல் رَحْمَةُ الله عَلَيْهِ சென்று விட்டார்கள்.

நான்காவது நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில்தான், ஒரு இமாமை மட்டும்தான் கட்டாயம் பின்பற்ற வேண்டும், அது கடமை என சொல்ல ஆரம்பித்தார்கள். குறிப்பாக இந்திய அறிஞரான ஷா வலியுள்ளாஹ் போற்றியுள்ள இமாம் ஷவ்கானி رَحْمَةُ الله عَلَيْهِ தமது ஹுஜ்ஜத்துல்லாஹி பாலிஹா என்ற நூலில் நான்காம் நூற்றாண்டிற்குப் பிறகுதான், ஒரு இமாமை மட்டும்தான் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்ற போக்கு வந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். இமாம்கள் எல்லாம் குர்ஆன் ஹதீதைத்தான் பின்பற்ற வேண்டும் என்று கூறிச் சென்றார்கள். பிற்காலத்தில்தான் இவ்வாறு வந்தது. எனவே இந்தக் கருத்து தவறானது, பித்அத் ஆகும். இதனைப் பின்பற்றினால் எவ்வாறு தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது என நாம் அறிவோம்.

முதலாவது, ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைத் தவிர, மார்க்கத் தீர்ப்புகள் வழங்குவதில் யாருமே தவறில்லாமல் செய்ய முடியாது. அவர்கள் அல்லாஹ் வின் வஹியின்படிதான் கூறுவார்கள். அது குறித்து அல்லாஹ்வே சாட்சியம் அளித்துள்ளான். ஸஹாபாக்களும் மார்க்க விஷயத்தில் தவறு செய்ய வாய்ப்புண்டு. அவர்கள் ஆதாரத்தின் அடிப்படையில் ஆய்வு செய்தது ஒரு மார்க்க விஷயத்தைக் கூறி, அது தவறாக இருந்தாலும், அந்த ஆய்வுக்காக அவர்களுக்கு ஒரு நன்மை கிடைக்கும். ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள், “ஒரு ஆய்வாளர் ஆய்வு செய்யும் போது, அவர்கள் சரியான தீர்வைக் கொடுத்துவிட்டால், அவருக்கு (ஆய்வுக்கு ஒரு நன்மையும், சரியானதற்கு ஒரு நன்மையும்) இரண்டு நன்மைகள் கிடைக்கும். தீர்ப்பு தவறாக இருந்தால் அவருக்கு (ஆய்வு செய்ததற்கான) ஒரு நன்மை கிடைக்கும்.)

தவறான தீர்ப்பு ஏற்படக் காரணம், குறிப்பிட்ட அந்த விஷயத்தைக் குறித்துத் தெளிவான ஆதாரம் கிடைக்காமல் போயிருக்கலாம். அதன் காரணமாக அவர்கள் தங்களுக்குக் கிடைத்த ஹதீதினைக் கொண்டு தீர்ப்புச் சொல்லியிருப்பார்கள். பின்னர் அந்த விஷயம் குறித்து தெளிவான ஒரு ஆதாரம் கிடைக்கும் நேரத்தில் முந்தைய தீர்ப்பு சரியில்லை என்று ஆகிவிடும். ஸஹாபாக்கள் காலத்தில் நிகழந்த ஒரு உதாரணத்தை இங்கு எடுத்துக் கொள்வோம். இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُ அவர்களைப் பற்றி நாம் மிக அறிவோம். தற்காலிகத் திருமணம் (முத்தஆ) சில நாட்களுக்காக நடை பெறும் திருமணம், உதாரணமாக போர்க்காலங்களில் சில காலத்தை நிர்ணயம் செய்து மணம் முடிப்பார்கள். காலம் முடிந்ததும் பிரிந்து விடுவார்கள். ஆரம்பத்தில் நடைமுறையில் இருந்த இந்த வழிமுறை, ஹிஜ்ரி 8ஆம் ஆண்டு கைபர் போரின்போது தடுக்கப்பட்டது. ஆனால் இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُ இந்த முறைத் திருமணத்தை ஹலால் என ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ மறைந்து சில காலம் வரையும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். கைபர் போரின்போது ஹராமாக்கப்பட்டது என்ற செய்தி அவர்களுக்குக் கிடைக்காததால் அவ்வாறு அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். அலி அவர்களின் கூற்றுக்குப் பின்னர் அவர்கள் அதனை மாற்றிக் கொண்டார்கள். இவ்வாறுதான் தவறான நிலை ஏற்படும். எனினும் செய்தி கிடைத்ததும் அதனை மாற்றிக் கொள்வார்கள். இதுபோன்று தான் இமாம்களின் நிலையும்.

மற்றொரு உதாரணம்: பூனை எச்சில் சம்பந்தமான ∴பத்வா கொடுப்பதற்கு தேவையான ஆதாரம் தமக்குக் கிடைக்கவில்லை என்றால் எவ்வாறு நாம் முடிவு செய்ய முடியும். பூனை குறித்து நாம் தெரிந்ததை வைத்து ஆராய்வோம். அது எலியைச் சாப்பிடும். பல்லியையும் சாப்பிடும். அவை அனைத்தும் ஹராமான உணவு. எனவே அதனைச் சாப்பிடும் பூனையின் எச்சிலும் அசுத்தமாகத்தான் இருக்கும் என நாம் முடிவு செய்ய வேண்டியதிருக்கும். ஆனால் ஹதீதின் கூற்றுப்படி, பூனையின் எச்சில் சுத்தமானதுதான். அத்தகைய ஹதீது இமாம் ஹனி∴பா رَحْمَةُ الله عَلَيْهِ அவர்களுக்குக்

கிடைக்ககாததால், அவர்கள் பூனையில் எச்சில் அசுத்தமானது என்று ∴பத்வா கொடுத்திருந்தார்கள். எனவே நாம் அதனைப் பின்பற்ற வேண்டுமா? அல்லது ஹதீதில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதின்படி, பூனையின் எச்சில் சுத்தமானதுதான் என்பதைப் பின்பற்ற வேண்டுமா? எனவே ஹதீது சேரமால் போனதால் வந்த தவறு என்பதால், ஆதாரத்தைத்தான் நாம் பின்பற்ற வேண்டும்.

ஹதீது கிடைத்தாலும், அது பலவீனமான ஹதீதாக இருக்கும் போதும் தவறு ஏற்படுவதற்கு மற்றுமொரு காரணமாக அமைந்துவிடும். அவ்வாறு பலவீனமான அறிவிப்பைக் கொண்டு அவர்கள் ∴பத்வா கொடுக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் பின்னால் அதே ஹதீது சரியான விதத்தில் கிடைத்தால், முந்தைய ∴பத்வாவை இப்போது கிடைத்த ஹதீதின்படியே திருத்திக் கொள்ள வேண்டும். இதற்கு உதாரணம் நாம் முன்பு சொன்ன இமாம் ஷா∴பியி رَحْمَةُ الله عَلَيْهِ திருமணம் முடித்து உறவு கொள்ளாமல் இறந்த கணவனின் மீதுள்ள மனைவின் உரிமை பற்றிய ∴பத்வா ஆகும். மூன்றாவதாக, சரியான ஹதீது கிடைத்தும், குறிப்பிட்ட இமாம் அந்த ஹதீதினைச் சரியாக விளங்காததன் பொருட்டாலும் தவறான ∴பத்வா ஏற்படவும் வாய்ப்புண்டு.

எனவே குறிப்பிட்ட இமாமை கட்டாயம் பின்பற்றித்தான் ஆக வேண்டும் என்பது கிடையாது. ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களைத் தவிர மற்றவர்களுக்குத் தவறு ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால், குறிப்பிட்ட மத்ஹபை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என்பது சரியானதாக இருக்காது.

மற்றொரு விஷயம், குறிப்பிட்ட ஒரு மத்ஹப்பைத்தான் பின்பற்ற வேண்டியது கடமை என்று கட்டாயப்படுத்துவது. இவ்வாறு ஒன்றை யார் கடமையாக நிர்ப்பந்தப்படுத்த முடியும்? செய்ய வேண்டும் அல்லது செய்யக்கூடாது என ஹலால் அல்லது ஹராமாக்குவது கடமையாக்குவது அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வின் அறிவுறுத்தலுடன், ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள்தாம் கடமையாக்க முடியும்.

ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தாம் நமக்கு இமாம். அவர்களைத்தான் பின்பற்ற வேண்டும் என்னை நம்மை அறிவுறுத்திருக்கிறார்கள். அவர்கள் நாம் குறிப்பிட்ட இமாமைப் பின்பற்ற வேண்டும் என்று ஏதும் அறிவுறுத்தவில்லையே! அவர்கள் வழிவந்த ஸஹாபாக்களும் அவ்வாறு எந்த வழிமுறையையும் கூறவில்லையே. ஸஹாபிகளுள் சிறந்த அபு பக்ரு رَضِي الله عَنْهُ அவர்களை மட்டும்தான் மார்க்க விஷயத்தில், மற்ற ஸஹாபாக்கள் தெரிந்தெடுத்துக் கொண்டார்களா? உமர் رَضِي الله عَنْهُ அவர்களின் கல்விச் சிறப்பை, தாங்கள் பால் கொடுத்ததாக கண்ட கனவின் மூலம் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ கூறியுள்ளார்கள். அவர்களை மட்டும்தான் பின்பற்ற வேண்டும் ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ என கூறிச் சென்றார்களா? அல்லது இமாம்களாவது தங்களின் மத்ஹபைத்தான் பின்பற்ற வேண்டும் என்று கூறியுள்ளார்களா? அவர்களும் தங்களின் வழிமுறை குர்ஆன் ஹதீதுகளுக்கு மாற்றமாக இருந்தால், அவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு, குர்ஆன் ஹதீதுகளையே பின்பற்ற வேண்டும் எனத்தான் கூறிச் சென்றார்கள். ஒவ்வொரு இமாம்களும் அவற்றைத்தானே பின்பற்றினார்கள்.

மறுமையில் நாம் குறிப்பிட்ட இமாமைப் பின்பற்றினீர்களா என்றா கேட்கப்படுவோம்? அல்லது நாம் குர்ஆன் ஹதீதுகளைப் பின்பற்றினீர்களா என்றுதான் நாம் வினவப்படுவோம்!

மூன்றாவதாக, இவ்வாறு ஒரு குறிப்பிட்ட இமாமைத்தான் பின்பற்ற வேண்டும் என்று கடமையாக்கிவிட்டால், அதுவே இமாமின் மீதுள்ள ஈடுபாட்டினால், ஒரு வெறியாக மாறிவிட வாய்ப்புண்டு. இவ்வாறு நடந்திருக்கிறது. இவ்வெறி நபிவழிக்கு மாற்றமாக நடக்க ஏதுவாகிவிடும். குர்ஆன் ஹதீதுகளுக்கு மாற்றமாக, இமாம்களையே பின்பற்றி வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

உதாரணமாக, பூனையின் எச்சில் அசுத்தம் என்று இமாம் அபு ஹனி.ஃபா رَحْمَةُ اللهِ عَلَيْهِ சொல்லிச் சென்றாலும், பின்னர் கிடைத்த ஹதீதின்படி, நம்மைச் சுற்றிச் சுற்றி வரும் பூனையின் எச்சில் சுத்தமானதுதான் என்பதனை அறிந்ததும் அதனைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாமல் இமாமைத்தான் பின்பற்ற வேண்டும் என்ற கட்டாயத்தில் சரியான ஒன்றை தவறாகவே நாம் நடைமுறை படுத்த முடியாது. அன்னை ஆயிஷா அவர்களின் ஹதீதின்படி, பூனை வாய் வைத்த நீரைக் கொண்ட ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ உளூ செய்ததை தாங்கள் பார்த்துள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

இக்கருத்தை இமாமைத்தான் பின்பற்ற வேண்டும் என்றும் கூறுபவர்களிடம் எடுத்துச் சென்றால், வீட்டில் உள்ள பூனை சுத்தமாக இருக்கலாம், ஆனால் வெளியில் சுற்றும் பூனை பற்றி அவ்வாறு கூற முடியாது என்று விளக்கம் கொடுக்கலாம். இவ்வாறு ஹதீதில் சொல்லப்பட்ட கருத்துக்கு மாற்றமாக முடிவெடுக்கும் நிலையை அந்த இமாம் குறித்த வெறி அவர்களை மாற்றிவிடும் காரணமாக அமைந்து விடுகிறது. ‘நம்முடைய இமாமுடைய கருத்துக்கு மாறாக அமையும் ஒவ்வொரு ஆதாரமும், ஒரு பழைய சட்டமாகக் கருதப்படும். அல்லது ஆதாரத்தின் கருத்தை நமது கருத்துக்கு ஏதுவாக மாற்றிச் சொல்வோம்’ என்று ஒரு மத்ஹபைச் சேர்ந்த அறிஞர் தமது இமாமின் மீதுள்ள வெறியினால் வெளிப்படையாகக் கூறியுள்ளார். ஆனால் இமாம்களோ சரியான ஆதாரம் கிடைத்துவிட்டால், அதனைத்தான் பின்பற்ற வேண்டும் எனக் கூறிச் சென்றார்கள். எனவே இந்த வெறியர்கள் தங்களின் இமாமையும் பின்பற்றாமல், தெளிவான ஆதாரத்தையும் பின்பற்றாமல், வழிகேட்டில் செல்லும் நிலைமைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

மேலும் தங்களின் இமாமைப் பாதுகாக்கும் பொருட்டு, ஆதாரப் பூர்வமான ஹதீதை ஏற்காமல், அதற்குப் பதில் கொடுக்க வேண்டிய நிலையில், அந்த ஹதீதின் தன்மை குறித்து தேவையில்லாத கேள்விகளை எழுப்பி அதனைப் பலவீனமாக ஆக்க முயற்சி செய்வார்கள். உதாரணமாக, வாஹித் பின் ஹுஜர் رَضِي الله عَنْهُ என்ற ஸஹாபி குறித்து, இவர் ஒரு கிராமவாசி, எனவே இவருக்கு ஹதீதினைப் புரிந்து கொள்ள இயலாது எனத் தேவையில்லாத காரணத்தைக் கூறி அதனை பலவீனப்படுத்த முயல்வார்கள். இமாமுடைய ஃபத்வாக்களுக்கு முரணாக அமைந்தால், உதாரணமாக அனஸ் رَضِي الله عَنْهُ மற்றும் அபு ஹுரைராஹ் رَضِي الله عَنْهُ ஆகியோர் ஹதீதுகளைப் புரிந்து கொள்ள இயலாதவர்கள் எனக் கூறி, ஹதீதுகளைப் புறந்தள்ளவே முயல்வார்கள். தங்களின் இமாம்களின் ஃபத்வாவை உறுதிபடுத்த முயல்வார்கள். கவ்ஸரி என்ற ஒரு நபர், தமது இமாமின் கருத்துக்கு பாதுகாக்க வேண்டி, மற்ற இமாம்களைக் குறை கூறும் எண்ணத்தில், ஸஹாபி முதற்கொண்டு, இமாம் புஹாரி رَحْمَةُ اللهِ عَلَيْهِ போன்ற பல அறிஞர்கள் பற்றி அவதூறு கூறிவிடுவார்.

முன்னர் உமர் رَضِي الله عَنْهُ அவர்கள் தவ்ராத் படிப்பதைப் பற்றி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் கோபப்பட்டு கூறியதை நாம் இங்கு நினைவு கூறுகிறோம். மூஸா அவர்களே உயிரோடு வந்தாலும், அவர்களுக்கு என்னைப் பின்பற்ற வேண்டும் என்பதனைத் தவிர வேறுவழி என்று அவர்கள் கூறினார்கள். வேறு ஒரு ஹதீதின் சொற்படி, அவர்கள் என்னைப் பின்பற்றாவிட்டால் வழிகேட்டில் சென்றுவிடுவார்கள் என்றார்கள். நிலைமை இவ்வாறிருக்க, ஹதீதைப் பின்பற்றாமல், இமாமைத்தான் பின்பற்றுவேன் என்ற அந்த வெறித்தனமாக செயலினால், பல ஹதீதுகளைப் புறக்கணித்து, நபிவழிக்கு மாற்றமாக செயல்படுகிறார்கள்.

தம் இமாம்களை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு இணை வைப்பார்கள் என வேதக் காரர்களைக் குறித்து அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى கூறுகிறான். இதற்கு விளக்கம் கூறுகையில், அந்த அறிஞர்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றி, அவர்கள் ஆகுமானது என்றால் ஆகுமாக்கி,

ஹராமானது என்றால் விலகிக் கொண்டார்கள். அதனைத்தான் அல்லாஹ் இணை வைத்தல் என்று கூறுகிறான்.

எனவே நாம் இமாம்களை ஆதாரங்கள் சரியாக இருந்தால் பின்பற்றுவதில் தவறில்லை. ∴பத்வாவைப் பின்பற்றி, ஹதீதுகளை விடக் கூடாது என இமாம்களும் கூறிச் சென்றுள்ளார்கள். ஹதீதுக்கு முரணாகத் தங்களின் ∴பத்வாக்கள் இருந்தால் அதனை ஏற்கக் கூடாது என்று தெளிவாகத்தான் கூறிச் சென்றுள்ளார்கள். இமாம் மாலிக் رَحْمُةُ اللهُ عَلَيْهِ கூறியமை மீண்டும் நினைவு படுத்துகிறோம். அவர்கள் தமது கருத்துக்குப் பதிலாக, ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் கருத்தைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என அவர்களின் மண்ணறையைச் சுட்டிக் காட்டிச் சொன்னார்கள்.

இமாம் ஷா∴பியி رَحْمُةُ اللهُ عَلَيْهِ டம் ஒரு ஹதிதுக்கு நேர்மாறான ஒரு கருத்தைப் பற்றி கேட்கப்பட்டபோது, அவர்கள் மிக நடுநடுங்கி, ஹதீதுக்கு மாற்றமாக நான் ஒரு கருத்தைக் கூற வேண்டும் என்று எவ்வாறு கேட்கப்படுகிறது என வருந்தினார்கள்.

இறுதியாக, மக்களை மூன்றாகப் பிரிக்கலாம். ஒன்று மார்க்க அறிஞர்கள். மார்க்க விஷயங்கள் அறிந்த இவர்கள் மத்ஹபைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் ஆதாரங்களை நேரடியாகப் படித்து புரிந்து கொள்ளும் வாய்ப்பை அல்லாஹ் அளித்துள்ளான். எனவே இவர்களே ஆய்ந்து செயல்படலாம்.

முஸ்லிம்களில் மார்க்கக் கல்வியைத் தேடும், தாலிபுல் இல்ம், மாணவர்கள். இவர்கள் ஆதாரங்கள் பற்றி பல அறிஞர்களிடம் கேட்டு, அதனை அவர் ஆய்ந்து எது சரி என அவருக்குத் தோன்றுமோ அதனை அவர்கள் பின்பற்ற வேண்டும். அவர் குறிப்பிட்ட மத்ஹபைத்தான் பின்பற்ற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

மூன்றவதாக பாமர மக்கள். இவர்களுக்கு கல்வி பயில வழியில்லை. அவர்கள் நம்பகமான ஒரு இமாமைத் தேர்ந்தெடுத்து அவரைப் பின்பற்றலாம். ஆனால் அது கண்மூடித்தனமாகப் பின்பற்றக் கூடாது. ஆனால் அவரது செயல்பாடு, ஹதீதுக்குப் புறம்பானது என அவருக்குத் தெரியும் நிலை ஏற்பட்டால், அந்த செயலில் அவரைப் பின்பற்றாமல் விலகிக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நமக்கு நேர்வழி காட்டி, இமாம்கள் மற்றும் மார்க்க அறிஞர்கள் சென்ற சரியான வழிகளைப் பின்பற்றி நடக்கும் பாக்கியத்தை அளிப்பானாக! ஆமீன்

Aqeedah 31 Policy on Madhab in Ahlus Sunnah val Jama'a - Part 3

அகீதா 31 - மத்ஹபுகள் குறித்த அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ உடைய நிலைப்பாடு - பாகம் 3

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நஸீரி

இந்தக் காலத்தில் ஒரு கூட்டம், குர்ஆன் ஹதீதுகளுக்குப் பிறகு நாங்கள் தாம் தகுதிய பெற்றவர்கள் என்று கூறிக் கொள்வார்கள். தங்களின் இச்சைப்படி மார்க்கத்தை அமைத்துக் கொள்வார்கள். மற்றொறு கூட்டம், ஒரு குறிப்பிட்ட இமாமைத்தான் பின்பற்ற வேண்டும் என்று குறுகிய எண்ணத்தில் ஒரு கூட்டம். ஆனால் நாம் இரண்டுக்கும் இடையில் இருப்பது சிறந்ததாகும். ஒரு குறிப்பிட்ட இமாமைப் பின்பற்றாமலும், சுயமாகச் சுதந்திரமாகச் சிந்திக்காமல், குர்ஆன் ஹதீதுகள், ஸஹாபாக்களின் வழி ஆகியவற்றை ஆராய்ந்து செயல்படுவது சிறந்ததாகும்.

நாம் முன்னர் கூறியதைப் போல, மத்ஹப்புகள் அனைத்தும் ∴பிக்ஹ் சம்பந்தப்பட்ட வழிமுறைகள் தானே தவிர, கொள்கைகள் சம்பந்தப்பட்ட வழிமுறைகள் அல்ல. மார்க்க சட்டங்கள், ஹராம், ஹலால் ஆகியவற்றை எடுப்பதில் அவர்கள் பயன்படுத்த வழிமுறைகள்தாம். அவை அகீதா சம்பத்தப்பட்ட வழிமுறைகள் அல்ல. மத்ஹப்புகளின் இந்த ∴பிக்ஹ் சம்பந்தபட்ட வழிமுறைகளில், ஒவ்வொரு இமாமுடைய வழிமுறைகளும், மற்றவர்களின் வழிமுறைகள் அல்லாத வேறு முறைகளை அவர்கள் எடுத்துக் கொள்ளலாம். பல விஷயங்களில் அவர்களிடம் ஒருமித்த கருத்து இருந்தாலும், சில விஷயங்களில் மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றன. இவை எல்லாம் மார்க்க சட்டம், ∴பிக்ஹ் விஷயங்களில் மட்டும்தான். ஆனால், அகீதா - கொள்கை விஷயங்களில் இமாம் மாலிக் رَحْمَةُ الله عَلَيْهِ அல்லது இமாம் ஷா∴பியி رَحْمَةُ الله عَلَيْهِ போன்றவர்களிடம் எவ்வித மாறுபட்ட கருத்தும் இருந்ததில்லை. அகீதா சம்பந்தப்பட்ட ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் இமாம் அபு ஹனி∴பா رَحْمَةُ الله عَلَيْهِ அவர்களிடம் மற்ற இமாம்களின் கருத்து விஷயத்திலிருந்து ஒரு மாறுபட்ட கருத்து ஆரம்பத்தில் இருந்தது. ஆனால் அதனைக் கூட பின்னர் அவர்கள் மற்ற இமாம்களுக்கு ஒத்தக் கருத்தையே எடுத்துக் கொண்டார்கள்.

எனவே மத்ஹப் விஷயத்தில் அவர்களுக்கிடையில் மார்க்க சட்ட விஷயங்களில் சில கருத்து வேறுபாடுகள் இருக்குமே அன்றி அகீதா விஷயத்தில் எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை. எனவே மத்ஹபைப் பின்பற்றுபவர்கள் வழி கெட்ட 72 கூட்டத்தினராக நாம் கருதக் கூடாது. அடிப்படை விஷயங்களில் எல்லோரும் ஒன்று என்பதால், இவர்களும் அஹ்லுஸ் ஸுன்னாஹ் கூட்டத்தைச் சேர்ந்வர்களே. ஸபாக்களிடமும் மஸ்அலாக்களில் கருத்து வேறுபாடு இருந்திருக்கிறது. உதாரணமாக, அபு பக்ரு رَضِي الله عَنْهُ அவர்களுக்கும் உமர் رَضِي الله عَنْهُ அவர்களுக்கும் இடையில் கருத்து வேறுபாடு இருந்திருக்கிறது. அதைப் போல உமர் رَضِي الله عَنْهُ, முஅத் இப்னு ஜபல் رَضِي الله عَنْهُ இருவர்களுக்கு இடையிலும் கருத்து வேறுபாடு இருந்திருக்கிறது. இப்னு அப்பாஸ் رَضِي الله عَنْهُ மற்றும் ஸைத் பின் தாபிப் رَضِي الله عَنْهُ ஆகியோருக்கு இடையில் சொத்துரிமை பற்றி கடுமையான கருத்து வேறுபாடு இருந்திருக்கிறது. ஆனால் அகீதா விஷயத்தில் எவ்வித கருத்து வேறுபாடும் இருந்ததில்லை. அதைப் போலத்தான் இமாம்களுக்கு இடையில் மார்க்க சட்டம் விஷயத்தில் கருத்து வேறுபாடு இருந்தாலும், அகீதா விஷயத்தில் அவர்கள் ஒன்றாக அஹ்லுஸ் ஸுன்னாஹ்வைச் சேர்ந்தவர்கள்தாம்.

மஸாயில்கள் விஷயத்தில் மத்ஹப்பைப் பின்பற்றும் சிலர், கொள்கை விஷயத்திலும் அவ்வாறு அவர்களைப் பின்பற்றுகிறார்களா என்பது கேள்விக்குறிய ஒரு விஷயம். மத்ஹப்பைப் பின்பற்ற

வேண்டும் என்று கூறும் அவர்கள், அந்த இமாம்கள் சொல்லும் கொள்கை விஷயத்தில் ஏன் அவர்கள் பின்பற்றாமல் இருக்கிறார்கள்? அந்த இமாம்களின் கொள்கைகளைப் பின்பற்றாமல், உதாரணமாக வஹ்ததுல் உஜூத் என்ற கொள்கையை பலர் பின்பற்றுகிறார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அர்ஷின் மேல் உயர்ந்திருக்கிறான் என்ற நிலைக்குப் பதிலாக அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى எங்கும் இருக்கிறான் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்கிறார்கள். இமாம் அபு ஹனி∴பா رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களோ, அல்லது இமாம் மாலிக் رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களோ அவ்வாறு கூறவில்லையே. இமாம் மாலிக் رَحْمَةُ اللهِ عَلَيْهِ அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அர்ஷின் மேல் உயர்ந்திருக்கிறான் என்று சொல்லி, அவன் எவ்வாறு இருக்கிறான் என்று நாம் ஆராய வேண்டியதில்லை என்றும் கூறியுள்ளார்கள். இதுபோன்றுதான் மற்ற இமாம்களின் நிலையும். அவர்கள் கூறாத வஹ்ததுல் உஜூத் என்ற கொள்கையை, மத்ஹப்பைக் கடைபிடிக்கும் இம்மக்கள் எவ்வாறு எடுத்துக் கொள்ளலாம்? இவ்வாறு இமாம்களின் மஸாயில்களை மட்டும்தான் பின்பற்ற வேண்டுமா? அவர்களின் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டாமா?

மேலும் சிலர், மற்ற மத்ஹப்களைப் பின்பற்றுபவர்களைக் கா∴பிர்கள் என்றும் கூறுகிறார்கள். மற்ற முஸ்லிம்களைக் கா∴பிர் என்று கூறுவது கொள்கை சார்ந்த விஷயம் அல்லவா! இதனை இமாம்களா கற்றுக் கொடுத்தார்கள்? உதாரணமாக, ஹன∴பி மத்ஹபைச் சேர்ந்த இமாம் ஒருவர் இவ்வாறு ஒரு ∴பத்வா கூறியுள்ளார். அதன்படி ஒரு ஹன∴பி, ஷா∴பி மத்ஹபைச் சேர்ந்த ஆணை மணம் முடிக்கக் கூடாது. அதே நேரத்தில் அந்த மத்ஹபின் பெண்ணைத் திருமணம் செய்யலாம். இந்த ∴பத்வா எந்த வகையைச் சேர்ந்தது? இந்த சட்டம் யூதர்களுக்குச் சொல்லப்பட்ட சட்டம். அதன்படி யூதப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் யூத ஆணை ஒரு முஸ்லிம் பெண் திருமணம் செய்யக் கூடாது என்பதாகும். எனவே அவர் கூறும் ∴பத்வாவின்படி, மற்ற மத்ஹபைச் சேர்ந்தவரை யூதரைப் போல ஆக்கிவிடுகிறார். அதாவது கா∴பிர் எனக் கூறுகிறார்.

முஹம்மத் பின் மூஸா என்ற ஒரு ஹன∴பி கூறுவதாவது, எனது கையில் அதிகாரம் இருந்தால், நான் ஷா∴பி மத்ஹபைப் பின்பற்றுபவர்களிடமிருந்து ஜிஸ்யா வரி வசூலித்திருப்பேன். ஜிஸ்யா வரி இஸ்லாமிய ஆட்சியில் வேதம் வழங்கப்பட்டோருக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காக வசூலிக்கப்படும் வரியாக கூறியுள்ளார்கள். இவ்வாறாக, அவர் மற்ற மத்ஹப்வாதிகளை எடுத்துக் கொள்கிறார். இவ்வாறுதான் அந்த இமாம்கள் கற்றுக் கொடுத்தார்கள்? எனவே இவர்கள் அந்த இமாம்களை கொள்கை விஷயத்திலும், பித்அத் சம்பந்தப்பட்ட மற்ற விஷயங்களிலும் பின்பற்றாமல் தவறிழைக்கிறார்கள்.

எனவே இவர்களுக்கும், இமாம்களுக்கும் எந்த வித தொடர்பு இல்லாதவாறு செயல்படுகிறார்கள். ஒரு மத்ஹப்பைச் சேர்ந்தவர் மற்ற மத்ஹப் இமாம்களின் பின்னால் தொழக் கூடாது என்ற நிலையை எடுத்துக் கொண்டார்கள். இவர்களுக்கு இடையில் இந்த காழ்ப்புணர்வு கொலையில் கூட முடிந்த வரலாறுகள் உள்ளன. தற்காலத்தில்தான் இவர்களுக்கு இடையில் ஓரளவு சாமாதான நிலையில் இருக்கிறார்கள்.

இதன் காரணமாக மக்காவில் க∴பாவில், ஒரு காலத்தில் நான்கு நான்கு முஸல்லாக்கள் இருந்தன. நான்கு திசையிலும் ஒவ்வொரு மத்ஹப்பைச் சேர்ந் முஸல்லா இருக்கும். நான்கு தடவைகள் ஜமாஅத்துகள் நடக்கும். ஒவ்வொரு மத்ஹப்பினருடம், மற்ற மத்ஹபினர் பின்னால் தொழக் கூடாது என்ற கருத்தில் வெவ்வேறு நேரத்தில் ஜமாஅத் நடந்துள்ளது.

இமாம் ஹன்பல் رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களின் கருத்துப்படி, இரத்தம் வெளியேறினால், உளூ முறிந்துவிடும் என்பதாகும். ஆனால் மற்ற இமாம்களின் கருத்தின்படி உளூ முறியாது. ஸஹாபாக்கள் போரின் காரணமாக இரத்தம் வெளியேறிய நிலையிலும் மறுபடியும் உளூ செய்யாமல்

தொழுதிருக்கிறார்கள். இது குறித்து ஒருவர் இமாம் ஹன்பல் رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களிடம், அப்படிப்பட்ட இமாம்களுக்குப் பின்னால் தொழலாமா என்று வினவினார். நான் என்ன இமாம் மாலிக் رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களின் பின்னால் தொழக்கூடாதா? என எதிர் வினா எழுப்பினார்கள்.

மற்ற மத்ஹப்பினர் பின்னர் தொழக்கூடாது எனவும், கா.ஃ.பிர்கள் எனக் கூறுவதும் சரிதானா? பித்அத்தான காரியங்களுக்கும், இந்த இமாம்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ சொல்லாத விஷயங்களில் இமாம்கள் ஆராய்ந்து கொண்டிருக்கமாட்டார்கள்.

மாலிக் மத்ஹபின்படி, தொழுகையில் கைகளைக் கட்டாமல் தொங்க விட்டுக் கொண்டிருப்பார்கள். அது அவர்களின் வழிமுறையாகும். ஆனால் மாலிக் அவர்கள் அவ்வாறு செய்யச் சொன்னார்கள். உண்மையில், மாலிக் رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்களை அக்கால ஆட்சியாளர்கள் அவர்களைத் துன்புறுத்தி அடித்ததன் காரணமாக, தங்கள் கைகளை பின்னர் உயர்த்த முடியாமல், இறுதி வரை வாழ்ந்தார்கள். அதன் காரணமாகத்தான் அவர்கள் தொழுகையில் கையை கட்டமுடியாமல் தொங்க விட்டிருந்தார்கள். எனவே அவ்வாறு தொழுவது அவர்களின் வழிமுறையல்ல. ஆனால் இவர்களோ அவ்வாறு செய்கிறார்கள்.

ஷா.ஃ.பி மத்ஹபில் அவ்வலுல் திக்ரு என்று கூறியவாறு லாயிலாஹ இல்லல்லாஹ் என்று ஓதுவார்கள். அவ்வாறு அவர்கள் சொல்லிச் செல்லவில்லை. இவ்வாறு இமாம்கள் சொல்லித்தராமல் சென்றவற்றை இவர்கள் பின்பற்றுவதால், நாம் இமாம்களைக் குறை சொல்லி, அவர்களின் மீது அவதூறு கூறுவதும் சரியானதாக எவ்வாறு இருக்க முடியும்? இமாம் இப்னு தைமிய்யாஹ் رَحْمَةُ اللهِ عَلَيْهِ அவர்கள் உயர்ந்த கண்ணியத்தை அடைந்த இந்த இமாம்களைத் திட்ட விடாமல், அவர்களைப் பாதுகாப்பது என்ற விஷயம் குறித்து ஒரு நூலை எழுதியுள்ளார்கள். இந்த நூலில் அவர்கள் இமாம்களை, அவர்கள் ∴பத்வா குறித்து திட்டக் கூடாது எனக் கூறியுள்ளார்கள். அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى திருக்குர்ஆனில் நாம் அறியாதவற்றை அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு கூறி, அதனையும் ஆதாரங்களின் அடிப்படையில் அவர்களின் கூற்றைப் பின்பற்ற வேண்டும் எனக் கூறியுள்ளான்.

ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியதாவது, ‘‘கியாமநாள் வரையிலும் சத்தியத்தைப் பின்பற்றிக் கொண்ட ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும்.’’

எனவே அப்படிப்பட்டக் கூட்டத்தில் நாமும் ஒருவராக இருக்கும் பாக்கியத்தை அல்லாஹ் நமக்குத் தந்தருள்வானாக! ஆமீன்.

Aqeedah 32 Misguided sects of Islamic history

அகீதா 32 - இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய வழிகெட்ட பிரிவினர்கள்

ஆசிரியர்: அஷ் ஷெய்க் உவைஸ் உமரி நளீமி

ரஸூலுல்லாஹ் صَلَّي الله عَلَيْهِ وَسلَّمَ கூறினார்கள்,

وَإِنَّ بَنِي إِسْرَائِيلَ تَفَرَّقَتْ عَلَى ثِنْتَيْنِ وَسَبْعِينَ مِلَّةً وَتَفْتَرِقُ أُمَّتِي عَلَى ثَلاَثٍ وَسَبْعِينَ مِلَّةً كُلُّهُمْ فِي النَّارِ إِلاَّ مِلَّةً وَاحِدَةً قَالُوا وَمَنْ هِيَ يَا رَسُولَ اللَّهِ قَالَ مَا أَنَا عَلَيْهِ وَأَصْحَابِي "

“இஸ்லாயீலின் கூட்டத்தினர் 72 பிரிவினர்களாக இருப்பார்கள். என்னுடைய சமுதாயம் 73 கூட்டங்களாக பிரியும். எல்லோரும் நகரகத்திற்குச் செல்வார்கள். ஒரு கூட்டத்தினரைத் தவிர.” ஸஹாபாக்கள், “ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களே, அவர்கள் யார்?” என வினவினார்கள். ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ பதிலளித்தார்கள், “நானும், எனது தோழர்களும் எவ்வழியில் இருக்கிறோமோ, அவ்வழியைப் பின்பற்றியவர்கள்.” (திர்மிதி 2641)

இந்த ஹதீதின்படி அனைத்து கூட்டங்களும் நிரந்த நரகம் என்று கூற முடியாது. ஸுன்னாஹ்வுக்கு மாற்றமாக பித்அத் வழிகளைப் பின்பற்றிச் சென்றவர்கள் என்பதால், அவர்கள் நேரடியாக சுவனம் செல்ல மாட்டார்கள். ஆனால் ஸஹாப்பாக்களைப் பின்பற்றி நல்ல அமல் செய்தவர்கள் நேரடியாகச் சுவனம் செல்வார்கள். உண்மையான அஹ்லுஸ் ஸுன்னாஹ்வைச் தேர்ந்தவர்கள் அவ்வாறு சுவனம் செலவார்கள். மற்ற 72 கூட்டத்தினர் நரகம் செல்வது குறித்து எச்சரிக்கை செய்யப்பட்டார்கள். இந்த வழிகெட்ட கூட்டத்தினரின் தலைவர்களோ, அறிஞர்களோ மோசமான வழி கெட்டு கா.ஃ.பிர்களாக ஆக நேரிடும். அவர்களில் இருந்த பாமரமக்களைப் பொறுத்தளவில், அவர்கள் வழி கெடுக்கப்பட்டார்கள். எனவே அவர்கள் திருந்த வாய்ப்புண்டு. எனவே அவர்களைக் குறித்து, கா.ஃ.பிர்கள் என நாம் முடிவு செய்யக் கூடாது. எனவே அந்தக் கூட்டத்தினரும் முஸ்லிம்கள்தாம், குறிப்பாக பாமர மக்களைப் பற்றி நாம் எந்த முடிவும் கூறிவிடக் கூடாது. அவர்கள் அனைவரும் நரகத்தைக் கூறி எச்சரிக்கப்பட்டவர்கள். இந்த வழிகெட்ட கூட்டத்தினர் பற்றி இங்கு கூறுவோம். ஸஹாபாக்களின் வழிமுறையை விடுவதுதான் வழிகேட்டின் ஆரம்பம் ஆகும். ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ ஸஹாபாக்களுக்கு அகீதாவைக் கற்றுக் கொடுத்தார்கள். அவ்வாறு கற்றுக் கொண்ட ஸஹாபாக்களின் வழிமுறையைப் பின்பற்றி யாரெல்லாம் நற்செயல் செய்தார்களோ அவர்கள் நேரடியாக சுவனம் செல்வார்கள் என முந்தைய ஹதீதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அந்த ஸஹாபாக்களின் வழிமுறையை புறந்தள்ளிவிட்டு, செயல்படுகிறார்களோ அவர்கள் தாம் அந்த 72 கூட்டத்தினரைச் சேர்ந்தவர்களாக ஆகிவிடுவார்கள்.

மற்றொரு ஹதீதில் குறிப்பிடுகிறார்கள்,

திர்மிதி 2676:

" أُوصِيكُمْ بِتَقْوَى اللَّهِ وَالسَّمْعِ وَالطَّاعَةِ وَإِنْ عَبْدٌ حَبَشِيٌّ فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ يَرَى اخْتِلاَفًا كَثِيرًا وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الأُمُورِ فَإِنَّهَا ضَلاَلَةٌ فَمَنْ أَدْرَكَ ذَلِكَ مِنْكُمْ فَعَلَيْهِ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ " .

ஒரு நாள் நபித்தோழர்களின் முன்னால், ரஸூலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ எங்களின் முன்பான பெரியதாக ஒரு உரையை நிகழ்த்தினார்கள். அது அவர்களின் இறுதி உரையாக இருக்குமோ என்ற எண்ணத்தில் தாங்கள் கண்கள் அழுதன, தங்களின் உள்ளங்களும் நடுங்கின என ஸஹாபாக்களே

கூறினார்கள். அதில் ரஸுலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதாவது, ''இறையச்சத்தைக் கொண்டு நான் உங்களுக்கு உபதேசம் செய்கிறேன். ஹபஸியைச் சேர்ந்த ஒரு அடிமை (உங்களுக்குத் தலைவராக இருந்தாலும்) அவருக்கு செவி சாய்த்து, அடி பணியுங்கள். (எனக்குப்) பின்னால் வாழ்பவர்கள், அதிகமான கருத்து வேறுபாடுகளைக் காண்பீர்கள். பித்அத்தைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். அவை எல்லாம் வழிகேடுகளே. அவற்றை நீங்கள் கண்ணுற்றால், அப்போது எனது ஸுன்னத்தையும், நேர்வழி பெற்ற நான்கு கலி∴பாக்களின் ஸுன்னத்தையும் கடைவாய்ப்ப பற்களால் (உறுதியாகப் பிடிப்பது போல்) பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.''

உதாரணத்திற்கு கருத்து வேறுபாட்டைக் கூறுகிறோம். கைபர் போரின் போது, நேரம் காணரமாக, அனைவரும் அங்கு சென்ற பிறகு அஸர் தொழுகையைத் தொழலாம் என ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ கூறியிருந்தார்கள். அவர்களின் கூற்றைக் கேட்டு ஸஹாபாக்கள் உடனே கைபருக்குக் கிளம்பிவிட்டார்கள். இடையில் சிலர், ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் கூற்று, கைபரில் தொழ வேண்டும் என்பது சீக்கிரம் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான். கைபரில்தான் தொழ வேண்டும் என்ற எண்ணத்தில் அல்ல என நினைத்தார்கள். தாங்கள் சீக்கிரம் சென்று கொண்டிருப்பதால், இடையில் சிறிது நேரம் தொழலாம் என்று தொழுதார்கள். ஆனால் அவர்களின் சொல்லை முழுமையாக எடுத்துக் கொண்டு, கைபருக்குச் சென்ற பிறகுதான் தொழுதார்கள். இந்த இரண்டு வித நிகழ்வையையும் அறிந்த ரஸுலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அதைக் குறித்து ஏதும் தவறு சொல்லவில்லை. ஸஹாபாக்கள் தாங்கள் புரிந்தவிதத்தில் செய்தார்கள். இவ்வாறு மஸாயில்களில் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்புண்டு. ஆனால் கொள்கை விஷயத்தில் எவ்வித கருத்து வேறுபாடு ஏற்படுவது கூடாது.

முந்தைய ஹதீதில் சொல்லப்பட்ட கருத்து வேறுபாடு, கொள்கையைக் குறித்த கருத்து வேறுபாடு ஆகும். அந்த சமயத்தில் நாம் யாரின் வழியைப் பின்பற்ற வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார்கள். இரண்டு ஹதீதுகளிலும், தங்களுடன் ஸஹாபாக்களையும், நேர்வழி பெற்ற நான்கு கலி∴பாக்களையும் பின்பற்ற வேண்டும்.

மேலும் மார்க்கத்தில் ஏற்படும் பித்அத்தைப் பற்றியும் எச்சரிக்கை செய்துள்ளார்கள். எனவே நேர்வழி பெறுவதற்கான ஒரே வழி, ஸஹாபாக்களின் வழிமட்டும்தான். அப்போதுதான் வெற்றி பெறக் கூடிய கூட்டத்தில் நாம் இணைய முடியும். குழப்பங்களிலிருந்தும், வழிகேட்டிலிருந்தும் நாம் தப்பித்துக் கொள்ளலாம்.

எதற்காக மக்கள் இப்போது, இப்படி வழிகேட்டை நோக்கிச் செல்கிறார்கள்? ஸஹாபாக்களின் வழியைப் புறக்கணித்து, அவர்களையே கா∴பிர்கள் என்று சொல்லும் அளவிற்கு எதற்காக மாறினார்கள்? இது இஸ்லாத்தில் ஆரம்ப காலகட்டத்தில் யூதர்கள் செய்த சூழ்ச்சியாகும். மூஸா அவர்களின் கூட்டத்தினர்கள் தான் பின்னர் யூதர்களாக இருந்தார்கள். அப்போதே, மூஸா அவர்கள் அவர்களைப் போரிட அழைத்தபோது, அவர்களும், அவர்களது இறைவனும் போய் போரிட வேண்டும் எனவும், தாங்கள் போரிட விரும்பவில்லை எனவும் கூறினார்கள்.

இந்த யூதர்கள் முஸ்லிம்களைப் போரில் கொன்றால், அவர்கள் ஷஹீதாகும் வாய்ப்பு கிடைக்கும் என்பதால், அவர்களை கொள்கை ரீதியாக, சின்னாபின்னப்படுத்த வேண்டும் என்று முயன்றார்கள். அதன் மூலம் அவர்களை வழிகெடுத்து நரகில் செல்ல வைக்கலாம் என்று நினைத்தார்கள். எனவே அவர்களே முஸ்லிம்கள் மத்தியில் தங்களைச் சேர்ந்வர்களை முஸ்லிம்கள் போல அனுப்பி அவர்களை வழி கெடுக்க முனைந்தார்கள். அவர்களை கற்றறிந்த ஆலிம்போல் அறிமுகப் படுத்தி, அவர்களை வழி கெடுக்க முயன்றார்கள். கலி∴பா உதுமான் رَضِيَ اللهُ عَنْهُ அவர்களின் காலத்திலேயே இவ்வாறு நடந்தது. அப்போது அவ்வாறு சென்றவர்தாம் அப்துல்லாஹ் இப்னு ஸபா யஹுதி என்ற

யூதர். இப்னு தைய்மிய்யாஹ் رَحْمَةُ اللهِ عَلَيْهِ கூறுவதாவது, யூதர்கள் பவுல் என்ற யூதனை, அக்கால நஸராக்களை வழி கெடுக்கும் எண்ணத்தில் அனுப்பினார்களோ, அதைப் போன்ற வழியை முஸ்லிம்களிடமும் பின்பற்றினார்கள். பவுல் தான், ஈஸா عَلَيْهِ السَّلاَمُ அவர்கள் விண்ணுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, ஏகத்துவத்தில் இருந்த நஸராக்களை, பிதா, சுதன், பரிசுத்த ஆவி என மூன்று கடவுட்கொள்கையைத் திணித்தார். அவர் தம்மை நஸ்ரானி எனக் கூறி, தாம் ஈஸா عَلَيْهِ السَّلاَمُ அவர்களைக் கண்டேன் என்று பொய் கூறி வழி கெடுத்தார். புஹாரிக்கு விரிவுரை எழுதிய இப்னு ஹஜம் رَحْمَةُ اللهِ அவர்களும் அப்துல்லாஹ் இப்னு ஸபா என்ற அந்த யூதர் பற்றி குறிப்பிட்டுள்ளார். இப்னு அஸாத் என்ற வரலாற்று அறிஞரும் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

இவர் ஒருவர் இருந்தார் எனவும், இவரால் தான் இந்த கூட்டம் உருவானது என்றால், அவர்கள் வழிகெட்டவர்கள் என முத்திரை குத்தப்பட்டு விடுவார்கள் என்பதற்காக, அந்த வழிகேட்டினர், அப்துல்லாஹ் இப்னு ஸபா என்ற ஒருவரே இல்லை எனவும், அனைத்தும் கட்டுக்கதை எனக் கூறிவிடுவார்கள். முந்தைய அறிஞர்கள் எல்லாம் பொய்யைக் கூறிவிட்டார்கள் என மறுத்து விடுவார்கள். இந்த யூதரின் வழியில் வந்தவர்கள்தாம் ஷிஆக் கூட்டத்தினர்கள் ஆவார்கள்.

அவர்கள் அப்படிப்பட்ட ஒருவர் இல்லை எனவும், நாங்கள் அவரைச் சேர்ந்த கூட்டம் இல்லை என்று கூறிக் கொள்கிறார்கள். வருத்திற்கான ஒரு விஷயம் என்னவென்றால், நம்மைச் சேர்ந்த ஒரு சில கூட்டத்தினரும், இந்த ஷிஆக்கள் சொல்வதைப் போல, அந்த அப்துல்லாஹ் என்ற யூதர் யாரும் இல்லை என்கிறார்கள். வரலாற்று ஆசிரியர்களின் கட்டுக் கதை. அவ்வாறு இருந்தால், அவர்களைக் குறித்து புஹாரி, முஸ்லிம் போன்றவர்கள் பதிந்திருப்பார்கள் என்பார்கள். வேடிக்கை என்னவென்றால், அவர்கள் புஹாரி, முஸ்லிம் போன்றவர்களைக் குறை கூற நினைக்கும்போது, வரலாற்று ஆசிரியர்களை தங்களுக்குச் சான்றாக எடுத்துக் கொள்வார்கள். புஹாரி முஸ்லிம் நூற்களில் ஸஹாபாக்களைப் பற்றி குறைவாகச் சொல்லவில்லையே என்று எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

வரலாற்று ஆசிரியர்களிடம் தவறுகள் இருப்பது அறிந்த ஒன்றுதான் என்றாலும், நாம் அதனை ஆய்ந்து பார்க்க வேண்டும். எனவோ அப்துல்லாஹ் என்ற யூதனைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டுள்ளதை நமது மார்க்க அறிஞர்களும் உறுதிபடுத்துகிறபோது, அதனை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஷிஆக்களின் நூற்களிலும் அவர் இருப்பதை உறுதி செய்கின்றனவே! அவர் எவ்விதமாக தம்முடைய கொள்கையை அந்த ஷிஆக்களிடம் திணித்தான் என்பதும் கூறப்பட்டுள்ளன. அந்த நூற்களிலில் சில: ரிஸாலத்துல் இர்ஜா என்ற நூலைத் தொகுத்த ஹஸன் பின் முஹம்மது. 95ல் மரணமடைந்தவர், தமது நூலில் அந்த யூதரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். அல் காராத் என்ற நூலை எழுதிய அபு இஸஹாக் என்பவரும் அவர் பற்றி குறிப்பிட்டுள்ளார். ஸிபத்துஷ் ஷிஆ என்ற நூலை எழுதிய 3 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஹஸன் பின் முஹம்மத் என்பவரும் இதனை ஒப்புக் கொள்கிறார். இப்படி பல நூற்களில் இவரைப் பற்றி பதிவு செய்துள்ளார்கள். எனவே அவர் ஒரு கற்பனையானவர் என்று கூற முடியாது.

அவர் தம்மை ஒரு முஸ்லிமாக அறிமுகப்படுத்தி, அரபுலகில் வலம் வந்தான். மதினா, பஸ்ரா கூஃபா போன்ற நகருக்கு சென்று வந்தார். யாராவது அவரைப் பற்றி தவறாக கூறுபவர் என்று அடையாளம் காட்டிவிட்டால், இருந்த ஊரை விட்டு வேறு ஊருக்குச் சென்று விடுவார். இவ்வாறு அவர் மக்களை வழிகெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

ஆரம்பத்தில் அவர் அஹ்லுல் பைத் என்னும் ரஸுூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் குடும்பத்தை நேசிக்க வேண்டும் எனவும், அது ஈமானின் ஒரு பகுதி எனவும் கூறினார். இது தவறானது என நாம் கூற முடியுமா? ஹதீதிலும் ரஸுூலுல்லாஹ் صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ அவர்கள் தாங்கள் குர்ஆனையும், ஸுன்னாஹ்வையும் விட்டுச் சென்றுள்ளதாகக் கூறியது போல, தாங்கள் குர்ஆனையும்

தங்களின் குடும்பத்தினரையும் விட்டுச் சென்றுள்ளதாகக் கூறியுள்ளார்கள். எனவே அவர்களின் குடும்பத்தினர்களை நேசம் கொள்வது ஈமானின் ஒரு பகுதிதான். இவ்வாறு சொல்லி ஆரம்பித்த அவர், அந்த குடும்பத்தில் அலி رَضِي الله عَنْهُ அவர்கள்தாம் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்குப் பிறகு கிலா.:.பத்திற்குத் தகுதியானவராக இருந்தார்கள் எனக் கூறினார். ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களின் குடும்பத்தின் மீது அன்பு கொண்டு சிலர், அது சரியாகத்தான் இருக்கும் என்று எண்ண ஆரம்பித்தனர். அத்தோடு, அலி அவர்களின் கிலா.:.பத்திற்கு அபு பக்ரு رَضِي الله عَنْهُ, உமர் رَضِي الله عَنْهُ மற்றும் உதுமான் ஆகியோர் தடையாக இருந்த அநியாயக்காரர்கள் என்று கூற ஆரம்பித்தார். அந்த நேர்வழி பெற்ற கலி.:.பாக்களின் சிறப்பை எல்லாம் மறந்து விட்டு, அலி அவர்களின் கிலா.:.பத்தை அபகரித்தவர்கள என இக்காலத்து வழி கெட்டவர்களைப் போல, அவர்களில் சிலர் அந்த யூதரின் கூற்றை நம்பி திட்ட ஆரம்பித்தார்கள். ஒரு கட்டத்தில் அலி رَضِي الله عَنْهُ அவர்கள்தாம் கலி.:.பாவாக வர வேண்டும் என ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களே வஸியத் செய்திருந்தார்களும், எல்லா ஸஹாபாக்களும் அதனை மறைத்து விட்டார்கள் என அனைத்து ஸஹாபாக்களின் மீதும் அவதூறு கூற ஆரம்பித்தார். இறுதியில் அலி رَضِي الله عَنْهُ அவர்கள்தாம் அல்லாஹ் (நவூது பில்லாஹ்) என்று அவர் கூற, அதனையும், வழிகெட்ட சிலர் ஏற்றுக் கொண்டார்கள். இவையெல்லாம் உத்மான் رَضِي الله عَنْهُ ஆட்சிகாலத்தில ஆரம்பித்த இந்த நிகழ்வு, அலி رَضِي الله عَنْهُ அவர்கள் காலம் வரை தொடர்ந்தது. அந்த மக்கள் அலி رَضِي الله عَنْهُ அவர்களிடம் நேரிலேயே, அவர்களை அல்லாஹ் என்றார்கள். அவ்வாறு கூறியவர்களை அலி அவர்கள் தீயிலிட்டுக் கொன்றார்கள். தீயிலிட்டு கொல்வது ஹதீதுக்கு மாற்றமானது என்றாலும், அந்த ஹதிது அலி அவர்களுக்கு தெரியாமல் இருந்திருக்கலாம். அல்லது கோபத்தில் மறந்திருக்கலாம். பல விதத்திலும் எச்சரித்தும் அவர்கள் கேட்காததனால் அவ்வாறு செய்தார்கள். வழி கெட்ட சிலர் பின்னர் நேர்வழிக்குத் திரும்பினார்கள். இன்னும் சிலர் நயவஞ்சகமாக அலி رَضِي الله عَنْهُ அவர்களின் முன்னிலையில் திருந்தியதாகக் காட்டிக் கொண்டார்கள். அவ்வாறு சொல்லித் தப்பித்துக் கொண்டவர்களில் அந்த யூதரும் ஒருவர். அந்த நிலையிலேயே இருந்த ஒரு சிலரைத்தான் அலி رَضِي الله عَنْهُ அவர்கள் எரித்துக் கொன்றார்கள்.

இன்னும் சிலர் ஸஹாபாக்களைத் திட்டாமலும், அபு பக்ரு رَضِي الله عَنْهُ, உமர் رَضِي الله عَنْهُ , உதுமான் رَضِي الله عَنْهُ அன்னை ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا போன்றவர்களைக் குறை கூறாமலும், ஆனால் ரஸுலுல்லாஹ் அவர்களுக்குப் பிறகு அலி رَضِي الله عَنْهُ அவர்கள் தாம் சிறந்தவர்கள் எனக் கூறுவார்கள். ஆனால் சரியான நிலைபாடு, ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்குப் பிறகு அபு பக்ரு رَضِي الله عَنْهُ தான் சிறந்தவர்கள். பின்னர் உமர் رَضِي الله عَنْهُ , பின்னர் உத்மான் رَضِي الله عَنْهُ , பின்னரே அலி رَضِي الله عَنْهُ அவர்கள் ஆவார்கள்.

அலி அவர்கள்தாம் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسَلَّمَ அவர்களுக்குப் பிறகு சிறந்தவர்கள் என்ற நிலைபாட்டை மட்டும் எடுத்துக் கொண்டவர்கள் ஷிஆக்கள் ஆவார்கள். ஆனால் அத்துடன் முன்னர் அந்த யூதர் கூறியது போல, எல்லா ஸஹாபாக்களையும் அவதூறக் கூறி, அலி رَضِي الله عَنْهُ அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வுக்கு இணையாக்கினார்களோ அவர்கள் ரா.:.பிலாஹ் என்ற கூட்டத்தினர்.

எனவே ஆரம்பத்தில் ஒரு விஷயத்தில் மட்டும் ஷிஆக்கள் முரண்பட்டார்கள். ஆனால் இப்போதைய ஷிஆக்கள் ரா.:.பிலாஹ் கூட்டத்தினரைப் போல ஆகிவிட்டார்கள்.

உதுமான் رَضِي الله عَنْهُ அவர்களின் காலத்தில் தோன்றி மற்றுமொரு வழிகெட்ட கூட்டம் ஹவாரிஜிகள் ஆவார்கள். அவர்களும் ஷிஆகளின் சம காலத்தவர்கள் ஆவார். ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் ஒரு போரின் கனிமத்துப் பொருட்களைப் பங்கிடும் வேளையில், தலையை முழுமையாக மொட்டை அடித்த ஸுல்பு அல் ஸராஹ் என்ற ஒருவர் வந்தார். அவர், "முஹம்மதே! سُبْحَانَهُ وَتَعَالَى நீதமாக நடந்து கொள்ளுங்கள்." கூறுகிறான். ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்கள் தவறாகப் பங்கிடுகிறார்கள் என்ற தொனியில் அவ்வாறு கூறினான். கோபம் கொண்ட அவர்கள், "இந்த பூமியில் நான் நீதமாக நடக்கவில்லை என்றால், வேறு யார் நீதமாக நடக்க முடியும்?" என்றார்கள். அந்த மனிதனைக் கொல்ல வேண்டும் என ஸஹாபாக்கள் வேண்டினார்கள். ஆனால் ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களோ, "வேண்டாம், இவர் நம்மோடு தொழுகிறார். எனவே கொல்லக் கூடாது. அவரை விட்டு விடுங்கள். இவரது சந்ததியினர்கள் ஒரு பறவையின் மீது செலுத்தப்பட்ட அம்பு எப்படி அதன் உடலை விட்டு வெளியேறுமோ, அவ்விதமாக இவர்களும் மார்க்கத்தை விட்டு வெளியேறிவிடுவார்கள்." அந்த சந்ததியினரின் கூட்டம்தான் இந்த ஹவாரிஜிகள். அவர்களைப் பற்றி பல அடையாளங்கள் கூறுவார்கள். தலைவர்களுக்கு மாறு செய்வார்கள். முஸ்லிம்களைக் கொல்வார்கள். தலைவர்களின் மீது அவதூறு சொல்வார்கள். கா.ஃபிர்களை விட்டுவிடுவார்கள். முஸ்லிம்களின் தலைவர்களை எதிர்ப்பது, அவர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்வது போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள். இவ்வாறாகத்தான் உதுமான் ஆட்சி காலத்தில் அவர்களைப் பற்றி அவதூறு கூறி, குழப்பம் விளைவித்து, இறுதியில் அவர்களை கொலையும் செய்து விட்டார்கள். அலி அவர்களின் கொலைக்கும் இவர்கள்தாம் காரணம். தலைவர்களைக் கொல்வது, அவர்களுக்கு ஆதரவானவர்களையும் கொல்வது என்பதுதான் இவர்களின் முக்கியமான வேலையாகும்.

அடுத்தது கதரிய்யாஹ் என்ற ஒரு கூட்டம். அவர்கள் விதியை நம்பாமல், அப்படி ஒன்றும் இல்லை என வாதிட்டவர்கள். அல்லாஹ் விதி என்று ஒன்றையும் ஏற்படுத்தவில்லை, என்ன நடக்கும் என்றே அல்லாஹ்வுக்குத் தெரியாது, எனவே எதனையும் எழுதி வைக்கவில்லை என்பார்கள். இவர்கள் மு.ஃதஸிதாக்கள் பிரிவினரின் உட்பிரிவு. இவர்கள் அறிவைக் கொண்டு குர்ஆன் ஹதீதுகளைத் தீர்மானிப்பவர்கள். இந்த உம்மத்தின நெருப்பு வணங்கிகள் (மஜூஸிகள்) கதரியாக்காள் ஆவார்கள். ஒளியைப் படைத்தவன் ஒருவன், இருளைப் படைத்தவன் ஒருவன் என இரண்டிரண்டு படைப்பாளர்களை ஏற்றுக் கொண்டவர்கள் நெருப்பு வணங்கிகள். அதேபோல், கதரியாக்கள் அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى நம்மைப் படைத்தான். நமது செயல்களை நாமே படைக்கிறோம் என்று இரண்டு நிலைபாடுகளை எடுத்தவர்கள். இக்கூட்டத்தினர் ஸஹாபாக்கள் காலத்திலேயே வந்துவிட்டனர்.

யஹ்யா இப்னு ய.ஃமர் رَحْمَةُ الله عَلَيْهِ கூறியுள்ளதாவது,

"(ஈராக்கிலுள்ள) பஸ்ரா நகரில் முதன்முதலில் விதி தொடர்பாக (மறுப்பு)க் கருத்து கூறியவர் ம.ஃபது அல் ஜுஹய்னி என்பவர். இந்நிலையில் நானும், ஹுமைத் பின் அப்திர் ரஹ்மான் அல் ஹிம்யரி رَحْمَةُ الله عَلَيْهِ அவர்களும், ஹஜ் அல்லது உம்ரா செய்வதற்காகப் புனித மக்கா நகருக்குப் பயணமானோம். அப்போது ரஸுலுல்லாஹ் صَلَّى الله عَلَيْهِ وَسلَّمَ அவர்களின் தோழர்களுள் யாரேனும் ஒருவரை நாம் சந்தித்தால் விதி தொடர்பாக இவர் கூறுவது பற்றிக் கேட்க வேண்டும் எனச் சொல்லிக் கொண்டும். அப்போது பள்ளிவாசலுக்குள் நுழைந்து கொண்டிருந்த அப்துல்லாஹ் பின் உமர் رَضِي الله عَنْهُ அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

உடனே நானும் எனது தோழரும் அப்துல்லாஹ் பின் உமர் رَضِي الله عَنْهُ அவர்களைச் சூழ்ந்து கொண்டு, எங்களில் ஒருவர் அவரது வலப்பக்கத்திலும், இடப்பக்கத்திலும் இருந்து கொண்டோம்.

(நான் சரளாமாகப் பேசுபவர் என்பதால்) பேசும் பொறுப்பை என்னிடமே எனது தோழர் விட்டுவிடுவார் என எண்ணி நான் பேச ஆரம்பித்தேன்.

“அபு அப்திர் ரஹ்மானே! எங்கள் பகுதியில் சிலர் தோன்றி இருக்கின்றனர். அவர்கள் குர்ஆனை ஓதுகின்றனர். தேடித் திரிந்து கல்வி பயில்கின்றனர்.” என நான் அவர்களது (நல்ல) தன்மைகளை எடுத்துரைத்து, ஆனால் அவர்கள் விதி என்று ஏதுமில்லை எனவும், நடக்கிற காரியங்கள் (இறைவன் திட்டமிடாமலேயே) தற்செயலாக நடக்கின்றன எனவும் அவர்கள் கருதுகிறார்கள் என்றேன்.

அதற்கு அப்துல்லாஹ் பின் உமர் رَضِي الله عَنْهُ கூறினார்கள், “இத்தகையோர்களை நீங்கள சந்தித்தால், அவர்களை விட்டு நானும், என்னை விட்டு அவர்களும் விலகிவிட்டவர்கள் என அவர்களிடம் தெரிவித்து விடுங்கள். (இந்த) அப்துல்லாஹ் பின் உமர் யார் மீது சத்தியம் செய்வானோ, அந்த இறைவன் மீது சத்தியமாக! அவர்களில் ஒருவரிடம் உஹது மலையளவு தங்கம் இருந்து, அதனை அவர் (அறவழிகளில்) செலவிட்டாலும், அவர் விதியை நம்பிக்கை கொள்ளாதவரை, அவரிடமிருந்து அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى அதனை ஏற்றுக் கொள்ள மாட்டான் (என்று கூறிவிடுங்கள்.)” பின்னர் அவர் ஹதீதே ஜிப்ரயீலைக் கூறினார்.

இந்தக் கதரியாக்கள் நிரந்த நரகை அடைவார்கள். விதியை முற்றிலும் மறுக்கிறார்கள்.

அடுத்தவர்கள் முர்ஜியாக்கள், நமது அமல்களுக்கும் ஈமானுக்கும் இடையில் தொடர்பு இல்லை என்றார்கள். நாம் ஈமான் கொண்டாலே போதும், நற்செயல்கள் எல்லாம் தேவை இல்லை என்பார்கள். இவ்வாறு அமல்கள் செய்வதை அவர்கள் தடுத்துவிட்டார்கள்.

இவ்வாறு இந்த நான்கு கூட்டத்தினர்கள் வழி கெட்ட கூட்டத்தினர்கள் ஆவார்கள். இவர்களுக்கு இடையிலும் பல் உட்பிரிவுகள் உள்ளன. இவர்களுக்குப் பிறகு வழிகெட்டு போகும் எந்த கூட்டத்தினரும், இந்த கூட்டத்தினரின் ஒரு கொள்கையை எடுத்துக் கொண்டுதான் வழி கெட்டு செல்வார்கள். ஸஹாபாக்களைத் திட்டுவது, விதியை மறுப்பது, அறிவைக் கொண்டு குர்ஆன் ஹதீதுகளுக்கு விளக்கம் தேடுவது, அமல்களை பாழ்படுத்துவது என்ற வழிகளில்தாம் தடம் புரண்டு செல்வார்கள். அப்துல் இப்னு முபாரக் ஷஆக்கள், காரிஜியா, கதரியாஹ், முர்ஜியா ஆகிய நான்கு கூட்டங்கள்தான் அடிப்படையில் வழி கெட்டவர்கள் எனக் கூறினார்கள்.

இப்படிப்பட்ட வழி கேடர்களிலிருந்து நாம் மாறுபட்டு, நல்வழியில் பயணித்த நிலையிலேயே அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى வைச் சந்திக்கும் நற்கூட்டத்தினராக நம்மை அல்லாஹ் سُبْحَانَهُ وَتَعَالَى ஆக்குவானாக! ஆமீன்.